# மார்க்கோ போலோ

மாரிஸ் காலிஸ்

30 JUN 1975




TNSDA
04702

நேஷனல் புக் டிரஸ்ட் இந்தியா

# மார்க்கோ போலோ

மாரிஸ் காலிஸ்

தமிழாக்கம் :

பெ. திருஞானசம்பந்தன்

30 JUN 1975

நேஷனல் புக் டிரஸ்ட், இந்தியா,
புது டில்லி

மார்ச் 1968 (சைத்ரா 1890)

March 1968 (Chaitra 1890)

*Published by Arrangement with Faber and Faber Limited, London*

*All Rights Are Reserved*

4702
30 JUN 1975

விலை : ரூ. 5·75

*Price : Rs.* 5·75

**MARCO POLO**

*By*

MAURICE COLLIS

(*Tamil*)

PUBLISHED BY THE SECRETARY, NATIONAL BOOK TRUST, INDIA, NEW DELHI-13
AND PRINTED AT THOMPSON & CO. (MINERVA PRESS), 33, BROADWAY, MADRAS-1.

சமர்ப்பணம்

மேன்மை தங்கிய இளவரசி பஹருன்னிஸா

ஸெயிட் எல் உஸேன்

OFFICE OF THE DIRECTOR OF ...
30 JUN 1975

# முன்னுரை

மார்க்கோ போலோவைப் பற்றிய புத்தகம், யூல், பெலியட் என்பவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு 1938-ஆம் ஆண்டு ரூட்லெட்ஜ் என்பவரால் பதிப்பிக்கப் பெற்றது. இதை அடிப்படையாகக் கொண்டது எனது உரைநடை நூல். செலடா (Zelada) சுவடி உள்ளிட்ட பதினேழு சுவடிகள், முன்பே அச்சேறியிருந்த பதிப்புக்கள், இவற்றின் உதவியுடன் ஒன்று திரட்டி உருவாக்கப்பட்டது இந்நூல். மேலே குறிப்பிடப் பட்டுள்ள செலடா சுவடி ஸ்பெயின் தேசத்தில் கண் காணாத ஓரிடத்தில் உள்ள புத்தக சாலையில் மறைந்து கிடந்தது. சர் பெர்சிவல் டேவிட் என்பவர் சில ஆண்டு களுக்கு முன்பு இதைக் கண்டெடுத்தார்.

முக்கிய நிகழ்ச்சிகளை என்னுடைய சொந்த வாக்கியங் களில் சுருங்கக் கூறுவதோடு, ஆங்காங்கு தொடர்ந்து கருத்துரையும் வழங்கி விளக்கம் தருதல் என்பதே இந் நூலை எழுதுவதில் நான் வகுத்துக்கொண்ட முறை யாகும். இதன் நோக்கங்களுள் ஒன்று மார்க்கோ போலோவை இயன்ற அளவு விரிவான பல்வேறு நிலைகளில் காட்டவேண்டும் என்பதே. மூல நூல்களி லிருந்து பல பகுதிகளைப் பெயர்த்தெடுத்து இந்நூலில் நான் பயன்படுத்தவில்லை. யூல் என்பவரின் முதற் பதிப்புக்குப் பிறகு வெளிவந்தவற்றுள் எனக்குக் கிடைத்த பல மொழிபெயர்ப்புக்களினின்றும் அங் கொன்றும் இங்கொன்றுமாக ஒரு சிலவற்றையே இந் நூலில் எடுத்தாண்டிருக்கிறேன். எப்பகுதிகள் மிக அழகிய சொற்களில் அமைந்தனவாக எனக்குத் தோன்றினவோ அவற்றை மட்டும் நான் தேர்ந் தெடுத்துப் பயன்படுத்தியிருக்கிறேன். எனினும் யூல், பெலியட் என்பவர்களின் மொழிபெயர்ப்பு நூலையே

உறுதுணையாகக் கொண்டுள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்களினின்றும் நான் வழுவவில்லை. அப்படிக் கூறுவதால் மேற்கோள்கள் அனைத்தும் சொல்லுக்குச் சொல் அதனின்றே எடுக்கப்பட்டன என்பதாகாது. யூல் பதிப்பில் அடங்கிய குறிப்புரைகள் எனக்கு மிகுதியும் பயன் தந்தன எனினும், இந்நூலில் வழங்கப்பட்டுள்ள கருத்துரைகள் எனக்குச் சொந்தமானவையே. அவை அக்காலத்திய தூரக் கிழக்குப் பகுதிகளின் நாகரிக நிலைகளைப் பற்றி நான் அறிந்தவற்றின் அடிப்படையிலே அமைந்தவை.

இவ்வாறு உருப்பெற்ற இவ்வுரைக்கோவை, மார்க்கோ போலோவின் சரிதை என்று கூறும் அளவில் இல்லை. அவரது பண்பை விரிவாக எடுத்துக்காட்டவேண்டிய அளவு நாம் அவரைப்பற்றி அறிந்திருக்கவில்லை. ஆயினும் அவர் எத்தகைய உள்ளம் படைத்தவராக இருந்தார் என்பது பற்றித் தெளிவற்ற ஒரு தோற்றமேனும் நமக்குப் புலனாகத்தான் செய்கிறது. எளிமையும் நேர்மையும் கொண்ட ஒரு மனிதர் என்பதே அவருடைய சிறப்பியல்பாகும். சில வகைகளில் அவர் குழந்தையின் மனநிலையைக் கொண்டவர் எனக் கொள்ளலாம். அவர் முன்கூட்டியே கருத்தெதையும் கொள்ளாதவராய் எதையும் புத்தம் புதிய முறையில் நோக்கும் இயல்புடையவர். அவர் எதையேனும் காணும்போது பலகாலும் வியப்பில் ஆழ்ந்துவிடுவார். உண்மையான ஒரு நிகழ்ச்சிக்குக் கற்பனை மெருகிட வேண்டும் என்று அவருக்குத் தோன்றுவதில்லை. இவ்வகையில் அவர் குழந்தைகளை ஒத்திருந்தார். சாதாரண குழந்தைகளைப் போலவே அவரும் அதிகம் படித்தவரல்ல. அவரது நூலின் நடையில் இலக்கிய நயம் எதுவும் இல்லை. அவர் எல்லா வகையிலும் குழந்தையை ஒத்திருக்கவில்லை என்ற கூற்றிலும் உண்மை இருக்கிறது. ஏனெனில் அவர் ஆய்வுத் திறனும்,

எதையும் எளிதில் நம்ப மறுக்கும் உளப்பாங்கும் உள்ளவர். கற்பனைகள் நிறைந்த இடைக்கால உலகில் அவர் வாழ்ந்தவராயினும் அவர் கட்டுக்கதை எதையும் நம்பவில்லை. அவரது சமகாலத்தவரோ எனில், எல்லாவிதமான விந்தை மிக்க கதைகளையும் அப்படியே திரும்பக் கூறும் முறையில் கட்டுக்கதைகளடங்கிய ஒரு நூலையே வெளியிட்டிருப்பார். தன் காட்சிக்கிலக்கானவற்றை அவர் கூர்ந்தாராய்கிறார். தான் நேரில் கண்டவற்றையும், நம்பத்தக்கவர் என்று தான் கருதும் ஒரு சிலரிடமிருந்து கேட்டவற்றையுமின்றி வேறெதையும் அவர் குறிப்பதில்லை. தற்பெருமை கொண்டவராகவோ, தான் என்ற எண்ணம் படைத்தவராகவோ அவர் காணப்படவில்லை. உண்மையிலேயே, தன் சொந்த தீரச்செயலைக் குறித்துக்கூட அவர் அளவுக்கு மீறிய மௌனத்தைக் கடைப்பிடிக்கிறார் என்ற எண்ணம் தான் நமக்கு ஏற்படுகிறது. தன்னையே மையமாகக் கொண்டு ஒரு யாத்திரை நூலை எழுதவேண்டுமென்று அவர் கருதவில்லை. இதைப் பின்னர் விரித்துக் கூறுவோம். தமது காலத்திய ஆசிய நாட்டைப் பற்றி ஐரோப்பியருக்கு நம்பத்தகுந்த ஒரு வரலாற்றை அளிக்கவேண்டும் என்பதே அவரது கருத்து.

1950-ஆம் ஆண்டில் எனது நூல் முதன் முதல் வெளியிடப்பட்ட பின்னர், ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்துச் சீனமொழிப் பேராசிரியரான திரு. H. H. டப்ஸ் M. A., B.D., Ph. D. அவர்கள் அதைப் படித்துப் பார்த்தார்கள். அவர் அருள் கூர்ந்து சில திருத்தங்களை எனக்கு அனுப்பி வைத்தார்கள். அவை இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இப்பணியை அவர் ஏற்றுக்கொண்டதற்கும், அவரது புகழ் மிக்க புலமை எனது நூலுக்கு அளித்துள்ள உதவிக்கும் என்னுடைய அகங்கனிந்த நன்றி உரித்தாகுக.

ஜனவரி, 1959. மாரிஸ் காலிஸ்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | ... 5 |
| 1. | போலோக்கள் சீனுவிற்குச் செல்ல நேர்ந்த விதம் | ... 11 |
| 2. | மார்க்கோ போலோவின் பிரயாணம் தொடங்குவதற்குரிய நிகழ்ச்சிகள் | ... 22 |
| 3. | பாரசீகப் பயணம் | ... 43 |
| 4. | பட்டுச்சாலை | ... 51 |
| 5. | மங்கோலியர்கள் | ... 68 |
| 6. | மன்னரின் கோடை அரண்மனை | ... 74 |
| 7. | பீகிங் அரண்மனை | ... 86 |
| 8. | மார்க்கோ போலோவின் வாழ்க்கைத் தொடக்கம் | ... 97 |
| 9. | காகித நோட்டுகள் | ... 104 |
| 10. | அஞ்சற் சாலைகள் | ... 110 |
| 11. | மதமும் சோதிடமும் | ... 117 |
| 12. | கல்நாரும் நிலக்கரியும் | ... 125 |
| 13. | குப்ளாயின் வேட்டை | ... 131 |
| 14. | மார்க்கோ போலோவின் யுன்னுன் கண்காணிப்பு பற்றிய யாத்திரை | ... 138 |
| 15. | யானைப் போர் | ... 153 |
| 16. | பாகன் நகரம் | ... 172 |
| 17. | சுங் தலைநகரம் | ... 179 |
| 18. | மங்கோலியரின் ஜப்பான் படையெடுப்பு | ... 200 |
| 19. | சீன மரக்கலங்கள் | ... 209 |
| 20. | மார்க்கோ போலோவின் சுமாத்ரா கடற் பிரயாணம் | ... 215 |
| 21. | அந்தமான் தீவுகள் | ... 231 |
| 22. | பல் தேட்டம் | ... 236 |
| 23. | விந்தை மிக்க இந்தியா | ... 252 |
| 24. | முத்தும் மீனம்பரும் | ... 263 |

பக்கம்

25. உலக வருணனையின் முடிவு ... 267
26. வெனிசுக்குப் போலோக்கள் திரும்புதல் ... 272
27. முடிவுரை ... 287




போலோக்களின் ஆசிய பிரயாணத்தை விளக்கும் வரைப் படம்

முதல் அத்தியாயம்

# போலோக்கள் சீனுவிற்குச் செல்ல நேர்ந்த விதம்

மார்க்கோ போலோ தனது வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கிக் கூறியிருப்பாராளுல் அது கீழ்க்கண்டவாறு அமைந்திருக்கும்.

1260-ஆம் ஆண்டு நான் ஆறு வயது சிறுவனுக இருந்த போது வெனிசு நகரத்தில் உள்ள எங்கள் பரம்பரை இல்லத்தில் என்னை என் தாயுடன் இருக்கச்சொல்லி விட்டு, என் தந்தை நிக்கோலோபோலோவும் சிற்றப்பன் மாப்பியோவும் கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பட்டணத்திற்கு வாணிபத்தின் பொருட்டுச் சென்று விட்டனர். அங்கிருந்து அவர்கள் கிரிமியாவிற்குச் சென்றனர். ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்கு உந்தப் பட்டவர்களாய்க் கிழக்கு நோக்கித் தொடர்ந்து சென்று கொண்டிருந்தனர். வோல்கா நதிக்கரையிலுள்ள சராய் என்ற இடத்திற்குச் சென்று, அங்கிருந்து மத்திய ஆசியாவிற்குச் செல்லத்துணிந்தனர். அப்படிச் சென்றவர்கள் சமர்க்கண்டிற்குச் செல்லும் பாதையில் பொக்காராவை அடைந்தனர். அந்நகரத்தில் சீனச் சக்கரவர்த்தியின் அரசவைக்குச் செல்லும் தூதர்களைச் சந்தித்தனர். அச்சக்கரவர்த்தி, சீனக் கடல் முதல் கிரிமியா வரையுள்ள மங்கோலிய நாடுகளுக்கெல்லாம் "காகான்", அல்லது பேரரசர் ஆவார். அங்கே நிறைய இலாபம் பெறலாம் என்று கூறி, அத்தூதர்கள் என் தந்தையையும் சிற்றப்பனையும் சீனுவிற்குத் தங்களுடன் வரும்படி தூண்டினர். அங்ஙனமே எல்லோரும் ஒன்று சேர்ந்து பழைமையான "பட்டுச்சாலை" வழியே புறப்பட்டுச் சென்று, திபேத்து நாட்டிற்கு வடக்கேயுள்ள பாலை

நிலத்தைக் குறுக்கே கடந்து, இறுதியாகப் பீகிங் நகரத்தை அடைந்தனர். அந்நகரத்தை அதற்கு முன்னர் ஐரோப்பியர்கள் கண்டதே இல்லே. இது நிகழ்ந்தது 1265-ஆம் ஆண்டு. பீகிங் நகரில் ஏறக்குறைய பன்னிரண்டு மாதங்கள் தங்கியிருந்தனர். அதை விட்டுப் புறப்படும்போது சீனப் பேரரசர் அவர்களிடத்தில் போப்பாண்டவரிடம் சேர்ப்பிக்கும்படி ஒரு கடிதத்தைக் கொடுத்தார்; மங்கோலியருக்குக் கிறித்தவ மதத்தை உபதேசிப்பதற்கு மதகுருமார்களே அனுப்பிவைக்கும்படி அக் கடிதத்தில் கேட்டுக்கொண்டிருந்தார். 1269–ஆம் ஆண்டில்தான் அவர்கள் வெனிசு நகரத்திற்குத் திரும்ப முடிந்தது.அப்போது நான் பதினேந்து வயதுப் பையன். என் தாயார் அதற்கு முன்பே உயிர் நீத்து விட்டார். என் தந்தையும் சிற்றப்பன் மாப்பியோவும் மதகுருமார்களே அழைத்துவர முயன்றனர். ஆனல் போப்பாண்டவரின் மரணத்திஞல் அது தடைப்பட்டது. எனினும் 12 1-ஆம் ஆண்டு எல்லா ஏற்பாடுகளும் நிறைவேறின. மதகுருமார்களுடன் அனேவரும் சீனுவிற்குத் திரும்பிச் செல்லத் தொடங்கினர். இந்தச் சமயம் என்னேயும் தங்களுடன் அழைத்துச் சென்றனர்.

இந்தப் பிரயாணம் முடிய மூன்றரை ஆண்டுகள் ஆயின. ஆகவே நாங்கள் பீகிங் நகரை அடைந்தபோது எனக்கு வயது இருபத்தொன்று. மொழிகளேப் பயில்வதில் எனக்குத் திறமை உண்டு. ஆகவே மங்கோலிய மொழியை விரைவில் கற்றுக்கொண்டேன். சீனப் பேரரசருக்கு என் மீது பற்று ஏற்பட்டது. 1277-ஆம் ஆண்டு எனக்கு அரசியல் அலுவலாளனுக ஒரு பதவி அளிக்கப்பட்டது. நான் என் பணிகளில் ஈடுபட்டிருந்த காலத்தில் சீன நாட்டின் உட்பகுதிகளிலும் அதற்கப்பாற்பட்ட நாடுகளிலும் நீண்ட பிரயாணம் செய்யுமாறு அனுப்பிவைக்கப்பெற்றேன். கடைசியாக ஒரு பெரும் நகரத்திற்குக் கவர்னராக நியமிக்கப்பெற்றேன்.

என் தந்தையும் சிற்றப்பன் மாப்பியோவும் பணக் காரர்கள் ஆயினர். சீன நாட்டில் பதினைந்து ஆண்டு களைக் கழித்த பின்னர் அந்நாட்டை நாங்கள் எவ்வளவு நேசித்தபோதிலும் சொந்த நாட்டிற்குத் திரும்பவே விரும்பினோம். சீனப் பேரரசரோ எங்களுக்கு விடை கொடுத்தனுப்பச் சம்மதிக்கவில்லை. ஆனால் 1292-ஆம் ஆண்டு, அதாவது நாங்கள் வெனிசு நகரத்தை விட்டுப் புறப்பட்டுச் சுமார் இருபது ஆண்டுகள் கழித்துச் சீன நாட்டை விட்டுச் செல்ல அவர் அனுமதி தந்தார். ஆனால் ஒரு நிபந்தனை. பாரசீக நாடு உள்ளிட்ட மங் கோலிய சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதிக்கு அதிகாரியான இல்கான் என்று கூறப்படுகின்ற பேரரசருடைய ஒன்றுவிட்ட பேரனுக்கு மனைவியாகத் தாம் அனுப்பும் ஒரு நங்கையை எங்கள் கண்காணிப்பில் நாங்கள் ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே அது. இம்முறை நாங்கள் கடற்கரை வழியாகச் சுமாத்திராவிற்குச் சென்று அங்கிருந்து கடல் கடந்து இந்தியாவை அடைந்து, அதனின்றும் பின்னர் பாரசீகக் குடாக்கடலை அடைந் தோம். இதை அடைவதற்கு இரண்டு ஆண்டுகள் ஆயின. நங்கையை ஒப்படைத்துவிட்டு வெனிசு நகரத்தை நோக்கிப் பிரயாணம் செய்தோம். 1295-ஆம் ஆண்டின் முற்பகுதியில் அந்நகரத்தை அடைந்தோம். இருபத்துமூன்று ஆண்டுகள் சொந்த நாட்டை விட்டு வெளியே இருந்ததாலும், இத்தனை காலமும் எங்கள் சுற்றத்தினர் எங்களிடமிருந்து செய்தி எதையும் கேள்விப்படாததாலும், உண்மையிலேயே அவர்கள் எங்களைக் கண்டு மிகவும் திகைப்படைந்தனர்.

என்னுடைய துணிகரச் செயல்கள் முற்றுப்பெற்றன என எண்ணினேன். ஆனால் அப்படி நிகழவில்லை. வெனிசு நகரத்துடன் வாணிபத்துறையில் போட்டியிட்டது ஜெனோவா நகரம். நான் என் நகரத்திற்குத் திரும்பிய மறு ஆண்டிலேயே இவ்விரு நகரங்களிலும் உள்ள வியா

பாரிகளுக்கு இடையே நடந்த ஒரு கடற்போரில் நான் பிடிபட்டு ஜெனேவா சிறைச்சாலையில் தள்ளப்பட்டேன். அங்கிருக்கும்போது ரஸ்டிசெல்லோ என்னும் மற்றெரு கைதியைச் சந்தித்தேன். அவர் இலக்கியப் புலமை உடையவர். ஆசியாவில் நான் கண்டவற்றைப் பற்றிய செய்தியை அவர் குறித்துக்கொள்ளும் வகையில் சொன்னேன். காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று ஆண்டுக் காலத்தில் ஒரு முழுப் புத்தகமே எழுதி முடிக்கப் பட்டது. அது என்னுடைய துணிகரச் செயல்களைப் பற்றியதும் பிரயாணங்களைப் பற்றியதுமான வரலாறு என்று சொல்வதைக்காட்டிலும் உலகத்தின் கீழ்ப் பகுதியைப்பற்றிய வருணனை என்றே கூறிவிடலாம். இதுதான் மார்க்கோ போலோவின் சுருக்கமான வரலாறு. கீழ்வரும் பகுதிகளில் எந்த அளவுக்கு இக் கதையை விவரமாகச் சொன்னல் சுவை பயக்கும் என்று கருதுகிறேனே அந்த அளவுக்குச் சொல்கிறேன்.

மேற்கூறப்பட்ட வரலாற்றுச் சுருக்கத்தில் மங்கோலிய நாடுகள் சீனக்கடல் முதல் கிரிமியா வரை பரந்து கிடந்தனவாகச் சொல்லப்பட்டன. நிக்கோலோ போலோவும், மாப்பியோ போலோவும் முதன்முதல் 1260ஆம் ஆண்டு செய்த பிரயாணத்திற்குச் சில ஆண்டு களுக்கு முன்புதான் இப்பெரும் சீனப் பேரரசு நிறுவப் பட்டது. 1200ஆம் ஆண்டுவரை மங்கோலியர்கள் சீன நாட்டிற்கும் சைபீரியா நாட்டிற்கும் இடைப்பட்ட பரந்த சமவெளிப் பிரதேசத்தில் வாழ்ந்த நாகரிகமற்ற மக்களுள் ஒரு பிரிவினராக இருந்தனர். இப்பிரிவினர் களுள் நாகரிகமற்ற ஒரு கூட்டத்தாரிடையே போர்த் திறமை வாய்ந்த மேதை ஒருவன் தோன்றினன். இவனைப் பிற்காலத்தில் ஜெங்கிஸ்கான் என்று அழைத்தனர்.

நாற்பதுக்கு மேற்பட்ட வயதை அடையும் வரையில் அவன் மங்கோலியக் கூட்டத்தினரை ஒன்று சேர்ப்

பதிலும், போரையே தொழிலாக மேற்கொள்ளக் கூடியவர்களடங்கிய ஒரு படையைத் திரட்டுவதிலும், தனது காலத்தைச் செலவிட்டான். இந்தப் படை உலகிலுள்ள படைகள் எல்லாவற்றிலும் சிறந்ததாகக் காணப்பட்டது. படையின் கட்டுப்பாடு, விரைவில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் செல்லுதல், போர்க்கருவிகள், சகிப்புத்தன்மை ஆகிய இந்நான்கு அம்சங்களிலும், அப்படை பிற படைகளைக் காட்டிலும் உயர்ந்த முறையில் அமைந்திருந்ததே அதற்குரிய காரணம் ஆகும். இப்படையில் குதிரை மீது சவாரி செய்யும் விற்படையினர் அடங்கியிருந்தனர். அவர்கள் மற்ற விற்படையினரைக்காட்டிலும் மிக விரைவாக நெடுந்தூரம் செல்லக்கூடிய வகையில் அம்புகளை மிக நுட்பமாகக் குறிபார்த்து விடக்கூடியவர்களாக இருந்தனர். அவர்களுடைய குதிரைகளும் பிற படைகளிலுள்ள குதிரைகளைக்காட்டிலும் உடல் உறுதி வாய்ந்தனவாகவும், மிக விரைவில் செல்லக்கூடியன வாகவும் இருந்தன. ஆகவே அத்தகைய குதிரைகளில் சவாரி செய்யும் வீரர்கள், எதிரிகளைக்காட்டிலும் மிக விரைவாகத் தங்கள் படையைச் சாமர்த்தியத்துடன் செலுத்தக்கூடியவர்களாக விளங்கினர். மங்கோலியர் கள் போர்க்களங்களில் எப்போதும் வெற்றிகண்டதற்கு மற்றொரு காரணம் திடீர் நடவடிக்கை. எதிர் பார்த்த தற்கு மாறாகத் திடீரென வேறொரு திசையினின்றும் தாக்குவார்கள். தங்கள் எதிரிகளுக்கு இலக்காகாமலே எதிரிகளை அம்புகளால் தாக்குவது மற்றுமொரு காரண மாகும். இம்முறையில் எதிரிகளின் கட்டுப்பாட்டை நிலைகுலையச் செய்த பின்னர், மங்கோலியர்கள் பல கோணங்களிலிருந்தும் குதிரைமீது பாய்ந்து வந்து தாக்குவார்கள். குதிரைகளுடைய வேகத்தினுல்தான் இம்மாதிரி அவர்கள் செய்ய முடிந்தது. இக்காலத்தில் இயந்திரப்படை அணியின் முன் இன்றைய காலாட்படை

எப்படி வெற்றிபெறுவது சாத்தியம் இல்லையோ அப்படித்தான் அன்று மங்கோலியருடைய எதிரிகள் திறந்த வெளியில் அவர்களை எதிர்த்துப் போரிடுவதிலும் காணப்பட்டார்கள். மங்கோலியருடைய யுக்தியைப் பிறர் பின்பற்றுவதும் இயலாத காரியம். ஏனெனில் அவர்களைப்போல் அத்தனைச் சிறந்த முறையில் குதிரையில் சவாரி செய்துகொண்டே அம்புகளை விடுவதற்கு ஒரு திறமை வேண்டும். அத்திறமை குழந்தைப் பருவம் முதல் பயிற்சி பெற்றோருக்கே கிட்டுவதாகும்.

இத்தகைய ஒரு பயங்கரப் படையைத்தான் ஏறத்தாழ 1206-ஆம் ஆண்டில் ஜெங்கிஸ்கான் உலகத்தில் ஏவி விட்டான். ஏற்கனவே அப்படை யுத்த வித்தையில் மிகத் திறமை வாய்ந்ததாக இருந்தது. அத்துடன் படைகளை அணிவகுக்கும் மதிநுட்பமும் சேர்ந்து கொள்ளவே, ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள ஓர் இலக்கிற்கு நான்கு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வழியாக வந்துகொண்டிருக்கும் நான்கு படைகளும் ஒரே நாளில் வந்து சேரும்படி அவனால் அனுப்ப முடிந்தது. உலகம் முழுவதையும் அவன் தன் வசப் படுத்த விரும்பினான். அதுவே அவனது குறிக்கோள். உலகம் எவ்வளவு பெரியது என்பதை அவன் அறிய வில்லை என்பது உண்மைதான். ஆனால் அது எவ்வளவு பெரிதாக இருந்தபோதிலும், தான் அதை வெல்ல முடியும் என்று உறுதியாக நம்பினான். 1227-ஆம் ஆண்டில் அவன் இறப்பதற்கு முன் அவனுடைய சாம் ராஜ்யம் சீன தேசத்தின் வடபகுதியையும், காஸ்பியன் வரையுள்ள பரந்த நிலப்பரப்பு முழுவதையும், அதற்கும் அப்பால் கிரிமியாவரையிலும், இன்னும் பாரசீகத்தின் வடபகுதியையும் தன்னுள் கொண்டிருந்தது.

அவனுடைய புதல்வன் ஒகதாய், தன் தந்தையின் பேராசையை முற்றுவிக்க உறுதிபூண்டான். பேர

ரசனகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் உலகத்தின் எஞ்சிய பகுதிகளையும் அவன் வெல்லப் புறப்பட்டான். தன்னுடைய உறவினனான பாதுவை (Batu) ஐரோப்பாவை எதிர்க்கும் பொருட்டு அனுப்பினன். பாது என்பவன் தெற்கு ரஷ்யாவை ஆக்கிரமித்துக் கடந்தான்; ஹங்கேரி நாட்டைச் சூறையாடினன்; போலந்து தேசத்தைச் சின்னபின்னப்படுத்தினன். பெர்லினுக்குச் சுமார் நூறு மைல் தெற்கேயுள்ள லெய்க்னிட்ஸ் என்னும் இடத்தில் சைலீசிய ஜெர்மானியரைத் தோல்வியுறச் செய்தான். 1241-ஆம் ஆண்டு இறவாதிருந்தால், ஓகதாய் பிரான்சிற்கும் இங்கிலாந்திற்கும் கூடத் தொடர்ந்து சென்றிருப்பான். மங்கோலிய வம்ச சட்டப்படி காகான் இறந்தால் அவருக்கு அடுத்தபடி வரவேண்டியவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஜெங்கிஸ் குடும்பத்தின் உறுப்பினர்கள் அனைவரும் காரகோரம் (கருஞ்சுவர்கள்) என்னும் தலைநகரில் கூடவேண்டும் என்பது நியதி. ஆகவே மத்திய ஆசியச் சமவெளியின் நடுவில் உள்ள காரகோரத்திற்குப் பாது திரும்பிவிட்டான். அடுத்த பத்து ஆண்டுகளில் ஓகதாய் என்பவனின் புதல்வனான குயுக் கானின் ஆட்சியில் எதுவும் நடைபெறவில்லை. பிறகு 1251-ஆம் ஆண்டு ஓகதாயின் உடன் பிறந்தாரின் மகனான மாங்கு என்பவன் காகானாக நியமிக்கப்பட்டான். அவன் முகம்மதியருக்கு எதிராகக் காலிபாக்கள் வசிக்கும் புனிதத் தலைநகரமான பாக்தாத்தின் மீது மங்கோலியப்படையை நடத்திச் சென்றான். காலிபாவை ஒரு ஜமுக்காளத்தில் வைத்துச் சுருட்டி நசுக்கிக் கொன்றுவிட்டான். அடுத்து, மாங்கு சிரியாவைக் கைப்பற்றி, டெமாஸ்கஸைக் கொள்ளையடித்தான். ஆனால் எகிப்தைக் கைப்பற்ற முடியவில்லை. ஏற்கனவே காலிபாவின் சந்ததியார் அங்கே பின்வாங்கி இருந்து வந்தனர். 1260ஆம் ஆண்டு போலோ சகோதரர்கள் கான்ஸ்டாண்டிநோபிளை விட்டுப் புறப்பட்டபோது

மாங்கு இறந்தான். அவன் சகோதரன் குப்ளா பட்டத்திற்கு வந்தான். அவன் பீகிங்கைத் தலைநகராக அமைத்தான். அவன் மங்கோலியப் பேரரசனுக மட்டும் அல்லாமல், சீனச் சக்கரவர்த்தியாகவும் விளங்கினுன். தனது சாம்ராஜ்யத்தின் ஒரு பகுதிக்கும் மற்ருெரு பகுதிக்கும் நிரம்ப தூரம் இருந்ததால், பாரசீகத்தில் ஒருவரும், ரஷ்யாவின் தென்பகுதியில் வோல்கா நதிக் கரையில் மற்ருெருவரும், ஆப்கானிஸ்தானத்திற்கு வடக்கேயுள்ள பகுதியில் ஒருவருமாகச் சாம்ராஜ்யத்தின் மேற்குப் பகுதியில் தனக்குக் கீழ் மூன்று வேந்தர்களை நியமிக்க வேண்டியதாயிற்று.

இத்தனை வியக்கத்தக்க நிகழ்ச்சிகளும் ஐம்பத்து நான்கு ஆண்டுகளுக்குள் நடந்தேறின. உலகம் அது வரை கண்டிராதபடி மிகப் பெரும் அளவில் பயங்கரப் படுகொலைகள் இந்நிகழ்ச்சிகளில் இடம் பெற்றன. ஏனெனில், பழைய உரோமாபுரியை வென்ற கொடிய காட்டுமிராண்டிகளைக் காட்டிலும் மங்கோலியர் மிகக் கொடியவர்கள். இப்போது அவர்கள் மத்தியதரைக் கடல் வரை வந்துவிட்டார்கள். பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன் பாதுவினுல் கைவிடப்பட்ட ஐரோப்பாவை எந்த நேரத்தில் அவர்கள் மீண்டும் தாக்கத் துவங்குவார்களோ என்று எவராலும் சொல்ல இயலவில்லை. கிறித்தவ நாடுகள் அனைத்திலும் அச்சம் குடிகொண்டிருந்தது.

ஆனுல் உண்மையாகப் பார்த்தால் மங்கோலியர்கள் திருப்தியடைந்திருந்தார்கள். நாகரிக உலகத்தின் ஐந்தில் நான்கு பாகங்களில் சூறையாடிய பொருள்களால் அவர்கள் பெரும் பணக்காரர்களாக இருந்தார்கள். ஆகவே எஞ்சிய ஒரு பகுதியின் மீது அவர்கள் ஆவல் கொள்ளவில்லை. மேலும் அவர்கள் விரைவில் நாகரிகம் படைத்தவர்களாகிவிட்டார்கள். வாணிபம், அமைதி, இவற்றில் உள்ள நன்மைகளை உணரத்தலைப்

பட்டுவிட்டார்கள். சாலைகளும், சாவடிகளும், அஞ்சல் நிலையங்களும் மிகச்சிறந்த முறையில் அமைக்கப்பட்டன. ஐரோப்பா முதல் மிகத் தூரக்கிழக்குப் பிரதேசம் வரை யில் வெளிநாட்டினர் உட்பட எல்லோரும் இடை யூறின்றிப் பிரயாணம் செய்ய முடிந்தது. பல நாட்டு வணிகர்களும் இச்சாலைகளை உபயோகித்து வந்தனர். இது முற்றிலும் ஒரு புதுமை. உரோம சாம்ராஜ்யம் பரவியிருந்த காலத்தில் ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கு மிடையே 'பட்டுச்சாலை' வழியாகவும், கடல் வழியாகவும் தொடர்ந்த போக்குவரவு இருந்து வந்தது. ஆனல் ஏழாம் நூற்ருண்டில் முகம்மதின் வெற்றி காரணமாக இரு கண்டங்களும் துண்டிக்கப்பட்டுவிட்டன. அன்று முதல் பின்னர் சுமார் ஐந்தரை நூற்ருண்டுகள் கழித்து மங்கோலியரால் அப்பாதைகள் மீண்டும் திறக்கப்படும் வரை, ஐரோப்பிய நாடு சீர்மிகு சீனநாகரிகத்தைப்பற்றி முன்பு அறிந்த அனைத்தையும் மறந்து விட்டதெனலாம். இப்போது பீகிங் நகரின் 'காகான்' சீனச்சக்கரவர்த்தி யாக இருக்கின்ற காரணத்தால் மீண்டும் அங்கே செல்ல முடிந்தது.

காகானுக்கு எந்த இனத்தவராயினும் வணிகர்களைக் காண்பதில் மகிழ்ச்சி. குறிப்பாக ஐரோப்பாவிலிருந்து வரும் கிறித்தவர்களாக இருந்துவிட்டால் அவருக்கு மிகவும் மகிழ்ச்சி. இதற்கு முதற் காரணம், கிறித்தவர் கள் முகம்மதியரின் விரோதிகள் என்பதையும், அவர் களோடு பல நூற்ருண்டுகள் மதப்போர் நடத்தி வந்திருக்கின்றனர் என்பதையும், அவர் அறிந்திருந்ததா கும். மங்கோலியர்களால் முகம்மதியர்களின் பாதி வலிமையே ஒடுக்கப்பட்டிருந்தது. எஞ்சியது எகிப்தில் நிலைபெற்றிருந்தது. ஆகவே அவர்கள் கிறித்தவர்கள் நிறைந்த ஐரோப்பிய நாட்டுடன் நட்புமுறை கொண்டாடியது நல்லதோர் அரசியல் தந்திரம் என்பதைக் காட்டுகிறது. இரண்டாவதாக மங்கோலி

யர்கள் வெற்றிகாணப் புறப்பட்டபோது ஒருவகை முற் போக்கற்ற பழைய மதத்தைப் பின்பற்றி வந்தனர். கிறித்தவ மதம் தங்களுக்கு உகந்ததாக இருக்குமெனப் பேரரசர் எண்ணினார்.

இந்தச் சூழ்நிலையை நோக்கும்போது, போலோ குடும்பத்தினர் எப்படிச் சீன நாட்டிற்கு இடையூறு ஏதுமின்றிப் பிரயாணம் செய்ய முடிந்தது, எப்படி வரவேற்கப்பட்டனர், ஐரோப்பியர்களுக்கு இந்தப் பிரயாணம் எத்தனை புதியதாகவும் விநோதமாகவும் இருந்திருக்கவேண்டும் என்பதையெல்லாம் நாம் அறிய முடியும். அவர்கள் வெனிசு நகரத்தைச் சார்ந்தவர் களாக இருந்தது பிரயாணத்தை மேலும் எளிதாக்கியது. வெனிசு என்பது இத்தாலியிலுள்ள ஒரு சாதாரண நகரம் மட்டுமன்று. இத்தாலியின் வடபகுதி அக் காலத்தில் பல குடியரசுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றினிடையே செல்வம் கொழிக்கும் சிலவற்றுள் ஒன்றின் தலைநகரமாகும் அது. அதில் அடங்கியுள்ள நிலப்பரப்பானது, லம்பார்டு சமவெளியின் ஒரு பகுதி, ஏட்ரியாடிக் கடலைச் சார்ந்த டால்மோசியன் கடற்கரை, பல கிரேக்கத் தீவுகள், ஆகியவற்றைக் கொண்டது. கான்ஸ்டாண்டிநோபிளில் அதன் செல்வாக்கு மிகுந்திருந் தது. ஆசியா மைனர், கருங்கடல், இவற்றை ஒட்டிய கடற்கரையில் வெனிசு வர்த்தக நிறுவனங்கள் இருந்தன. உண்மையாகப் பார்க்கப்போனால், கீழ்த்திசை வாணிபப் பொருள்கள் விற்கப்படும் ஒரு பெரிய ஐரோப்பிய வர்த்தகத்தலமாக வெனிசு நகரம் விளங்கியது. இப் பொருள்கள் எல்லாம் அண்மைக் கீழைநாடுகளிலுள்ள பல்வேறு வாணிபத் துறைமுகங்களில் முகம்மதிய நாட்டினர் வெனிசு வர்த்தகர்களுக்கு விற்றவையே ஆகும். ஆகவே வெனிசு வர்த்தகர்கள் கீழை நாட்டின ரோடு வாணிபம் புரிவதில் பழக்கப்பட்டவர்களாக இருந்ததுடன், முக்கிய அண்மைக் கிழக்கு நாடுகளின்

மொழிகளை அறிந்தவர்களாகவும் இருந்தனர். மங்கோலியர் சீனுவிற்குச் செல்லும் சாலைகளைப் போக்குவரத்துக்குத் திறந்துவிட்ட பின்னர், தூரக்கிழக்கு நாடுகளுக்கு அச்சாலைகள் வழியாகப் பிரயாணம் செய்வதற்கு ஏனையோரைக் காட்டிலும் வெனிசு நகரத்தார் மிகவும் தகுதி பெற்றிருந்தனர். போலோ குடும்பத்தினருக்கு எப்படி அவ்வளவு இயல்பாகப் பிரயாணம் செய்யமுடிந்தது என்பதை இது விளக்குகிறது. சீன தேசத்தை அடைந்த முதல் இடைக்காலப் பிரயாணிகள் அவர்கள் என்பதில் அவர்கள் புகழ் அடங்கியிருக்கிறது. ஆசிய நாட்டைப் பற்றிய நேரிடை வருணனையை முதன்முதல் தந்த ஐரோப்பியர் என்ற புகழ் மார்க்கோ போலோவைச் சாரும். அவர்களுடைய சாதனையை மதிப்பிடும்போது, எவ்வளவு முற்பட்ட காலத்தில் அவர்கள் வாழ்ந்தனர் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். 1260-ஆம் ஆண்டிலே டாண்டே பிறக்கக்கூடவில்லை. இடைக்காலப் பெருமகனுருக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கிய செயிண்டு லூயி என்ற பிரான்ஸ் நாட்டு மன்னர் வாழ்ந்த காலம் அது. ஐரோப்பா அன்று ஓர் ஏழை நாடு. மக்கள் அறியாமையில் உழன்றனர். நாட்டில் மக்கள் எண்ணிக்கையும் குறைவு. மார்க்கோ போலோவின் நூல் ஓர் ஒளிப்பிழம்பாகத் தோன்றிப் பலவற்றை நமக்கு அறிவித்துள்ளது. இந்நூல் வெளியானதற்கு அடுத்த நூற்ருண்டில் இத்தாலியில் மறுமலர்ச்சி வளரத் தொடங்கியது. இம்மறுமலர்ச்சியானது பழைய கிரேக்கர், உரோமானியர் இவர்களுடைய வாழ்க்கையையும் எண்ணங்களையும் பற்றிய இழந்த அறிவை மக்கள் மீண்டும் பெற உதவியது. அது மட்டும் இன்றி, உலகின் கீழைப்பகுதியைப் பற்றிய அறிவையும், மதி நுட்பத்தை விளக்கும் கருவூலத்தையும், மீண்டும் பெறவும் உதவிற்று. வேறெந்த நூலையும்விட மார்க்கோ போலோவின் நூல்தான் கல்வி மறுமலர்ச்சியின் மேற்கூறிய இரண்டாவது அம்சத்திற்கு மிகவும் உதவியது எனலாம்.

இரண்டாம் அத்தியாயம்

# மார்க்கோ போலோவின் பிரயாணம் தொடங்குவதற்குரிய நிகழ்ச்சிகள்

மார்க்கோ போலோவின் தந்தையும் சிற்றப்பனும் முதன்முதல் சீன நாட்டிற்குச் செய்த பிரயாணத்தின் வருணனை மிகச் சுருக்கமானது. எனினும் மார்க்கோ போலோ செய்த பிரயாணத்தைப் புரிந்து கொள்வதற்குப் போதுமான விவரங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. 1260-ஆம் ஆண்டில் போலோ சகோதரர்கள் கான்ஸ்டாண்டிநோபிளில் இருந்தனர் என்பதை முன்பே சொல்லியிருக்கிறோம். கிரிமியாவில் 'சுடாக்' என்னும் இடத்தில் நிக்கோலோ போலோவிற்கு ஒரு வீடு உண்டு. அந்த இடம் தெற்கு ரஷ்யாவில் குடியேறியுள்ள மங்கோலியர்கள் தங்கள் வாணிபப் பொருள்களைக் கொண்டுவந்து சேர்க்கும் வியாபாரத் தலமாகும். போலோ சகோதரர்கள் வாணிபத்தின் பொருட்டு இயல்பாக அங்கே போகத் தீர்மானித்து, கருங்கடலைக் கடந்து, அத்துறைமுகத்தை அடைந்தனர். அவர்கள் பணத்தையோ வாணிபப் பொருள்களையோ கொண்டு செல்லவில்லை. ஆனால் நகைகளை எடுத்துச் சென்றனர். ஏனெனில் அவை விலை உயர்ந்தவை என்பதோடு மற்றவற்றைக்காட்டிலும் மறைத்து வைப்பதற்கு எளியவையாகவும் இருந்தன. சுடாக்கிலோவெனில் வியாபாரம் மந்தமாக இருந்தது. அவர்கள் காஸ்பியன் கடலில் வோல்கா நதி கலக்கும் இடமான 'சராய்' என்னும் இடத்திற்குச் சமவெளியைக் கடந்து சென்றனர். இது பர்க்கா கானின் தலைநகரம். இவர் ஜெங்கிஸ் வம்சத்திய தமது சகோதரரான பாது என்பவரை அடுத்துப் பட்டத்திற்கு வந்தவர், இந்தப் பாது என்பவர் இரு

பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் போலந்து, ஹங்கேரி ஆகிய நாடுகளைக் கொள்ளையடித்துத் தெற்கு ரஷ்யாவை மான்யமாகப் பெற்ருர். ஆனல் இந்த இடைக் காலத்தில் மங்கோலியர்கள் மாறிவிட்டனர். பர்க்கா கான் இப்போது மேற்கத்திய நாடுகளுடன் வாணிபம் செய்ய விரும்பினர். அவர் போலோ சகோதரர்களிட முள்ள நகைகளை வாங்கினர். இதனல் அவர்களுக்கு நூற்றுக்கு நூறு விகிதம் இலாபம் கிடைத்தது.

வந்த வழியே திரும்பிப்போகப் போலோ சகோதரர் கள் அப்போது எண்ணினர்கள். ஆனல் மங்கோலி யரிடையே நிலவி வந்த நீண்ட அமைதி அங்குச் சலன முற்றது. குப்ளா பேரரசருக்குக் கீழ்ப்பட்டவனை பர்க்கா கான், மானியம் விடப்பட்ட நாட்டின் தலைமை யிடமான பாரசீகத்தை மையமாகக் கொண்டு ஆட்சி புரிந்துவரும் ஹூலகு என்பவனுடன் நட்பு முறையில் இருக்க வேண்டியவன். ஹூலகுவும் ஜெங்கிஸ் வம் சத்தைச் சேர்ந்த மற்ருெருவன். ஆனல் ஜெங்கிஸ்கான் மரணத்தறுவாயில் தெரிவித்த விருப்பத்திற்கு முற்றி லும் பணியாது இவர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டனர். தங்களுக்குள்ளே சண்டையிட்டுக் கொண்டால் மங்கோலியப் பேரரசு நீண்டகாலம் இருக்காதெனெ ஜெங்கிஸ்கான் தன் சந்ததியாருக்கு முன்பே எச்சரிக்கை செய்திருந்தான். சராய் என்னு மிடத்திற்குப் போலோ சகோதரர்கள் வந்த சமவெளிப் பாதை வழியாகப் படையெடுப்புக்கான துருப்புக்களை ஹூலகு அனுப்பியிருந்தான். ஆகவே போலோ சகோதரர்கள், தங்கள் சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் கிழக்கு நோக்கி முன்னேற முடிவு செய்தனர். ஆப்கானிஸ்தானத்திற்கு வடக்கே பொக்காரா நகரத் தில் பாரக் (Barac) என்னும் மூன்ருவது வேந்தன் அப் போது வாழ்ந்து வந்தான். இவர்கள் காஸ்பியன் கடலை யொட்டி வடபுறமாகச் சுற்றி அவனுடைய இராஜ்யத்

திற்குள் சென்றனர். அங்குச் சென்றடைந்த பிறகு அவர்கள் வியாபாரம் பெருகிற்று. பின்னர் பாரசீகம் வழியாக மத்தியதரைக் கடலுக்குத் திரும்பத் திட்டமிட்டனர். ஆனால் ஹுலகுவிற்கும் பர்க்காவிற்குமிடையே சச்சரவு தொடர்ந்து நீடித்ததால் அங்குச் செல்லும் பாதைகளும் பாதுகாப்பற்றவையாக இருந்தன. பொக்காராவின் நல்ல தட்பவெப்ப நிலையினாலும், அழகிய சூழ்நிலைகளாலும், அது ஒரு ரம்மியமான நகரமாக விளங்கிற்று. போலோ குடும்பத்தினர் பணம் படைத்தவர்கள் ஆகிவிட்டார்கள். ஆகவே அவசரப்படவில்லை. ஒன்று, இரண்டு, மூன்று என்று ஆண்டுகள் உருண்டு கொண்டிருந்தன; ஆனால் அவர்கள் நகரவில்லை.

1265-ஆம் ஆண்டு ஒரு நாள் பாரசீகத்திலுள்ள ஹுலகுவின் அரசவையினின்றும் மங்கோலியத் தூதர்கள் வந்தனர். அவர்கள் 'பட்டுச்சாலை' வழியாகச் சீனாவுக்குச் சென்று கொண்டிருந்தனர். இன்னும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் பொக்காரா வழியாகச் செல்லும் அப்பாதையின் வடக்குக் கிளை வழியாகச் சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் போலோ குடும்பத்தினரைச் சந்தித்தபோது வியப்புற்றனர். ஏனெனில் சாதாரணமாக ஐரோப்பியர்கள் அப்பகுதிகளுக்கு வருவதில்லை. இரு தரப்பினருக்குமிடையே நட்பு ஊன்றியது. அவ்விடத்தை விட்டுச் செல்லுமுன் தூதர்கள் போலோ குடும்பத்தினரைத் தங்களுடன் வரும்படி அழைத்தனர். 'சீன நாட்டில் நீங்கள் அதிசயிக்கத்தக்க வகையில் வாணிபம் செய்யலாம். காகானும் மேற்குத்திசையினின்று வரும் வெளிநாட்டினரை நேசிக்கிறார்' என்று அவர்கள் கூறினர். நீண்ட பிரயாணம் செய்துதான் பீகிங்கை அடைய முடியும். தூதுவர்களோடு போவது என்பது அவர்களை முழுதும் நம்பிக் கண்காணாத இடத்திற்குப் போவதாகும். ஆனால் போலோ குடும்பத்தினர் நான்கு ஆண்டுகளுக்கு

மேலாகவே மங்கோலியர்கள் நாட்டில் வாழ்ந்தும், அவர்கள் மொழியைப் பேசியும் வந்திருக்கிருர்கள். ஏற்கனவே கான்ஸ்டாண்டிநோபிளிலிருந்து சீன நாட்டிற்குள்ள தூரத்தில் பாதியைக் கடந்துவிட்டிருக் கிருர்கள். ஒருக்கால் தூதர்கள் கூறுவது போல் பேரரசர் அவர்களே நல்ல முறையில் வரவேற்பாராளுல் நல்ல இலாபம் சம்பாதிக்கலாம் என்று கருதினுர்கள். சுருங்கச் சொல்லப்போனுல், அவர்கள் போகத் தீர்மானித்து விட்டார்கள். ஓராண்டு பிரயாணம் செய்தனர். அவர்கள் பாதை டர்பான் (Turfan) ஹாமி (Hami) என்னும் பாலேப் பசும்புல்வெளிகளேக் கடந்து, ‘ஆயிரம் புத்தர்கள்’ அல்லது ‘துன் ஹுவாங்’ என்று அழைக்கப் படும் குகைகளுக்கருகே, ‘பட்டுச்சாலே’யின் வடக்குக் கிளேயும் தெற்குக் கிளேயும் கூடுகின்ற இடத்தை நோக்கிச் சென்றது. அங்கிருந்து அவர்கள் கீழே மஞ்சள் நதியை அடைந்து இறுதியாக ‘கான்பலிக்’ என்று மங்கோலிய மொழியில் அழைக்கப்படும் பேரரசரின் நகரமான பீகிங்கைச் சேர்ந்தனர்.

மார்க்கோ போலோ பீகிங்கில் தன் தந்தையும் சிற்றப்பனும் தங்கியிருந்ததைப்பற்றிய வரலாற்றைக் கூறவில்லே. அவர் கூறுவதெல்லாம் குப்ளா பேரரசர் அவர்களே அருள் கூர்ந்து வரவேற்ருர், மேற்கத்திய நாடுகளேப்பற்றி வினவினுர் என்பதுதான். ஓராண்டு தங்கியிருந்த பின்னர் அவர்கள் திரும்பிச் செல்வதற்கு அனுமதி வேண்டினர். அப்போதுதான் பேரரசர் தனது அவைக்குச் சில கிறித்தவப் பாதிரிமார்களே அவர்கள் அனுப்பிவைக்கவேண்டும் என்ற தனது விருப்பத்தைத் தெரிவித்தார். ஆம், போலோ சகோதரர்களேயே போப்பாண்டவரிடம் தமது அரசாங்கத் தூதர்களாகப் பணிபுரியுமாறு நியமித்தார். தன்னுடன் இருக்கும் பிரபுக்களுள் ஒருவரை அவர்களுடன் செல்லுமாறும் பணித்தார். அவர்கள் பாதிரிமார்களே அனுப்பிவைக்கும்

படியான செய்தி அடங்கிய கடிதத்தைச் சமர்ப்பிப்ப துடன், புனிதச்சமாதியினின்றும் எண்ணெய் கொண்டு வரவேண்டும் என்பதும் அவர்களுக்கு இடப்பட்ட பணி. எல்லாவற்றிலும் முக்கியமானது அவர், அவர்களுக்குத் 'தங்க ஓலே' கொடுத்தது. அது ஒரு நாட்டினின்றும் மற்ருெரு நாட்டிற்குச் செல்லும் வெறும் உரிமைச்சீட்டு அல்ல. ஓரடி நீளமும் மூன்றங்குல அகலமும் கொண்ட ஒரு தங்க ஓலே. அதில் கீழ்க்கண்ட வார்த்தைகள் பொறிக்கப்பட்டிருந்தன. 'என்றுமுள மேலுலகத்தின் மகிமையால் வேந்தருடைய பெயர் புனிதமாக இருப்ப தாக. எவனெருவன் அவரிடத்து பக்தி செலுத்த வில்லேயோ அவன் உயிரிழப்பானுக'. இத்தகைய ஓலேகளே ஏந்திச்செல்லும் எவரும் பரந்த மங்கோலியப் பேரரசின் எப்பகுதியிலும் அவற்றைக் காட்டலாம். அப்படிக் காண்பித்தவர்கள் அந்தந்த இடத்து ஆட்சியாளரிட மிருந்தோ வேறு எவரிடமிருந்தோ உணவு, குதிரைகள் முதலிய எந்த உதவியையும் உறுதியாகப் பெறமுடியும்.

அவர்கள் திரும்பிச் செல்வதற்கு மூன்று ஆண்டுகள் கழிந்தன. இப் பிரயாணத்தில் பல இன்னல்களும் துணிச்சலான செயல்களும் நிகழத்தான் செய்தன. உடன் வந்த கனவான் நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவரை விட்டுவிட்டுச் செல்ல நேரிட்டது. பொக் காராவை அடைந்த பின்னர், பாரசீகம், சிரியா ஆகிய நாடுகளின் வழியாகத் தெற்கு நோக்கி அவர்கள் லயாஸ் என்னும் இடத்திற்குப் பிரயாணம் செய்ததாகத் தெரிகிறது. அவ்விடம் மத்தியதரைக்கடலின் வட கிழக்கு மூலேயில் உள்ளது. அங்கிருந்து கீழே பாலஸ் தீனக்கரை வழியாக அக்ரே நகரை அடைந்தனர். அந்நகரம் சிலுவைப் போர்வீரர்களால் கோட்டைகள் அமைத்து முன்னர் கட்டப்பட்டிருந்தது. இவர்கள் சென்றபோதும் அவர்கள் அங்கே வாழ்ந்தனர். அங்கு வந்து சேர்ந்ததும் நான்காவது கிளிமெண்ட் போப்

பாண்டவர் இறந்துவிட்டதாகவும், அவருக்குப் பின் பட்டத்திற்கு வருபவர் அதுவரை நியமிக்கப்படவில்லை என்றும் அறிந்தனர். இதைக் கேள்வியுற்றதும் அக் ரேயில் வசித்துவந்த தியோபால்டு என்னும் மாதா கோவில் உயர் அதிகாரியான போப்பாண்டவரின் பிரதி நிதியைச் சந்தித்தனர். கொஞ்ச காலம் கழித்துத்தான் புதிய போப்பாண்டவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்றும், அதற்குக் காரணம் ரோம் நகரத் திருச்சபையில் உள்ளவரிடம் காணப்படும் பிளவுகளே என்றும், அப் பிரதிநிதி அவர்களிடம் கூறினர். அதையொட்டிப் போலோ சகோதரர்கள் சொந்த ஊராகிய வெனிசுக்கே திரும்பிச் சென்று தேர்தல் முடிவு அறிவிக்கப்படும் வரையில் காத்திருக்கத் தீர்மானித்தனர். முன்பு கூறியது போல, நிக்கோலோ போலோ, தன் மனைவி முன்பே இறந்துவிட்டதையும், தன் மகன் மார்க்கோ போலோ அப்போது பதினைந்து ஆண்டுகள் நிரம்பிய ஒரு நுண்ணறிவு படைத்த இளைஞனை இருப்பதையும் கண்டறிந்தார்.

போப்பாண்டவராட்சி இன்றியே ஈராண்டுக் காலம் கழிந்து விட்டது. சீனப் பேரரசர் அறிவுறுத்தியவாறு அவர் அனுப்பிய கடிதத்தைச் சேர்ப்பித்தல், மதகுரு மார்களின் சேவையைப்பெறுதல், ஆகிய இரண்டையுமே நிறைவேற்ற முடியாமற் போனதால், மீண்டும் அக் ரேக்குத் திரும்பிச் சென்று போப்பாண்டவரின் பிரதி நிதியான தியோபால்டின் ஆலோசனையைப் பெறுவதே சிறந்த வழி என அவர்கள் எண்ணினர். 1271-ஆம் ஆண்டு மார்க்கோ போலோவை அழைத்துக்கொண்டு வெனிசை விட்டு அவர்கள் புறப்பட்டனர். பேரரசரிடம் அவர்கள் கூறவேண்டிய சமாதான மொழிகளுக்கு ஆதரவாகத் தானும் அவருக்கு ஒரு கடிதத்தை மன முவந்து வழங்குவதாக அப்பிரதிநிதி சொன்னர். மேலும்

புனிதச் சமாதியினின்றும் எண்ணெயையாகிலும் பெற்றுச் செல்லுமாறு ஆலோசனையும் கூறினர்.

ஆகவே அவர்கள் அக்ரேயிலிருந்து ஜெருசலத்திற்குச் சென்றனர். அங்குள்ள புனிதச் சமாதியடங்கிய மாதா கோவிலில் ஏசுநாதர் அடக்கமானது முதல், ஒரு தீபம் ஒளிவிட்டுக்கொண்டிருக்கும் அற்புதம் நிகழ்ந்து கொண்டிருப்பதாகக் கூறப்பட்டு வந்தது. சிறு சிறு அளவில்தான் எண்ணெயை அங்கு வாங்க முடியும். ஒரு குப்பி எண்ணெயைப் பெற்றுக்கொண்டு அவர்கள் அக்ரேக்குத் திரும்பினர்.

தியோபால்டிடம் விடைபெற்றுக்கொண்டு 1271-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திரும்பவும் சீன நாட்டிற்குத் தங்கள் பிரயாணத்தைத் தொடங்கினர். மார்க்கோ போலோவும் உடன் சென்றார். லயாஸை விட்டு அவர்கள் வெகு தூரம் போகவில்லை. அதற்குள்ளாகவே தாங்கள் எவருடன் ஏற்கனவே பெருமளவில் பேச்சு வார்த்தை நடத்தியிருந்தனரோ, அதே போப்பாண்டவரின் பிரதிநிதியான தியோபால்டு, இப்போது பத்தாவது கிரிகரி என்ற பெயரில் போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார் என்ற நற்செய்தியைக் கேள்வியுற்ற போலோக்கள், விரைவாகவே அக்ரேக்குத் திரும்பிவந்து அவருக்குத் தங்கள் மரியாதையைச் செலுத்தினர். இப்போது அவரால் சீனப்பேரரசரிடம் அழைத்துச் செல்லும் பொருட்டு இரு மதகுருமார்களை அவர்களிடம் ஒப்படைக்க முடிந்தது. மேலும் பொருத்தமான சில செய்திகளடங்கிய புதிய கடிதம் ஒன்றையும் சில வெகுமதிகளையும் அவர்களிடம் கொடுத்தனுப்பினர். அவ்விருவருள் ஒருவர் திரிபோலியைச் சார்ந்த வில்லியம் என்பவர். அவர் ஒரு புகழ் பெற்ற பண்டிதர். பல நூல்களை எழுதியவர். நமது எட்வர்டு இளவரசர், பின்னல் முதலாம் எட்வர்டு என்று அழைக்கப்பட்டவர், அச்சமயம் அக்ரேயில் யாத்திரிகராகத்

தங்கியிருந்தார். அவர் போப்பாண்டவரின் பிரதிநிதியான தியோபால்டினுடைய நெருங்கிய நண்பர். போப்பாண்டவராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரையில் அவர் இளவரசரின் அலுவலர்களுள் ஒருவராக இருந்தவர்.

இக்குழுவினர் மீண்டும் பிரயாணத்தைத் தொடங்கினர். முன்போலவே கப்பலில் லயாசுக்குச் சென்றனர். அங்கேதான் பாரசீக நாட்டின் வழியாகக் கிழக்கே செல்லும் பாதை தொடங்கிற்று. ஆனால் இம்முறை அவர்களுக்கு மற்றோர் இடையூறு ஏற்பட்டது. அதற்குக் காரணம் அப்போது மங்கோலியருக்கும் எகிப்தியருக்குமிடையே நிகழ்ந்துகொண்டிருந்த சண்டையே ஆகும். மங்கோலியர்கள் ஈராக்கின் மீது படையெடுத்துப் பாக்தாத்திலுள்ள காலிபாவைக் கொன்றவுடன் தெற்கு நோக்கி முன்னேறி, முஸ்லிம்களின் அதிகாரத்திற்குப் புதிய தளமான எகிப்தை வெற்றி கொள்ள விரும்பினர். ஆனால் அப்போது இருந்த நிலையில் எகிப்திய வம்சத்தினர் வீரமுள்ளவர்களாக இருந்தனர். அந்த வம்சம் 'மம்லூக்' அல்லது அடிமை வம்சம் என்று அழைக்கப்பட்டது. ஏனெனில், முன்னாள் அடிமைகள் தான் அப்போது சுல்தான்களாக இருந்தனர். தங்கள் சாமர்த்தியத்தினாலும் போர்க்களச் சாதனைகளினாலும் அவர்களால் உயர்ந்த அதிகாரத்தைக் கைப்பற்ற முடிந்தது. இவர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவன் பபார்ஸ் என்பவன். மங்கோலியர்கள் தென் சிரியாவைக் கைப்பற்றி எகிப்தின் மீது படையெடுப்பதைத் தடுக்க முடிந்தது மட்டுமின்றி, அப்போது பாரசீகப் பகுதியில் ஆண்டுகொண்டிருந்த இல்-கான் ஹுலகுவின் நாட்டின் மீதும் அவன் படையெடுத்தான். போலோ குடும்பத்தினர் மூவரும் சீன நாட்டிற்குப் புறப்பட்டுக்கொண்டிருந்த காலம் அதுவே. இப்படையெடுப்பினால் எழுந்த குழப்பங்கள் லயாஸிலிருந்து

பாரசீகம் வழியாகச் செல்லும் பிரயாணத்தைச் சற்று ஆபத்து நிறைந்ததாக ஆக்கிவிட்டது. பபர்ஸ் சுல்தான் அப்பகுதியில் அங்குமிங்கும் குதிரையில் பறந்து கொண்டிருந்தான்.* அவன் பெரும் செயலாற்றிப் புகழ் பெற்றவன். ஒரே வாரத்தில் டமாஸ்கஸிலும் கெய்ரோவிலும் டென்னிஸ் விளையாடினன் என்று அவனைப் பற்றிச் சொல்வதுண்டு. இரண்டு மதகுருமார்களும் பயந்துகொண்டு லயாஸைவிட்டுப் புறப்பட மறுத்து விட்டார்கள். போலோ குடும்பத்தினர் அவர்களை அக்ரேக்குத் திருப்பியனுப்ப வேண்டியதாயிற்று. ஆனல் தங்களைப் பொறுத்த வரையில் இவ்வளவு தாமதம் ஆன பின்னர், பேரரசரின் நல்லெண்ணத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவர்கள் துணிந்து செயலாற்ற வேண்டியவர்களாகிவிட்டார்கள். ஆகவே முன்னர் திட்டமிட்டபடி லயாஸைவிட்டுப் புறப்பட்டனர். அவர்கள் சென்ற பாதை படத்தில் காட்டப்பட்டிருக்கிறது. கருங்கடலிலிருந்து பாரசீக வளைகுடாவிற்குச் செல்லும் பெருஞ்சாலையை அடைவதற்குக் காகஸஸ் பகுதியிலுள்ள ‘எசிரம்’ (Ezerum) என்ற இடத்திற்கு முதலில் அவர்கள் போகவேண்டி இருந்தது. அந்நகரத்திலிருந்து வலதுபுறம் திரும்பி அவ்வழியாகவே தப்ரீசுக்குச் சென்று அதற்கப்பால் கெர்மானை அடைந்தனர். அங்கிருந்து இரு கிளைப்பாதைகள் பிரிகின்றன. ஒன்று தெற்கு நோக்கிப் பாரசீகக் குடாக்கடலில் ஹோர்முஸ் நதி விழும் இடத்திற்குச் செல்வது; மற்ருென்று வடக்கு நோக்கிப் ‘பட்டுச்சாலை’யின் கீழ்க் கிளைப்பாதைக்குச் செல்வது.

இளைஞர் மார்க்கோ சென்றவிடமெல்லாம் கூர்ந்து நோக்கினர். தன் உள்ளத்திற்குகந்தவற்றைக் குறித்துக்கொண்டார். சுற்றுப் புறங்களில் உள்ள இடங்களைப் பற்றி யார் எதைச் சொன்னர்களோ அவற்றைச் செவி மடுத்துக் கேட்டார். எடுத்துக்காட்டாக ஒன்றைப்

பார்ப்போம். 'அராராத்' மலையை அவர் குறிப்பிடுகிறார். அம்மலையில்தான் முதலில் நோவாவின் பேழை (Noah's Ark) வந்திறங்கியது. அப்பேழை அப்போதும் உச்சியில் இருந்ததாகவும், 'மிக தூரத்திலிருந்து பார்ப்பவர்களுக்குப் பனிப்பாறைகளின் நடுவே ஒரு பெரிய கரும் பொருளாக அது காணப்படுவதாகவும், ஆனால் எவரும் அந்த உச்சிக்குச் சென்றதில்லை என்றும், அவரிடம் சொல்லியிருக்கிறார்கள். அராராத் மலையில் பேழை சேதமுறாமல் அப்படியே இருக்கிறதென்பது நீண்ட காலமாக இருந்துவரும் நம்பிக்கை. வரலாற்றாசிரியரான ஜோஸபஸ் என்னும் யூதர் அதைக் குறிப்பிடுகிறார். அப்பகுதியிலுள்ள மக்கள் அதை நம்பிவந்தனர். ஆனால் 1829-ஆம் ஆண்டு பேரட் என்னும் பேராசிரியர் 16000 அடி உயரத்தில் உள்ள அம்மலைக்குன்றின்மீது ஏறி உச்சியிலிருப்பது பனியேயன்றி வேறொன்றும் இல்லை என்பதைக் கண்கூடாகக் காட்டிவிட்டார்.

மார்க்கோ போலோவின் உள்ளங்கவர்ந்த மற்றொரு செய்தி, அச்சாலைக்கு வடபகுதியில் ஓர் எண்ணெய்க் கிணறு இருப்பதாகவும், 'அந்த ஊற்றிலிருந்து வழியும் எண்ணெய் ஒரே சமயத்தில் ஆயிரம் கப்பல்கள் நிறைய ஏற்றக்கூடிய அளவுக்குப் பெருகிக்கொண்டிருக்கிறது என்பதுமாகும்.' அவர் மேலும், 'இந்த எண்ணெய் உணவில் சேர்த்து உபயோகிப்பதற்குத் தகுதியற்றதாயினும் எரிப்பதற்கு ஏற்றதாயிருப்பதுடன், தோல் வியாதியுடைய ஒட்டகங்களின் மேல் பூசுவதற்கு உகந்ததாயும் உள்ளது' என்று கூறுகிறார். இங்கேதான் ஐரோப்பிய இலக்கியத்திலேயே முதன் முதலாகப் பெருமை வாய்ந்த 'பாகு' (Baku) எண்ணெய்க் கிணறுகளைப் பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. இவையும் அதே பகுதியில் உள்ள மற்றக் கிணறுகளும் இன்றைய உலகில் மிக முக்கியத்துவம் பெற்றுவிட்டன.

சாலை வழியே சென்று கொண்டிருக்கும் போதே அல்

மொஸ்தன்சிர் பில்லா (கடவுளிடம் உதவியைக் கோரு பவர்) என்னும் கடைசி காலிபாவைப்பற்றியும், பதினூறு ஆண்டுகளுக்கு முன் மாங்குவிற்குப் பதில் காகானின் பிரதிநிதியாக அப்போது பதவி வகித்த ஹுலகுவினுல் சூறையாடப்பட்ட பாக்தாத் தலைநகரைப் பற்றியும் சில கதைகளைக் கேள்விப்பட்டார். 'அராபிய இரவுகள்' என்ற நூலில் நமக்கு வெகுவாக அறிமுகமாகியுள்ள அப்பாசித் காலிபாக்கள் பல நூற்றாண்டுகளாகப் பாக்தாத்தைத் தலைமையிடமாகக் கொண்டிருந்தனர். அங்குக் குவிக்கப்பட்டிருந்த நிதிக்குவியல் மிகப் பெரு மளவில் இருந்தது. அணிகளுக்கும் தங்கத்திற்கும் உலகிலேயே மிகப் பெரிய கருவூலமாக அது அமைந் திருந்தது. ஹுலகு தாக்குதல் நடத்தி நிதிகளைக் கைப்பற்றிய போது அதைக் கண்டு அவன் வியப் படைந்ததாக மார்க்கோ கூறுகிறுர். அதே சமயம் அத்தனை பொருளையும் நல்ல முறையில் பயன்படுத்தாத காலிபாவிடம் ஹுலகுவிற்கு இகழ்ச்சியுணர்வே ஏற் பட்டது. முஸ்லிம் உலகத்தின் மதத்தலைவரான தோல்வியுற்ற காலிபாவை நோக்கி, 'உம்மைப் பாது காத்துக் கொள்வதற்குப் போதுமான அளவு ஒரு சேனையைத் திரட்டி, அதற்கு ஊதியம் கொடுப்பதில் இந்நிதியைப் பயன்படுத்தாமற்போனீரே, ஏன் இத்தனை முட்டாள்தனமாக இருந்தீர்?' என்று ஹுலகு கேட் டான். அந்த அவல மனிதன் ஒரு வார்த்தையும் பேச வில்லை. ஹுலகு மேலும், 'பொன்னைக்கொண்டு வேருெரு பொருளை வாங்கலாமே தவிர அதனுல் வேறு நன்மை இல்லை. அதை நான் உமக்கு மெய்ப்பிக்கிறேன்' என்று சொன்னுன். நிதிச்சாலையில் தங்கத்தோடு காலி பாவையும் சேர்த்து அடைத்து வைத்தான். அவனுக்குப் பசி மிகுந்தபோது ஹுலகு எள்ளி நகையாடினுன்; 'இவ்வளவு பத்திரமாகச் சேர்த்து வைத்தீரே, அந்தத் தங்கத்தை உண்பீராக' என்றுன். தங்கத்தின் மத்தியி

லேயே காலிபா பசி தாளாமல் உயிர் துறந்தார். இக் கதைதான் மார்க்கோ போலோ கேள்வியுற்றது. வேறு சிலர், தங்கத்தை உருக்கி அவர் தொண்டை வழியே போகுமாறு ஊற்றி, அதை உண்ணும்படி ஹுலகு செய் தான் என்று கூறியிருக்கின்றனர். ஆனால் வரலாற்று சிரியர்கள் நம்பத்தக்கதாகக் கூறுவதாவது, காலிபா ஒரு பெரிய சமுக்காளத்தில் சுருட்டப்பட்டு அதன் கனத் தினாலும் அமுக்கத்தினாலும் நசுக்கப்பட்டிருக்கவேண்டும், அல்லது அதனினும் சிறிய ஒரு சமுக்காளத்தில் சுருட் டப்பட்டுக் குதிரைகளைக் கொண்டு மிதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பதாகும். பாக்தாத் காலிபாக்கள் ஐந்நூறு ஆண்டுகள் சிறப்புமிக்க விசித்திர மாந்தர் களாய்த் திகழ்ந்தார்கள். அவர்கள் மங்கோலியர் களால் வீழ்த்தப்பட்ட சிறிது காலத்திற்கெல்லாம் மார்க்கோ போலோ டப்ரிஸ் சாலை வழியாகக் குதிரை யில் பிரயாணம் செய்துகொண்டிருந்தார். ஆதலால் அவர்கள் வீழ்ச்சியைப் பற்றிய ருசிகரமான வர லாற்றிலே அவர் மிகுந்த அக்கறை காட்டியதில் வியப் பில்லை. ஆனால் ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். மார்க்கோ போலோ தனது 'நூலை' எழுதிய காலத்தில் மங்கோலியரின் சிறந்த நண்பராக ஆகிவிட்டார். முஸ்லிம்களை எதிர்த்து அவர்கள் அடைந்த வெற்றி இவலரைக் கிறுகிறுக்கச் செய்தது. இதற்குக் காரணம் இவர் மங்கோலியர்களை வியந்தார் என்பது மட்டுமின்றி, முஸ்லிம்கள், கிறித்தவர் உலகிற்கே பரம்பரைப் பகைவர்கள் என்பதுமாகும். ஜெருசலம் இருமுறை சிலுவைப் போர் வீரர்களால் முஸ்லிம்களிட மிருந்து பலாத்காரமாகக் கைப்பற்றப்பட்டது. ஆனால் மார்க்கோ போலோ அக்ரேயை அடைவதற்குச் சற்று முன்னர்தான் இறுதியாக அவர்கள் அதை இழக்க நேரிட்டது. எனினும் முஸ்லிம்கள் கிறித்தவரின் புனிதத் தலங்களைப் பராமரித்தும், கிறித்தவரின் புனிதச்

சமாதியில் உள்ள தீபத்தை என்றும் எரிந்துகொண்டிருக் கும்படி ஏற்பாடு செய்தும் இருந்தனர்.

மார்க்கோ போலோ ஒரு காட்சியை வருணிப்பதைக் காட்டிலும், கதை சொல்லுவதில் மிகவும் தேர்ந்தவர். பாக்தாத்திற்குப் பதில் இப்போது அந்தப் பகுதியில் மிகச் சிறந்த நகரமாக விளங்கிய டப்ரிஸைப் பற்றி மார்க்கோ போலோ சொல்லமுடிந்ததெல்லாம் இது தான்: 'நகரத்தைச் சுற்றிலும் அழகான தோட்டங்கள் இருக்கின்றன. அங்கு எல்லா வகையான நேர்த்தி மிக்க பெரிய பழங்கள் நிறைய இருக்கின்றன'. (ஒரு பாரசீகத்தோட்டம் இயல்பாக இருப்பதைக் காட்டிலும் மிக இன்பம் பயப்பதாகத் தோன்றுவதற்குக் காரணம் அது ஒரு பாலை நிலத்தைப் பின்னணியாகக் கொண்டிருப் பதேயாகும்.) நாற்பதாண்டுகளுக்குப் பிறகு டப்ரிஸ் வழியாகச் சென்ற இப்னே பதூதா என்ற பிரயாணி கூறுவதில் உயிரோட்டம் இருக்கிறது. அவர் கூறுகிறார் 'நகை வியாபாரிகள் கடைத்தெரு வழியாக நான் நடந்து சென்றேன். நவரத்தினங்களின் பளிச்சிடும் ஒளி கண் களைக் கூசச் செய்தது. நல்ல தோற்றமுடைய அடிமைகள் மிக நேர்த்தியான ஆடைகளை உடுத்திக் கொண்டு இடுப்பிலே பட்டுக்கச்சை அணிந்தவர்களாய் மங்கோலிய மாதர்கள் முன்னிலையிலே மிக உயர்ந்த ரத்தினங்களைப் பரப்பினார்கள். அவர்களும் நிறைய பொருள் கொடுத்து வாங்கினார்கள்'. சாதாரணமாக மார்க்கோ போலோவினால் இவ்வளவு தெளிவாக ஒரு காட்சியைப் படம்பிடித்துக் காட்ட இயலவில்லை.

சாலை வழியே மேலும் சென்ற அவர்கள் சவாஹை அடைந்தனர். மூன்று ஞானியர்களைப் பற்றி இந்த இடத்தில் மார்க்கோ போலோ ஒரு கதை கேள்வி யுற்றார். வழிகாட்டிகள் அவருக்கு ஒரு பெரிய சதுர மான கட்டடத்தைக் காட்டினார்கள். பின்னர் உள்ளே அழைத்துச் சென்று மூன்று கல்லறைகளைக் காண்பித்

தார்கள். அவற்றுள் தைலமூட்டிப் பதம் செய்யப் பெற்ற மூன்று உடல்கள் உரோமம் தாடி முதலிய வற்றுடன் நல்ல முறையில் பாதுகாக்கப்பட்டிருப்பதை அவர்களால் காண முடிந்தது. 'இம் மூவரும் ஞானி களான அரசர்கள். இவர்கள்தான் ஏசுநாதர் குழந்தை யாக இருந்தபோது அவருக்கு வெகுமதிகள் கொண்டு சென்றவர்கள்' என்று அவர்கள் கூறினர். மார்க்கோ போலோவை இக்கதை மிகவும் கவர்ந்தது. அவர் மேலும் விவரங்கள் அறிய விரும்பினுர். இவருடைய கேள்விகளுக்குரிய விடை அவர்களுக்குத் தெரியவில்லே. மார்க்கோ போலோ ஏமாற்றமடைந்தார். அம்மூன்று மன்னர்களின் பெயர்கள், காஸ்பர் (Gaspar), மெல் ஷியர் (Melchior), பல்தாஸார் (Balthazar), என்பதையும் வெகுகாலத்திற்கு முன்பே அவர்கள் அடக்கம் செய்யப் பட்டார்கள் என்ற செய்தியையுமே அவர்களிடமிருந்து சிரமப்பட்டு அறிய முடிந்தது. ஆனல் மேலும் சிறிது தூரத்திற்கு அப்பால் சென்றதும் அவர்களேப் பற்றிய விந்தையான ஒரு செவிவழிச் செய்தியைக் கேள்வி யுற்றுர். பெத்லஹெம் என்ற இடத்தில் அவர்கள் வெகு மதிகளேக் கொடுத்தவுடன், குழந்தை ஏசுநாதர் பதிலுக்கு மூடியிடப்பட்ட ஒரு சிறு பெட்டியைக் கொடுத்தாராம். அவர்கள் தங்கள் இருப்பிடத் திற்குச் சவாரி செய்துகொண்டு திரும்பும்போது, தங்கள் ஆவலே அடக்க இயலாதவர்களாய் அப் பெட்டியைத் திறந்தார்கள். ஆனுல் அதில் ஒரு கல் மட்டும் இருப்பதைக் கண்டனர். ஏமாற்றமடைந்த அவர்கள் அக்கல்லே ஒரு கிணற்றில் எறிந்து விட்டார்கள். அப்படிச் செய்த மறுகணமே கிணறு தீப்பிடித்துக் கொண்டது. பிறகுதான் அக்கல் தெய்வத்தன்மை வாய்ந்த ஒரு புனிதப் பொருள் என்பதை அவர்கள் உணர்ந்தனர். அத்தீயில் ஒரு பகுதியைத் தங்களுடன் எடுத்துச் செல்ல வகை செய்தனர். பிறகு தங்கள்

கோவில்களில் அதை எப்போதும் எரியவிட்டு அதை தெய்வீகத் தீயெனக் கருதி வழிபட்டுவந்தனர். பாரசீகத்தில் வழங்கும் சொரவாஸ்தரின் மதத்தில் தீ வழிபாட்டுச் சடங்கு உண்டு. மேற்சொன்ன வகையில் போலோ இவ்வழிபாடு தோன்றிய விதத்தை விளக்குகிறார். இவருக்கு முன்பு எத்தனையோ வெனிசு நகரத்தினர், இம் மூவேந்தர்களைப் பற்றிய கதையினால் கவரப்பட்டிருக்கிறார்கள். அனேகமாக வெனிசு நகரத்தின் புகழுக்குக் காரணமாகப் பிற்காலத்தில் விளங்கிய பெரும் கலைஞர்கள் பலரும், இம்மூவேந்தர்கள் குழந்தை ஏசுவுக்கு வெகுமதிகள் அளிப்பதைச் சித்திரமாகத் தீட்டியிருக்கிறார்கள். பெரு வழக்காக அறியப்பட்ட பெயர்களோடு இன்னும் பல பெயர்கள் அவர்களைக் குறிப்பனவாக இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சிரியக் மொழியில் எழுதப்பட்ட நூல்களில் அவர்கள் அருபோன், ஹர்மோன், டாக்ஷேஷ் என்று அழைக்கப்படுகிறார்கள், எபிரேய மொழியில் மகலோத், கல்கலாத், சராசியா என்றும், அடோர், சடோர், பெடடோரொஸ் என்றும் அழைக்கப்படுகிறார்கள். இன்றும் அவர்களுடைய முழு வரலாற்றையும் விநோதப் பெயர்களையும் அறியாவிட்டாலும், கலைஞர்கள் அவர்களை ஓவியத்தில் வரைந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

சவாஹுக்கு அப்பால் உள்ள சாலை, குதிரைகளுக்குப் பெயர் பெற்ற பாரசீகப் பகுதி வழியாகச் செல்கிறது. இக்குதிரைகள் அராபிய இனத்தைச் சார்ந்தவை. மார்க்கோ போலோவுக்குக் குதிரைகளிடம் மிகுந்த ஆசை. பிரயாணம் செய்யும்போது பெரும் அளவு குதிரைச் சவாரி செய்திருக்கிறார். பாரசீகத்தின் இப்பகுதியில் ஒரு நல்ல அராபியக் குதிரையின் விலை நூற்றுத் தொண்ணூறு பவுன்கள் என்று அவரே கூறுகிறார். அப்போதைக்கு இப்போது உள்ள பணத்தின் மதிப்பில் உள்ள வேறுபாட்டை எண்ணும்போது அது ஒரு மிகப்

பெரும் தொகைதான். அக்காலத்தில் பிரான்சு தேசத்தில் ஒரு முதல்தரக் குதிரையின் விலை அறுபது பவுன் என்று தெரிகிறது. அரபுக் குதிரைகள் அயராத்தன்மை உடையன என்னும் வியக்கத்தக்க புகழ் பெற்றவை. இத்தகைய குதிரைகள் நாள் ஒன்றுக்குத் தொண்ணூறு மைல் வீதம் ஒரு வாரத்திற்கும் மேலாக விடாமல் ஓடிக் கொண்டிருக்கும் ஆற்றல் பெற்றவை எனப் பிற ஆசிரியர்களால் உறுதிப்படுத்தப்பட்ட வரலாறுகள் உள்ளன. மிகுந்த வெப்பநிலை உள்ள நாட்டில் எப்போதாயினும் ஐம்பது மைல்கள் சவாரி செய்த ஒருவன் அச் சாதனை எத்தகையது என்பதை அறிவான். மிகப் பிரசித்தமான ஒற்றைத்திமில் ஒட்டகங்களால் கூடப் பாலைவனத்தை அத்தனை வேகமாக என்றும் கடக்க முடிந்ததில்லை.

போலோ குடும்பத்தினரே ஒரு நாளைக்குச் சுமார் இருபது மைல்கள் வீதம் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். இரு மருங்கிலும் வறண்ட மலைகள். ஆனால் இவற்றிற்கிடையே உள்ள சமவெளி செழிப்பானது. ஆங்காங்கே பேரீச்ச மரங்கள் அடர்ந்த காடுகள் இருந்தன. அக்காடுகளில் காடைகளும் கவுதாரிகளும் காட்டுக் கழுதைகளும் கூடச் சில சமயம் காணப்பட்டன. இவ்வெளிசு மக்கள் சிறு அளவில் வியாபாரம் செய்யக்கூடியவர்களாக இருந்தனர் என்று காணப்படுகின்றது. இந்த முறையில் காலத்தைப் போக்கிக் கொண்டே எந்த நிகழ்ச்சியும் இன்றி அவர்கள் கெர்மானை அடைந்தனர். சாலையில் தாக்குகின்றவர்களோ, கொள்ளைக் கூட்டத்தினரோ இருப்பதற்கான அறிகுறி எதுவும் இல்லை. மதகுருமார்கள் காரணமின்றி மருண்டுவிட்டனர். உண்மையில் அப்பகுதியிலே சாலை முற்றிலும் இடையூற்றற்றதாயிருந்தது.

கெர்மான் என்னுமிடத்தில், முன்பு கூறியதுபோல, சாலை வடக்கிலும் தெற்கிலும் பிரிந்தது. முதன்முறை பிரயாணம் செய்தபோது நிக்கோலோ போலோவும்

மாபியோ போலோவும் பட்டுச்சாலை வழியே சென்றனர். அதற்குப் பதிலாக இம்முறை போலோக்கள் பாரசீகக் குடாக்கடலிலுள்ள ஹோர்முஸிலிருந்து கடல் வழியாகச் சீனநாடு செல்ல எண்ணினார்கள் என்று தெரிகிறது. அதை யொட்டி கெர்மானிலிருந்து வலது புறம் திரும்பி இருநூறு மைலுக்கப்பாலுள்ள ஹோர்முஸை நோக்கிப் புறப்பட்டார்கள். இப்பிரயாணத்தின் போது ஒரு மிக பயங்கரமான பகுதியில் அவர்கள் செல்ல நேர்ந்தது. கெர்மானை விட்டுப் புறப்பட்டதும் பத்தாயிரம் அடி உயரமுள்ள ஒரு கணவாயை அவர்கள் கடக்க வேண்டியிருந்தது. அங்கே மிகுந்த குளிரில் அவதியுற வேண்டியதாயிற்று. பிறகு நீண்ட தூரம் சமவெளியை நோக்கி இறங்கினார்கள். அச்சமவெளி மிகுந்த வெப்பமும் நெருக்கமான ஜனத்தொகையும் உடையது. அங்கு அவர்கள் முதன்முதலாகத் திமில் எருதுகளைக் கண்டார்கள். இவை இந்தியாவில் உள்ள திமில் எருதுகளை ஒத்தவை எனலாம். எல்லா கிராமங்களும் களிமண் கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டிருந்தன. கெர்மான் பகுதியின் மங்கோலிய ஆட்சியாளரால் அச்சமவெளி சரியாகப் பாதுகாக்கப்படவில்லை. அப்பகுதியில் ஒரு பயங்கரக் கொள்ளைக்கூட்டத்தினர் உலவிக்கொண்டிருந்தனர்.

போலோ குடும்பத்தினர் இத்தகைய கொள்ளைக் கூட்டத்தினரிடமிருந்து மயிரிழையில் ஒரு முறை தப்பினர். மார்க்கோ போலோவின் நூலில் தங்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள மிகச் சில தீரச்செயல்களுள் இது ஒன்று. இந்த நிகழ்ச்சியை நாம் அறியவேண்டுமானால் ஒன்றை ஊகிக்கவேண்டியிருக்கிறது. அதாவது போலோ குடும்பத்தினர் தங்களுக்குச் சொந்தமான பிராணிகள், பணியாட்கள், காவலர்கள் இவர்களோடு மட்டுமல்லாமல், ஒரு பெரும் பிரயாணிகள் கூட்டத்தின் பகுதியாகவே சென்றுகொண்டிருந்தனர், சாலையில் ஒரு பகுதியில்

புழுதிப் படலம் ஒன்று நெருங்கி வந்தது. பொதுவாக இத்தகைய படலம் முழு இருளையே தோற்றுவிக்கும் அளவுக்கு அத்தனை மோசமாக இருக்கும். அவ்விருட் சூழலில் தங்களை மறைத்துக்கொண்டு கொள்ளைக் கூட்டத்தினர் தாக்கினர். போலோ குடும்பத் தினரும், ஏழு பேர்கள் அடங்கிய அவர்கள் குழுவினரும், காஞேசல்மி என்னும் அண்மையில் உள்ள கிராமத்திற்குள் எப்படியோ புகுந்து விட்டனர். அக்கிராமம் சுவர்களால் அரண் செய்யப்பட்டிருந்தது. பிரயாணிகள் கூட்டத்தில் எஞ்சியிருந்த அனைவரும் கொள்ளைக் கூட்டத்தாரால் பிடிக்கப்பட்டனர். அவர் களுள் சிலர் அடிமைகளாக விற்கப்பட்டனர். ஏனையோர் கொல்லப்பட்டனர். மார்க்கோ போலோ கீழை நாடு களில் பிரயாணம் செய்தபோது மிக அதிசயமான சில வற்றைக் கண்டிருக்கிறார். இத்திருடர்கள் மந்திரங்களை உச்சரித்துப் புழுதிப்படலத்தை வருவிக்கும் சக்தி படைத்தவர்கள் என்றும், தாங்கள் தாக்கும்போது தங்களை மறைத்துக்கொள்வதற்கு இவர்கள் எப்போதும் இப்படிச் செய்தனர் என்றும் இவர் நம்பினார். வேறு நூலாசிரியர்களும் மாயப்படலம் என்று சொல்லக்கூடிய இது பற்றிய செய்திகளைத் தந்திருக்கிறார்கள். இப் படலம் புழுதித்தூள்களால் ஆனதால் இதை வறண்ட படலம் என்று சொல்வது பொருந்தும். 1762-ஆம் ஆண்டு ‘ சிந்து ’, ‘ கட்சு ’ ஆகிய நாடுகளின் சேனைகளுக் கிடையே போர் நடந்தபோது இத்தகைய ஒரு வறண்ட புழுதிப்படலம் எழுந்தது எனவும், பகற் பொழுதிலேயே சுமார் ஆறு மணி நேரம் சூரிய ஒளி மறைக்கப்பட்டு விட்டதென்றும், அந்த நேரத்தில் இரு பக்கத்துச் சேனை களும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதபடி கலந்து விட்டன என்றும் அவர்கள் சொல்கிறார்கள். அப் படலம் விலகிய பின்னர் ஒவ்வொரு பக்கத்திலுள்ள போர் வீரர்கள் எதிரித் தரப்பினரால் சூழப்பட்டிருப்

OFFICE OF TAM... 30 JU

பதைக் காணவே, இரு தரப்பினரும் பீதியடைந்து பின்வாங்கி விட்டனர். இத்தகைய புழுதிப்படலம் ஒரு மாயக் காட்சி என்ற நம்பிக்கை எங்கும் பரவியிருந்தது. கீழ்த்திசைச் சேனைகளோடு எப்போதும் மாயாவிகள் உடன் செல்வார்கள். இத்தகைய மாயக் காட்சிகளைத் தாங்கள் உண்டுபண்ணமுடியும் என்று அவர்கள் உரிமை கொண்டாடுவதுண்டு. ஒருவேளை இது அந்த நம்பிக் கைக்குக் காரணமாக இருக்கலாம்.

இந்த அச்சமூட்டும் அனுபவத்திற்குப் பிறகு போலோ குடும்பத்தினர் ஹோர்முஸை நோக்கித் தங்கள் பிரயா ணத்தைத் தொடர்ந்தனர். மூன்று நாட் சவாரிக்குப் பின்னர் இரண்டாவது கணவாயைக் கடந்தனர். அங்கிருந்து துறைமுகத்திற்குச் செல்லும் வழியில் சம வெளியை அடைந்தனர். அவர்கள் கடந்து வந்த மலை களினின்றும் ஓடிவரும் நதிகளால் அச்சமவெளி, பாசனம் பெற்றிருந்தது. அங்கே திட்டுத்திட்டாகப் பேரீச்ச மரங்களும் வேறு பழமரங்களும் இருந்தன. அக்காலத்தில் ஹோர்முஸ் துறைமுகம் பாரசீக நாட்டின் ஒரு பகுதியாகவே இருந்தது. பின்னர் பதினாறும் நூற்றாண்டில்தான் போர்ச்சுகீசியரால் அரண் செய்யப் பட்ட தீவில் அது அமைக்கப்பட்டது. அந்நகரத்தில் பெரும் அளவில் வியாபாரம் நடந்ததாக மார்க்கோ போலோ கூறுகிறார். இந்தியாவிலிருந்தும் சைனாவி லிருந்தும் வரும் கடற் பாதை அங்கு முடிந்தது. துறை முகத்திலுள்ள கப்பல்களைப் பார்த்தவுடன் தாங்கள் எதிர்பார்த்ததைவிட அவை சிறியவையாக இருந்தன வாதலால் போலோ குழுவினர் அவற்றில் துணிந்து பிரயாணம் செய்ய அஞ்சினர் என்று தோன்றுகிறது. ஆகவே அவர்கள் சீன நாட்டிற்குக் கடல் வழியாகப் போகும் எண்ணத்தை விட்டுவிட்டுக் கெர்மானுக்குத் திரும்பி, அங்கிருந்து பட்டுச்சாலைக்குப் பிரிந்து செல்லும் இடது கிளைப்பாதை வழியாகச் செல்லத்

தீர்மானித்தனர். இருபது ஆண்டுகள் கழித்து அவர்கள் ஐரோப்பாவிற்குத் திரும்பும்போது கடல் வழியை மேற் கொண்டனர். ஆனால் அப்போது அவர்கள் சீன நாட்டுச் சீமான்களாக ஆகிவிட்டனர். ஆகவே சீனப் பேரரசரும் அவர்களுக்குப் பெரிய வசதியான கப்பல் களை அளித்தார்.

ஆர்மஸில் வெப்பம் தாங்கமுடியாது இருப்பதை அவர்கள் கண்டனர். முதல் உலகப்போரில் பாரசீகக் குடாக்கடலில் போரிட்ட அனைவருக்கும் இது தெரியும். அவ்விடத்தில் வீசும் கடுமையான பாலைக்காற்றைப் பற்றி மார்க்கோ போலோ சில விவரங்களைக் கொடுத் திருக்கிறார். அவர் கூறுவதாவது: 'கோடையில் சம வெளியைச் சுற்றியுள்ள பாலை நிலத்தின்மீது அடிக்கடி வீசும் காற்று, பொறுக்கமுடியாத அளவிற்கு வெப்பம் மிகுந்ததாக இருக்கிறது. அப்போது ஒரு மனிதன் கழுத்தளவு தண்ணீரில் உடனே அமிழ்ந்தாலன்றிப் பெரும்பாலும் அக்காற்று அவனைக் கொன்றுவிடும்'. மேலும் அவர் கூறுவதாவது 'அவர்கள் அங்கு இருக்கும் போது கெர்மான் கவர்னர் தனது ஆளுகைக்குட்பட்ட ஹோர்முஸ் மாகாணத்தில் செலுத்தப்படவேண்டிய அரசிறையை வசூல் செய்யும்படிச் சிலரை அனுப்பி யிருந்தார். ஒரு நாள் விடியற்காலை அவர்களும் பாலை நிலத்தில் வீசும் இத்தகைய வெப்பக் காற்றில் சிக்கிக் கொண்டனர். எல்லோரும் மூச்சுத்திணறினார்கள். இந்த விபத்துபற்றிக் கேள்வியுற்ற ஹோர்முஸில் உள்ள அலுவலர்கள் இறந்தோரின் சடலங்களைப் புதைத்து விடும்படி ஒரு குழுவினரை அனுப்பினர். ஆனால் அவர்கள் கண்ட சடலங்கள் சுட்ட கோதுமை அப்பம் போல் உலர்ந்து நொறுங்கக்கூடியவையாக இருந்தன. தலைகளும் பிற உறுப்புக்களும் விண்டுவிழும் அளவுக்குத் தூக்கக்கூட முடியாத நிலையில் இருந்தன'. பின்னர் வந்த யாத்திரிகர்களும் காற்றைப்பற்றிய போலோவின்

இக்கூற்றை முழுதும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். உண்மையிலேயே, வேறு சில பாலைநிலங்களிலும் இத்தகைய காற்று வீசுவது அனைவருக்கும் தெரியும். இக்காற்று மிகக்கடுமையாக வீசும்போது பிரயாணியைச் சில விநாடிகளில் மூச்சுத்திணற வைத்துவிடும். பிறகு அவன் உடலைச் சீலைச் சாம்பலைப்போல் வற்றவைத்தும் விடும். எனினும் இத்தகைய இன்னலுக்கு இலக்காகாமலேயே போலோ குழுவினர் ஹோர்முஸிலிருந்து கெர்மான் நகருக்குப் பத்திரமாக வந்து சேர்ந்தனர்.

## சீனப்பாதை பற்றிய குறிப்பு

மங்கோலியர்கள் சைனுவிலிருந்து மத்தியதரைக் கடலுக்குப் பட்டுச்சாலை வழியாக ஒரு தரைப் பாதையைத் திறந்து விட்டிருந்தார்களாயினும், கடற் பாதையைப் பாரசீகக் குடாக்கடலில் உள்ள ஹோர்முஸ் துறைமுகத்திற்கு அப்பால் திறந்துவிட முடியவில்லை. ஏனெனில் முஸ்லிம்களை இவர்கள் அறவே வெல்லமுடியவில்லை. இந்த முஸ்லிம்கள் வசம் எகிப்து நாடு இருந்ததால், மத்தியதரைக் கடற்பகுதிக்குச் செல்லும் செங்கடல் வழியும் அவர்கள் வசத்திலேயே இருந்தது.

மூன்றாம் அத்தியாயம்

## பாரசீகப் பயணம்

கெர்மானிலிருந்து வடக்கே எதுவுமே இல்லாத வெறும் பாலைவனம் ஒன்று இருந்தது. அதைச் சில சமயம் 'நிர்வாணப் பாலைவனம்' என்று அழைப்பார்கள். அதில் ஒரு சிறிதுகூட நல்ல நீரோ, செடி கொடியோ இல்லை. கொடிய விலங்குகளைக்கூடக் காண முடியாது. ஏனெனில் அவை உண்பதற்கு அங்கு ஏதும் இல்லை. அது குறுக்கே நூறு மைல் நீளம் உள்ளது. போலோ குழுவினர் தங்களுக்கு வேண்டிய தண்ணீரைக் கொண்டு சென்றனர். சுடும் மணலில் கஷ்டப்பட்டுச் சென்று குபெனன் என்னும் பெரு நகரத்தை அடைந்தனர். அங்கு உலோகத்தைத் தோண்டி எடுக்கும் தொழில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. குபெனனை நீங்கி மீண்டும் ஒரு பாலைவனத்தில் நுழைந்தனர். முந்திய பாலைவனத்தைப்போல் இதுவும் அத்தனை வறண்டதாகவும் கடந்து செல்வதற்குக் கொடியதாகவும் இருந்தது. எட்டு நாட்கள் சவாரி செய்த பிறகு பாரசீகத்தின் வடக்கெல்லையில் உள்ள தபஸ் என்னும் நகரத்திற்கு வந்தனர். இப்போது பாலைவனத்தைக் கடந்து மிதமான தட்பவெப்ப நிலையுடன் கூடிய பகுதியில் இருந்தனர். அங்கு நிறைய அழகிய மக்கள் வசித்து வந்தனர்.

மார்க்கோ போலோ எப்போதும் அருமையானதும் அசாதாரணமானதுமானவற்றைக் காண்பதில் ஈடுபட்டிருப்பவர் என்பதை நாம் முன்பே அறிந்திருக்கிறோம். இப்போது அவர்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்கும் தூரப்பகுதி, பாரசீகத்திற்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் இடையே உள்ளது. மாண்பு மிக்க அலெக்ஸாந்தரின் இந்தியப் படையெடுப்பு பற்றிய

நினைவுகள் அங்கு அப்போதும் நிலவி வந்தன. இடைக் காலத்தில் மக்கள் பழங்கால வரலாறுகளை மறந்தனர். அவற்றிற்குப் பதில் கற்பனைக் கதைகளில் ஈடுபட்டனர். அலெக்ஸாந்தரின் வாழ்க்கையைப் பற்றிய பல கற்பனைக் கதைகள் எழுதப்பட்டன. அதற்குக் காரணம் அவர் பழங்காலத்து வியக்கத்தக்க ஒப்பற்ற மனிதராகக் கருதப்பட்டதுதான். இந்தியாவின் மீது படையெடுத்த போது, புனிதமான மரம் இருந்த ஓர் இடத்தை அவர் அடைந்ததாகக் கருதப்பட்டுவந்தது. அந்த மரத் தினடியில் நின்றுகொண்டு பதிலை அறியவேண்டி ஒரு கேள்வியை நினைத்துக் கொண்டால் அந்த மரமே பதில் கூறும் என்று அங்கிருந்தவர்கள் அவருக்குச் சொன்னார் களாம். அவரும் மரத்தின் அடியை அடைந்து 'நான் இவ்வுலகின் அரசனாகி மாசிடோனுக்குப் பத்திரமாகத் திரும்பிச் செல்வேனா? என்று மௌனமாக ஒரு கேள்வி யைக் கேட்டாராம். அம்மரம், 'நீர் உலகிற்கோர் வேந்தனாக ஆவீர், ஆனால் மாசிடோனைத் திரும்பவும் காணமாட்டீர்' என ஓர் இந்திய மொழியில் பதில் சொல்லிற்றாம். மார்க்கோ போலோவின் காலத்தில் இக்கதை வழங்கிற்று. வடக்கே உள்ள சமவெளியில் ஒரு மாபெரும் தனிமரம் இருப்பதாகவும், ஆயிரத்தைந் நூறு ஆண்டுகளுக்கு முன்னர் அலெக்ஸாந்தருக்கு வரப் போகும் நிகழ்ச்சியை உள்ளவாறு உணர்த்திய அதே மரந்தான் இது என்றும், தபஸ் நகரில் உள்ள மக்கள் அவரிடம் கூறியபோது அவருக்கு ஏற்பட்டிருக்கும் மனக் கிளர்ச்சியை நாம் ஊகித்துக் கொள்ளலாம். ஆனால் அவரால் அங்குச் சென்று பார்க்க முடியவில்லை. ஏனெனில் அது சாலையினின்றும் வெகு தொலைவில் இருந்தது. உண்மையாகவே குறிப்பிட்ட இடத்தில் ஒரு பெரிய பழைய 'பிளேன்' மரம் இருந்தது. மக்கள் அம்மரத்துடன் அலெக்ஸாந்தரைப் பற்றிய கட்டுக் கதையை இணைத்துவிட்டனர்.

தபஸ் நகரமக்கள் மலைவாழ் முதியவன் ஒருவனைப் பற்றி அவரிடம் சொல்லியிருந்தனர். மார்க்கோ போலோவின் சமகாலத்தவருள் மிக அபூர்வமாகக் கருதப்பட்ட இம்மனிதன் காஸ்பியன் கடலுக்குத் தெற்கே 'அலமுத்' அல்லது கழுகுக்கூடு என்ற அரணில் வசித்து வந்தான். இவ்வரணுக்கு அண்மையில் ஒதுக்குப் புறமாக ஒரு பள்ளத்தாக்கு இருந்ததாகவும் அதில் ஒரு முனையிலிருந்து, அதுவும் சுவரில் உள்ள ஒரு வாயில் வழியாகத்தான் அதனுள் நுழைய இயலும் என்றும் அவர்கள் சொன்னார்கள்.

அம்முதியவன் அப்பள்ளத்தாக்கைப் பழமரங்களும், மலர்களும், தெளிந்த நீரோடைகளும் கொண்ட ஒரு தோட்டமாக அமைத்தான். இங்குமங்கும் அழகிய கூடாரங்கள் இருந்தன. விநோதமான சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ள அவை முலாம் பூசப்பட்டும் இருந்தன. சுவர்களில் படங்கள் மாட்டப்பட்டிருந்தன. விரிப்புகளும் விளக்குகளும் நிறையப் பொருத்தப் பட்டிருந்தன. ஒவ்வொரு கூடாரத்திலும் ஆடவும் பாடவும் நடிக்கவும் வல்ல இளம் நங்கைகள் இருந்தனர். சுவை மிகுந்த உண்டிகளையும் மது நிரம்பிய கோப்பை களையும் வேண்டியபோது கொண்டுவர ஏவலாளர்கள் தயாராக இருந்தனர். பள்ளத்தாக்கை ஏறத்தாழத் தன்னால் முடிந்தவரை சொர்க்கத்திற்கீடாக ஆக்கிவிட வேண்டுமென்பது முதியோனது நோக்கம். இதில் சொந்த சுகபோகம் காரணம் இல்லை. ஆனால் அரசியல் காரணங்கள் உண்டு. இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்ட முஸ்லிம் சமயபேதிகளடங்கிய இஸ் மாலியப் பிரிவிற்கு இவன் தலைவன். ஒரு வகையில் போப்பாண்டவர் அல்லது காலிபாவை ஒத்தவன் இவன். இவனைப் பின்பற்றுவோர் கடவுளின் பிரதிநிதியே இவன் என நம்பினர். பாலத்தீனத்திலுள்ள சிலுவை யுத்த வீரர்கள் பலமான அரண்களை வைத்திருந்தது

போல் இவனுக்கும் அலமுத்தைத் தவிர வேறு சில நன்கு பலப்படுத்தப்பட்ட அரண்களும் உண்டு. ஆனால் பழைய சம்பிரதாயத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களின் நாட்டினிடையே வாழ்ந்து வந்ததாலும், இஸ்மாலியர்கள் சிறுபான்மையினராக இருந்ததாலும், அவனுடைய நிலை நிச்சயமற்றதாக இருந்தது. தனது அதிகாரத்தைப் பெருக்கிக் கொள்வதற்காகவே மேற்கூறப்பட்ட சொர்க்கத்தை அவன் கட்டினான்.

இது பற்றிய விவரம் விந்தையானது. தனது உறுதியைப் பிறர் உணரச்செய்யச் சதி செய்து கொலை புரியும் முறையை அவன் மேற்கொண்டான். தான் கோரியவற்றை ஒருவன் நிறைவேற்றவில்லையானாலும், தனக்கு எதிராக ஓர் அரசனோ இளவரசனோ சதி செய்வதாக ஐயுற்றாலும், தன்னிடத்தில் சிறந்த முறையில் பயிற்சி பெற்ற பயபக்தியுள்ள கொலையாளிகளை அனுப்பி வைப்பான். முரட்டுத் துணிவுடன் எந்த ஆபத்தையும் ஏற்கத் துணிந்தவர்களாதலால், குற்றம் புரிந்தவரைத் தீர்த்துக் கட்டும் காரியத்தை அவர்களால் நிறைவேற்ற முடிந்தது. உதாரணமாக, வழிபாடு நடைபெறும் போதே மசூதியின் மீது ஊர்ந்து சென்று கூடியுள்ளவர் அனைவரும் பார்த்துக்கொண்டிருக்கும் போதே தாம் குறிவைத்து வந்த மனிதனை மறு உலகிற்கு அனுப்பிவிடுவார்கள். இக்கொலைகாரர்களுக்குப் போதிய அளவு வெறி ஏற்றுவதற்கு முதியோன் சொர்க்கத்தைப் பயன்படுத்தினான்.

வெளியூர்களுக்கும் சென்று கொலை புரியும்படி இவனால் நியமிக்கப்பட்டவர்கள் சாதாரண மலைவாசிகள். முதலில் சொர்க்கத்தைப் பற்றியும், பிறகு கடவுளின் பிரதிநிதியான மதகுரு என்ற முறையில் தான் விரும்பும் எவருக்கும் சொர்க்கத்தை யளிக்கும் வல்லமை தனக்கு உண்டு என்பதைப் பற்றியும், அவர்களுக்கு எடுத்துரைப்பான். ஒருவனைக் கொலை செய்யவேண்டும் என்ற

எண்ணம் தனக்குத் தோன்றும்போது, தன்னைச் சார்ந்த தீரம் மிக்க ஒரு சில இளைஞர்களுக்கு 'ஹாஷிஷ்' என்னும் சணலிலிருந்து தயாரிக்கப்படும் ஒருவகை மயக்கந்தரும் பானத்தைக் கொடுப்பான். மயக்கமுற்ற நிலையில் எழில் மிக்க அந்தப் பள்ளத்தாக்கிற்கு அவர்கள் எடுத்துச் செல்லப்படுவார்கள். அவர்கள் சுய நினைவு பெற்றதும், அங்கு முன்பு கூறிய வண்ணமே போகங்கள் அனைத்தும் இருந்தமையால் சொர்க்கத்தில் இருப்பதாகவே நம்பினார்கள். அவ்விளைஞர்கள் அங்கு நீண்ட காலம் போகங்களனைத்தையும் அனுபவித்த பின்னர், அவர்களை மீண்டும் அந்த 'ஹாஷிஷ்' பானத்தை அருந்தச் செய்து, அப்புறப்படுத்தித் தனது அரண்மனைக்குக் கொண்டு வரச் செய்வான்.

சுயநினைவு பெற்ற பின்னர் தாம் இப்போது சொர்க்கத்தில் இல்லையே என்று வருந்துவார்களானால் அது இயல்புதானே. அம்முதியவன் அப்போது அவர்களை நோக்கி, 'இப்புனித நியமனத்தை ஏற்றுக்கொண்டு இன்னாரை நீ கொல்வாயானால், அதில் நீ உயிர் பிழைத்தாலும் பிழைக்காவிட்டாலும், என்னுடைய தூதர்கள் உன்னை மீண்டும் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்வார்கள்' என்று கூறுவான். அவர்களது பயபத்தியோடு கூடிய சேவையை உறுதிப்படுத்திக்கொள்ள இது போதுமானது. எவ்வளவு நம்பிக்கையற்ற காரியம் ஆயினும், தீரச்செயல் புரிவதற்கு உற்சாகத்துடன் தாமாகவே முன் வருகின்றவர்கள் எப்போதும் அவனுக்குக் கிடைப்பார்கள். இவனுடைய இம்முறைகள் வெற்றிகரமாகவே அமைந்தன. ஆகவே அண்டை நாட்டு அரசர்கள் அவனைப்பற்றிய பீதியுடனேயே வாழ்ந்து வந்தார்கள்.

மார்க்கோ போலோ தொடர்ந்து சொல்லுகிறார். மங்கோலியர்கள் பாரசீகப் பகுதியை வென்றவுடன் மலைவாழ் முதியோனை நேருக்கு நேர் சந்திக்க நேர்ந்தது. அவன் தனது அலமுத் கோட்டையினுள்ளேயே இருந்து

விட்டான். ஆனால் சக்தி வாய்ந்த ஹூலகு அவனையும் அவனது பிரிவினரையும் அழித்துவிட உறுதி பூண்டான். மிகுந்த தொல்லைகளுக்குப் பின் அவனுடைய அரணையும் சொர்க்கத்தையும் அழிப்பதில் வெற்றியும் கண்டான். மார்க்கோ போலோ கிழக்கு நோக்கிப் பிரயாணம் செய்வதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு 1256-ஆம் ஆண்டில் இது நிகழ்ந்தது.

மலைவாழ் முதியவனின் இக் கதை கற்பனையில் எழுந்ததல்ல. அக்காலத்தில் பிரசித்தி பெற்றிருந்த அவனைக் குறித்து எல்லோரும் அஞ்சினர். மற்றும் பல வரலாற்றுசிரியர்கள் அவனை வருணித்திருக்கிறார்கள். 1090முதல் 1256வரை இருந்து வந்த இஸ்மாலியப் பிரிவினரின் மதகுருமார்களில் ஒருவனான இவன் பல பெரிய மனிதர்களைக் கொலை செய்வதில் வெற்றி கண்டிருக்கிறான். அப்படிக் கொலையுண்டவர்கள் பட்டியலில் பாரசீக மன்னர் ஒருவர், எகிப்து நாட்டின் மாண்புமிக்க மந்திரி ஒருவர், பாக்தாத் காலிபாக்கள் இருவர், திரிபோலியின் குலமகனான ரெய்மாண்ட் என்பவர், ஜெருசலத்தின் வேந்தனான கான்ராட் ஆகியோர் அடங்குவர். இறுதியாகக் கூறப்பட்ட இருவரும் பிரதான சிலுவைப்போர் வீரர்கள். இம்முதியோனின் துணைவர்களுள் ஒருவன் இவனுடைய செயல்முறைகளின் ஒவ்வோரம்சத்தையும் அப்படியே பின்பற்றியதோடு ஒரு சொர்க்கத்தையும் கட்டினான். அவன் டெமாஸ்கஸுக்கு அருகே உள்ள லெபனான் மலைப்பகுதிகளில் வாழ்ந்தான். அவனுக்கும் மலைவாழ் முதியோன் என்ற இதே பட்டப் பெயர் உண்டு. சில சமயம் சிரியாவின் முதியவன் என்றும் அழைக்கப்படுவதுண்டு. ஒரு சமயம் சிலுவைப் போர் வீரரான ஷாம்பேனைச் சார்ந்த ஹென்றி குலமகன் அவனைச் சந்தித்தார். ஹென்றி குலமகனுக்குத் தன் அரண்மனையை அவன் சுற்றிக் காண்பித்தான். அங்குள்ள தூபிகளுள் ஒன்றின் உச்சியில் இரண்டு இளை

ஞர்கள் வெண்மையான ஆடைகளை அணிந்துகொண்டு உட்கார்ந்திருப்பதைக் குறித்துக் கோமகன் ஏதோ சொன்னார். இஸ்மாலிகளின் மதகுரு அவரை நோக்கி, 'என்னிடத்தில் உள்ள குடிமக்களைப் போல் உம்மிடத்தில் அவ்வளவு பயபக்தியுடன் கூடிய மக்கள் இருக்க முடியுமா என்று கேட்டுவிட்டு, அவருடைய பதிலுக்குக் காத்திராமல், அவ்விரு இளைஞர்களுக்கும் ஒரு குறிப்புக் காட்டினான். உடனே அவ்விருவரும் தூபியினின்றும் கீழே குதித்து மாண்டுபோனார்கள். இங்கே நாம் நினைவுகூரவேண்டிய விநோதமான நிகழ்ச்சி ஒன்று உண்டு. தான் இளவரசராக இருந்த காலத்தில் 1272-ஆம் ஆண்டு அக்ரே என்னுமிடத்தில் முதலாம் எட்வர்டு இஸ்மாலியச் சதிகாரர்களால் கொலை செய்யப்படாமல் மயிரிழையில் தப்பினார். போலோ குடும்பத்தினர் அவ்விடத்தை விட்டுச் சென்ற சிறிது காலத்தில் இது நிகழ்ந்தது. இம்முதியோனின் மற்றொரு சாதனை என்னவென்றால் ஆங்கில மொழிக்கு 'அஸாஸின்' (Assassin) என்ற ஒரு புதுச் சொல்லை அளித்ததாகும். இச்சொல் 'ஹஷ்ஷாஷின்' 'ஹஷீஷை' உண்பவர்கள் என்னும் பொருள்கொண்ட (hashshashin) என்னும் அராபியச் சொல்லிலிருந்து தோன்றியதாகும்.

போலோ குடும்பத்தினரோடு தொடர்பற்றதாயினும் பிந்திய நிகழ்ச்சியை இங்கே சொல்லாமல் விடுவதற்கில்லை. இஸ்மாலியர்கள் ஹுலகுவினால் தோற்கடிக்கப்பட்ட பின்னர் தலைமறைவாக இருந்துகொண்டே இமாம் என்று கூறப்படும் தங்கள் மதகுருவை இரகசியமாகத் தேர்ந்தெடுத்து வந்தனர். காலப்போக்கில் இஸ்மாலியத் தூதர்கள் சிலர் இந்தியாவிற்குச் சென்று பம்பாய்ப் பகுதியில் உள்ள பல இந்துக்களை மதமாற்றம் செய்தனர். அவர்கள் பின்னர் கோஜர்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் பாரசீகத்திலுள்ள தங்கள் மதத்தலைவருக்குக் காணிக்கை செலுத்தி வருவது

வழக்கம். 1840ஆம் ஆண்டில் இருந்த இமாமின் பெயர் ஆகாகான். அவர் கெர்மானில் தன்னைச் சுயேச்சை மன்னனுக நிலைநிறுத்திக்கொள்ள முயன்றூர். ஆனுல் அதில் தோல்வியுற்று இந்தியாவுக்குத் தப்பியோடி விட்டார். அங்கேயுள்ள கோஜர்கள் தங்களிடையே வசிக்க வந்துள்ள தங்கள் மதத்தலைவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பிற்காலத்தில் அவர் பம்பாய் குதிரைப் பந்தயச் சங்கத்தின் முக்கிய காப்பாளராகவும், ஆங்கிலோ இந்தியர் சமூகத்தின் ஒரு சமுதாயப் பிர முகராகவும் ஆனபோது கூட அதில் ஏதும் முரண்பாடு இருப்பதாக அவர்கள் எண்ணவில்லை. அவருக்குப் பின் வந்தவருள் இப்போதுள்ள ஆகாகானைப் பற்றி 'யார் எவர்' என்ற நூலில் பார்ப்பீர்களானுல் தன்னை அவர் இஸ்மாலியத் தலைவர் என்று கூறிக்கொள்வதை நீங்கள் காண்பீர்கள். மலைவாழ் முதியவனின் பின்தோன்ற லான ஒருவர் இமாமாக இருந்துகொண்டே இங்கிலாந் தில் நடக்கும் குதிரைப்பந்தயத்தில் மிக உயர்ந்த வெற்றியைப் பெற்றிருக்கிறூர். ஒருவேளை இதில் முரண் பாடு இருப்பதுபோல் தோன்றலாம். ஆனுல் அப்படி ஒன்றும் இல்லை. ஏனெனில் இடைக்காலத்தில் வாழ்ந்த இஸ்மாலியரின் மதத்தலைவர்கள் உலகத்திலேயே குதிரைகளுக்குப் பெயர் பெற்ற நாட்டின் நடுவே வாழ்ந்து வந்தவர்களாதலால், குதிரைகளின் இலக் கணத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் சக்தி வாய்ந்தவர் களாக இருந்திருக்கவேண்டும் என்று நாம் உறுதியாக நம்பலாம்.

நான்காம் அத்தியாயம்

## பட்டுச்சாலை

முதியோனைப் பற்றிய வரலாற்றின் இறுதியில் மார்க்கோ போலோ எழுதியிருப்பது போல, நாமும் இப்போது நமது கதைப்போக்கில் விட்ட இடத்திற்கு மீண்டும் செல்வோம். 'தபஸ்' என்னுமிடத்தில் யாத்திரிகர்களை நாம் விட்டு வந்தோம். அங்கிருந்து வடகிழக்குத் திசையில் ஆப்கானிஸ்தானத்தைக் கடந்து ஹெராட் வழியாக பால்க் என்னுமிடத்திற்குக் குறிப்பிடத்தக்க சம்பவம் ஏதுமின்றி அவர்கள் சென்று கொண்டிருந்தனர்.

பல நூற்றுண்டுகளாக பால்க் (Balk) என்னும் நகரம் வாணிபச் சாலைகள் கூடும் புகழ் வாய்ந்த இடமாக இருந்து வந்தது. ஒரு சாலை காபூல், பிஷாவர் ஆகிய நகரங்கள் வழியாகத் தெற்கே இந்திய நாட்டை நோக்கிச் சென்றது. நேர் வடக்கே இருநூற்றைம்பது மைல்களுக்கப்பால் உள்ள சமர்கண்டிற்கும் வட மேற்கே ஏறத்தாழ அதே தூரத்திலுள்ள பொக்காரா விற்கும் கூட அங்கிருந்து போகலாம். முன்பு கூறப் பட்டது போல இரு போலோ சகோதரர்களும் பொக்காராவிலிருந்து பட்டுச்சாலையின் வடகிளையை அடைந்தனர். இப்போது அவர்களை முன்னேக்கி நிற்கும் பிரச்னை, தாங்கள் மூவரும் முன்போல அதே பாதையில் செல்வதா, அல்லது சற்றுத் தெற்கேயுள்ள சாலை வழியே பால்கை விட்டுப் புறப்பட்டு நேரே பாமீர் மலைத்தொடர்களைக் கடந்து காஷ்கர் சென்று அப்பாலுள்ள யார்க்கண்டை அடைவதா என்பதாகும். அவர்கள் பால்கில் இருந்தபடியால் தெற்குப்புறமாகச் செல்லும் பாதையே மிகச் சுருக்கமான பாதை. பால்கிற்கும் காஷ்கருக்குமிடையேயுள்ள பாமீர் மலைத்

தொடரைக் கடப்பது மிகக் கடினமாயினும் அப்பாதை வழியே செல்வதென அவர்கள் உறுதி பூண்டுவிட்டனர்.

மத்தியதரைக் கடலிலிருந்து சாலை வழியே நீண்ட தூரம் பிரயாணம் செய்துவந்த அவர்கள், அவ்வமயம் மங்கோலியர் ஆட்சிக்குட்பட்ட நாட்டில் இருந்துவந்த போதிலும், மங்கோலியர்கள் ஒரு சிலரையே பார்த்திருக்கக்கூடும். பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் மங்கோலியரால் வெல்லப்படுவதற்கு முன்பு எப்படி இருந்தனரோ அப்படியேதான் இருந்துவந்தனர். நாட்டை வசப்படுத்திவரும் சேனைத் துருப்புகளையும், மிக உயர்ந்த பதவியிலுள்ள ஒரு சிலரையும் தவிர, அதிகாரத்தைச் செலுத்துகிறவர்கள்கூட மங்கோலிய இனத்தவரா என்பது சந்தேகம்தான். கிராமப்புறங்களிலும் சாலைகளிலும், பாரசீகர்களும், ஆர்மீனியரும், அராபியரும், யூதர்களும், தத்தமக்கு இயல்பான முறையில் ஆடையணிந்தவராய் வழக்கமான அலுவல்களில் ஈடுபட்டிருந்தனர். எனினும், மங்கோலியரின் ஆட்சி நிலவிவருவது தெற்றென விளங்கியிருந்திருக்க வேண்டும். அவர்களது அதிகாரத்தின் அறிகுறி போலோ குடும்பத்தினரிடமே காணப்பட்டது. காகானின் தங்க ஓலைகளைத் தாங்கிச் சென்ற அவர்கள், சக்கரவர்த்தியின் பெயரால் தங்களுக்கு வேண்டிய உணவுப்பண்டங்கள், மாற்றுக் குதிரைகள், சுமை தூக்கிப் பிராணிகள், பாதுகாப்பு, முதலிய எல்லா வசதிகளையும் எவரிடமும் கேட்டுப்பெற உரிமை பெற்றிருந்தார்கள். மங்கோலியரின் வெற்றிக்கு மற்றொரு சின்னம் பாழடைந்த இடங்கள். பால்க் நகரம் அப்போதும் பெருமளவு பாழடைந்தே காணப்பட்டது. 1222-ஆம் ஆண்டு ஜெங்கிஸ்கான் அந்நகரைச் சூறையாடினன். அப்போது நிகழ்ந்த பெருவாரியான படுகொலையில் தப்பிப் பிழைத்த குடிமக்கள் மீண்டும் குடிபுகுந்ததினின்று ஐம்பது ஆண்டுகள் கழிந்த

பின்னரும் முக்கியமான கட்டடங்கள் பழுதுபார்க்கப் படாமலேயே இருந்தன. அந்நகரம் மசூதிகளுக்கும் அரண்மனைகளுக்கும் புகழ்பெற்றது. மாவீரன் அலெக் சாந்தரால் நிறுவப்பட்ட கிரேக்க இராஜ்யங்களில் கீழ்க் கோடிப்பகுதியாகிற பாக்டிரியாவின் தலைநகரமாக அது அமைக்கப்பட்டதிலிருந்து ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் அந்நகரத்தின் வரலாறு நீண்டு வந்துள்ளது. உண்மை யிலேயே அப்போதும் அங்கே அலெக்சாந்தரைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தனர். பாரசீக மன்னனு டரையசின் மகளாகிற ரக்ஸாணுவைக் கற்பிதப் பெருமைவாய்ந்த அந்த மாசிடோனிய மன்னன் பால்க் நகரத்தில் மணந்துகொண்ட செவிவழிச் செய்தியை மார்க்கோ போலோ குறிப்பிடுவதிலிருந்து அது தெரி கிறது. அந்நகரத்தில் எஞ்சியிருந்த அவதியுறும் மக்களும் அக்கதையை அப்படியே நம்பினர். அந்த நம்பிக்கை நகரத்தின் அழிவுபற்றிய உண்மையின் கொடுமையை ஓரளவு குறைக்க முடிந்தது போலும். மார்க்கோ போலோவும் இதுபற்றிக் குறிப்பிடும்போது, மங்கோலியரின் தீரச்செயல்களையும் குப்ளாகானையும் தான் போற்றியபோதிலும், ஓர் ஐரோப்பியன் வெற்றி வாகை சூடி ஒரு காலத்தில் கிழக்கே அத்தனை தூரம் வந்திருக்கிறான் என்ற எண்ணம் தனக்குப் பெருமை தருவதாகச் சுட்டுகிறார். வேறெந்த ஐரோப்பியனும் அன்றுவரை அவ்வளவு பெரிய சாதனை புரியவில்லை என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மாபெரும் உரோம சாம்ராஜ்யம்கூட யூப்ரடிஸின் எல்லையில் நிற்க வேண்டியதாயிற்று. இக்காலத்தில் அலெக்சாந்தரின் பெரும் செயல்கள் உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்து வதில்லை. ஏனெனில் ஆசிய நாடு முழுதும் நமது ஆதிக்கத்தின் கீழ் வந்ததைப் பார்த்திருக்கிறோம். ஆனால் பதின்மூன்றும் நூற்றாண்டில், குறிப்பாக மங்கோ லியப் படையெடுப்புக்களையும், ஐரோப்பாவின் ஒரு

பகுதி இக்கீழை நாட்டவரால் சூறையாடப்பட்டதையும் அடுத்து, அலெக்சாந்தரின் புகழ் மிகமிக உயர்ந்து காணப்பட்டது. மங்கோலியரின் படையெடுப்புக்கள் நிறுத்திவைக்கப்பட்டு அவர்கள் அமைதியாக வாழத் தொடங்கிவிட்டதாகக் காணப்பட்ட போதிலும், அவர்கள் மீண்டும் தாக்கக்கூடும் என்ற அச்சம் இருந்துதான் வந்தது. ஆகவே ஓர் ஐரோப்பியன் பால்க் நகரம் வரை வெற்றியுடன் படையெடுத்துச் சென்றதோடல்லாமல், அங்கே புல்வெளிப் பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு எதிராக ஐரோப்பாவின் எல்லையில் ஓர் இராஜ்யத்தையே நிறுவுவதில் ஒரு காலத்தில் வெற்றி கண்டுவிட்டான் என்று எண்ணும் போதே எத்தனை வியப்பாக இருக்கிறது. மார்க்கோ போலோவின் உள்ளத்தில் இத்தகைய எண்ணங்கள் தோன்றியிருக்கவேண்டும். ஏனெனில் கீழைநாட்டு நாகரிகத்தில் ஊன்றிவிட்ட போதிலும் அவர் ஓர் உண்மை ஐரோப்பியராகவே இருந்தார். இறுதியாக மங்கோலியரின் உறவு போதுமென்றாகிவிடவே வெனிசு நகரத்திற்குத் திரும்புவதில் அவர் மகிழ்ச்சியடைந்தார்.

பால்க் நகரம் கிரேக்க நாகரிகத்தின் எல்லைக் கோட்டிற்கு அடையாளமாக இருந்தது. பூகோள முறைப்படி அதற்கப்பால் உள்ள இடம் மாறுபட்ட நிலையுடன் கூடியதாக இருந்தது. அதற்குக் கிழக்கே ஒன்றோடொன்று பின்னப்பட்ட மாபெரும் மலைத் தொடர்கள் வானுற ஓங்கி நின்றன. அவற்றை உலகத்தின் கூரை என்று கூறுவார்கள். அவற்றிற்குட் பட்டவைதான் பாமீர், ஹிந்துகுஷ் ஆகிய மலைத் தொடர்கள். அவற்றைக் கடந்து செல்வதென்பது இது வரை பிரயாணிகளை எதிர்நோக்கியிருந்த செயல்களனைத்திலும் பெரிது. ஆனால் அம்மலைகளுக்கிடையே படக்ஷான் என்று வழங்கப்படும் ஒரு மனோரம்யமான பீடபூமியை அவர்கள் கண்டனர். போலோ, 'அம்மலை

யுச்சியை அடைவதற்கு ஒரு நாள் கடின உழைப்புத் தேவை. அங்கே பசும்புற்களும் மரங்களும் நிறைந்த ஒரு பரந்த சமவெளியைக் காணலாம்' என எழுதுகின்றார். இப்பூங்காவினூடே மீன்கள் நிரம்பிய பளிச்சிடும் அருவிகள் ஓடிக்கொண்டிருந்தன. அங்குப் பள்ளத்தாக்குகளில் வாழும் மக்கள் அப்பீடபூமியை ஒரு சுக வாசஸ்தலமாகவே கருதினர். அங்கு வீசும் காற்று அத்தனை தூய்மையானது. ஒரு முறை அங்குச் சென்றால் சுரம்கூட நீங்கிவிடும். போலோ மேலும் சொல்கிறார், 'எனது அனுபவத்தின்மூலம் இதை நான் மெய்ப்பித்திருக்கிறேன். ஓராண்டுக் காலம் அப்பகுதிகளில் நோய் வாய்ப்பட்டிருந்தபோது எனக்குக் கூறப்பட்ட ஆலோசனைப்படி அப்பீடபூமிக்குச் சென்றதும் உடனே நோயினின்றும் நான் மீண்டேன்'.

'பிரயாணங்கள்' என்று வழங்கப்படுகிற மார்க்கோ போலோவின் நூலில் தன் சொந்த அனுபவங்களைக் குறிப்பிடும் மிகச் சில பகுதிகளில் இது ஒன்று. ஆனால் இதில் தெளிவைக் காணோம். சில காலம் மார்க்கோ போலோ உடல்நலக்குறைவுற்றிருந்தார் என்றும், வேறுபட்ட தட்பநிலை பொருந்திய இதுபோன்ற மலைப் பகுதிக்குச் சென்றதால் இம்மாறுதல் அவரைக் குணப்படுத்தியிருக்கிறது என்றும் நாம் கொள்ளலாம். ஆனால் எத்தனை காலம் அவரது நோய் அனைவரின் பிரயாணத்தையும் தாமதிக்கச் செய்ததென்பதை எவரும் கூற வியலாது. உண்மையிலேயே அவருடைய நூலிலிருந்து அவர்கள் சென்ற பாதை இதுதான் என்பதையோ, அவர்கள் பிரயாணத்திற்குச் செலவிட்ட காலம் எவ்வளவு என்ற விவரங்களையோ எவ்வளவு முயன்றும் பெறமுடியவில்லை. சீனநாட்டை அடைவதற்கான முழுப்பிரயாணமும் மூன்றரை ஆண்டுகள் பிடித்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால் போலோக்கள் மூவரும் எங்கெல்லாம் தங்கினார்கள், அவர்களுடைய பிரயாணத்

தின் முன்னேற்றம் ஏன் அவ்வளவு தாமதப்பட்டது என்பது பற்றிய விவரங்கள் கொடுக்கப்படவில்லை.

போலோ சகோதரர்கள் முன்பு பொக்காராவிலிருந்து பீகிங் நகரத்திற்குச் செல்ல ஓராண்டாயிற்று. அதே தூரமுள்ள ஒரு பிரயாணத்தைத்தான் இப்போது போலோக்கள் தொடங்கியிருந்தனர். செல்லவேண்டிய தூரம் மூவாயிரம் மைல்கள். வாரத்திற்கொரு முறை இளைப்பாறிவிட்டு நாள் ஒன்றுக்குச் சராசரி பத்து மைல் வீதம் சென்றால் ஓராண்டு பிரயாணம் செய்யவேண்டும். இருபதாம் நூற்றாண்டில் வாழும் நமக்கு ஒரு நாளுக்குப் பத்து மைல் என்றால் பெரிதாகத் தோன்றாது. இருப்பினும் ஆசிய நாட்டுச் சாலைகளிலே மாட்டு வண்டிகள், ஒட்டகங்கள் அல்லது பொதிசுமக்கும் மட்டக் குதிரைகள் மீது செல்பவர்களுக்கு இந்தச் சராசரியே கிட்டத்தட்ட உயர்ந்த வரம்பு எனலாம். மங்கோலியசாம்ராஜ்யத்தில் ஓரிடத்திற்கும் மற்றோரிடத்திற்கும் நீண்ட தூரம் இருந்தது. ஆகவே அஞ்சற் குதிரைகளும் ஒழுங்காக இயங்குகின்ற அஞ்சல் நிலையங்களும் இல்லையென்றால் மத்திய ஆட்சி உறுப்புநாடுகளைக் கட்டுப்படுத்த முடியாமற் போயிருக்கும். ஒரு சாதாரண தபாற்காரன் ஒரு நாளில் ஒரு நிலையத்தினின்று மற்றொரு நிலையத்திற்கு இருபத்தைந்து மைல்கள் செல்வான். அடிக்கடி இடையிடையே குதிரைகளை மாற்றிக்கொண்டு விரைவில் செல்லும் தபாற்காரனோ இருபத்துநான்கு மணி நேரத்தில் நானூறு மைல்களைத் தாவிச் செல்வான். பீகிங்கிலிருந்து பால்க் வரை இத்தனை வேகத்தில் ஒருவர் சென்றதாக நாம் எண்ணக்கூடுமானால் அவர் இந்த தூரத்தை ஒரு வாரத்தில் கடந்திருக்கக்கூடும். ஆனால் எத்தனை மிகமிக அவசரச்செய்தியாக இருந்தபோதிலும் ஒரு மாதத்திற்குட்பட்ட காலத்தில் செய்தி சேர்ந்திருக்க முடியாதென நான் உறுதியாக எண்ணுகிறேன். அவ்வப்போது போலோ குழுவினர் அத்தகைய தபாற்

காரர்கள் கடுகிச் செல்வதைக் கண்டிருக்கவேண்டும். இத்தகைய காட்சி அவர்களை அப்போதே குப்ளா கானுடன் தொடர்பு கொண்டிருப்பது போன்ற ஓர் உணர்வை எழுப்பியிருக்கக்கூடும். உண்மையிலேயே அவர்களுடைய பிரயாண முன்னேற்றம் மன்னருக்கு அறிவிக்கப்பட்டு வந்தது. அதனால்தான் பீகிங்கிலிருந்து நாற்பது 'படைப்போக்குகள்' (சுமார் நானூறு மைல்) தூரம் முன்பாகவே அவரால் அனுப்பப்பட்ட அலுவலர்கள் இவர்களை எதிர்கொண்டு சந்தித்தனர். இவர்கள் சீன நாட்டிற்குத் திரும்பிச்செல்ல வேண்டும் என்பதில் மிக ஆர்வமுற்றிருந்தனர் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய பிரயாணம் சரியாக மூன்றாண்டுகள் பிடித்தது என்பதை நோக்கும்போது அவர்கள் தாமதமாக முன்னேறுவதற்குரிய காரணத்தைக் குப்ளா கானிற்கு அறிவித்திருக்கவேண்டும் என்று நாம் ஊகிக்கலாம். ஏனெனில் அப்போதுதானே இவர்களைப் பற்றி அவர் அலட்டிக் கொள்ளாமல் இருப்பார்.

ஆனால் நான் முன்னர் கூறியுள்ளபடி, அவரது நூலில் இது பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. ஏனெனில் அந்நூல் அவரது பிரயாணத்தைப் பற்றிய முறையான வருணனையைக் கொண்டதல்ல. அவர்கள் செல்லும் வழியில் நிகழ்ந்த சுவையான பகுதிகளைப் பற்றிய தொடர்ந்த குறிப்புக்கள் அதில் அடங்கியுள்ளன. அந்நூலை எழுதிய நோக்கமே தமது தீரச்செயல்களைப் பற்றிய ஒரு தொகுப்பாக அது இருக்கவேண்டும் என்பது அல்ல. தமது காலத்தில் வாழ்ந்த ஐரோப்பியர்கள் அறிந்திராத, ஆனால் அறியத்தக்கவை என்று தான் கருதிய, தேர்ந்தெடுக்கப்பட்ட சில செய்திகளடங்கிய ஒரு குறிப்பே அது. சுருங்கச் சொன்னால் அவரது நோக்கம் பூகோள அடிப்படையில் அமைந்ததேயன்றித் தனி மனிதனது வரலாற்றின் அடிப்படையில்

அல்ல. மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதைக் காட்டிலும் அறிவூட்டுவதே அவருடைய குறிக்கோளாக இருந்தது. இருப்பினும் அவர் சுவையுடன் கூறுவதால் மகிழ் வூட்டவும் செய்கிறார் என்பதில் ஐயமில்லை. பால்கிற்கும் பீகிங்கிற்கும் இடையிட்ட சாலையில் அவர் கண்ட சில சுவைமிக்க காட்சிகளைப்பற்றிய கூற்றுகளை இப்போது பொறுக்கி எடுத்துத் தருகிறேன்.

படக்ஷானையும், அதைச் சார்ந்த எழில் மிக்கதும் உயர்ந்ததுமான பீடபூமிகளையும் கடந்த பின்னர், பிரயாணிகள் வானோங்கிய மலைப்பகுதிக்குள் நுழைந் தனர். அப்பகுதியிலே புகழ்மிக்கப் பெருநதியாம் ஆக்ஸஸின் தொடக்க நீரோட்டத்தை யொட்டியே அவர்கள் சாலை சென்றது. கொஞ்சம் கொஞ்சமாக மேலே செல்லும் பாதை செங்குத்தாகச் சென்றது. இரண்டு வாரங்கள் சவாரிக்குப் பின்னர் மிகமிக உயரமான பாமீர் பீடபூமியை அவர்கள் அடைந்தனர். "உலகிலேயே எல்லா இடங்களைக் காட்டிலும் இது அதிக உயரமானது என்று சொல்லப்படுகிறது." அதன் மீது சிரிகோல் என்னும் உறைந்த ஏரி இருக்கிறது. அதன் மேற்கு முனையிலிருந்து ஆக்ஸஸ் நதி உற்பத்தி யாகின்றது. இங்கேதான் அம்மலைகளில் வாழும் காட்டாடுகளைப் போலோ கண்டார். அவை முதுகுப் புறத்தில் நாலரை அடி நீளமுள்ளவை. அவற்றின் பெரிய கொம்புகள் நெளிந்திருக்கும் தன்மையன. அவரது பெயரை யொட்டியே 'ஒவிஸ் போலி' என்று அவை இப்போதும் அழைக்கப்படுகின்றன.

இப்பீடபூமியின் உயரம் 15,600 அடி என்று அறிகிறோம். அதன் மீது 19,000 அடிக்குச் சிகரங்கள் எழுந்து நிற்கின்றன. பீடபூமியைக் கடந்து சென்ற இரண்டு வார காலத்தில் நெருப்பே தனது சூட்டை இழந்துவிட்டது போல, அவர்கள் தங்கள் உணவைச் சரிவரப் பக்குவம் செய்யமுடியவில்லை என்று மார்க்கோ

குறிப்பிடுகிருர். 'உயரே போகப் போகக் குறைந்த வெப்ப அளவிலேயே நீர் கொதிப்பதற்கும், மிக உயர்ந்த இடத்தில் நீர் கொதித்த போதிலும் அரிசியோ, ஊனே இயல்பான முறையில் பதப்படாமல் இருப்பதற்கும் உண்மையான காரணம் என்ன என்பதை அவர்கள் அறியவில்லை.

உபயோகமற்ற இப் பாழ்நிலத்தைக் கடந்த பின்னர் காஷ்கரை நோக்கிக் கீழே செல்வது அவர்களுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. 'அங்கே அழகிய பூந்தோட்டங் களும், திராட்சைத் தோட்டங்களும், ஏராளமான பருத்தி விளையும் பெரும் நிலப்பகுதிகளும் இருந்தன'. சீனுவின் மேற்குக் கோடி மாகாணமான சிங்கியாங்கில் அது அப் போது அமைந்திருந்தது. பிரயாணிகள் தொடர்ந்து சென்றனர். இங்கே சமவெளியைக் கடக்கும்போது தென்கிழக்காகத் திரும்பி நூற்றைம்பது மைல்களைக் கடந்து யார்க்கண்டை அடைந்தனர். அங்கு வாழும் மக்கள் களகண்டமாலை என்னும் நோயால் பீடிக்கப் பட்டிருப்பதைக் கண்டு, அந்நோய்க்கு அவர்கள் குடிக்கும் நீரில் உள்ள ஒருவகைத் தன்மைதான் காரணம் என்பதை மார்க்கோ விளக்குகிருர். அவருடைய சமகாலத்தவர் எவராலும் எண்ணிப் பார்த்து யூகிக்க முடியாத ஒன்றைப் புத்தி சாதுரியத் தோடு கூடிய யூகத்தினுல் அறிகிருர். அப்பகுதியில் வாழும் மக்களிடையே இன்றும் களகண்டமாலை இருந்து வருகிறது என்பதை அண்மையில் பிரயாணம் செய்தவர்களிடமிருந்து அறிகிருேம். உண்மையிலேயே போலோ காலத்திலிருந்து உலகின் அப்பகுதியில் எவ் வித மாறுதலும் ஏற்படவில்லை.

1935ஆம் ஆண்டு 'டைம்ஸ்' பத்திரிகையின் நிருபர் ஒருவர் 'எல்லா மைலர்ட்' என்பவருடன் பீகிங்கிலிருந்து காஷ்கருக்குச் செய்த பிரயாணத்தின் பிற்பகுதியில் சென்ற பாதையும் நமது நூலாசிரியர் சென்ற பாதையும்

ஒன்றே. இவ்விருவரும் தனித்தனியே தங்கள் பிரயாணத்தைப்பற்றிய நூலை வெளியிட்டனர். இப் பகுதியைப் பற்றியவரை இவர்கள் போலோவைக் காட்டிலும் மிகுதியான செய்திகளைத் தருவதால், அவர்களது நூல்கள் போலோ தந்துள்ள செய்திகளை இட்டு நிரப்பும் முறையில் அமைந்திருக்கின்றன. மேற்கண்ட செய்திகளை விளக்கும் படங்களையும் அவர்கள் தந்திருப்பதால், போலோவின் பிரயாணம் எப்படி இருந்திருக்கும் என்பதை நம் அகக்கண்ணால் பார்க்க இயலுகிறது. அவர்கள் ஆறு மாதங்களில் இத்தூரத்தைக் கடந்தனர். காஷ்கரிலிருந்து தெற்கு நோக்கித் திரும்பி, 'மிந்தகா' கணவாயின் அருகில் சென்றிருக்கிறார்கள். இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு மார்க்கோ போலோ காஷ்மீரத்தைப் பற்றிச் சிலவற்றைக் கூறுகிறார். அவை அத்தனை உண்மையாக இருப்பதால் இவர் காஷ்மீரத் தலைநகரான ஸ்ரீநகருக்குச் சென்று அங்கே சில காலம் தங்கியிருந்திருக்கவேண்டும் என்று சிலர் எண்ணுகிறார்கள். ஆனால் அவரது நூலில் அப்படிச் சொல்லப்படாததால் அதை ஊகமாகத்தான் கொள்ளவேண்டும்.

யார்க்கண்டிலிருந்து பிரயாணிகளின் பாதை வறண்ட மணற் பிரதேசங்களினூடே செல்கிறது. ஆயிரம் மைல் நீளத்திற்கு ஆங்காங்குப் பாலைப் பசும்புல் திட்டுகள் பரவலாக இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவை கோடான், கிரியா, சா-சான், லாப் என்பவை. இப் பகுதிகளைப்பற்றிய போலோவின் குறிப்புக்கள் மிகவும் அரைகுறையானவை. அவற்றின் பழைய வரலாறுகள் அவருக்குத் தெரியாது. பட்டுச்சாலையின் தென் கிளைப் பாதையிலுள்ள இப்பசும்புல் திட்டுகள், பல நூற்றாண்டுகளாகத் தங்குவதற்குரிய முக்கிய இடங்கள் என்ற வகையில் புகழ்பெற்று நிலவி வருகின்றன. சீனாவிலிருந்து மேலை நாடுகளுக்கு அவ்வழியாகப் பட்டு எடுத்துச் செல்லப்பட்டது என்பது மட்டுமல்ல, ஆனால் பௌத்த

மதம், நெஸ்தோரியக் கிறித்து மதம், கிரேக்கக் கலையின் செல்வாக்கு. இவை யெல்லாம் அவ்வழியாகத்தான் கீழை நாடுகளுக்குப் பரவின. செழிப்பு மிக்க அவ் விடங்களில் கிறித்தவ மடங்களும் பௌத்த விஹாரங் களும் மண்டிக்கிடந்தன. அவை உயர்ந்ததும் உள்ளக் கிளர்ச்சியை ஊட்டுவதுமான நாகரிகத்திற்குப் பெயர் பெற்றவையாக விளங்கின. நான் முன்னர் கூறியபடி, போலோ இவை எவற்றையும் அறிந்தவரல்லர். காலம் மாறிவிட்டது. பசும்புல் வெளிகள் முன்போல் செழிப் பாக இல்லை. சமவெளிகளிலிருந்து கிளம்பிய நாடோடி களால் அவை அடிக்கடி சூறையாடப்பட்டன. சாலை அடைப்பு அடிக்கடி நிகழ்ந்தது. பல சமயம் அவை நூற்றுண்டுக் கணக்கில் அடைப்பட்டிருப்பதும் உண்டு. வெற்றி வாகை சூடிய மங்கோலியர்களால் மீண்டும் அப்பாதை இப்போது திறக்கப்பட்டுவிட்டபோதிலும், பழைய செழுமை மீளக்கூடிய அளவுக்கு அத்தனை காலம் திறக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் அப்பகுதி மக்கள் கொலைசெய்யப்பட்டும் அடிமைகளாக்கப்பட்டும் வந்தனர். அவர்களது பண்பாடு சீர்செய்ய முடியாத அளவுக்கு அழிக்கப்பட்டுவிட்டது.

கோடானுக்கும் சா–சானுக்கும் இடைப்பட்ட நிலம் சுண்ணும்புக்கற் சுரங்கங்களுக்குப் பெயர் பெற்றவை. போலோக்கள் சுண்ணும்புக்கல்லைப் பற்றிக் கேள்வி யுற்றதில்லை போலும். அதை ரவாக்கல் என்றும் வைரமணி என்றும் அவர்கள் குறிப்பிடுகிருர்கள். ஆனல் சீனர்களால் வெகுவாக மதிக்கப்பட்ட கல்லைத்தான் அப்படிக் குறிப்பிடுகிருர்கள் என்பதில் ஐயமில்லை. நீரோடைகளில் அவை உராயப்பட்டு உருண்டைக் கற்களாகக் காட்சியளிக்கின்றன. அவற்றுள் சில வெள்ளை, சில கரும்பச்சை—ஏறத்தாழ மரகதப் பச்சை போன்ற அழகு வாய்ந்தவை—மற்றும் சில மஞ்சள்; இன்னும் சில சாதிலிங்கச் சிவப்பு வண்ணம் பெற்றவை;

ஏன், சில திட்டிக்கல் போன்ற கருப்பு வண்ணத்ில்கூட இருக்கின்றன. 'லாப்' பாலைப் பசும்புல்வெளி, லாப்நார் ஏரிக்கு அண்மையில் இருந்ததாகத் தெரிகிறது. அதற் கப்பால் கோபிப் பாலைவனத்தின் ஒரு பிரிவு வடக்கேயும் கிழக்கேயும் சமவெளியை நோக்கி நீண்டு சென்றது. அப்பகுதியைக் கடக்க ஒரு மாதம் ஆகும். இப்பாலைப் பசும்புல்வெளிகளுக்கிடையே பிரயாணம் செய்யும் போது போதிய அளவு உணவுப்பண்டங்களும் நீரும் கிடைத்தன. ஆனால் இங்கு குடிமக்களோ, வேட்டைக் குரிய பிராணிகளோ, புற்பூண்டுகளோ எவையுமே இல்லை. ஆனால் ஒவ்வொரு நாள் சவாரியின் முடிவிலும் சிறு கிணறுகளைக் காணமுடிந்தது.

இந்த வறண்ட பயங்கரப் பிரதேசத்தைக் கடப்பதற்கு முன், பிரயாணிகள் இளைப்பாறிப் புத்துயிர்ப்பு பெறவும், பொதிக்குதிரைகள் திடம் பெறவும், 'லாப்' என்னு மிடத்தில் ஒரு வாரம் தங்குவது வழக்கம். இம் மணற் பகுதியைத் தாண்டுவது பற்றிப் போலோ சில தகவல் களைச் சொல்லுகிறார். அவை நம்பத் தகாதவை எனத் தோன்றலாம். ஆனால் அப்பகுதி வழியே சென்ற மற்றும் பல பிரயாணிகள் அப்படியே சொல்லியிருக் கின்றனர். அவர் எழுதுகிறார், 'இப்பாலை நிலத்தைப் பற்றி ஓர் அதிசயமான செய்தி சொல்லப்படுகிறது. இரவில் செல்லும் பிரயாணிகளுள் யாரேனும் ஒருவர் பின் தங்க நேர்ந்து, மீண்டும் தன் கூட்டத்தாரோடு சேர முயலும் போது, சில ஆவிகள் பேசிக்கொள்வதை அவர் கேட்பாராம். தனது கூட்டத்தார்தான் அவர்கள் எனவும் எண்ணுவார். சில சமயம் அந்த ஆவிகள் அவரைப் பெயர் சொல்லி அழைக்கும். பிறகு அந்தப் பிரயாணி வேறு வழியே அழைத்துச் செல்லப்படுவார். அவர் தனது கூட்டத்தாரைப் பிறகு என்றும் காண இயலாது. அப்படி வழி தவறிய பிரயாணிகள், முக்கிய பாதைக்குச் சிறிது தூரத்திற்கப்பால் ஒரு பெரும்

குதிரை சவாரி புரியும் கூட்டத்தினரால் எழுப்பப்படும் குளம்பொலியையும், அம்மெனும் ஓசையையும் கேட்பது போல் உணர்வார்களாம். தமது கூட்டத்தினர் எழுப்பும் ஓசையே அவை என எண்ணி அவர்கள் அதைத் தொடர்ந்து செல்வர். விடிந்த பின்னர் இவையனைத்தும் பொய்த் தோற்றம் என்பதை அறிந்து தங்களுக்கு இனி கதியில்லை என்பதை உணர்வர். பகற்பொழுதில்கூட ஆவிகள் பேசுவதையும் சில சமயம் இசைக் கருவிகளின்—குறிப்பாகப் பறைகளின்—ஒலியையும், போர்க்கருவிகள் உராய்வதையுங்கூட எவரும் கேட்கலாம்.

கோபிப் பாலைவனம் ஆவிகள் நடமாடும் இடமென்பதும், அவை பிரயாணிகளை நையாண்டி செய்கின்றன என்பதும் மிகப் பழைய ஒரு நம்பிக்கை. ஐந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த பாஹியான் என்னும் சீன யாத்திரிகர், 'பிரயாணிகள்' என்ற தனது நூலில் கூறுகிறார்; 'கோபியில் மிகப் பல கொடிய பிசாசுகள் இருக்கின்றன. எதிரே வரும் மக்களைக் கொல்லும் வெப்பக் காற்றுகளும் அங்கே உண்டு. பறவைகளையோ விலங்குகளையோ அங்குக் காணமுடியாது. கண்ணுக்கெட்டியவரை அப்பிரதேசத்தைக் கடக்க முயன்ற மனிதர்களின் வெள்ளை எலும்புகள்தான் அப்பாதையில் காணப்படுவன. அவரினும் புகழ் மிக்கவராய் ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மற்றொரு சீன யாத்திரிகரான ஹுவான் சாங் என்பவர்கூட, பளபளக்கும் போர்க்கருவிகளைத் தாங்கிக் கொண்டு கொடிகளை ஏந்திச் செல்லும் போர்வீரர்கள் ஒரு சமயம் வேறு வழியே செல்வதாகவும், ஒரு சமயம் மறைந்து மீண்டும் தோன்றுவதாகவுமான சில காட்சிகளைக் கண்டிருக்கிறார்.

இக் காட்சியை இரண்டு வகையில் விளக்கலாம் என்று தோன்றுகிறது. பாலைநிலத்தின் ஏகாந்த நிலை, சூனியத் தன்மை, திக்குத்திசை தெரியாததால் ஏற்படும் ஆபத்து, மனித எலும்புகளின் தோற்றம், பசி, தாகம் இவை

யனைத்தும் பிரயாணிகளின் சிந்திக்கும் தன்மையை இழக்கத் துணைபுரிந்தன. ஆகவே அவர்கள் அல்லாத வற்றைப் பார்ப்பது போலவும், கேட்பது போலவும் எண்ணத் தலைப்பட்டனர். மேலும் ஒரு தனி வகையைச் சார்ந்த சில காட்சிகளும் ஓசைகளும் இருந்து வந்தன. கானல் நீரின் தோற்றத்தை மட்டுமின்றி மனிதர்களின் தோற்றத்தைக்கூட உண்டுபண்ணக்கூடியது உருவெளித் தோற்றம் என்பதை நாம் அறிவோம். தற்காலப் பிரயாணிகள்கூட இசை ஓசையையும் பறை ஒலியையும் கேட்பதாகக் கூறுகிறார்கள். மணற் படலம் இடம் பெயர்வதால் இது ஏற்படுவதாகத் தோன்றுகிறது. காற்று, குறிப்பிட்ட திசைகளில் அடிக்கும்போது மணற் குன்றுகளின் மேற்பரப்பின் மீது மணல் விரைவாகப் பெயர்கிறது. சிலபோது அது பறை ஒலியை எழுப்பிச் செல்லும். உண்மையிலேயே பாலைநிலத்தின் சில பகுதிகள் 'பாடும் மணல்வெளிகள்' என்றே அழைக்கப் படுகின்றன.

கோபிப் பாலை நிலத்தில் முப்பது நாட்கள் சவாரி செய்த பின்னர் பிரயாணிகள் துன் ஹுவாங் என்னு மிடத்தை அடைந்தனர். இவ்விடத்திற்கருகேதான் பட்டுச்சாலையின் வடகிளையும் தென்கிளையும் சேர் கின்றன. அங்கிருந்து எட்டு மைல்களுக்கப்பால் உள்ள 'ஆயிரம் புத்தர் குகைகளால்' இவ்விடம் புகழுடன் விளங்குகிறது. இடைக்காலத்தில் இது ஒரு பெரும் பௌத்தத் தலமாக விளங்கியது. சீன நாட்டின் மிகப் பெரும் கற்சிலைகள் இக்குகைகளில் இடம் பெற்றிருக் கின்றன. அவற்றுட் சில ஆறடிக்கும் அதிகமான உயரம் உடையவை. மார்க்கோ இக் குகைகளைப் பார்வையிட்டாரா என்பது பற்றி அவர் எதுவும் சொல்லவில்லை. ஆனால் அவ்விடத்தில் நெஸ்தோரியக் கிறித்தவர்களோடு பௌத்தர்களும் வசித்து வந்தனர் என்றும், அங்கு மரம், சுட்டமண், கல், வெண்கலம்

ஆகியவற்றால் அமைக்கப்பட்ட சிலைகள் அடங்கிய கோவில்கள் நிறைய இருந்தன என்றும் கூறுகிறார். மேலும் பௌத்தர்கள் சவங்களைத் தீயிலிடும் பழக்கத்தையும், இறந்தோருக்கு மறு உலகில் பயன் படலாம் என்ற கருத்துடன் காகிதத்தால் ஆன மனிதர்கள், குதிரைகள், ஒட்டகங்கள் ஆகியவற்றின் உருவங்கள் சவங்களுடன் எங்ஙனம் எரிக்கப்பட்டன என்பதையும் அவர் வருணிக்கிறார். சீனர்கள் நீண்ட காலம் இப் பழக்கத்தைக் கடைப்பிடித்து வந்திருக்கின்றனர். இதை யொத்த மற்றொரு பழக்கத்தையும் அவர்கள் அனுட்டித் தனர். மக்கள் உருவங்களும், விலங்கின் உருவங்களும் பொறிக்கப்பெற்ற மட்கலங்கள் இறந்தவருடன் புதைக் கப்பட்டன. இங்கிலாந்தில் தனி மனிதர்கள் சேமித்து வைத்துள்ள கலைப்பொருள்களுள் இப்போது பெரும் எண்ணிக்கையில் 'டாங்' குதிரைகள் இருப்பதைக் காணலாம். சீன நாட்டில் ரயில் பாதை அமைப்புத் துவக்கப்பட்டபோது பழைய சமாதிகளின் வழியாகப் பாதைகள் வெட்டியமைக்கப்பட்டன. ஆனால் அவற்றைப் பற்றிய நினைவு வெகு காலத்திற்கு முன்னரே மறைந்துவிட்டது.

துன் ஹுவாங் என்னுமிடத்திலிருந்து சீன நாட்டிற் குச் செல்லும் பிரயாணிகளின் பாதை தென்கிழக்காக சு-சௌ 'பெரு மதிலின்' கோடியிலுள்ள கன்-சௌ லன்-சௌ, ஆகிய இடங்களின் வழியாகச் செல்லு கிறது. பழங்காலந்தொட்டு இவை சீன நகரங்களாக இருந்துவந்துள்ளன. ஏனெனில் இவை, மஞ்சள் நதி வளைந்து செல்லுகின்ற சீனத் தாயகத்தின் ஒரு கோடி யில் இருக்கின்றன. லன்-சௌ என்னும் நகரமே அந் நதிக்கரையில் தான் இருக்கிறது. பிரயாணிகள் அங் கிருந்து பழைய தலைநகரான சங்-ஆனுக்கும் அங்கிருந்து ஹோனன் வழியே பீகிங்கிற்கும் செல்லும் வழக்கமான பாதை வழியே செல்லவில்லை. ஆனால் மீண்டும் வடக்கு

நோக்கி மஞ்சள் நதியின் நீரோட்டத்தையொட்டிச் சமவெளியின் ஓரத்தில் நதி வளைந்து செல்லும் இடத்திற்குச் சென்றனர். அதற்கருகே எங்கோ ஓரிடத்தில் குப்ளா கானின் தூதர்கள் அவர்களைச் சந்தித்து மன்னருக்குப் பிடித்த கோடைவாசத்தலமாகிற ஷாங்-டூவிற்கு அழைத்துச் சென்றனர். அவ்விடம் சீனப் 'பெருமதிலுக்கு' அப்பால் பீகிங்கிற்குச் சுமார் முந்நூறு மைல்கள் வடக்கே இருந்தது.

குப்ளா அவர்களைப் பொதுச்சபையில் வரவேற்றார். மீண்டும் அவர்களைக் காண்பதில் அவர் மகிழ்ச்சியுற்றதாகத் தோன்றியது. அவர்கள் மன்னருக்குக் கௌ-டௌ (Kow-tow) என்று கூறப்படும் விரிவான முறையில் செலுத்தப்படும் வணக்க மரியாதையைச் செலுத்தினார்கள். இந்த மரியாதையை ஐரோப்பியர்கள், குறிப்பாக ஆங்கிலேயர்கள், அடிமைத்தனமான முறை என்று கருதினார்கள். ஏனெனில், இம் முறைப்படி இரு முழந்தாளையும் மண்டியிடுவது மட்டுமின்றிப் பலமுறை நெற்றி நிலத்தில் படும்படி வணங்க வேண்டியுள்ளது, இம்முறையில் அவர்கள் மரியாதை செலுத்திய பின்னர், குப்ளா கான் அவர்களை எழுமாறு பணித்து, அவர்களுடைய பிரயாண அனுபவம் எப்படி இருந்தது, தான் அவர்களிடம் செய்யச் சொன்னதை நிறைவேற்றினார்களா என்பவை பற்றிக் கேட்டார். அதன் பேரில் அவர்களும் போப்பாண்டவர் கொடுத்த கடிதத்தையும், விசுவாசப் பத்திரத்தையும், புனிதச் சமாதியினின்று கொண்டுவரப்பட்ட எண்ணெயையும் அவர் திருமுன்னர் வைத்தனர். அவர்கள் கிறித்தவப்பாதிரிமார்களை அழைத்து வரத் தவறிவிட்ட போதிலும், மன்னர் மிகவும் திருப்தியடைந்ததாகத் தோன்றியது. 'இந்த இளைஞர் யார் ?' என்று சிரித்துக்கொண்டே மன்னர் கேட்டார். நிக்கோலோ போலோ, 'மாட்சிமை மிக்க மன்னரே ! அவன் என் புதல்வனும் தங்கள் நம்பிக்கைக்

குகந்த ஊழியனுமாவான்'' என்று விடை பகர்ந்தார். 'அவருக்கும் நல்வரவு' என்றார் மாமன்னர்.

இத்தனைப் பரிவுடன் கூடிய வரவேற்புக்குப் பின்னர் அரசவையிலுள்ள அனைவரும் அவர்களை உபசரிக்கலானார்கள்.

ஐந்தாம் அத்தியாயம்

## மங்கோலியர்கள்

மார்க்கோ போலோ சீனநாட்டிற்குச் சென்ற பொழுது மங்கோலியர்களை ஒரு கூட்டத்தினராகப் பார்த்திருக்க முடியாது என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். ஏனெனில் அவர் மேலும் சமவெளியை நோக்கித் தனது பிரயாணத்தைத் தொடரவில்லை. அங்கேதான் மங்கோலியர்கள் தங்கள் தோற்கூடாரத்தில் வசித்து வந்தனர். அவற்றைச் சுற்றிலும் ஆடு மாடுகளும், குதிரைகளும் மேய்ந்தன. அவர்கள் பயிர்த்தொழிலை மேற்கொண்டவர்கள் அல்லர். ஆகவே அவர்கள் கிராமங்களில் மட்டுமின்றிப் பாசறைகளிலும் வசித்து வந்தனர். ஏனெனில் அவர்கள் பசும் புல் இருக்கும் புது இடம் நோக்கி நகர்ந்துகொண்டே இருக்க வேண்டியவர்கள். அவர்களுடைய ஒரே நகரமான காரகோரம் கோபிக்கு வெகுவெகு தூரத்திற்கப்பால், சமவெளியின் உட்பகுதியிலே நூற்றுக்கணக்கான மைல் கடந்து அடையக்கூடிய இடத்தில் இருந்தது. அதுவும் கூட நகரமாக இன்றிப் பாசறை என்ற வகையிலே தோற்றமளித்தது. பரந்த பிரதேசத்தில் ஆட்சி நடத்தும் தலைவர்களுக்கு அது ஒரு நிலையான பாசறை. 1260-ஆம் ஆண்டு, தனக்கு நாற்பத்து நான்கு வயது ஆகும் போது, குப்ளா 'காகான்' ஆனார். அப்போது அவர் காரகோரத்தை விட்டுப் பீகிங்கில் தனது இருப்பிடத்தை அமைத்துக்கொண்டார். இந்த ஒரு செயலினாலேயே அவர் உண்மையான மங்கோலியர் அல்லாதவராகிச் சீன நாகரிகத்தை ஏற்றுக்கொண்டவரானார். சீனநாடு முழுவதையுமோ, அல்லது அதன் ஒரு பகுதியையோ ஆண்ட பல கொடிய வெற்றி வீரர்களுள்

இவரும் ஒருவராகக் கருதப்படவேண்டியவர். அத்தகைய வெற்றி வீரர்கள் எப்போதும் சீன வாழ்க்கை முறையையே ஏற்றுக்கொண்டு வந்திருக்கின்றனர். எனினும் அவர்கள் தங்கள் பண்டைய வழக்கங்கள் சிலவற்றை விடாமல் போற்றி வந்தனர். பீகிங்கில் அல்லாமல், சீனப் பெருமதிலுக்கப்பால் ஷாங்--டு என்னுமிடத்தில் மன்னர் விடுமுறையில் இருந்து வந்ததைப் போலோக்கள் கண்டனர் என்பதை முன்பே பார்த்திருக்கிறோம். உண்மைச் சீன தேசிய சக்கரவர்த்திகள் அவ்வளவு தூரத்தேயுள்ள வனாந்தரத்தில் எப்போதும் கோடை அரண்மனையை அமைத்துக்கொண்டதில்லை. ஆனால், குப்ளா மங்கோலியராதலால் திறந்த வெளிகளை விரும்பினார். வருடம் முழுவதும் பீகிங்கில் இருப்பது அவருக்குத் தாளாது. அவருக்கு வேட்டையாடுவதும் இடம் விட்டு இடம் பெயர்வதும் மிகுந்த இன்பத்தை அளிப்பன. ஆகவே அவர் வடக்குச் சமவெளியில் கோடை இல்லம் ஒன்றைக் கட்டினார். லண்டனுக்கும் ஹைலண்டிற்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரம் பீகிங்கிற்கும் அசல் மங்கோலிய நாட்டின் எல்லையிலுள்ள ஷாங்-டூவிற்கும் உள்ளது. மங்கோலியர்கள் சமவெளியில் எப்படி வாழ்ந்தனர் என்பதை மார்க்கோ போலோ கூர்ந்து நோக்குவதற்கு இது உதவியது. அவர்கள் வாழ்க்கை முறை அங்குக் குடியேறிய நாகரிகமற்ற மக்கள் அனைவருக்குமே பொதுவானது. அம்முறை மிகப் பண்டைக்காலந் தொட்டு மாறுபாடின்றி இருந்து வந்தது. ஆனால் ஒன்று, அதாவது, உலகத்தின் பெரும் பகுதியைக் கைப்பற்றிய மங்கோலியர் ஏனைய சாதாரண நாடோடிகளைக் காட்டிலும் மிகப் பெரும் பணக்காரர்களாக இருந்தனர்.

அவர்கள் எப்படித் தங்கள் உறைவிடங்களில் இருந்தனர் என்பதைப் பற்றிய விவரத்தை மார்க்கோ போலோ தந்திருக்கிறார். அவர் சொன்ன சிலவற்றை

நான் இப்போது குறிப்பிடுகிறேன். அவர் காரகோரத்திற்குச் சென்றிருக்க முடியாது. ஏனெனில் அது வடமேற்கே எழுநூறு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது. உண்மையிலேயே அதை அவர் வருணிக்க முற்படவில்லை. அது எப்படி இருந்தது என்ற கருத்தை அறிவிக்க, 1253-ஆம் ஆண்டில் போப்பாண்டவரின் நியமனத்தின் பேரில் அங்குச் சென்ற ருப்ருக்விஸ் என்ற பாதிரியாரின் கூற்றை எடுத்துக் காட்டுகிறேன். ருப்ருக்விஸ் என்பவர் ஒரு வியக்கத்தக்க மனிதர். அவருடைய 'உலகக்கீழ்ப் பகுதி யாத்திரை' என்னும் நூல் மார்க்கோவினுடைய நூலைக் காட்டிலும் கிளர்ச்சியூட்டும் ஒரு யாத்திரை நூலாகும். ஆனால் கற்றறிந்தோரே யல்லாது பிறர் இதை அறிய மாட்டார்கள். காரகோரத்தைப் பற்றி அவர் எழுதுகிறார். 'காகானின் அரண்மனையை நீக்கிப் பார்த்தால் அது செயின்ட் டெனிஸ் நகரத்தை ஒத்ததாகக் கூட ஆகாது. அரண்மனையைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், செயின்ட் டெனிஸிலுள்ள ஆச்சிரமம் அதைப்போல் பத்துப் பங்கு மதிப்புள்ளது. மேலும் அவர் சொல்லுகிறார். அங்கு இரண்டு வீதிகள்தான் இருக்கின்றன. அங்கு வாழ்ந்த மக்கள் மங்கோலியரல்லர் ; ஆனால் பல நாடுகளிலிருந்தும் வந்த அரசாங்க இலாக்காக்களின் தலைமை அதிகாரிகளும், பாரசீகம், சீனம் ஆகிய வெளிநாட்டு வர்த்தகர்களுமே ஆவர். கிறித்தவ மாதா கோயில் என்று சொல்லக்கூடிய ஒன்றும், முகம்மதியர் மசூதி ஒன்றும் அங்கே இருந்தன. அந்நகர்ப்புறத்தே நான்கு வாயில்கள் அமைந்த மட்சுவர் உண்டு. ஒவ்வொரு வாயிலின் பக்கத்தில் திறந்த அங்காடி ஒன்றும் உண்டு. ருப்ருக்விஸ் அங்கிருந்த போது குப்ளாயின் சகோதரரான மங்கு, காகானாக இருந்தார். இவர்தான் ஹுலகுவை பாக்தாத்தின் மீது படையெடுக்கச் செய்து அங்குள்ள கடைசி காலிபா பொன்னை உண்ணும்படிச் செய்தவர். உலகத்திலேயே

மிகச் சக்தி வாய்ந்த அரசனுக இருந்தபோதிலும் அவர் தலைநகரத்தில் நிலையான எதையும் வைத்துக்கொள்ள வில்லை. உண்மை என்னவென்ருல் அவர் ஓரிடத்தில் தங்குவதரிது. ஆண்டுக்கொருமுறை தமது இல்லத்தில் மது விருந்து அளிப்பார். அங்கிருந்து குடிபோதையுடன் விருந்தினர்கள் வீட்டிற்கு எடுத்துச்செல்லப்படுவார்கள். ஆண்டின் எஞ்சிய நாட்களில் ஊர் ஊராகத் தன் குதிரைவீரர்களுடன் சுற்றுவார். அல்லது நாடோடிபோல் கூட்டாளிகளுடன் சென்றுகொண்டிருப்பார்.

முன்பு நான் கூறியது போல் குப்ளா கான் இவை அனைத்தையும் மாற்றினுர். சீன ரீதியில் பீகிங்கில் நிலையான ஓர் அரண்மனையைக் கட்டியதன் மூலம் இடத்திற்கிடம் பாசறை மாற்றியமைக்கும் நாடோடிப் பழக்கத்திற்கு முடிவு கட்டினுர். குப்ளா கான் அவ்விடத்தை விட்டுப் பெயரும் வரை காரகோரம் மங்கோலியத் தலைநகராக இருந்த போதிலும் அது ஒரு பண்டசாலையாகவும், அரசாங்க நிதிக்களஞ்சியமாகவும், சரக்கறையாகவும், தூதர்கள் சந்திக்குமிடமாகவும் தான் இருந்தது. ஒரு காகான் இறக்கும் போது அவர் குடும்பத்தினர் கூடி அடுத்துப் பட்டத்திற்கு வருபவரைத் தேர்ந்தெடுக்கக் கூடும் இடமும் அதுதான். மங்கோலிய மக்களே வெளிப்புறத்தே விரிந்து கிடக்கும் சமவெளியில்தான் வசித்து வந்தார்கள். அவர்களது வீடுகளைப் பற்றி வருணிக்கும் போது, அவை பந்தர் அமைத்துத் தோல் வேயப்பெற்ற பாசறைகள் என்று போலோ கூறுகிறுர். புது மேய்ச்சல் இடங்களுக்குச் செல்லும்போது அவர்கள் பாசறைகளை அப்படியே சாமான் வண்டிகளின் மீது வைத்து விடுவார்கள். சில சமயம் பாசறைகள் மிகப் பெரியவையாக இருக்கும். அவற்றிற்கேற்ப இரு சக்கரச் சுவடுகளின் இடைவெளி இருபதடி அகலம் இருக்கக்கூடிய இருபது வண்டிகளில்

இருபது காளைகளைப் பூட்டியிருப்பார்கள். அதைப் பார்த்தால் நாடோடிகளின் பாசறையே நகர்ந்து செல்வது போல் இருக்கும். அவர்கள் பயிர்கள் விளைவிக்காததால் தங்கள் பிராணிகளின் மந்தைகளிலிருந்து பெறப்படும் மாமிசம், பால் இவற்றைக்கொண்டே வாழவேண்டியவர்களானார்கள். அவர்கள் சிறப்பாகப் பெட்டைக் குதிரையின் பாலை விரும்பினர். ஆனால் அதை நான்கு நாட்கள் நன்றாகக் கடைந்து புளிப்பு மேலிட்டு ‘குமிழ்’ (Kumiz) என்று கூறப்படும் மதுவாக மாற்றிய பிறகே பருகுவர். இதைப்பற்றி ருப்ருக்விஸ், ‘அது மனிதனின் உடலுக்கு ஒரு இதமான உணர்ச்சியை உண்டு பண்ணுகிறது’ என்று சொல்கிறார். குழந்தைகள்கூட அதைக் குடித்தனர். இருப்பினும் இந்த நுரைப்பானம் மங்குவின் விருந்தினர்கள் குடிபோதையுடன் வீட்டிற்குத் திரும்பும் அளவுக்குக் காடியாகவும் இருந்திருக்கக்கூடும் எனத் தோன்றுகிறது. பீபர்ஸ் என்னும் மம்லுக் சுல்தான்—இவருடைய டென்னிஸ் ஆட்டத்தைப் பற்றி முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன்—ஒரு குடியாட்டத்தின்போது இந்தக் ‘குமிழ்’ என்னும் பானத்தால்தான் உயிரிழந்தார்.

மார்க்கோ போலோ மேலும் சொல்லுகிறார். மங்கோலியர் எளிய மக்களாயினும் போரில் வெற்றியின் பின்னர் கிடைத்த பொருளை ஆடைகளில் செலவிட்டு விடுவார்கள். எப்போதும் சவாரி செய்துகொண்டும், முகாமிட்டுக்கொண்டும், ஆடுமாடுகள் மேய்ப்போர் போல் வாழ்க்கை நடத்திவந்த போதிலும் அவர்களிடையே அதிகப் பொருள் வசதி உள்ளவர்கள், விலையுயர்ந்த sable, ermine என்ற மிருதுவான உரோமமுள்ள ஒரு வகை மிருகங்களின் தோலினாலும், நீலமும் வெண்மையும் கலந்த vair என்ற மிருதுவான உரோமமுள்ள தோலினாலும், நரித்தோலினாலும் கரையிட்ட சரிகை ஆடைகளையும், பட்டாடைகளையும் மிக நேர்த்தி

யான முறையில் அணிந்திருந்தனர். ஆனால் அவர்கள் ஆடைகளை எப்போதும் துவைப்பதில்லை. உண்மையிலேயே ஆற்று நீரில் துவைத்தால் அங்குள்ள ஆத்மாவுக்குக் கோபமூட்டுவதாகும் என்ற ஒரு மூட நம்பிக்கை அவர்களிடையே இருந்தது. அவர்கள் வாழ்நாள் முழுதும் ஆடைகளைத் துவைப்பதே இல்லை. இடைக் கால ஐரோப்பியர்கூட அவர்களை மிகவும் அழுக்குப் பிடித்தவரெனக் கருதினர். மங்கோலியப் போர்வீரரின் உறுதியைப் பற்றி மார்க்கோ விரிவாகச் சொல்லுகிறார். அவர்களுடைய சகிப்புத்தன்மை உலகத்தின் பெரும் பகுதியை வெல்வதற்குத் துணை புரிந்தது என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். இது பற்றி அவர் எழுதுகிறார், 'மிக அவசரமான நிலையிலும், ஒரு முறைகூட உணவு சமைக்காமல் பத்து நாட்கள் வேண்டுமானாலும் அவர்கள் சவாரி செய்வார்கள். அப்போது உயிர் வாழ்வதற்காக வேண்டித் தங்கள் குதிரைகளின் இரத்தக் குழாயைத் திறந்து அந்த இரத்தத்தைத் தங்கள் வாய்க்குள் பாய்ச்சிக்கொள்வார்கள்'. அவர்களது குதிரைகளும் தானிய உணவின்றிச் சவாரி செய்துகொண்டே இருக்கும். பனிக்கட்டியின் கீழிருக்கும் புல்லைத் தமது முன்னங்காற் குளம்புகளால் அவை பறித்து எடுத்து விடும். இப்படித்தான் அசல் மங்கோலியர்கள் இருந்தனர் எனப் போலோ கூறுகிறார். ஆனால் பாரசீகம், சீனம் போன்ற வெற்றி கொண்ட நாடுகளுக்குச் சென்ற மங்கோலியர் விரைவில் சீரழிந்துவிட்டனர். அவர்கள் குளித்தனர்; எல்லா வகையான விலையுயர்ந்த உணவுகளையும் உண்டனர். ஆனால் அதிகமாக உடற்பயிற்சி செய்வதில்லை.

ஆறும் அத்தியாயம்

## மன்னரின் கோடை அரண்மனை

1275-ஆம் ஆண்டில் ஷாங்-டு என்னுமிடத்தில் உள்ள கோடை அரண்மனைக்குப் போலோ குடும்பத்தினர் சென்றபோது ஐம்பத்தொன்பது வயது நிரம்பிய குப்ளா கான் பதினைந்து ஆண்டுகள் சக்கரவர்த்தியாக இருந்திருக்கிறார். சீன நாகரிகத்தை ஏற்றுக்கொண்ட போதிலும் குறிப்பாக அவர், பிரயாணம் செய்யும் போது தமது மங்கோலிய இனத்தின் ஆண்மைக்குரிய பல இயல்புகளை விடாமல் கடைப்பிடித்து வந்தார். ஷாங்-டூவில் அவர் வாழ்க்கை வெளிப்புறக் களியாட்டங் களில் கழிந்தது. உயர்ந்த முறையில் பயிலப்பட்ட இலக்கியம், கலை, சடங்கு ஆகியவை பற்றிய முறைகள் சீன அரசவைக்கு இயல்பான பண்புகளாக அமைந் திருந்தன. மார்க்கோ போலோ ஐரோப்பியரான தாலும், பெருமளவில் பிரயாணம் செய்தவரான தாலும், செயலில் ஈடுபட்டவரானதாலும், எந்த அளவுக்குச் சீனரின் முறைகளைப் புரிந்துகொண்டு பாராட்ட முடிந்ததோ, அதைக்காட்டிலும் மிகுதியான அளவிலே சக்கரவர்த்தியின் வெளிப்புற வாழ்க்கையைப் புரிந்துகொண்டு பாராட்ட முடிந்தது. உண்மையிலேயே அவரது நூலில், கலை, இலக்கியம், தத்துவம் இவற்றைப் பற்றிச் சொல்லும் பகுதி மிகக் குறைவு. சீன நாகரி கத்தைப்பற்றி எந்தவிதக் கருத்தையும் மேற்கொள்ளு வதற்குக்கூட உண்மையிலேயே அவருக்குத் தகுதி இல்லை. சீனர்களைச் சிறந்த கைவினைஞர்கள் என மெச்சியிருக் கிறார். அவர்களுடைய நேர்த்தியும் கீர்த்தியும் இவரைத் திகைக்கவைத்தன. ஆனால் இவரது காவியத் தலைவன் குப்ளா கான். இவருடைய நூல் மங்கோலியரின் சீன

ஆளுகையைப் பற்றியது. அவர்கள் கொலை பாதகர்கள், ஓயாது படையெடுப்பவர்கள், என்பதே அவர்களைப் பற்றிய ஐரோப்பியரின் அனுபவம். மார்க்கோ போலோ அவர்களை விளையாட்டுப் பிரியராகவும், நாட்டுப்புறச் சான்றோராகவும் காட்டுகிறார். ஐரோப்பிய வாசகர்கள் அவரை நம்ப மறுப்பதற்குரிய காரணங்களுள் இதுவும் ஒன்று. அவர் காலத்தில் ஐரோப்பியரோ, அவர்கள் முன்னோர்களோ, சமவெளியில் வாழும் பயங்கரக் குதிரைவீரர்களைப் பார்த்திருக்கின்றனர். இதே வீரர்களை, வெற்றிக்குப் பின்னர் கனிந்த உள்ளத்தின ரான களிப்புமிக்க துரைமகனாராகப் போலோ படம் பிடித்துக் காட்டும்போது அதை அவர்களால் நம்ப முடியவில்லை.

இப்பொழுது ஆசிரியரின் கண்கொண்டு ஷாங்-டு எப்படி இருந்தது என்பதைப் பார்ப்போம். 'ஸநாடுவில் (Xanadu) குப்ளா கான்', என்று தொடங்கும் கோல் ரிட்ஜின் செய்யுளில் வரும் ஸநாடுவும் ஷாங்-டூவும் ஒன்றுதான் என்பதை முதலில் சொல்லி விடுகிறேன். மார்க்கோ போலோவின் நூலைப் படித்துவிட்டு, படித்ததைக் கனவில் கண்ட பிறகு அச்செய்யுளைக் கவிஞர் வரைந்தார். ஷாங்-டூவில் விநோதமான நிகழ்ச்சிகள் நடைபெற்றன என்பதைப் பார்க்கப் போகிறோம். கவிஞர் தனது கனவைப் பற்றி எழுதும் பொழுது இந்த உள்ளங்கவர் நிகழ்ச்சிகளை நேரிடையாக வருணிக்க வில்லை. ஆனால் அவை கனவுலகில் உருமாறிக் காவியச் சூழ்நிலையில் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஷாங்-டூவில் உள்வளைவு, புறவளைவு என இரு பகுதிகள் உள்ளன. அதன் உள்வளைவில் பலவித அரண் மனைக் கட்டிடங்கள் இருக்கின்றன. நகர் முழுவதையும் சுற்றி ஒரு பூங்கா இருக்கின்றது. அது பதினாறு மைல் சுற்றளவு கொண்டது. அரண்மனை, சலவைக்கல்லால் ஆனது என்றும், உயர்ந்த கலை உணர்ச்சியுடன் வடிக்கப்

பெற்ற மனிதர்கள், பிராணிகள், விலங்குகள், பறவைகள், மரங்கள், மலர்கள் இவற்றின் உருவங்களுடன், முலாம் பூசப்பட்டும், வண்ணம் தீட்டப்பெற்றும் அது விளங்கியது என்றும் போலோ குறிப்பிடுகிருர். அவற்றை எண்ணும்போது மகிழ்ச்சியும், வியப்பும் இழைந்தோடுகின்றன. 1872 ஆம் ஆண்டு இப்போது அடர்த்தியான புல்லாலும் நாணலாலும் மூடப்பட்டுள்ள இடத்தைத் தோண்டியபோது, இந்த மேம்போக்கான வருணனை உறுதிப்பட்டது. ஏனெனில் அரண்மனைக் கட்டிடங்களின் கடைக்காலில் சலவைக் கல்லால் ஆன சிம்மம், நாகம் முதலிய சிற்ப வடிவங்களின் துண்டுகள் காணப்பட்டன. அவை இன்றும் காணக்கிடைப்பன. சீனச் சிற்பிகளால் குப்ளாகானுக்காக இவ்வரண்மனை கட்டப்பட்டது என்பதை நாம் ஊகிக்கலாம். கட்டிட முறை முழுதும் சீன முறையையே ஒட்டியது. ஏனெனில் மங்கோலியருக்கென தனித்த ஒரு கட்டிடக்கலை இல்லை. ஆகவே அதில் பல கூடாரங்கள், மேல் தளங்கள், முன் வாயில்கள், கற்பனைப் பிராணிகள் செதுக்கப்பெற்ற தூண்கள், விருப உருவங்கள் அமைந்த கூடல்வாய் ஓடுகள் பொருத்தப்பெற்ற கூரைகள், இவை அனைத்தையும் அகக்கண் கொண்டு எளிதில் காணலாம். உட்புறத்தில் படுதாக்களும், பூக்கள், புள்ளினங்கள் இவற்றின் வேலைப்பாடமைந்த தொங்கும் சுருட்சீலைகளும் இருந்திருக்கக்கூடும்.

பூங்காவின் ஒரு பகுதியில் அலங்காரத் தோட்டம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கு நீரூற்றுக்களும், ஓடைகளும், மேடும் பள்ளமுமாக அமைந்த நிலங்களை ஒட்டி நிற்கும் மரங்கள் நிறைந்த பகுதிகளும் இருந்தன. மற்றப் பகுதி மான்கள் விளையாடும் இடம். குப்ளாகானுக்கு வேட்டைக்குப் பருந்து வளர்ப்பதிலும், பருந்துக்கு உணவாகும் பறவைகள் வளர்ப்பதிலும் தீவிரப் பற்று உண்டு. அப்பறவைகள் சிறு மானை இழுத்துத் தள்ளும் வல்லமை பெற்றிருந்தன. பெரிய

மான்களை வேட்டையாடும் பொருட்டுச் சிறுத்தை களையும் அவர் வைத்திருந்தார். ஒரு முறை சிறுத்தை யைத் தன் சேணத்திற்குப் பின்னே உட்கார வைத்துக்கொண்டு அவர் சவாரி செய்ததைப் பார்த்த தாகப் போலோ கூறுகிறார். பூங்காவின் மத்தியிலே மூங்கிலாலேயே கட்டப்பட்ட அரண்மனை ஒன்று இருந்தது. அதை ஓர் அழகிய கூடாரம் என்றே சொல்லலாம். அதன் உட்புறம் விஸ்தாரமான அளவில் வேலைப்பாடு செய்யப்பட்டும் முழுவதும் முலாம் பூசப்பட்டும் இருந்தது. பறவை நாக உருவில் அமைந்த போதிகைகளோடு கூடிய தூண்கள் கூரையைத் தாங்கி நின்றன. கூரை ஓடுகளால் வேயப்பெறவில்லை. ஆனால் தைலமிடப்பெற்ற மூங்கில்களால் மூடப்பெற்றிருந்தது. அது மிகவும் இலேசாக இருந்ததால் அதை நிலை பெறுத்தும் பொருட்டு அசல் பட்டுக்கயிறுகளால் இழுத்துக் கட்டவேண்டியிருந்தது. குப்ளா கானுக்கே தனிரக ஜாதி வெண்பொலிக்குதிரைகள் பத்தாயிரம் இருந்தன. அவற்றிற்கென பூங்காவின் பெரும் பரப்பில் குதிரை இலாயங்களும் இருந்தன. பெட்டைக் குதிரை களின் பாலிலிருந்து ஆக்கப்பெற்ற 'குமிழ்' என்னும் பானத்தை அவர் அருந்தினார்.

கிறித்தவர்களையும், பௌத்தர்களையும் போலவே மங்கோலியரும் ஒரு பரம்பொருளிடத்தும், சிறு தேவதைகளிடத்தும் நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் அவர்களுடைய திருச்சபைகளில் வரையறை செய்து நிலைபெறுத்தப்பட்டிருப்பவை போல் இவர் களுடைய மதச்சடங்குகள் அவ்வளவு திட்டவட்டமாக இல்லாததுடன் எளியனவாகவும் இருந்தன. மங்கோலிய நம்பிக்கைகளைப் பயன் தரும் வகையில் கிறித்தவ மதத்துடனோ, பௌத்த மதத்துடனோ அல்லது அவை இரண்டுடனோ ஒட்டவைத்துவிடலாம் என்று குப்ளா கான் கருதினார். இதை மனத்தில் கொண்டுதான்

போலோ சகோதரர்களிடம் கிறித்தவ மதகுருமார்களை அழைத்து வரச் சொன்னார். ஏற்கனவே ஒரு வகையான பௌத்த மதத்தை அவர் புகுத்தியிருந்தார். மார்க்கோ போலோவும் பௌத்த சன்யாசிகளைப்பற்றிய சில விநோதக் கதைகளைச் சொல்லுகிறார்.

குப்ளா கான் அழைத்துக்கொண்டு வந்த புத்த பிக்ஷுக்கள் திபேத்திலிருந்தும் காஷ்மீரத்திலிருந்தும் வந்தவர்கள். காஷ்மீரத்தில் அக்காலத்தில் பல பிக்ஷுக்கள் இருந்தனர். மேற்கூறிய நாடுகளில் பௌத்த மதத்தில் மந்திர-தந்திரங்கள் பெருமளவில் கலந்திருந்தன. ஷாங்-டூவிலும் பின்னர் பீகிங்கிலும் மார்க்கோ கண்ட புத்த பிக்ஷுக்கள் அந்தக் கலையில் நிபுணர்களாக இருந்தார்கள். தான் கண்ட ஒரு காட்சியை அவர் வருணிக்கிறார். வழக்கம்போல் குப்ளா கான் மேடைமீது போடப்பட்டுள்ள விருந்து மேஜையில் உட்கார்ந்திருந்தார். மண்டபத்தின் நடுவே சுமார் பத்து கஜத்திற்கப்பால் உள்ள ஒரு பீடத்தின் மீது 'குமிழ்' பானம் நிரப்பப்பெற்ற மதுக்கோப்பைகள் தயாராக வைக்கப்பட்டிருந்தன. ஒரு கோப்பைப் பானம் கொண்டுவா என்று கேட்கும் போது பணியாளன் கொண்டுவந்து கொடுப்பான். திபேத்தி லிருந்தோ காஷ்மீரத்திலிருந்தோ வந்த சில புத்த பிக்ஷுக்களும் அங்கிருந்தனர். அக்கோப்பைகளை எவரும் தொடாமலும் அவற்றுள் இருக்கும் மது சிந்தாமலும் அவை வைக்கப்பட்டுள்ள பீடத்திலிருந்து காகானின் மேஜைக்குக் காற்றிலே மிதந்து செல்லும் படித் தாங்கள் செய்யக்கூடுமென அவர்கள் அறிவித் தனர். இதன் பிறகு ஏதோ ஒரு வகை மந்திர ஜபம் நடந்தது. போலோ அதை ஒரு மாயவித்தை என்று சொல்லுகிறாரே ஒழிய, எந்த முறையில் நிகழ்ந்தது என்பதைச் சொல்லவில்லை. பொதுவாக இத்தகைய சடங்குகள் நடக்கும்போது இசையும் கொட்டும்

சேர்ந்து நிகழும். அப்போது இதை நடத்துகின்றவர்களுக்கு ஆவேசம் வருவதுண்டு. இந்நிகழ்ச்சி குறிப்பிட்ட ஒரு சமயத்தில் ஏற்படும். போலோ இத்தகைய விவரங்கள் அனைத்தையும் விட்டுவிட்டார். ஆனால் அக்கோப்பைகள், பீடத்தினின்றும் சக்கரவர்த்தியின் மேஜைக்கு மாயமாகக் காற்றினூடே நகர்ந்து வந்ததைத் தான் பார்த்ததாகச் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறார். 'நான் உங்களிடம் பொய் சொல்லவில்லை. நான் சொல்வது முற்றிலும் உண்மை' என்று எழுதுகிறார். மேலும் ஐரோப்பாவில் ஆவியுடன் பேசும் ஆற்றல் படைத்த மாயாவிகள் இருக்கின்றனர் என்றும், அவர்களும் இதை ஒப்புக்கொள்வதுடன் இதுபோல் செய்தும் காட்டுவர் என்றும் அவர் கூறுகிறார். அத்தகைய மாந்தர் தங்களுக்கு உதவி செய்ய ஆவிகளை அழைக்கக்கூடியவர்கள் என்பதுதான் அவர் கூறும் எளிய விளக்கம்.

இன்றைய ஆய்வாளர்கள் பொதுவாக மார்க்கோ போலோ, தான் உண்மை என்று நம்பியவற்றைத்தான் தனது நூலில் குறிப்பிடுகிறார் என்று கொள்கின்றனர். குப்ளா கானும், அப்போது அவருடன் இருந்தவர்களாகக் கூறப்படும் மற்றும் பலரும் கண்டது போலவே, போலோவும் கோப்பைகள் காற்றினூடே நகர்வதைக் கண்டதாகவோ, அல்லது கண்டதாக நம்பியதாகவோ நாம் உறுதியாகக் கொள்ளலாம். உண்மையாகவே என்ன நடந்தது என்பதை ஆய்ந்து முடிவு சொல்லத் தக்க சான்றுகள் நமக்கு இல்லை. குறிப்பிட்ட இம்மாயச் சாதனை நெடுங்காலந் தொட்டு இருந்து வருவது. சீன வரலாற்றாசிரியரான பான்-கூ தனது நூலில் இத்தகைய ஒரு மாயவித்தையைக் குறிப்பிட்டிருப்பதை நான் பார்த்திருக்கிறேன். கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வூ (wu) சக்கரவர்த்தியைப் பற்றி கி. மு. முதல் நூற்றாண்டில் எழுதியுள்ள இவர், ஷான்-டுங்கிலிருந்து வந்த ஒரு மாயவித்தைக்காரரைப் பற்றிக் கூறுகிறார்.

அவர் தம்மிடம் மாயசக்திகள் இருப்பதைச் சக்கர வர்த்தி நம்பவேண்டும் என்பதற்காகச் சதுரங்கப் பிரதிமைகளை எவரும் தொடாமல் தாமே இயங்குமாறு செய்தாராம். போலோக்கள் சீன நாட்டை விட்டுச் சென்ற சிறிது காலத்திற்கெல்லாம் அங்குச் சென்ற ஒடோரித் என்னும் பாதிரியார், 'நல்ல மதுவகை நிரம்பிய தங்கக் கோப்பைகள் காற்றினூடே நகர்ந்து மதுவருந்த விரும்புவோரின் உதட்டினருகே தாமே அடையுமாறு மாயாவிகள் செய்கிறார்கள்' என்று எழுதி யுள்ளார். ஐரோப்பிய மந்திரவாதியான சிசார் மால்டேசியோ என்பவர் பிரான்சு தேசத்து ஒன்பதாம் சார்லஸ் முன்னிலையில், உணவு மேஜையின் ஒரு மூலை யிலிருந்து மற்றொரு மூலைக்குக் காந்த சக்தியையோ வேறெந்த சார்புப்பொருளையோ பயன்படுத்தாமல் வெள்ளிக் கிண்ணங்கள் தத்தித்தத்தி நகரும்படி செய் தார் என்பது வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதைக் குறித்துள்ள டெல்ரியோ என்னும் தந்திரி, போலோ கூறுவது போலவே, இது ஆவியின் செயல் எனக் கூறுகிறார். பிற்காலத்தில் 1875 ஆம் ஆண்டிலே கூட R.B. ஷா என்னும் யாத்திரிகர், லாஞ்செள என்னு மிடத்தில் வாழ்ந்த பௌத்த மடத்தலைவரைப் பற்றி எழுதியுள்ளார். அவரிடம் உள்ள மாயசக்தியினால் பொருள்கள் காற்றிலே பறந்து அவரது கைகளைச் சென்றடையுமாம். தூரத்திலுள்ள கோப்பைகளும் தட்டுக்களும் அவரிடம் ஈர்க்கப்பட்டனவாம்.

சிலர் இது மாயவித்தையின்பாற்பட்டது என்று கருதக்கூடும். புத்திசாலித்தனத்துடன் இது செய்யப் படுகிறது என்பதில் ஐயமில்லை. அப்படிச் செய்வதில் உள்ள சாமர்த்தியத்தினால் அது எப்படிச் செய்யப்படு கிறது என்பதை எவரும் அறிய முடிந்ததில்லை, ஆனால் இதில் பல சங்கடங்கள் எழுகின்றன. அக்காலத்தில் மாயவித்தை நிரம்ப இருந்தது. ஆனால் இச்சாதனையை

மாய தந்திரம் என்று எவரும் கருதியதில்லை. தந்திர மான முறையில் இதைச் செய்தவரும் இல்லை. இது ஆவியின் மூலம் ஏற்படுத்தப்படும் தோற்றமாக இருக்க லாம் என்பதே என் சொந்தக் கருத்து. தற்காலப் பிரசித்தமான ஆவிகளைப் பற்றிய குறிப்புக்களில் காற்றினூடே பறக்கும் கனப்பொருள்களைப் பற்றி அடிக்கடி பேசப்படுகிறது. கனப்பொருள் இலேசாக ஆக்கப்படுவது பற்றிய விவரங்கள் பல கீழை நாடு களிலிருந்து அறியப்படுகின்றன. இதை ஒத்ததுதான் மார்க்கோ போலோ கூறும் விந்தைச் செய்தியும். கயிற்றின் மீது செய்யப்படும் தந்திரமும் இதையொத்த ஒரு வகையான பொருளை இலேசாக்கும் செயல்தான். போலோக்கள் சீன நாட்டை அடைந்த அறுபது ஆண்டுகள் கழித்து அங்கு இபன் பதூதா என்ற அராபிய யாத்திரிகர் சென்றார். அவர் 'யாத்திரைகள்' என்னும் தனது நூலில் ஹாங்-சௌ நகரில் உள்ள அரசப்பிரதிநிதியின் சபையில் கயிற்றின் மீது நடத்தப் பெற்ற தந்திரத்தைத் தான் கண்டவாறு வருணிக்கிறார். அப்பகுதியை நினைவு கூர்தல் சுவை பயப்பதாகும். இம் மாநகரைப் பற்றிய வருணனை பின்னர் தொடரும். அது ஒரு பயங்கரமான காட்சி. ஒரு சிறுவன் கயிற்றின் மீதேறிச் சென்று கண்ணுக்கெட்டாமல் மறைந்து விட்டான். ஆனால் அவனைத் தொடர்ந்து ஒரு மனிதன் கத்தியுடன் ஏறினான். உடனே பையனுடைய கைகள், கால்கள், இறுதியாக அவனுடைய தலையுங்கூட ஆகாயத்திலிருந்து இரத்தம் சொட்டச் சொட்ட கீழே விழுந்தன. இபன் பதூதா எழுதுகிறார், 'இவை அனைத்தும் எனக்கு அளவு கடந்த வியப்பை உண் டாக்கின. எனக்கு நெஞ்சம் துடித்தது. இது போன்ற ஒன்று முன்பு ஒரு முறை இந்தியாவிலுள்ள சுல்தானின் முன்பு எனக்குக் காட்டப்பட்டபோது இத்தகைய துடிப்பு என்னை வதைத்தது. ஆனால் அவர்கள் கொடுத்த மாற்று மருந்தினால் அது தீர்ந்தது. பதூதாவின்

அராபியத் தோழர் இவை எல்லாம் ஒரு பிரமை என்றே கருதினர். தாம் பார்த்தவை எல்லாம் உண்மையாகவே பார்க்கப்பட்டவைதான் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்று அவர் கூறியுள்ளார்.

பறக்கும் கோப்பைகள் ஒரு பிரமை என்று குப்ளா கான் எண்ணவில்லை. நிகோலோ போலோவும் மாப்பியோ போலோவும் சீன நாட்டிற்கு முதன் முறை வந்து ஐரோப்பாவிற்குத் திரும்பு முன்னர் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து இது தெளிவாகிறது. ஈஸ்டர் பண்டிகையின் போது குப்ளா கான் தலைநகரில் வசித்து வரும் நெஸ்தோரியக் கிறித்தவர்களை பைபிளை எடுத்துக்கொண்டு வரும்படிச் சொல்லியனுப்புவது வழக்கம். மாதாகோவில் சிப்பந்திகள் பைபிளுக்குத் தூபமிட்டு, வாசனையூட்டிக்கொண்டிருக்க, அப்போது குப்ளா கான் அதை முத்தமிடுவது வழக்கம். யூதர்கள், முகம்மதியர்கள், பௌத்தர்கள் ஆகியோரின் முக்கிய பண்டிகைகளில் இது போன்ற ஒன்றை அவர் செய்வாராம். இதற்கு அவர் கூறும் காரணம், 'உலகெங்கிலும் வழிபடப்பெற்று மதிக்கப்படும் தேவதூதர்கள் நால்வர். அவர்கள் ஏசு கிறிஸ்து, முகம்மது, மோசஸ், புத்தர் ஆகியோர். ஒவ்வொருவருக்கும் நான் மரியாதை செலுத்துகிறேன். ஏனெனில் இந் நால்வரில் எவர் ஒருவர் விண்ணுலகின் தலைவராக இருக்க நேரிடினும் அவர் எனக்கு உதவி அளிக்கலாம்' என்பதாகும். எனினும் அவர் சிறப்பாகக் கிறித்தவ மதத்தோடு அதிகச் சார்பு கொண்டிருந்தார் என்று சொல்லப்படுகிறது. ஏனெனில் அது உணர்த்திய நடைமுறை உயர்வானதென அவர் கருதினர். அரசியல் நோக்குடன் பார்த்தாலும் அதிலே இலாபம் உண்டு. ஏனென்றால் மக்கள் எந்த அளவுக்கு நன்னெறியைப் பின்பற்றுகிறார்களோ அந்த அளவுக்கு இராஜ்யமும் அதிக நிலைபேறுடையதாக ஆகிறது.

போலோ சகோதரர்கள் தாய்நாடு திரும்பு முன்னர் அவர்களுக்குப் பேட்டி தந்து, மதகுருமார்களை அழைத்து வரவேண்டுமென்று மாமன்னர் சொன்னார். அப்போது மன்னர்பிரான் கிறித்தவ மதத்தில் ஈடுபாடு கொண்டிருப்பது தெளிவாக இருந்த காரணத்தால் அவர் ஏன் கிறித்தவராகவே ஆகவில்லை என்று அவர்கள் துணிந்து கேட்டனர். அதற்கு அவர் கூறிய பதில் புத்த பிக்ஷுக்களின் வியத்தகு செயல்களால் மன்னரின் உள்ளம் நன்கு கவரப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது. அச் செயல்களை மந்திர தந்திரம் என்றோ பிரமை என்றோ கருதாமல் புத்த பகவானால் அளிக்கப்பட்ட தெய்வீகச் சக்திகளின் உண்மை விளைவுகளே என்று அவர் கருதினார். அவர் 'புத்த பிக்ஷுக்கள் செய்யக்கூடியவற்றை இங்குள்ள கிறித்தவர்கள் செய்ய இயலாது. நான் மேஜையினருகே உட்கார்ந்திருக்கும்போது மண்டபத்தின் நடுவிலிருந்து மதுவகை நிரம்பிய கோப்பைகள் எவராலும் தீண்டப்படாமல் என்னருகே வருகின்றன. அவற்றிலுள்ளவற்றைப் பருகுகின்றேன். கிறித்தவர்களால் இதைச் செய்ய இயலவில்லை. காலவியல்பைக் கட்டுப்படுத்துதல், அல்லது எதிர்கால நிகழ்ச்சியை முன்கூட்டி அறிவித்தல், இது போன்ற விந்தைச் செயல்களைப் பௌத்தர்கள் செய்வதுபோல் இவர்களால் நிறைவேற்ற இயலாது. இப்படி இருக்கும்போது நான் கிறித்தவன் ஆனால் எனது நாட்டிலுள்ள பிரபுக்கள் என்னை முட்டாள் என எண்ணுவர்' என்று சொன்னார். மேலும் 'நான் கிறித்தவனாக ஆகிவிட்டால் புத்த பிக்ஷுக்களின் சீற்றத்திற்கு ஆளாவேன். அவர்கள் தங்கள் தெய்வீகக்கலை ஆற்றலால் எனக்கு மரணத்தையே உண்டாக்கிவிடுவார்கள்' என்று கூறினார். இதனின்றும் புத்த பிக்ஷுக்கள் உண்மையிலேயே தெய்வீகச் சக்தி பெற்றவர்கள் என்று அவர் உறுதியாக நம்பினார் என்பது புலனாகிறது.

போலோ சகோதரர்கள் கிறித்தவப் பாதிரிமார்களை அழைத்து வரவேண்டுமென்று அவர் ஏன் விரும்பினர் என்பது இப்போது மேலும் தெளிவாகிறது. போப் பாண்டவரால் அனுப்பப்படும் பாதிரிமார்களுக்குத் தெய்வீகச் சக்திகள் இருக்கக்கூடும் என்று அவர் எண்ணினார். அப்படி ஒரு வேளை இருந்து, அவர்கள் பிக்ஷுக்களைக் காட்டிலும் அதிக வலிமையுள்ள சக்திகளையும் பெற்றிருந்து, கோப்பைகளை வைத்துக்கொண்டு அவர்கள் நிகழ்த்தும் விநோதச் செயலைத் தடைசெய்யவும் கூடுமானால், விண்ணகத்தே விளங்கும் நான்கு தேவதூதர்களிடையே ஏசு கிறிஸ்துவே முதன்மையானவர் என்று மன்னர் உறுதியாக எண்ணலாமே. அதுவே அவர் கிறித்தவர் ஆவது நியாயமானது என்பதைக் காட்டும். இந்த நிரூபணத்தினால் அறிவுறுத்தப்பட்ட அவரைச் சார்ந்த பிரபுக்களும் மன்னர் செய்ததே சரியென எண்ணியிருக்கக்கூடும். பௌத்தர்களுடைய மாயக் கலைகளைக் கண்டு பயந்த அவர், பாதுகாப்பிற்குக் கிறித்தவர்களை வேண்டினார் என்னும் குறிப்பு இதில் அடங்கியிருக்கிறது. மேலும் அவர் மங்கோலியராதலால் ஐரோப்பாவினின்றும் வந்த பாதிரிமார்களுக்கும் திபேத்திலிருந்து வந்த புத்த பிக்ஷுக்களுக்கும் இடையே தெய்வீக அருஞ்சாதனைகளைப் பற்றிய ஒரு போட்டியை நேரில் காண மிகவும் விரும்பியிருக்கலாம். இத்தனை காலங்கழித்து இப்போது நாம் அவருடைய உள்ளக்கிடக்கையை முற்றிலும் உணர்வது இயலாது. எந்தக் குறிப்பிட்ட அரசியல் அல்லது ஆட்சிமுறைக் காரணங்கள் அவரை ஒரு வகையில் செலுத்தியிருக்கக்கூடும் என்பதையும் அறிவது இயலாது. ஆனால் அவர் ஒரு காரியவாதி என்பதை, அத்தனை தெளிவாக இல்லாவிட்டாலும் கூட, ஓரளவு உணர்கிறோம். தெய்வீக ஆற்றல்களின் உண்மையை உறுதியாக நம்புகின்றவராகையால், அக்கலைவல்லார் பக்கம் அவர் சார விரும்பி

ஞர். போலோவுக்கும் அவருக்கும் இது பற்றிய கருத்து வேற்றுமை இதுதான். இத்தகைய ஆற்றல்கள் மேற் கூறப்பட்ட நான்கு தேவதூதர்களின் அருட்செயல் என்பது மன்னரின் கருத்து. இத்தாலியரான மார்க்கோ போலோவோ அவை ஆவியின் ஏவுதலால் நிகழ்வன என்று கருதினர்.

ஏழாம் அத்தியாயம்

# பீகிங் அரண்மனை

மார்க்கோ போலோவிடமிருந்து அவரது அனுபவங்களைப்பற்றியும், வீரச்செயல்களைப் பற்றியும் விவரமான வருணனையை எதிர்பார்க்கவேண்டாம் என்று வாசகர்களை முன்பே எச்சரித்திருக்கிறேன். வெனிஸ் நகரத்திற்கும் சீன நாட்டிற்கும் இடையிட்ட முடிவற்ற நெடுந்தரிசு நிலங்களைக் கடந்து, தமது இடத்திற்குத் திரும்பவும் வந்த போலோ குடும்பத்தினரின் விசுவாசத்திற்குக் குப்ளா கான் அளித்த பரிசு என்ன என்பதை அறிந்து கொள்வது சுவை பயப்பதாக இருக்கும். அவர்களுக்கு என்ன வேலை அளிக்கப்பட்டது, அல்லது அளிப்பதாக உறுதிகூறப்பட்டது? அவர்களுக்கு என்ன வசதி செய்து தரப்பட்டது? ஆனால் இது போன்ற தனி மனிதருடைய பிரச்சினைகளுக்கு அவருடைய நூலில் எவ்வித பதிலும் இல்லை. இருப்பதைக்கொண்டு நாம் திருப்தி அடைய வேண்டியதுதான். நூலாசிரியர் அருள்கூர்ந்து அளிக்கும் விநோத வருணனைகளில் நாம் சுவை காணவேண்டியவர்களாக இருக்கிறோம்.

கற்பனை மெருகேற்றப்பட்ட குப்ளா கானின் புதுத்தோற்றத்தைப் பற்றி அவர் என்ன சொல்லுகிறார் என்பதை முதற்கண் எடுத்துக்கொள்வோம். அவருடைய முகநிறம் வெண்மையும் சிவப்பும் கலந்தது. ஒருவகை மங்கலான தந்த வண்ணத்தில் இலேசான சிவப்பு கலந்தது அவரது கன்னத்தெலும்புப் பகுதிகள். சமவெளியில் வாழும் மங்கோலியரின் சிறப்பியல்பு இது. அவருடைய கரிய கண்கள் சிறப்பு வாய்ந்தவை. எடுப்பான மூக்கு, அவருடைய முகத்தில் நன்றாகப் பொருந்தியிருந்தது. இயல்பான உயரமும் அமைப்பான உறுப்புக்களும் உள்ளவர். இந்நூலில் வரையப்பட்டுள்ள அவரு

டைய உருவத்தை ஒப்புநோக்கி இவ்வருணனையை நிரப்பிக் கொள்ளலாம். இவ்வுருவம் அவருடைய உயிர்த்தோற்றத்தை ஒட்டி வரையப்பட்டதென்று கருதப்படுகிறது. இதில் அவருடைய சிறிய துருதுருவென்ற கண்களேப் பார்க்கின்ருேம். அவை தன் முன்னிலேயில் நடைபெறுகின்ற ஏதோ ஒன்றை மிகுந்த அக்கறையுடன் கூர்ந்து கவனிப்பதுபோல் காணப்படுகின்றன. அதில் காட்டப்பட்டுள்ள பெரிய காதுகள் அவர் எதையோ கேட்டுக்கொண்டிருப்பதை நமக்குக் குறிப்பாக உணர்த்துவதற்குத்தான் போலும். ஏதோ ஒன்றை அவர் ஆவலுடன் பாராட்டுவதை இது உறுதிப்படுத்துகிறது. அவருடைய பார்வையில் ஊடுருவிப் பார்க்கும் தன்மையுடன் கண்ணிமைத்தலும் காணப்படுகிறது. அடுத்த கணத்தில் அவர் புன்முறுவல் பூத்துக் கேலி செய்யப்போவதை எவரும் ஊகிக்கலாம். அவர் முகத்தின் கீழ்ப்பகுதி பயங்கரத் தோற்றம் கொண்டது. அவருடைய தாடை விசாலமானது. கனத்த, கறுத்த மீசைகளுக்கடியில் உள்ள வாயும், உத்தரவுகளே அள்ளி வீசும் இயந்திரம் போல் தோன்றுகிறது.

இவரிடத்தில் மார்க்கோவிற்கு எல்லேயற்ற மதிப்பு உண்டு. 'இன்ருே இதற்கு முன்போ இவரைப் போன்ற பெருந்தலேவர் உலகத்தில் இருந்ததில்லே' என்றுஆசிரியர் எழுதுகிருர். அன்று வாழ்ந்தவர்களுள் அவர் ஒருவரே சேனே, நிலப்பரப்பு, நிதி ஆகியவற்றைப் பொறுத்த வரை மிகவும் பலம் பொருந்தியவர் என்பதில் ஐயமில்லே. ஏனெனில், அவர் காலத்திற்கு முன்போ பின்போ எவரும் உலகத்தின் அவ்வளவு பெரும் பகுதியை வெல்லக்கூடிய சேனேகளுக்குத் தலேமை தாங்கியதில்லே. புகழொளி வீசும் அச்சிம்மாசனத்தில் அவருக்கு முன்போ பின்போ வாழ்ந்த சீனச்சக்கரவர்த்திகளேப் போல ஒருகால் அவர் வாரி இறைத்துச் செலவழிக்காமல் இருந்திருந்தாலும், ஐரோப்பிய மன்னர்களேக்

காட்டிலும் பெருமளவில் பொருளைச் செலவு செய்து தான் வாழ்ந்திருக்கிறார். தனி மனிதர் என்ற முறையிலும் எக்காலத்தும் எந்த மன்னரைக்காட்டிலும் அவர் சிறப்பு மிக்கவர் என்பது மார்க்கோவின் கருத்து. அவர் தைரியமும், நேர்மையும், தாராள மனப்பான்மையும் உடையவர் என்று கூறினாரே யன்றி, அறிவிலோ நீதி நெறியிலோ என்ன சிறப்பியல்புகளைப் பெற்றிருந்தார் என்பதை ஆசிரியர் கூறவில்லை. அவருடன் ஒத்த காலத்தவரான வேறு சிலரும் குப்ளா கானைப் பற்றி இதே உத்சாகங் கொழிக்கும் முறையில் எழுதியிருக்கின்றனர். பாரசீக வரலாற்றாசிரியரான வஸ்ஸாப் கூறுகிறார், 'அவருடைய கீர்த்தி வாய்ந்த செயல்கள், கட்டளைகள், முடிவுகள், நீதி, பரந்த மதிநுட்பம், தீர்ப்பில் செம்மை, ஆட்சி முறையில் மேலான ஆற்றல் இவற்றையெல்லாம் பற்றி வெளிநாடுகளில் பரவியுள்ள கதைகள், உரோமாபுரியின் சீசர்களைப் பற்றி வரலாறு கூறுவதையெல்லாம் மிஞ்சிவிட்டன' என்று கூறுகிறார். அவருடைய வம்சம் வீழ்ச்சியுற்ற பின்னர் உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பெற்ற சீன வரலாற்றாசிரியர்கள் அவ்வம்ச வரலாற்றைத் தொகுத்தனர். சீனர்கள் என்ற முறையில் அவர்கள் தங்களை அடக்கியாண்ட கண்ணியமற்ற ஒருவன் என்று அவரைக் கருதிய போதிலும், அதிகாரபூர்வமான வரலாற்றின் கூற்றுப் படி 'எக்காலத்திலும் வாழ்ந்த பெருமை மிக்க அரச குலத்தவருள் குப்ளா கான் ஒருவர் என்பதை உறுதியாகக் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது. அவருடைய வெற்றிகளுக்குக் காரணம், தனது அலுவலர்களைத் தேர்ந்தெடுப்பதில் அவருக்கிருந்த விவேகமும், அவர்களைத் தலைமை தாங்கி நடத்திச்சென்றதுமாகும். இலக்கியத்தைப் பயின்றதோடு, அத்துறையிலுள்ள பேராசிரியர்களை அவர் ஆதரித்து வந்தார். உண்மையிலேயே அவர் தனது குடிமக்களை நேசித்தார். குப்ளா

கானுடைய பண்பாடு பற்றி மார்க்கோ போலோ குறிப்பிடாததற்குக் காரணம், முன்பு கூறியதுபோல், அவருக்கே பண்பாடு என்பது இல்லாமையால் அதை அவர் புரிந்துகொள்ள முடியாதவராக இருந்தார் என்பதே ஆகும்.

ஒவ்வொரு ஆகஸ்டு மாதம் இருபத்தெட்டாம் நாளன்று ஷாங்-டுவில் உள்ள கோடை அரண்மனையை விட்டுப் பீகிங்கிற்குச் செல்வது குப்ளா கானுடைய வழக்கம். போலோக்கள் மூவரும் அவருடன் சென்றனர் என்பதை நாம் தாராளமாக நம்பலாம். புறப்படுகின்ற அன்று காகானுடைய பெரும் வெண்பொலிக்குதிரைகளின் பால் முழுவதையும் நிலத்தில் உலவும் ஆவிகளுக்கு நிவேதனம் செய்யும் வகையில் பூமியில் தெளிப்பார்கள் என்பதை மார்க்கோ குறிப்பிடுகிறார். இத்தகைய குதிரைகள் ஆயிரக் கணக்கில் இருந்தன. குப்ளா கான் உண்ணும் போது அந்தப் பால் தேவைப்படுவதால் அக்குதிரைகள் அனைத்தும் பீகிங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டன. பெருமளவில் இடம் பெயர்ந்து செல்லும் மாந்தரும் பிராணிகளும் அடங்கிய சக்கரவர்த்தியின் பரிவாரத்தில் இவையும் ஒரு பகுதியாக அமைந்தன. போருக்குச் செல்லும் போதும், பெரும்பாலும் வேட்டையாடும் போதும், செய்வது போலவே இப்போதும் நான்கு யானைகளின் முதுகின் மீது பொருத்தப்பெற்ற மரத்தினலான ஒரு பெரும் அறையில் குப்ளா கான் பிரயாணம் செய்திருக்கக் கூடும். ஏனெனில் அவருக்கு வயது அறுபது. மேலும் முதிர்ந்த வாத ரோகம் வேறு. அவரைப் பின் தொடரும் மங்கோலிய அலுவலர்கள் குறித்துப் போலோ தெளிவற்ற சிறு குறிப்பு ஒன்றைத் தருகிறார். அதாவது ஒவ்வொருவர் தலைக்கும் உயரே ஒரு குடை பிடிக்கப்பட்டிருந்தது. இந்திய வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்திலிருந்து ஒருவரின் தனிச்சிறப்பைக்

காட்டும் ஒரு மிகப் பழைய அறிகுறியாக இது இருந்து வருகிறது.

போலோவுக்குப் பிற்காலத்தில் வந்த பல யாத்திரிகர்களைப்போலவே போலோவும் பீகிங்கைக் கண்டதும் வியப்படைந்தார். இன்று இருக்கும் அதே இடத்தில் தான் குப்ளா கான் காலத்திலும் பீகிங் நகரம் இருந்தது. நகரத்தின் பரப்பு இன்று தெற்கே பரவியிருப்பதைக் காட்டிலும் வடக்கே சற்று அதிகமாகவே பரவியிருந்த போதிலும் ஏறத்தாழ இன்றுள்ள பரப்புத்தான் அன்றும். நகர அமைப்பின் முக்கிய கூறுகளைப் போலோ விவரிக்கிறார். நடுப்பகுதியைச் சீனர்கள் பிரதான உட்பகுதி அல்லது 'இந்திரநீல நகரம்' என அழைத்தனர். அந்நகரத்திற்குள் எல்லோரும் நுழைய இயலாது. அங்குதான் சக்கரவர்த்தியின் அரண்மனை, கூடங்கள், கூடாரங்கள், நூல் நிலையம், அலுவலகங்கள், நிதிக் களஞ்சியங்கள், பூங்காக்கள் ஆகியவை எல்லாம் அமைந்திருந்தன. இவ்வுள்நகரத்தைச் சுற்றி மதில். இதைச் சூழ்ந்து அரசாங்கத்தைச் சாராத ஏனையோரின் நகர்ப்பகுதி இருந்தது. ஐரோப்பிய நகரங்கள்போல் அல்லாமல் இவ்விரு பகுதிகளின் அமைப்பு முழுதும் வேறு வகையானவை. ஏனெனில், ஐரோப்பிய நகரங்கள் புதிதாக வருவோருக்குத் திக்குத்தடுமாற்றத்தினால் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடிய வளைந்து செல்லும் குறுகிய தெருக்களைக் கொண்டவை. பீகிங்கில் உள்ள வீதிகளோவெனில் அப்படியின்றி அகலமாகவும் நேராகவும் இருந்தன. இவற்றுள் சில சதுரங்க மனைபோல ஒன்றுக்கொன்று நேர்ச்சமகோடுகள் போலவும் வேறு சில நேர்க்கோண வடிவிலும் அமைந்திருந்தன என்று மார்க்கோ போலோ கூறுகிறார். முக்கிய வீடுகளின் விசாலமான பரப்பையும், பெரிய முற்றங்களையும் வீட்டை யொட்டிய தோட்டங்களையும் அவர் குறிப்பிடுகிறார். முழு நகரத்தின் சுற்றளவு இருபத்து நான்கு

மைல். நகரத்தின் உட்புற மதில் வெளிப்புற மதில் இரண்டுமே, முப்பதடி உயரமும், அடிப்பாகம் முப்பதடி கனமும் உடையன. கனத்த வாயில்கள், ஒவ்வொரு வாயிலின் மேலுள்ள தூபி, விசாலமான சிம்மாசன அறைகள், சுற்றுப்புறத் தளத்தைவிடச் சில அடிகள் உயரத்தில் உள்ள அடித்தளம், அரண்மனை விமானத்தின் மீதுள்ள பொன்னிறமான மஞ்சள் ஓடுகள், உட்புறங்களை அலங்கரிக்கும் செதுக்கப்பட்ட உருவங்கள், சித்திரங்கள் இவை அனைத்தையும் போலோ விவரிக்கிறார். உட்புறம் அமைந்துள்ள அரண்மனையின் வடக்கு வாயிலின் வெளிப்புறத்தே, பிற்காலத்தில் கோல் ஹில் (Coal Hill) என்று வழங்கப்பட்ட குன்றைப் பற்றியும் குறிப்பிடுகிறார். அது ஒரு செயற்கை மேடு. அடுத்துப் பட்டத்திற்கு வந்த சீன அரச வம்சத்துக் கடைசி சக்கரவர்த்தியான மிங் என்பவர், சமவெளியினின்றும் வந்த மற்றொரு காட்டுமிராண்டிக் கூட்டம் பீகிங்கைக் கைப்பற்றியபோது, அங்குத்தான் தன்னையே தூக்கிலிட்டுக் கொண்டார்.

அரண்மனையிலுள்ளோரின் வாழ்க்கை முறையைப் பற்றிச் சில சுவையான செய்திகள் தரப்பட்டிருக்கின்றன. காகானுக்கு நான்கு மனைவியர் உண்டு. ஒவ்வொருவருக்கும் தனியே பெயரும் பட்டமும் உண்டு. முந்நூறு பணிப்பெண்கள் அடங்கிய மிகப் பெரிய ஆடம்பரமான தனித்தனி அரண்மனைகளும் உண்டு. பணியாளர்கள், சமையற்காரர்கள், தூதர்கள், குற்றேவல் புரியும் சிறுவர்கள், அலிகள், கன்னியர்கள் இப்படியாக இந்த நான்கு சக்கரவர்த்தினிகளின் அரண்மனைகளில் நாற்பதாயிரம் மக்கள் இருந்தனர். இச் சக்கரவர்த்தினிகள் அல்லாமல், காகானுக்கு எண்ணற்ற காமக்கிழத்தியரும் உண்டு. அவர்களுடைய தரம், ஊதியம் இவையெல்லாம் சட்டதிட்டங்களுக்கு உட்

பட்டவை. இவர்கள் முதலிடம் வகிக்கும் நான்கு மனைவியருக்கும் அடங்கியவர்கள்.

சக்கரவர்த்தியின் பாதுகாவலர், நான்கு தலைவர்களுக்குக் கீழடங்கிய பத்தாயிரம் குதிரைவீரப்படையினர் ஆவர். மூன்று நாட்களுக்கொருமுறை இவர்களில் நான்கில் ஒரு பகுதியினர் பணி புரிவார்கள். காகான் எவரிடத்தும் அஞ்சாதவரானதால் தனது குடும்பத்தினரைக் காப்பதற்காக அன்றி, அரசாங்கக் காரணங்களுக்காகவே இப்படையை வைத்திருந்ததாக மார்க்கோ போலோ வலிந்து விளக்கங் கூறுகிறார்.

அடுத்தபடியாக அரசாங்க விருந்து வருணிக்கப்படுகிறது. இம்மாதிரி நிகழ்ச்சிகளின் போது ஆறாயிரம் விருந்தினர்கள் உட்காரக்கூடிய ஒரு பெரிய கூடத்தின் வடகோடியில் காகானுடைய உணவு மேஜை இருக்கும். மேடையின் மீது போடப்பட்டுள்ள மேஜையினருகே, நல்லதிருஷ்டத்தை நல்கும் தெற்குத்திசையை நோக்கி அவர் உட்கார்ந்திருப்பார். அவருக்கருகில் நான்கு சக்கரவர்த்திகளுக்கிடையே மூத்தவள் உட்கார்ந்திருப்பாள். வலது புறத்தில் சக்கரவர்த்தியின் இனத்தவரான குமாரர்கள், உடன்பிறந்தோரின் புத்திரர்கள், தாய் தந்தையரின் உடன் பிறந்தோர், அவர்கள் குமாரர்கள், ஆகியோர் அமர்ந்திருப்பர். அவர்களுக்கான பல மேஜைகளும் தாழ்வான தளத்தில் போடப்பட்டிருக்கும். அவருக்கு முன்பு இன்னும் சற்றுத் தாழ்ந்த தளத்தில் பிரபுக்கள் உட்கார்ந்திருந்தனர். சற்றுத் தொலைவில் போர்வீரர்களும் சேனைத்தலைவர்களும் மேஜைக்கருகே அல்லாமல் கம்பளங்களின் மீது உட்கார்ந்திருப்பர். கூடத்திற்கு வெளியிலிருக்கும் மக்கட் கூட்டம் எட்டிப்பார்க்கவும் வேடிக்கை பார்க்கவும் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தியாவிலோ அல்லது பண்டைச் சீன அரசவையிலோ இருப்பதுபோல் இத்தகைய அரசாங்க விருந்து

ஆண்களுக்கு மட்டும் உரிய நிகழ்ச்சி அல்ல. இம்மாதிரி சமயங்களில் அந்த நாடுகளில் மேல் நிலையிலுள்ள சீமாட்டிகள் வருவதில்லை. அங்குள்ள பெண்பாலரில் பாடகிகளும் நாட்டியக்காரிகளும்தாம் இருப்பார்கள். இங்கோவெனில் சக்கரவர்த்தினிகளைத் தவிர ஒவ்வொரு பிரபுவின் மனைவியும் இருப்பாள். ஆனால் அவர்கள் ஆண்களோடு ஒரே மேஜையில் உட்காரமாட்டார்கள்.

காகானுடைய மேஜைக்கருகே செதுக்கப்பட்ட மிருகங்களின் உருவங்களால் அலங்கரிக்கப்பட்ட பலகை ஒன்றுண்டு. அதன் மீது மதுபானம் அருந்துவதற்குரிய பொற்பாத்திரங்களும் பெருமளவில் குடிவகைகளும் வைக்கப்பட்டிருக்கும். இரண்டு விருந்தினர்களுக் கிடையே ஒரு மது நிரப்பப்பட்ட ஜாடி வைக்கப்பட்டி ருக்கும். அதிலிருந்து தங்கள் பொற்கிண்ணங்களை அவர்கள் நிரப்பிக்கொள்வார்கள். மதுவகைகளைத் தவிர புளிப்பேறிய பாலும் கிடைக்கும். எல்லோரும் தத்தமக்கு விருப்பமுள்ளவற்றைப் பெற்றுக்கொண்டார் களா, என்பதை உறுதிசெய்துகொள்ளும் வகையில் மனதுக்கினிய தலைமைப் பணியாளர்கள் அங்குமிங்கும் சென்றுகொண்டிருப்பார்கள்.

காகானுக்கு உணவு பரிமாறுவோர் வாயையும் மூக்கையும் பட்டுக் குட்டையால் மூடிக்கொள்வார்கள். அப்போதுதானே சக்கரவர்த்தியின் உணவோ பானமோ அவர்களுடைய மூச்சுக் காற்றினால் மாசு படாமல் இருக்கும். எப்போதெல்லாம் மன்னர் தனது கோப்பை யைக் குடிப்பதற்கு ஏந்துகிறாரோ அப்போதெல்லாம் அவருடைய வாத்தியங்கள் குறிப்பிட்ட ஒரு ராகத்தை வாசிக்கும். பிரபுக்கள் எல்லோரும் அப்போது மண்டி யிடவேண்டும் என்பதற்கு இது ஓர் அறிகுறி. மன்னர் குடித்து முடிக்கும்வரை அவர்கள் அப்படியே இருக்க வேண்டும்.

எல்லா வகையான உணவும் மிகவும் நிறைந்த

அளவில் இருந்திருக்கக்கூடுமென்று வாசகர்கள் எளிதில் எண்ணிப்பார்க்க முடியுமாதலின், அவற்றைப் பற்றித் தான் எதையும் சொல்லப்போவதில்லை என்று மார்க்கோ போலோ கூறுகிறார். வழக்கம் போல் பல வகையான பொழுதுபோக்குக்களுக்கும் நிகழ்ச்சியில் இடமளிக்கப்பட்டிருந்தன. நடிகர்கள், மாயவித்தைக் காரர்கள், கழைக்கூத்தாடிகள், பாடகர்கள் அனைவரும் இருந்தனர். சிலருடைய செயல்கள் ஆரவாரச்சிரிப்பை எழுப்பும். சங்கிலியால் பிணைக்கப்பட்ட சிங்கம் கூடத் திற்குக் கொண்டுவரப்படுவது உள்ளத்தைத் தொடும் ஒரு நிகழ்ச்சி. அது மிகவும் சாது. காகானுக்கு மரியாதை செலுத்திவிட்டு அவர் காலடியில் படுத்துக் கொள்ளும் வண்ணம் அது பழக்கப்பட்டிருந்தது. பிறகு அதன் சங்கிலியை அவர்கள் கழற்றிவிடுவார்கள். எஜமானுடைய நாற்காலிக்குப் பக்கத்தில் ஒரு நாய்க் குட்டியைப்போல் அது அமைதியாக இருக்கும்.

பிப்ரவரி மாதம் முதல் வாரத்தில் நிகழும் வருடப் பிறப்பின்போதும், காகானுடைய பிறந்த நாளாகிற செப்டம்பர் இருபத்தெட்டாம் தேதியிலுமாக ஆண்டுக் கிருமுறை முக்கிய விருந்துகள் நடைபெற்றன. இவ் விரண்டு விருந்துகளும் நடைபெறுவதற்கு முன்பு மன்ன ருடைய சபை கூடும். அப்போது அடிமைப்பட்ட சிற்றரசர்கள் மன்னருக்குக் காணிக்கை செலுத்து வார்கள். பிரபுக்கள் அணிந்துள்ள ஆடைகள் மிகமிகப் பகட்டானவை. மணியும் இரத்தினமும் இழைக்கப் பெற்ற ஒருவருடைய சரிகை ஆடைகள் பத்தாயிரம் பவுன் மதிக்கப்பெறும். சபையில் வீற்றிருக்கும்போது காகான் தனது ஐயாயிரம் யானைகளையும் பவனிவரச் செய்வார். ஒவ்வொரு யானையின் மீதும் பளிச்சிடும் பூவேலை செய்யப்பட்ட ஆடைகள் போடப்பட்டிருக்கும். விருந்தில் உபயோகிக்கப்படும் தட்டு வைக்கப்பட்டுள்ள பெட்டகத்தை ஒவ்வொரு யானையும் தாங்கிச் செல்லும்.

உணவுப் பண்டங்களையும் பான வகைகளையும் தாங்கிச் செல்லும் பல ஒட்டகங்கள் சித்திர ஆடைகளால் அணி செய்யப்பெற்று மன்னரின் முன்னிலையில் கொண்டு வரப்படும்.

புத்தாண்டில் நிகழும் அரசாங்க விருந்தில் வெண்மையான உடுப்புக்களை அணிவது தான் நியதி. ஆனால் மற்ற ஒவ்வொரு மகத்தான விருந்தின்போதும் வெவ்வேறு விதமான வண்ண ஆடைகள் உபயோகிக்கப்பட்டன. இத்தகைய விருந்துகள் பதின்மூன்று ஆகும். ஒருவர் செய்த சேவைகளுக்கு வெகுமதியளிக்கும் வகையில் அரசர் அபிமானத்தைக் குறிக்கும் ஆடைகளை வழங்குவதென்பது நீண்ட காலமாகவே இருந்துவரும் கீழை நாடுகளின் பழக்கம். காகான் அவர்களால் பன்னிரண்டாயிரத்துக்குக் குறையாத அத்தகைய ஆடைகள் வழங்கப்பட்டுள்ளன. சொல்லப்போனால் வெகுமதி பெற்ற ஒவ்வொருவரும் பதின்மூன்று வெவ்வேறு வகை வண்ண ஆடைகளைப் பெற்றனர். ஆகையால் வழங்கப்பட்ட மொத்த ஆடைகள் மேற்கூறப்பட்ட எண்ணிக்கையைப்போல் பதின்மூன்று மடங்கு எனலாம். ஆடைகளே அன்றி மிருதுவான தோலால் ஆன சவாரிக்கேற்ற பாதரட்சைகளும் தங்க அரைக்கச்சைகளும் வெகுமதிகளாக அளிக்கப்பட்டன. இதற்கான செலவோ மிக விரிவானது என்று போலோ கூறுகிறார். ஆனால் ஒரே வண்ண ஆடைகளை அணிந்துள்ள மாபெரும் மக்கட்குழு முழுவதும் விளைவிக்கின்ற வியப்பூட்டும் காட்சியை நோக்கும்போது அச்செலவுக்கு அது ஈடு கட்டக்கூடியதாகவே இருக்கும். விருந்தினரும் மிக மேலான முறையில் நடந்துகொள்ளவேண்டும். கம்பளங்களை எவரும் அழுக்காக்கக்கூடாது. ஒவ்வொருவரும் தனித்தனியே எச்சில் துப்பும் சிறிய பாத்திரத்தை

ஏந்திச் செல்வர். கதவருகில் புழுதி படிந்த மிதியடிகளைக் கழற்றிவிட்டு வெள்ளைத் தோலினாலான தூய மிதியடிகளை அணிந்துகொள்ளவேண்டும்.

விருந்திற்கழைக்கப்பட்ட பொதுமக்களடங்கிய இத்தகைய வைபவங்களில் அரண்மனை எப்படி இருந்தது என்பதைப்பற்றிய நூலாசிரியரின் வருணனையை இது காறும் பார்த்தோம். அக்காலத்திய எந்த அரசாங்க அரண்மனையிலும் அரசனும் அரசியும் மேடையிலமர்ந்து உண்பதையும், பிரபுக்கள் கீழ்த்தளத்தில் அமர்ந்திருப்பதையும், பொதுமக்கள் வேடிக்கை பார்ப்பதையும் எவரும் கண்டிருக்கலாம். ஆனால் பீகிங்கில் இருந்ததுபோல அத்தனைப் பெருவாரியான அளவில் வேறெங்கும் விநோதப் பொழுதுபோக்குகள் இருந்திருக்க முடியாது.

எட்டாம் அத்தியாயம்

# மார்க்கோ போலோவின் வாழ்க்கைத் தொடக்கம்

வியாபார சம்பந்தமான பல்வேறு செயல்களில் அப்போது துணிந்து ஈடுபட்டிருந்த தனது தந்தைக்கும் சிற்றப்பனுக்கும் உதவியாளனாக இருப்பதை விடுத்துச் சக்கரவர்த்தியின் கீழ், தான் வேலை பார்க்கத் தொடங்கியதாக மார்க்கோ போலோ தனது நூலின் பதினைந்தாவது அத்தியாயத்தில் சுருக்கமாக விளக்குகிறார். சீனநாட்டு வேந்தர்கள், பல நூற்றாண்டுகளாகவே, ஆசியாவில் யாத்திரை செய்யும் ஐரோப்பியருக்குப் பொதுவாகப் போர்வீரர்களாகவோ மருத்துவர்களாகவோதான் வேலை தந்து வந்தார்கள். சீனா இவ்விதிக்கு விலக்கு. சீனச்சக்கரவர்த்திகள் எப்போதாவது சில சமயம் ஐரோப்பியரை வேலைக்கு அமர்த்தினாலும், பொதுவாக அவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்வது பற்றி மிகவும் யோசனை செய்வார்கள். காகான் சீன நாட்டவராக இருந்து சக்கரவர்த்தி ஆனவர் அல்லர். சீன நாட்டிற்கு அவர் சக்கரவர்த்தி. மேலும் சீனா அவருடைய இராஜ்யத்தில் ஒரு சிறு பகுதிதான். டான்யூப் நதி வரைக்கும் பரவியுள்ள சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தி ஆனவராதலால் எல்லா நாட்டவரையும் வேலைக்கமர்த்துவது அவருக்குப் பழக்கம். உயர்ந்த அரசாட்சிப் பதவிகளிலோ தலைமைக் காரியாலயப்பதவிகளிலோ திறம்படப் பணியாற்றுவதற்கு வேண்டிய மேலான கல்வியறிவு படைத்த மங்கோலியர்கள் வெகு சிலரே இருந்தனர். சீன நாட்டினரை உயரலுவலக ஊழியர்களாக நியமிப்பது பற்றிக் குப்ளாகான் அஞ்சினார். ஆகவே சீன நாட்டின் வரலாற்றிலேயே,

அக்காலத்தில் வெளிநாட்டினர் ஒருவர், போதிய அளவு தகுதிகள் பெற்றவராக இருந்தால், எளிதில் நல்ல அரசாங்க உத்தியோகத்தைப் பெறக்கூடியவராக இருந்தார்.

அரண்மனையில் தங்க ஆரம்பித்தவுடன் மார்க்கோ போலோ மங்கோலிய மொழியில் முழுத் திறமை பெறுவதில் ஈடுபடத் தொடங்கினார். அதில் தேர்ச்சி பெற்றவுடன் பிற மொழிகளையும் கற்றார். பல மொழிகளைப் பேசவும், நான்கு வகை எழுத்துக்களைப் படிக்கவும் கற்றுக்கொண்டதாக அவர் கூறுகிறார். அவை என்னென்ன என்பது கூறப்படவில்லை. ஆனால் அவற்றுள் அராபிய மொழி அல்லது பாரசீக மொழி, வீகர், திபேத்திய மொழி ஆகியவை அடங்கியிருக்கக் கூடும். சீன மொழியில் ஓரளவு அவர் பேசக்கூடியவராக இருந்திருக்கலாம். ஆனால் கருத்தை உணர்த்தும் சீன எழுத்தை அவர் நன்றாக ஆளக் கற்றிருப்பார் என்று கருதமுடியாது. பிரபுக்கள் மத்தியில் போலோக்கள் அரண்மனையில் வாழ்ந்து வந்ததாகச் சொல்லப்படுகிறது. குப்ளாகானின் நேர் பார்வையில் அவர்கள் இருந்ததால் மார்க்கோ போலோவின் மொழிப்பயிற்சி அவருடைய கவனத்திற்கு வந்தது. மொழி இயலில் அவருக்கிருந்த இயற்கைத் திறனுடன், மார்க்கோ இயல்பாகவே கூர்ந்து நோக்குபவராகவும் எச்சரிக்கையுள்ளவராகவும் இருந்தார். இவ்விரண்டு தகுதிகளுமே ராஜதந்திரம் சம்பந்தப்பட்ட வேலைகளுக்கு வேண்டியவை. திறமைசாலியான வெளிநாட்டினரை எதிர்பார்த்துக் கொண்டிருந்த குப்ளாகான் இந்த இளைஞருடைய திறமையைக் கண்டு தனது பாராட்டுதலைத் தெரிவிக்கும் வகையில் அவரைப் பிரிவி கௌன்சிலில் இரண்டாவது வகுப்புக் கமிஷனராக நியமித்தார். இந்நிகழ்ச்சி அவர் பீகிங்கிற்கு வந்து சேர்ந்த ஈராண்டுகள் கழித்து 1277-இல் நடந்தது. பிரிவி கௌன்சில் பதவி அவர்

வியாபாரத்தில் ஈடுபடுவதைத் தடை செய்யவில்லை. அந்த முறையில் எல்லா உத்தியோகஸ்தர்களுமே கூடுதலாகப் பொருளீட்டினூர்கள். எனினும் பொருளீட்டுவதோடன்றி வேறு சில எதிர்கால நலன்களைத் தரும் வகையில் அப்பதவி அவரை ஓர் உயரலுவலக ஊழியராக மாற்றியதுடன் அவருடைய முக்கியத்துவத்தை மிகவும் உயர்த்தியது. அவரது புதிய நியமனம் காகானுடைய பரந்த சாம்ராஜ்யத்தில் பல இடங்களுக்கும் பிரயாணம் செய்வதற்கேதுவாக நேராதிருக்குமாஞல், ஆசியாவைப் பற்றிய வருணனையை அவர் எழுத முடியாமற் போயிருக்கும்.

மங்கோலிய வெற்றி வீரர்களின் கீழ்ச் சீன அரசாட்சி எத்தகையதாக இருந்தது என்பதற்கோர் எடுத்துக் காட்டாக, அக்காலத்தில் காகானின் அன்புக்குப் பாத்திரரான அமைச்சர் அகமதைப்பற்றிய ஒரு வழக்கைக் குறிப்பிடுகிறூர். தங்கள் தாய்நாட்டை விட்டு முதன் முறை பிரயாணம் செய்தபோது எந்தப் பொக்காரர் பகுதியில் போலோ சகோதரர்கள் நீண்ட காலம் தங்கியிருந்தார்களோ அப்பகுதியில் தோன்றியவர் இவர். இனத்தால் ஒரு வகையில் துருக்கியரான இவர் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர். முதன் முதல் சக்கரவர்த்தியின் மனைவியருள் ஒருவருக்கு நிதி ஆலோசகராக இருந்த இவர், அவ்வம்மையாரால் குப்ளா கானுக்குச் சிபாரிசு செய்யப்பட்டு மிக விரைவில் சக்கரவர்த்தியின் அன்புக்குப் பாத்திரராகிவிட்டார். காகானுடைய நம்பிக்கையை முழுதும் பெற்றுவிட்ட அவர் அதைத் தவருகப் பயன்படுத்தத் தொடங்கினூர். 'எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தோ, அதிகாரமோ பெற்றவராயினும் எவரும் அவரைக் கண்டு அஞ்சினர்' என்று போலோ எழுதுகிறூர். 'காகானிடம் அமைச்சரால் தீவிரக் குற்றம் புரிந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் தங்களை நியாய முறையில் பாதுகாத்துக்கொள்ள

சாட்சிகளைப் பெறமுடியாது. ஏனெனில் வல்லமை மிக்க அமைச்சரின் விருப்பங்களுக்கு மாறாக எந்த சாட்சியும் சாட்சிகூறும் தைரியம் படைத்தவர் அல்லர். இத்தகைய நீதியற்ற முறையில் எத்தனையோ குற்ற மற்ற மக்கள் கொலை செய்யப்பட்டனர்'. அவருக்கு எதிராகச் செய்யப்படும் எந்த முறையீட்டையும் காகான் காது கொடுத்துக் கேட்கமாட்டார். அவரு டைய வேண்டுகோளைப் பெரும்பாலும் மன்னர் தள்ளு படி செய்ததில்லை. ஆகவே அகமத், மன்னரின் சித்தத்தை மாந்திரிகத்தின் மூலம் செயலிழக்கச் செய்துவிட்டார் என்று கருதப்பட்டது.

பிரிவி கௌன்சிலில் மார்க்கோ போலோ பதவி யேற்ற சிறிது காலத்திற்கெல்லாம் அகமதைக் கொலை செய்யச் சதியாலோசனை செய்யப்பட்டது. இதற்குத் தலைவர்கள், சீனர்களான வாங்-கூ, சாங்-இ என்ற இருவர். அவர்களுடைய கருத்தைத் தான் புரிந்து கொண்டதாகப் போலோ காட்டுகிறார். வெளி நாட்டினரை உயர்ந்த பதவியில் வைத்துக்கொள்வதே நல்லதல்ல. மேலும் அவர்கள் சரியான முறையில் நடந்துகொள்ளாவிட்டால் அதைப் பொறுத்துக் கொள்ள முடியாது. அப்படித் தவறு நிகழும்போது மங்கோலியரின் ஆட்சி பழிக்கிடமாகி வெட்கக்கேடான நிலைக்கு வந்துவிடுகிறது. மார்க்கோ போலோ அரசியல் அலுவலரான வெளிநாட்டவர் என்பதையும், தனது எஜமானரான குப்ளாகானிடம் அவர் கொண்டுள்ள உயர்ந்த பெருமதிப்பையும் நினைவுபடுத்திக் கொள்வோ மானால் அவர் இந்த அளவு குறிப்பாக உணர்த்தியதே வியப்புக்குரியதுதான்.

குப்ளாகான் வெகுதூரத்திற்கப்பால் ஷாங்-டு என்னும் கோடை அரண்மனையில் இருந்தபோது வாங்-கூ, சாங்-இ ஆகிய இருவரும் அது தங்களுக்குத் தக்க ஒரு வாய்ப்பு என்பதைக் கண்டார்கள். இது

போன்ற சமயங்களில் தனக்குப் பதிலாகத் தம்மை யடுத்துப் பட்டத்திற்குரியவரான இளவரசர் சிங்காம் என்பவரை விட்டுச் செல்வது மன்னருக்கு வழக்கம். ஒரு நாள் இளவரசர் வேட்டையாடுவதற்கோ அல்லது அது போன்ற ஏதோ ஒரு காரியமாகவோ, பீகிங்கை விட்டு வெளியே சென்றிருந்த போது, இரு சீன தேசீய வாதிகளும் கீழ்க்கண்ட சதியை உருவாக்கினர். இளவரசர் சிங்காம் எதிர்பாராது நகரத்திற்குத் திரும்பி வந்துவிட்டதாகப் பாசாங்கு செய்து அவர் பெயரில் அரண்மனைக்கு உடனே திரும்பி வரும்படி அகமதிற்கு உத்தரவு அனுப்பினர். அந்த உத்தரவைப் பெற்றவுடன் அகமதிற்குத் திகைப்பும் ஓரளவு ஐயமும் ஏற்பட்டது. ஏனெனில் இளவரசர் திரும்பியது பற்றித் தனக்கு அறிவிக்க வேண்டிய கடமைப்பட்டவர் களிடமிருந்து அவர் எதையும் கேள்விப்படவில்லை. எனினும் உத்தரவைக் கீழ்ப்படியாமலிருப்பதற்குத் துணிவும் ஏற்படவில்லை. ஏனெனில் இளவரசர் அவர் தந்தையைப் போலல்லாமல், அவருக்கு நண்பரல்லர். ஆகவே, நள்ளிரவாக இருந்தபோதிலும் அவர் அரண் மனைக்குப் புறப்பட்டார். சக்கரவர்த்தியின் மெய்க் காவற் பிரிவின் பொறுப்பை வகிக்கும் மங்கோலியப் படைத்தலைவர் தனது கடமையை ஆற்றுபவராய் அப்போது அரண்மனை வாயிலில் இருந்தார். காலங் கடந்த அந்நேரத்தில் ஒரு மந்திரி அரசர் இருக்கைக்குள் நுழைய விரும்புவது குறித்துத் தனது வியப்பைத் தெரிவித்தார். சிங்காம் தன்னைக் கூப்பிட்டனுப்பியதாக அகமத் விளக்கினார். 'சிங்காமா? அவர் இங்கு இல்லையே' என்று வியப்புடன் கூறினார் படைத்தலைவர். அவர் அவசரமாகத் திரும்பிவிட்டதாக அகமத் சொன்னார். 'எனக்குத் தெரியாமல் அப்படி நடந் திருக்க முடியாதே' என்று படைத்தலைவர் [illegible] கூறினார்.

OFFI E OF THE ...
4702
30 JUN 1975

இருந்தபோதிலும் தொடர்ந்து மேலே செல்வதே நலமென அகமத் எண்ணினர். படைத்தலைவரும் தெளிவற்ற ஐயம் கொண்டவராய்ச் சில போர்வீரர் களுடன் பின் தொடர்ந்தார். வாங்-சூவின் கையாட்கள் அகமதைச் சந்தித்து அவரை ஒரு தனிக் கூடத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கே ஒளி மங்கலாக இருந்ததால் மேடையின்மீதமர்ந்திருந்த ஒருவரை இளவரசர் சிங்காம் என்றே அவர் கருதினர். அவரடிபணிந்து உத்தரவுக்குக் காத்திருந்தார். அப்படி மண்டியிட்டு அமர்ந்திருந்தபோது சாங்-இ, திடீரெனப் பாய்ந்து அவருடைய தலையைத் துண்டித்துவிட்டார். படைத் தலைவரோ வாயிலினருகே நின்றுகொண்டிருந்தார். நடந்ததைக் கவனித்துக் கொண்டிருந்த அவர் ஓர் அம்பை விட்டார். அது வாங்-சூவைத் துளைத்துச்சென்று கொன்றுவிட்டது. சாங்-இ கைது செய்யப்பட்டார். அகமதின் கொலை குப்ளா கானுக்கு அறிவிக்கப் பட்டதும் விசாரணை புரிந்து குற்றவாளியைத் தண்டிக்கு மாறு அவர் உத்தரவிட்டார். சாங்-இ என்பவரும் மற்ற முக்கிய தலைவர்களும் கொலை செய்யப்பட்டனர். பின்னர் கோடை அரண்மனையிலிருந்து திரும்பிவந்ததும் குப்ளாகான், இச்சதித்திட்டத்தின் மூலகாரணத்தைப் பற்றி நுணுகிக் கேட்டறிந்தபோதுதான், முதன் முறை யாக அகமத் எவ்வளவு தீயவன் என்பது அவருக்குப் புலனாயிற்று. இதில் விநோதமான விஷயம் என்ன வென்றால் இது பற்றி வினவப்பட்டவர்களுள் மார்க்கோ போலோவும் ஒருவர். சீன வரலாற்றிலே மார்க்கோ போலோ பிரிவி கௌன்சிலில் நீதி வழங்குவோருக்குத் துணைவராக இருந்தார் என்று குறிப்பிடப்படுகின்றார். அகமத் எப்படித் தன்னிடம் வைக்கப்பட்டுள்ள நம்பிக் கையை அருவருக்கத்தக்க முறையில் தவறாகப் பயன் படுத்தினர் என்பதைக் குப்ளா கானிடம் மார்க்கோ போலோ வெளிப்படையான முறையில் தைரியமாகப்

புலப்படுத்தியதற்காகப் பாராட்டப்பட்டிருக்கிறார். குப்ளாயின் கண்கள் திறக்கப்பட்டுவிட்டன. தான் செய்த தவறுகளுக்கு மாற்றம் காண முயன்றார். அவர் உத்தரவின்பேரில் அகமதின் உடல் மீண்டும் வெளியே எடுக்கப்பட்டது. அவருடைய தலை எல்லோரும் இகழும் வண்ணம் சுவரில் மாட்டப்பட்டது. அவரது உடல் நாய்களிடம் எறியப்பட்டது. அவருடைய மகன் உள்ளிட்ட குடும்பம் அனைத்தும் பூண்டோடு அழிக்கப் பட்டது. ஏராளமான சொத்தும் அரசாங்கத்தால் பறிமுதல் செய்யப்பட்டது. மொத்தத்தில் தீய ஒழுக்கத்தில் தொடர்பு கொண்ட எழுநூற்றுப் பதினான்கு பேர் ஏதோ ஒரு வகையில் தண்டிக்கப்பட்டனர். மார்க்கோ கூறிய உண்மையால் அதிர்ச்சியுற்றதுதான் காகான் இந்தத் தடவை இவ்வளவு கடுமையாக இருந்த தற்குப் பெரும்பாலான காரணம். வெற்றி கொண்ட சீனாவை ஆளுவது எவ்வளவு கடினமானது என்பதை அவர் அறிந்தார். நீதி ஒன்றினால்தான் அது முடியும். தனக்கு வேண்டியவர்கள் இழைக்கும் அநீதியான செயல்கள் அவரை மிகுந்த சங்கடத்திற்குள்ளாக்கின. இதை அவர் உணர்ந்திருக்காவிட்டால் சீன மக்களுடைய நம்பிக்கையை அவர் இழந்திருக்கக்கூடும். குறிப்பாக நிதித்துறையில் அது பெருங் கேடுகளை விளைவித்திருக்கக் கூடும். ஏன், பெருமளவில் கலகத்திலே கூட முடிந் திருக்கும்.

இந்த நிகழ்ச்சிக்குப் பின்னர் மார்க்கோ போலோ மிகுந்த செல்வாக்குப் பெற்றவரானார். இந்த நம்பிக்கையூட்டும் தொடக்கந்தான் பிற்காலத்தில் மேலும் பல அந்தரங்கக் காரியங்களில் அவர் முன்னேறு வதற்குக் காரணமாய் அமைந்தது என்பதைப் பற்றி ஐயம் இல்லை.

ஒன்பதாம் அத்தியாயம்

# காகித நோட்டுகள்

தனி மனிதன் தனது ஆட்சியின் கீழுள்ள அலுவலர்கள் சரியாக நடந்துகொள்ளுகின்றார்களா என்று உறுதிப் படுத்திக்கொள்வது எவ்வளவு கடினம் என்பது பற்றி நூலாசிரியர் தனது கருத்தைக் கடந்த அத்தியாயத்தில் தந்திருக்கிறார். சீன நாட்டைச் சேர்ந்த சீனச் சக்கர வர்த்திகள் அலுவலர்களின் மூலம் ஆட்சி புரிகின்ற ஏகாதிபதிகளாக இருந்தனர் என்பது உண்மை. ஆனால் அவர்களே பொது மக்களின் நலம் கருதித் தணிக்கை யாளர்களைக் கொண்ட ஒரு முறையை ஏகாதிபத்தியத் திற்கு ஒரு தடையாகத் தோற்றுவித்தனர். சக்கர வர்த்திக்கு வேண்டியவராக இருந்தாலுங்கூட அவரால் அலுவலகத்தில் தவறு இழைக்கப்படுவதாகத் தெரிந் தால் சக்கரவர்த்தியிடம் நேரில் சென்று சொல்ல வேண்டியது தணிக்கையாளரின் கடமை. குப்ளா கான் சீன ஆட்சிமுறையின் அம்சங்களாகிற உயர்தர அலுவலர் சேவையையும், நீதி, நிதி ஆகியவை பற்றிய முறைகளையும் ஏற்றுக்கொண்ட போதிலும், தணிக்கை முறையைப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதன் காரணத்தை எவரும் தெரிந்து கொள்ளலாம். சீன ரல்லாதார் எவரும் தணிக்கையாளராகப் பணி யாற்றுதல் இயலாது. ஏனெனில் இப்பதவிக்கு வேண் டப்படுபவை மக்களிடத்தில் அனுதாப உணர்ச்சியும் அவர்களுடைய உள்ளப்பாங்குகளை அறிந்திருத்தலு மாகும். வேறு மொழியைப் பேசிக்கொண்டு வேறு வகையான பழக்க வழக்கங்களைப் பயிலும் பிறநாட்டார் மேற்கூறப்பட்ட இயல்புகளைப் பெற்றிருக்க முடியாது. குப்ளாகான் சீனத் தணிக்கையாளரை நியமித்திருப் பாரேயானால் அது மிகவும் மோசத்துக் கேதுவாய் இருந்

திருக்கலாம். ஏனெனில் பொது மக்களின் ஆதரவோடு கூடிய தணிக்கையாளர்கள் மிக உயர்ந்த அதிகாரியைக் காட்டிலும் மறைமுகமாக மிகுந்த செல்வாக்குப் பெற்ற வர்கள். இருந்தபோதிலும் தணிக்கை முறை இல்லாத ஒரே காரணத்தினுல்தான் அகமதின் தீய நடத்தையால் பொதுமக்களின் நம்பிக்கையை இழக்கும் அபாயத்திற்கு மன்னர் இலக்காக வேண்டியிருந்தது.

ஆயினும் மார்க்கோ போலோ சீனவில் இருந்த காலத்தில் பெரும்பகுதி, சீனர் சீனரல்லாதார் ஆகிய மக்களனைவரின் நம்பிக்கையையும் இயன்ற அளவு குப்ளாகான் பெற்றிருந்தார். அவர் காகித நாணயத்தைப் புழக்கத்தில் விட முடிந்ததென்பதே இவ்வுண்மையை நிரூபிக்கும். தான் கண்ட எல்லாவற்றுள்ளும் இந்தப் பாங்கு நோட்டுகளே போலோவை வியப்பில் ஆழ்த்தின. தங்கத்தை உண்டுபண்ணுவது எப்படி என்பதைக் கண்டுபிடிப்பதில் நினைவுக் கெட்டாத காலந் தொட்டு இரசவாதிகள் தேடிக்கொண்டிருந்த ஓர் இரகசியத்தைக் காகான் ஒரு வழியாகக் கண்டுபிடித்து விட்டார் என்பதாக மார்க்கோ போலோ கூறுகின்றுர். இப்படியாக இவற்றைப் பற்றி வருணிக்கத் தொடங்குகிறுர். இந்தப் பாங்கு நோட்டுகளை உற்பத்தி செய்வதில் இவருக்குச் செலவு ஏதும் இல்லை. அவற்றைக்கொண்டு வேண்டிய அளவு அவர் தங்கத்தை வாங்க முடிந்தது.

இக்காகிதச் செலாவணியைப் பற்றிய கோட்பாடுகளைப் போலோ ஒரு சிறிதும் புரிந்துகொள்ளவில்லை. பாங்கு நோட்டானது நாணயத்தைக் கொடுப்பதாகக் கூறும் உறுதிச் சீட்டுதான் என்பதையும், அத்தகைய நாணயத்தின் பலமில்லையேல் அது தன் பெறுமானத்தை நிலைநிறுத்திக்கொள்ள முடியாது என்பதையும் போலோ உணர்ந்ததாகத் தெரியவில்லை. காகான் தன் வசமுள்ள விலையுயர்ந்த உலோகங்களின் சேமிப்புக்களுக்கு ஈடாகத் தான் நோட்டுகளை வெளியிட்டிருக்கிறுர். இப்படிச்

செய்வதன் மூலம் தன்னை மேலும் பணக்காரராக்கிக் கொள்ள வேண்டும் என்பது அவர் நோக்கமல்ல. இந்த நோட்டுகளைக்கொண்டு அப்படி அவர் செய்து கொள்ளவும் முடியாது. அவருடைய நோக்கம் தன் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்கள் அனைத்திற்கும் ஒரு நிலையான பொதுவான செலாவணியை அளிக்க வேண்டும் என்பதுதான். இதன் பயன் வர்த்தக முறையை எளிதாக்குதலும் மக்களின் பொதுச் செல்வத்தைப் பெருக்குவதுமே ஆகும். அப்படிப் பெருகிய செல்வத்தின் மீது வரி விதிப்பதன் மூலம் காகானுடைய நிதி வருவாயில் அனுகூலம் ஏற்பட்டது.

போலோவிற்கு இவையெல்லாம் விசித்திரமாகவே தோன்றியது. காகித நோட்டிற்கும் நிதிக்கும் உள்ள தொடர்பு பற்றிய விவரங்களை அவர் அறியாததே இதற்குக் காரணம். எவரொருவர் நோட்டை நிதிக்களஞ்சியத்தில் தங்கத்திற்கோ வெள்ளிக்கோ ரொக்கமாக்க விரும்பினாலும் அப்படிச் செய்யக்கூடும் என்பதைப் போலோ சொல்லத்தான் செய்கிறார். நோட்டுச் செலாவணி முறை முழுதும் இந்த அடிப்படையில் இருந்தும் அவர் இதை மேம்போக்காகக் குறிப்பிட்டுவிட்டுச் செல்கிறார். அது எவ்வளவு வசதியானது என்பதை உள்ளபடியே சுட்டிக் காட்டுகிறார். காகானுடைய ராஜ்யத்திற்கப்பாலுள்ள நாடுகளிலிருந்து வாணிபத்தின் பொருட்டுப் பொன்னையும் வெள்ளியையும் கொண்டு வந்த வர்த்தகர்கள் நிதிக் களஞ்சியத்திற்குச் சென்று தங்கள் விலையுயர்ந்த உலோகங்களின் மதிப்பிடப்பட்ட பெறுமானத்தை ஒப்புக்கொண்டு பதிலுக்குப் பாங்கி நோட்டுகளைப் பெறுவதில் மகிழ்ச்சியடைந்தார்கள். அவை எடுத்துச் செல்வதற்கு மிக இலேசாகவும் மிக எளிதில் மறைத்து வைத்துக்கொள்ளத் தக்கவையுமாக இருந்தன. மேலும் அவை பலதரப்பட்ட இனங்களில் இருந்தமை

யால், வேறுபட்ட மதிப்பீடுகள் உள்ள வெளிநாட்டு நாணயங்களைக் காட்டிலும், மிக எளிதில் அவற்றைக் கொண்டு பொருள்களை வாங்க முடிந்தது.

குப்ளா கான் காகிதச் செலாவணியைக் கண்டுபிடித்ததாகப் போலோ தவருக எண்ணிவிட்டார். அது சரியன்று. ஏனெனில் சீனநாட்டில் பல நூற்ருண்டுகளாக நோட்டுகள் வெளியிடப்பட்டு வந்தன. மங்கோலியர் சூறையாடுவதற்குச் சிறிது காலம் முன்னே சமவெளியினின்றும் வந்து வட சீனுவை வெற்றிகண்ட மக்களால் கூட அவை உபயோகப்படுத்தப்பட்டு வந்தன. சீனுவில் அவர் காலத்திலேயே நடந்தபோதிலும், போலோ குறிப்பிடாத மற்ருேர் உண்மையும் உண்டு. வெளியிடப்பட்ட நோட்டுகளின் எண்ணிக்கையையும் நிதிக்களஞ்சியத்திலுள்ள பொன் வெள்ளி இருப்பையும் சமநிலையில் வைத்துக்கொள்ளுதற்கு வேண்டிய திறமை இல்லாத காரணத்தால் குப்ளாகானின் நோட்டுகளின் மதிப்புக் குறைந்துவிட்டது. எவ்வளவுதான் ஒருவன் முழுக்க முழுக்க ஏகாதிபதியாக இருந்தபோதிலும் 'வேண்டும் போது தருவதாக உறுதி கூறும்' நோட்டின் மதிப்பை அம்மாதிரி செய்வதற்கு வேண்டிய வழிவகை தன்னிடம் இல்லை என்பது தெரிந்திருக்கும்போது, உத்தரவு மூலம் நிலை நிறுத்துவதென்பது முடியாது. உண்மையாகவே பொதுமக்களின் நம்பிக்கையின் மீது இது நிலை நிறுத்தப்படுவதாகும். அப்படியின்றிக் காகானின் உத்தரவுகளைக் கொண்டே இம்முறை நிலைநிறுத்தப் பெறுவதாகப் போலோ நம்பியதாகத் தெரிகிறது. உண்மையிலேயே 1287-ஆம் ஆண்டு, போலோ குடும்பத்தினர் சீன நாட்டை விட்டுச் செல்வதற்கு ஐந்தாண்டுகள் முன்பே காகான் புது நோட்டுகளை வெளியிடவேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. புது நோட்டு ஒவ்வொன்றும் பழைய ஐந்து நோட்டுகளுக்குச் சம மதிப்பு ஏற்படும் அளவுக்குப் பழைய நோட்டுகள் மதிப்பிழந்துவிட்டன.

போலோ ஒரு வியாபாரியாக இருந்தும் நோட்டுச் செலாவணியின் கோட்பாட்டை நல்ல முறையில் புரிந்து கொள்ளமுடியாமற்போனது வியப்பாகத்தான் இருக்கிறது. ஐரோப்பாவில் அதே காலத்தில் நோட்டுகள் வெளியிடப்படாவிட்டாலும், அதற்கு முப்பதாண்டுகளுக்கு முன்பு இரண்டாம் பிரடெரிக் சக்கரவர்த்தி, 'நாணயங்களைத் தருவதாக உறுதி கூறுகிறேன்' என்ற சொற்கள் பொறிக்கப் பெற்ற தோல் நோட்டுகளை வெளியிட்டார். இவை சில காலம் செலாவணியாகி வந்தன. ஆனால் வாணிபர்களிடையே வழங்கும் சாதாரணப் பிராமிசரி நோட்டுகள் எப்போதும் இருந்துதான் வந்தன. மங்கோலியரின் நோட்டுச் செலாவணி எப்படி இயங்கிவந்தது என்பதை அறியப் போலோவுக்கு இது ஒரு சூசகமாக இருந்திருக்க வேண்டும். இருப்பதை வைத்துக்கொண்டு பார்த்தால், இப்பொருள்பற்றி அவர் எழுதியுள்ள ஆற்றல் மிக்க பகுதியைத் தனது யஜமானரின் நிதி நிர்வாகத் திறமை பற்றிய சாதாரண புகழுரை எனவே கொள்ளலாம். அவ்வுரையைக் கீழ்க்கண்ட வாக்கியத்தோடு முடிக்கின்றார். 'உலகிலுள்ள மன்னர்கள் அனைவரையும் விட அதிகமான நிதிக்களஞ்சியத்தை வைத்திருக்ககூடிய, ஏன் வைத்திருந்த, மாமன்னர் வகுத்த வழிவகைகளை நீங்கள் இப்போது கேள்வியுற்றீர்கள்'.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஐரோப்பியர்களுக்கு மிகவும் சுவையூட்டக்கூடியதான ஓர் உண்மையை அவர் விட்டுவிட்டார். பாங்கு நோட்டில் உள்ள எழுத்துக்கள் அச்சிடப்பட்டவை என்பதை அவர் கூறவில்லை. ஒன்பதாம் நூற்றாண்டிலேயே அச்சுத் தொழில் நன்றாக வளர்ச்சியடைந்துவிட்டபோதிலும் அவருடைய நூலில் எந்தப் பகுதியிலும் இதுபற்றிய குறிப்பு இல்லை. பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையில் 'வஜ்ஜிர சூத்திரம்'

என்னும் சீனப் புத்தகம் 868-ஆம் ஆண்டில் அச்சிடப் பட்டதாகக் காட்டப்பட்டுள்ளது. போலோவின் காலத் தில் பரந்த சீன இலக்கியம் முழுவதும் அச்சிடப் பட்டிருந்தது. இருநூறு ஆண்டுகளுக்குப் பின்னர் 1477 வரை இங்கிலாந்தில் கூட அச்சடித்தல் மேற் கொள்ளப்படவில்லை. இத்தகைய புரட்சிகரமான சிருட்டியைப் பற்றித் தனது வாசகர்களுக்கு அறிவிக்கா மலிருந்தது கலாசார விஷயங்களில் அவருக்குள்ள ஈடு பாடின்மையைக் குறிக்கும் மற்ருெரு சான்று. மங்கோ லிய அரண்மனே மிகுதியாகப் படிப்பதற்கேற்ற இட மாக அமையவில்லேயெனினும், போலோவும் சீனப் புத்தகத்தைக் கூர்ந்து நோக்கும் வகையில் சிரமம் எடுத்துக்கொள்ளவில்லே. இருந்தபோதிலும் அச்சடித் தலேப்பற்றி அவர் கட்டாயமாகக் கேள்விப்பட்டிருக்க வேண்டும். ஆனல் அதன் பெருமை அவருடைய கவனத்தைச் சிறிதேனும் கவரவில்லே என்பது நன்கு புலனுகிறது.

பத்தாம் அத்தியாயம்.

## அஞ்சற் சாலைகள்.

மார்க்கோ போலோவின் நூலில் நாம் இப்போது பரிசீலித்து வரும் பகுதியின் தன்மை மேலும் தெளிவாகி வருகிறது. இன்று பிறர் வசத்திலுள்ள ஜப்பானைப் பற்றி ஒரு மனிதர் எதை எழுதுவாரோ அதைப் போன்றதுதான் ஆக்கிரமிப்புக்குட்பட்ட சீனாவைப்பற்றிய போலோவின் உரைநடைக் கோவை. 1276-ஆம் ஆண்டு சீனத் தென்பகுதியின் எதிர்ப்பைக் குப்ளாகான் சமாளித்தது முதல், அவரது பின்தோன்றல்கள் நாட்டை விட்டுத் துரத்தப்பட்ட 1368-ஆம் ஆண்டு வரை, சீனாவில் மங்கோலிய ஆட்சி நீடித்து வந்தது. வெளிநாட்டு ஆட்சியாளரால் முழுதும் வசப்படுத்தப் பட்டிருந்தபோது தோற்றமளித்த சீனாவின் வருணனை தான் இடைக்கால ஐரோப்பியருக்குச் சீனாவைப்பற்றிக் கிடைத்துள்ள முக்கிய வரலாறு. இதன் விளைவாக உண்மையான சீன நாடும் சீன மக்களும் எப்படி இருந்தனர் என்பது பற்றி ஐரோப்பியர் மிகத்தவறான கருத்தையே பெற முடிந்தது. இதற்குப் பின்னர் நானூற்றைம்பதாண்டுகள் கழித்துத்தான் மேலைநாட்டு மக்கள் சீனாவின் உண்மையான வாழ்க்கை, கலாசாரம் இவற்றைப் பற்றிய செய்திகளைப் புரிந்துகொள்ளத் தொடங்கினர். எனினும், சீனாவைப் பற்றிய வேறெந்த நூலைக்காட்டிலும் மார்க்கோ போலோவின் நூல்தான் பலராலும் பாராட்டப்பட்டு வருகிறது. இன்னும் இதே நூலின் துணை கொண்டுதான் பெரும்பாலான மக்கள் சீனாவைக் காண்கின்றனர்.

இந்த முக்கிய அம்சத்தை நாம் நினைவில் வைத்துக் கொண்டு மங்கோலியர் ஆட்சி எப்படி நடந்து வந்தது

என்ற பொருள் பற்றி அவரது நூலில் அடுத்துக் கூறப் பட்டுள்ளதை ஆராயத் தொடங்குவோம்.

உரோமானியர்கள் பிரிட்டனைத் தங்கள் உலக சாம் ராஜ்யத்தில் ஒரு பகுதியாக இணைத்துக்கொண்டபோது, அதை வசப்படுத்திக்கொள்ள அவர்கள் கையாண்ட முறைகளுள் ஒன்று சாலைகள் அமைத்தல். இதனால் உரோமாபுரி லண்டனோடும் அதற்கப்பாலும் நேரடி யாகவும் விரைவாகவும் தொடர்பு கொள்ள முடிந்தது. உரோமானியருக்கு எப்படியோ அப்படியே குப்ளா கானுக்கும் சாலைகள் மிகவும் தேவைப்பட்டன. ஏனெனில் அவருடைய தலைநகரான பீகிங்கைப் பாரசீகம், ரஷ்யா ஆகிய வெளிநாட்டு மாகாணங் களுடனும், சீனாவிற்குள்ளேயே உள்ள மாகாணத் தலை நகரங்களுடனும் இணைக்கவேண்டியிருந்தது. தங்கும் வசதிகள், சேனைத்தளங்கள், அஞ்சற்குதிரைகள், மாற்றுக்குதிரைகள் ஆகியவற்றுடன் கூடிய மங்கோலிய சாலை அமைப்பு முறை, ஆட்சிமுறையின் முக்கிய உறுப் பாக ஆகும் அளவுக்கு வளர்ச்சியடைந்திருந்தது. இதன் முக்கிய குறிக்கோள்களுள் ஒன்று சீன மக்களையும், வேறு வெல்லப்பட்ட நாடுகளையும் அடக்கி வைத்திருப்ப தாகும். இதுபற்றிப் போலோ சில சுவைமிக்க தகவல் களைக் கொடுக்கிறார். அவர் நிறைய பிரயாணம் செய்து சாலைகளைப்பற்றி நன்கு தெரிந்து வைத்திருக்கிறார் என்பதை நாம் காணப்போகிறோம்.

சில இடங்களில் சக்கரம் பூட்டிய வண்டிகளுக்கேற்ற வாறு இப் பெருஞ்சாலைகள் கற்பாவு செய்யப் பட்டுள்ளன. ஆனால் பொதுவாகக் குதிரைச் சவாரி செய்வோருக்கேற்ப மேற்பரப்பு மண்தளவரிசை செய் யப்பட்டிருந்தது. இருளில் பிரயாணிகள் வழி தவறிச் செல்லாமல் இருப்பதற்காகச் சாலையின் இரு மருங்கிலும் மரங்கள் வைக்கப்பட்டிருந்தன. பாலை நிலமாக இருந்தால் கற்றூண்கள் நடப்பட்டிருக்கும்.

ஒவ்வொரு இருபத்தைந்து மைல்களுக்கிடையே ஓர் அரசாங்க அஞ்சல் நிலையம் உண்டு. பிரயாணம் செய்யும் அலுவலர்களுக்கும், அஞ்சற்காரர்களுக்குமே அது உரிய இடம். விலையுயர்ந்த பட்டினால் செய்யப்பட்ட அழகிய மெத்தைகளும், தேவைப்படும் வேறு பொருள்களும், நல்ல முறையில் சேகரிக்கப்பட்டுள்ள ஒரு விசாலமான இடம் என்று போலோ அதைக் குறிப்பிடுகிறார். இது போன்ற ஓரிடத்திற்கு மன்னரே போய்ச் சேர்ந்தாலும், அவர் தாம் நல்ல இடத்தில் தங்கியிருப்பதாகவே கருதுவார் என்றும் போலோ கூறுகிறார். (ஆசிரியர் இங்கே குறிப்பிடுவது சீன நாட்டின் செல்வம் மிக்கதும் மக்கள் தொகை அதிகமானதுமான பகுதிகளில் உள்ள அஞ்சல் நிலையங்களைத்தான். பிற நாடுகளை இணைக்கும் பட்டுச்சாலை போன்ற மக்கள் நெருக்கமற்ற பகுதிகளில் நிறுவப்பட்டுள்ள அஞ்சலகங்கள். அவ்வளவு பகட்டாக இருந்திருக்க முடியாது.)

அஞ்சலகம் ஒவ்வொன்றிலும் ஒரு குதிரை லாயம் உண்டு. அரசாங்க அஞ்சற்காரர்களுக்காக அங்கே குதிரைகள் தயாராக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. அரசாங்கத் தபால் மிகுதியாகவுள்ள பாதைகளில் சுமார் நானூறு குதிரைகள் இருக்கும். வெளிப்புறச் சாலைகளில் நிறுத்திவைக்கப்பட்டுள்ள குதிரைகள் குறைவானவை என்பதுடன் இரு அஞ்சலகங்களுக்கிடையிட்ட தூரமும் மிகுதியானது. அஞ்சலகங்கள் 10,000 என்றும் இவையனைத்திலுமுள்ள மொத்தக் குதிரைகளின் எண்ணிக்கை 300,000 எனவும் போலோ விவரம் தருகிறார். மத்தியதரைக்கடற் பகுதிகளைச் சுற்றி வாழும் வாசகர்கள் எண்ணிக்கூடப் பார்க்கமுடியாத அளவு மங்கோலிய சாம்ராஜ்யத்தின் பகுதிகள் ஒன்றுக்கொன்று நெடுந்தூரத்தில் இருந்தனவாதலால், அவர் கூற்றை எவரும் நம்பக்கூடமாட்டார்கள் என அஞ்சிப் போலோ, 'எவரும் வருணிக்க இயலாத அளவு, மிகவும்

வியப்புக்குரியதும் பொருட்செலவு கொண்டதுமாகும் இந்த விஷயம், என்று வியந்து கூறுகிறார்.

பீகிங்கிலிருந்து மாகாணப் பெருநகரங்களுக்குச் சாதாரணமாக அனுப்பப்படும் அஞ்சல்களை நாள் தோறும் ஒரே அஞ்சற்காரன் இருபத்தைந்து மைல் எல்லையில் உள்ள இடத்திற்கு எடுத்துச் செல்வான். சில இடங்களில் இத்தூரத்தை இரு பகுதிகளாகவும் பிரித்திருப்பார்கள். ஓர் அஞ்சற்காரன் நாளொன்றுக்கு இருபத்தைந்து மைல் வீதத்தில் தென் சீனாவை சுமார் இரண்டு மாதங்களிலும், பர்மா எல்லையில் உள்ள யுன்னன் என்னுமிடத்தை மூன்றரை மாதங்களிலும் போய்ச் சேர்வான். ஆனால் அவசர காரியங்களுக்கு இந்த வேகம் போதுமானதன்று. விரைவிற் செல்ல வேண்டிய அஞ்சற்காரர்களுக்கான ஏற்பாடுகள் பின் வருமாறு: ஓர் அஞ்சலகத்திற்கும் மற்றொன்றிற்கு மிடையே, மூன்று மைல்களுக்கு ஒன்றாக ஒரு சிறு அஞ்சல் நிலையம் உண்டு. அங்கு அஞ்சற்காரர்கள் வசித்து வந்தனர். அவசரமாக அனுப்பவேண்டிய அஞ்சல்களை இவ்வஞ்சற்காரர்கள் தூக்கிச் செல்வர். ஒவ்வொரு வனும் மூன்று மைல்களைக் கடந்து அடுத்த நிலையத்தை அடைவான். இத்தூரத்தை அரை மணிக்குள்ளாகவே அவன் கடந்துவிடக்கூடும். அடுத்த நிலையத்தை அடைந்ததும் தபால்களை ஒப்புவிப்பதில் தாமதம் ஏற்படக்கூடா தென்பதற்காக அஞ்சற்காரன் அரைக்கச்சையில் மணிகளைக் கட்டிக்கொண்டிருப்பான். மணியோசை கேட்டவுடனே அஞ்சல்நிலையக் கணக்கர் அடுத்த அஞ்சற்காரனைத் தயாராக இருக்கச் செய்வார். ரிலே ஓட்டப் பந்தயத்தில் எப்படியோ அப்படிச் சங்கிலித் தொடர் போன்ற அஞ்சற்காரர்களால் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து வெகுதூரத்திலுள்ள மற்றொரு பகுதிக்கு அஞ்சல்கள் எடுத்துச் செல்லப்பட்டன. இரவிலும் பகலிலும் மணிக்கு எட்டு மைல் வீதம் செல்லும் முறை

கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இதனால் தென் சீனாவை ஒரு வாரத்திலும் யுன்னானைப் பன்னிரண்டு நாட்களிலும் போய்ச் சேர முடிந்தது. நாட்டில் திடீர்க் குழப்பமோ அதுபோன்ற நிகழ்ச்சிகளோ நடக்கும் போது, மேலும் விரைவில் செயலாற்ற வேண்டியது அவசியமாயிருந்தது. மோட்டார் காரில் எவ்வளவு விரைவாகச் செயலாற்ற முடியுமோ அவ்வளவு விரைவாக இந்த ஏற்பாட்டினால் மங்கோலியர்கள் காரியத்தைச் சாதித்தனர். மூன்று மைல்கள் இடையிட்ட அஞ்சல் நிலையங்களில் அஞ்சற் காரர்களன்றிச் சேணம் பூட்டப்பெற்ற சில நல்ல குதிரைகளும் அவற்றில் சவாரி செய்வோர்களும் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தனர். ஒரு குதிரை எவ்வளவு விரைவான பாய்ச்சலில் ஓடக் கூடுமோ அவ்வளவு விரைவாக ஒரு நிலையத்திலிருந்து மற்றொரு நிலையத்திற்குத் தபால் எடுத்துச் செல்லப்படும். சவாரி செய்பவர்களும் மணிகளைக் கட்டிச் சென்றன ராகையால் நிலையத்தில் ஏற்படும் குதிரை மாற்றத்தால் தாமதம் ஏற்படவில்லை. இரவிலும் பகலிலும் குதிரை களும் சவாரி செய்வோரும் மாற்றப்படுவதால் நானூறு மைல் தூரத்திலுள்ள இடத்திற்கு இருபத்துநான்கு மணி நேரத்தில் அஞ்சல்கள் எடுத்துச்செல்லப்பட்டன. ஆகவே தென் சீனாவை மூன்றரை நாட்களிலும் யுன்னானை ஆறு நாட்களிலும் அஞ்சல் சென்றடைய முடிந்தது. இவையன்றி மிகமிக விரைவாகச் சேர்ப்பிக்க வேண்டிய செய்திகளுக்காக ஒரு தனிவகைச் சவாரி செய்வோர் இருந்தனர் எனத் தெரிகிறது. அத் தகையவர் மூன்று மைல்களுக்கொருமுறை வெவ்வேறு குதிரைகளில் தாவிப்பாய்ந்து ஒரே மூச்சாகச் சவாரி செய்வர். இவ்வஞ்சற்காரர் நாம் முன்னமே குறிப் பிட்டுள்ள புகழ்மிக்க கேடயத்தை ஏந்திச் செல்வார். அந்த அதிகாரத்தின் பேரில், செல்லும் வழியில் காகானின் பெயரைச் சொல்லித் தான் விரும்பிய

எதையும் அவர் கேட்டுப் பெறலாம். தனது குதிரை செயலிழந்துவிட்டால் வழியில் சந்திக்கும் எவரிடமிருந்தும், அவர் பிரபுவாயிருந்தாலும் சரி, திறமுள்ள குதிரையைப் பிடித்துக்கொள்ள அவர் அதிகாரம் பெற்றவராக இருந்தார். 'இம்மனிதர்கள் மிகப் பெயர் பெற்றவர்கள் என்றும், உறுதியான கச்சைகளால் தங்கள் வயிற்றையும் மார்பையும் தலையையும் சுற்றிக் கட்டிக்கொள்ளாவிட்டால் இத்தகைய காரியத்தை அவர்களால் செய்யவே இயலாது' என்றும் மார்க்கோ கூறுகிறார். பழைய சாதனையை வெல்லும் வகையில் புதிய சாதனை புரியக்கூடிய இன்றைய பலசாலியும் இவ் வஞ்சற்காரர்களின் பொறுமையுடன் போட்டியிட முடியாது. குதிரைமீது இருபத்தைந்து மைல்கள் சவாரி செய்வதென்பது எவ்வளவு களைப்பை உண்டுபண்ணக் கூடியதென்பதை எவரும் தம் அனுபவத்திலிருந்து உணரலாம். இந்தத் தூரம் கீழை நாடுகளில் சாதாரணமாக ஒரு பிரயாணி ஒரு நாள் முழுதும் பிரயாணம் செய்து கடக்கக்கூடியதாகக் கருதப்படுகிறது. ஐம்பது மைல்கள் வீதம் பிரயாணம் செய்வதென்றால் அது ஓர் அருஞ்சாதனை. குதிரைகளை அடிக்கடி மாற்றினாலும் கூட நூறு மைல்கள் வீதம் செல்வது ஒரு சாதாரண சவாரிக்காரனுடைய சக்திக்கப்பாற்பட்டது. அப்படியிருக்கும்போது ஒரு பகல், ஓரிரவில் நானூறு மைல்கள் சவாரி என்றால் எப்படி இயலும்? சமவெளியிலுள்ள மங்கோலியச் சவாரிக்காரனுக்குத்தான் அந்த இரகசியம் தெரியும். மோட்டார்க் கார்களில் எடுத்துச் செல்வது போல் அத்தனை விரைவாக அஞ்சல்களை எடுத்துச் செல்வதற்கேற்ற சாலைகளையும் அஞ்சல் நிலையங்களையும் உரோமானியர்கள்கூட அவ்வளவு நல்ல முறையில் உருவாக்கியதாக எவரும் கூறியதில்லை. இருப்பினும் இயந்திரங்களைக் கொண்டு போக்குவரத்து கண்டு பிடிக்கப்படுமுன்னரே, மனித இனம் எப்படிச் சில சமயங்

களில் விரைவில் இயங்கும் ஒரு முறையைத் தோற்று விக்க முடிந்தது என்பது வியக்கத்தக்க ஒன்ருகும்.

கீழ்க்கண்ட நிகழ்ச்சி எப்படி அராபியர்கள் பத்தாம் நூற்ருண்டிலேயே வானவூர்தியைப் பற்றிய முன்னுணர் வைப் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகிறது. கெய்ரோவில் வாழ்ந்து வந்த பாதிமா வம்சத்தைச் சார்ந்த அஸீஸ் என்னும் காலிபா, வடக்கே பாலைவனத் திற்கப்பால் நானூறு மைல் தூரத்தில் உள்ள பால்பெக் என்னுமிடத்திலுள்ள புதிய செர்ரிக் கனிகளைப் பெற வேண்டித் தன் ஆசையை வெளியிட்டார். பால் பெக்கிலுள்ள வசீருக்கு இது அறிவிக்கப்பட்டவுடன், அவர் அறுநூறு அஞ்சற்புருக்களைச் சேகரித்து ஒவ் வொன்றின் காலிலும் ஒரு செர்ரிக்கனியடங்கிய பட்டுப்பை ஒன்றை இணைத்துவிட்டார். குறிப்பிட்ட நாளில் காலிபாவின் விருந்து நேரத்திற்கு நல்ல நிலையில் செர்ரிக்கனிகள் கெய்ரோவுக்கு வந்து சேர்ந்தன.

பதினோராம் அத்தியாயம்

# மதமும் சோதிடமும்

சீனாவின் ஜனத்தொகை அறுநூறு இலட்சம் என்று சொல்லப்படுகிறது. இவ்வளவு பெரும் மக்களினத்தைக் காகான் எப்படி அடிமைப்படுத்தி வைத்திருக்க முடிந்தது என்பதை விளக்குவதற்கு மூன்று காரணங்கள் தரப் பட்டிருக்கின்றன. குதிரை வீரர்களும் விற்போர் வீரர் களும் அடங்கிய மங்கோலியரின் நிரந்தர சேனை, மக்க ளெழுச்சியை அடக்குவதற்குப் போதுமானது. மிக மேலான பதவிகள் சீனரல்லாதாரால் வகிக்கப்பட்டு வந்தன. ஆகவே அவருக்கெதிராகச் செய்யப்படும் சதித்திட்டத்தின் அபாயம் குறைவு. எந்த மூலையிலும் தாமதமின்றித் தாக்குதல் நடத்துவதற்கு அஞ்சற் சாலைகள் அவருக்கு உதவின. உறுதியுடனும் முன்னெச் சரிக்கையுடனும் இருப்பது அவசியமெனினும் நீண்ட கால விளைவை நோக்கும்போது, தனது ஆட்சி சீன மக்களின் உடன்பாட்டைப் பொறுத்ததென்பதையும், அவர்களை முறியடிக்கப்பட்ட எதிரிகளாகக் கருதாமல் குடிமக்களாக நடத்தவேண்டும் என்பதையும் காகான் உணர்ந்திருந்தார் என்பதை நமது நூலாசிரியர் தெளிவு படுத்துகிறார். சீனாவை வெல்வதற்கு வெகு நீண்ட காலம் செயலாற்ற வேண்டியிருந்தது. 1212-இல் ஜெங்கிஸ்கானால் இது தொடங்கப்பெற்றது. முன்பு கூறியது போல, 1276-இல் சீனத் தென்பகுதி சரண டைந்த பின்னர்தான் வெற்றி முற்றுப்பெற்றது. அதுவரை அப்பகுதியில் சீனவம்ச வழி வந்த சக்கர வர்த்தி பிடியை விடாமல் இருந்துவந்தார். எதிரி நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கிய காலத்தில் மங்கோலியர் பயன்படுத்திய முறைகள் ஐரோப்பியர்

களிடையே அவர்களைப் பற்றி மிகுந்த அச்சத்தை விளைவித்தன. அவர்கள் எதிரிகளுக்குச் சிறிதும் இடங் கொடுக்கவில்லை. முதற் கோரிக்கை விடுக்கப்பட்ட போதே சரணடையாவிட்டால் அப்பகுதியில் வாழும் குடிமக்களனைவரையும் அவர்கள் படுகொலை செய்தனர். அவர்கள் சூறையாடுவதற்கு முன்னர், சீனாவின் மக்கள் தொகை பத்துக் கோடியாக இருந்ததென்றும், நீடித்த போராட்டத்தில் நான்கு கோடி மக்கள் அழிந்து போயினர் என்றும் கூறப்படுகிறது. குப்ளாகான் நாட்டின் வளத்தை மீண்டும் உயிர்ப்பிக்க முயன்றார். அவர் சீன மக்களுக்கு வெளிநாட்டு எதிரிகளின் தொந்தரவற்ற அமைதியையும், சுதந்தரமான வெளி நாட்டு வர்த்தகத்தையும், சகிப்புத்தன்மையையும், உள் நாட்டுப் பாதுகாப்பையும் வழங்கினார். அவரது அரண் மனை நடைமுறை, பழைய சீனநாட்டு நடைமுறையை விடச் சுயேச்சை வாய்ந்ததாகவும் கெடுபிடியற்றதாகவும் இருந்தது. ஆயினும் அங்குள்ளோர் வேட்டையாடுதல், சுடுதல், மதுவருந்தும் முறை இவையெல்லாம், சீனர் களின் அரசவைச் சூழலினின்றும் மாறுபட்டவை. சீனரின் அரசவைச் சூழலில் பக்திசிரத்தை, அறிவியல் நோக்கு, மதகுருமார்களின் செல்வாக்கு ஆகியவை இடம்பெற்றிருந்தன. இருந்தபோதிலும் சமவெளி யிலுள்ள காரகோரத்தில் ஜெங்கிஸ்கானின் அரண் மனையில் இருந்ததைக் காட்டிலும் இங்குள்ளவர்கள், சீனர்கள் ஒழுக்கத்தைப்பற்றி என்ன கருதுகிறார்களோ அந்த வகையில் பண்பாடு மிக்கவர்களாகவும், தூய்மை யுள்ளவர்களாகவும், சுகசாதனமுடையவர்களாகவும், சடங்குகளைப் பேணுபவர்களாகவும் இருந்தனர். இந்தப் பண்பாடு ஏதோ ஒரு வகையில் சீனமக் களிடத்தில் இவர்பால் நல்லெண்ணத்தை ஏற்படுத் தியது. அன்றியும், குப்ளாகான் சீனர்களுக்கு நேர் முறையில் பல நலன்களைச் செய்ததாகப் போலோ

வருணிக்கிருர். தொடக்கத்திலேயே மேற்கோளாக எடுத்துக்காட்டப்பட்ட பாரசீக வரலாற்ருசிரியரின் கூற்று பெரும்பாலும் சரியெனவே நான் எண்ணுகிறேன். குப்ளா கானின் இயல்பு குடிமக்களிடம் பரிவு காட்டுதல் என்று அவர் குறிப்பிடுகிருர். சீன மக்களிடம் அவர் கொண்டிருந்த பரிவுணர்ச்சி, அவர்கள் இவரிடம் கொண்டிருந்ததைக் காட்டிலும் மிகுந்த குழைவுள்ள தாக இருந்திருக்கக்கூடும். அவர்களைப்பற்றி மிகுதியாக அறிந்துகொள்ள நேர்ந்தபோது அவர்களுடைய பல் வேறு ஆற்றல்களை அவரால் போற்ருமல் இருக்கமுடிய வில்லை. ஆகவே இவரது உள்ளுணர்வும் அரசியல் முறையும் தூண்டவே, அவர்களுடைய நலன் கருதி சுறுசுறுப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டார்.

எந்தப் பகுதியிலாவது மழைக்குறைவினுலோ, வெட்டுக்கிளிகளாலோ, புயல்காரணமாகவோ பயிர்கள் குன்றினுல், சம்பந்தப்பட்ட அலுவலர்களின் அறிக்கை யின் பேரில் மன்னர் வரிகளைத் தள்ளுபடி செய்தார். கொள்ளை நோயினுல் உழவுப்பிராணிகள் இறந்து விட்டால் பயிரிடுவோர் அரசாங்கத்திடமிருந்து உழவுப் பிராணிகளைப் பெறலாம். பயிர் விளையாமையால் பட்டினி ஏற்படுமோ என்று அஞ்சும் அளவுக்கு நிலைமை மிக மோசமாகும்போது அரசாங்கச் சரக்கறைகளினின் றும் குறைந்த கட்டுப்பாட்டு விலைக்கு உணவுப்பொருளும் விதைகளும் விற்கப்பட்டுவந்தன. நல்ல விளைவுள்ள ஆண்டுகளில் கிடைக்கும் உபரி தானியங்களை வாங்கிச் சரக்கறைகளில் நிரப்பி வைத்திருப்பார்கள். விவசாய மக்கட் சமுதாயத்திற்குச் சமூக ரீதியில் உதவி செய்ய இத்தகைய பொது நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட துடன், பீகிங்கிலுள்ள ஏழைகளிடம் காகான் மிகுந்த தயை யுள்ளவராகவும் இருந்தார். வறுமை மிக்கவர் களின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டது. அவர்களுக்கு ஓராண்டிற்கு வேண்டிய உணவும் உடையும் அளிக்கப்

பட்டன. எந்த ஏழை மனிதனும் அரண்மனை வாயிலுக்கு வரலாம். அங்கே நாள்தோறும் முப்பதாயிரத்திற்கும் மேலான மக்களுக்கு ரொட்டித்துண்டு கொடுக்கப் பட்டது. காஷ்மீரத்திலிருந்தும் திபேத்திலிருந்தும் காகானுல் அழைத்துவரப்பட்ட புத்த குருமார்கள் பிச்சை இடுதல் புத்தபகவானுக்கு மிகவும் உகந்தது என்பதைக் காகான் ஒப்புக்கொள்ளும்படிச் செய்து விட்டனர் என்பதைப் போலோ குறிப்பிடுகிறுர். உண்மையிலேயே அன்பு, பௌத்தர்களின் தலைசிறந்த அறம். புத்தரின் வாழ்க்கையைத் தூலமாகப் போலோ அறிந்திருந்தார் என்பதை நாம் மேலே காணப் போகிறோம். ஐரோப்பிய மொழியில் முதன் முதல் புத்தரைப்பற்றி எழுதப்பட்ட வரலாறு, இவருடையது தான் என நான் கருதுகிறேன். புத்தர் இந்தியாவில் வாழ்ந்தவர் என்பதையும், ஒரு தனிப்பட்ட மதத்தைத் தாபித்தவர் என்பதையும், அம்மதத்தின்கொள்கைகளுள் ஒன்று, உயிர்கள் மாறிமாறிப் பிறக்கும் தன்மையன என்பதையும் அவர் அறிந்திருந்தார். இந்த அளவுக்கு அவர் தெளிவுபெற்றிருந்த போதிலும், சீனர்களுக்கு லாஓ-ட்சே என்பவராலும் கன்பூசியஸ் என்பவராலும் தோற்றுவிக்கப்பட்ட மற்றும் இரண்டு மதங்கள் இருந்தன என்பதை அவர் உணரவில்லை. ஒருவேளை ஓரளவு அவற்றைப்பற்றி அவர் அறிந்திருக்கக்கூடுமாயினும், ஒன்றினின்று மற்றொன்றைப் பகுத்துணர வியலாதவராக இருந்தார் என்று கருதலாம். ஒரு மனிதன் நூல்கள் வாயிலாகவோ, பிறரைக் கேட்டறிவதன் மூலமோ ஒரு பொருளை ஆராய்ந்து அறியலாம். உண்மையிலேயே, அஞ்ஞானியரான மங்கோலியரால் தழுவப்பட்ட புத்த மதத்தைப்பற்றியும், சீனர்களால் பின்பற்றப்பட்ட மதத்தைப்பற்றியும் அவர் கூறுவதிலிருந்து, அவர் அப்படி ஆராய்ந்து கூறியதாக ஏற்படவில்லை. தான் பார்க்க நேர்ந்தவற்றினின்றும்

சில அனுமானங்களைச் செய்த ஒருவரின் கூற்ருகத் தான் அது இருக்கிறது. இதில் நாம் வியப்பதற் கொன்றுமில்லை. இன்றுகூட கீழை நாடுகளுக்குப் பிரயாணம் சென்று திரும்பி வருபவர்களுக்குள்ளே, சீனர்களுடைய மூன்று மதங்களைப் பற்றிய கோவை யான ஒரு விவரத்தைத் தந்து, இந்தியாவிலுள்ள இந்து மதத்தினின்றும் அவை எப்படி வேறுபடுகின்றன என்பதைக் கூறக்கூடியவர்கள் எத்தனை பேர் இருக்கிருர் கள்? போலோவுக்கும் அவர் காலத்திய ஐரோப்பியர் களுக்கும் கிறித்தவ மதத்தைத் தவிர, யூதர்கள், முகம் மதியர்கள் இவர்களுடைய இரண்டு மதங்கள்தான் குறிப்பிடத்தக்கனவாக இருந்தன. உருவ வழிபாட்டு முறை கொண்டவை என்ற பொதுத்தலைப்பில் இந்து மதம், பௌத்தம், லாஓ-ட்சேயினுலும் கன்பூசியசாலும் தோற்றுவிக்கப்பட்ட மதங்கள் ஆகியவை ஒருமிக்கத் தொகுக்கப்பட்டுள்ளன. சீனநாட்டில் நீண்ட காலம் தங்கிக் காகானின் உத்தரவின் பேரில் போலோ கீழை நாடுகளில் நீண்ட பிரயாணங்கள் செய்தார் என்பதை நாம் காணப்போகிறேம். அப்படியிருந்தும் முன்பு நான் குறிப்பிட்டிருந்ததுபோல், உருவவழிபாட்டைக் கொண்ட ஒரு தனிப்பட்ட மதத்தைத் தோற்றுவித்தவ ராக அவர் புத்தரை அறிந்திருந்ததுபோல் தோன்று கிறது. எனினும் இதைக் காட்டிலும் இன்னும் தெளிவாக இந்த விஷயத்தை அவர் புரிந்துகொள்ளவே இல்லை.

ஒருவேளை தன் நூலில் எழுதியுள்ளதைக் காட்டிலும் அவருக்கு மேலும் அதிகமாகத் தெரிந்திருக்கலாம். எந்த அளவுக்கு ஒருவர் அவரது நூலை ஆழ்ந்து படிக்கிருரோ, அந்த அளவுக்கு உண்மையை அறியாமல் முன்கூட்டியே ஓர் அபிப்பிராயம் கொண்டுள்ள பொது மக்களுக்காக அதை அவர் எழுதியிருக்கிருர் என்பதை உணரலாம். வெறும் தீரச்செயல்களையும், வியக்கத்

தக்க செயல்களையும் கொண்டு அவர் வெனிசு நகர மக்களைக் களிப்பூட்ட விரும்பவில்லை. அவர் அப்படி விரும்பினால் செய்திருக்கக்கூடும். அவருடைய நோக்கம் மக்களுக்கு அறிவுறுத்துவதுதான். தனக்கு எது முக்கிய மென்று தோன்றியதோ அதையே சொன்னார். எனினும், அவர் தன்னிலையினின்று கீழிறங்கிவந்து எழுதுவதாக எவருக்கும் ஓர் எண்ணம் ஏற்படுகிறது. ஏனெனில் தன்னிலையினின்றும் கீழ்ப்பட்ட மனோநிலையிலுள்ள வாசகர்களின் பரிவோடுகூடிய கவனத்தை வேறுவகை யில் நிலைபெறச்செய்ய முடியாதென்பதை அவர் அறிந்-திருந்தார். இது உண்மையானால் நான் ஒப்புக் கொண்டுள்ளதைக் காட்டிலும், அவரது உள்ளம் மிகவும் பண்பட்டதாக இருந்திருக்கவேண்டும்.

பீகிங்கிலுள்ள சோதிடர்களைப் பற்றிய அவரது குறிப்பு இப்பிரச்சினையை மீண்டும் தோற்றுவிக்கிறது. அரசாங்கத்தாரால் பராமரிக்கப்பட்ட ஒரு சோதிடர் குழு இருந்ததாக அவர் கூறுகிறார். அவர்களுடைய தொழில் பஞ்சாங்கம் கணித்தல். அவர்களிடத்தில் ஒரு வகை உயரத்தை அளக்கும் கருவி இருந்தது. அதன்மீது கிரகங்களின் குறிகளும், ஓரைகளும், ஆண்டின் கனத்த நாட்களும் பொறிக்கப்பட்டிருந்தன. இக் கருவியின் துணைகொண்டு எவ்வெப்போது கொடிய புயல்களும், கொள்ளைநோய்களும், கலசங்களும் எதிர் பார்க்கப்படலாம் என்பதைக் காட்டும் பஞ்சாங்கத்தை அவர்கள் வரைந்தனர். இப்பஞ்சாங்கத்தில் பிரயாணங் களைத் தொடங்குவதற்கும், முக்கியமான ஒரு தொழிலை மேற்கொள்வதற்கும் உரிய நல்ல நாட்களும் அடங்கி யிருந்தன. எனினும், அன்று உலகத்திலேயே மிகப் புகழ்வாய்ந்த வானவெளி ஆராய்ச்சிக்கூடம் பீகிங்கில் இருந்ததாகப் போலோ சொல்லவில்லை. ஷான்சியில் உள்ள பிங்யாங்கில் ஒரு வானவெளி ஆராய்ச்சிக்கூடமும் கல்லூரியும் இருந்தன. இந்த இடத்திற்குப், பின்னர்

போலோ போயிருக்கிறுர். மங்கோலியர் வானசாத்திரத்திலும் சோதிடத்திலும் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினர். பின்னதை முன்னதிலிருந்து தெளிவாக அவர்கள் வேறுபடுத்திக் காணுததே அதற்குக் காரணமாக இருக்கலாம். காலிபாக்களை வென்ற பின்னரே அதைப்பற்றி மங்கோலியர் அறியத் தலைப்பட்டனர். டாலமியின் பெயரால் வழங்கும் கிரேக்க வான சாத்திரத்தை அராபியர்கள் ஏற்றுக்கொண்டனர். அதைத் தான் மங்கோலியர்கள் சீனுவில் புகுத்தினர். அன்றிருந்த சீனமுறையைக் காட்டிலும் அது உயர்வானது. பீகிங்கிலும் பிங்யாங்கிலும் மங்கோலியர் நிறுவியிருந்த கருவிகள் அன்றிருந்தவற்றுள் மிக முன்னேற்றம் வாய்ந்தவை.

1368-இல் ஏற்பட்ட மங்கோலியவம்ச வீழ்ச்சிக்குப் பின்னர் சீனர்கள் அக்கருவிகளைப் புறக்கணித்துவிட்டனர். இதற்குக் காரணம் அக்கருவிகள் மங்கோலியரால் நிறுவப்பட்டவை என்பதால் எழுந்த கண்மூடித்தனமான முடிவுதான். காலப்போக்கில் அவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதைக்கூடச் சீனர்கள் மறந்துவிட்டனர். இதன் விளைவாக மங்கோலியர் காலத்தில் அடைந்துள்ள உன்னத நிலையிலிருந்து மிங் காலத்திய வான சாத்திரத்தின் நிலை தாழ்ச்சியுற்றது. 1600-ஆம் ஆண்டு ஏசுசங்கத்தைச் சார்ந்த பாதிரியார் ரிச்சி (Ricci), மேற்சொல்லப்பட்ட மங்கோலியரின் வான உச்சியை அளக்கும் கருவிகளையும் ஏனையவற்றையும் கண்டார். இவற்றை எப்படிப் பயன்படுத்துவது என்பதைச் சீனர்களுக்குக் காட்டும் அளவிற்குப் போதுமான வான சாத்திர அறிவையும் பெற்றிருந்தார். அவை நிறுவப்பட்ட காலம் தொடங்கி, இருநூற்றிருபத்தைந்து ஆண்டுகள் வரை, ஐரோப்பிய வான சாத்திரத்தில் மேலும் முற்போக்கு ஏற்படவில்லை.

இந்தப் புகழ்மிக்க நூலில், ஐரோப்பாவில் காணப்

படும் எந்தக் கருவியைக் காட்டிலும் குப்ளா கானிடம் மிகுந்த முன்னேற்றமடைந்துள்ளவான சாத்திரக் கருவிகள் இருந்தன என்பது சொல்லப்படவில்லை. இதற்குக் காரணம் எதுவாக இருக்கக்கூடும்? விஷயம் முக்கியமாக இருந்தபோதிலும், மிகக்கடினமாகவும் சுவையற்றதாகவும் உள்ள இவ்விஷயத்தின் மூலம் வெனிசு வாசகர்களுக்கு அருவருப்பூட்டவேண்டாமென்று போலோ விரும்பி இருக்கலாம். ஒருவேளை அது பற்றி அவருக்கு எதுவுமே தெரியாது என்பதும் காரணமாயிருக்கலாம். எந்தக் கருத்தைக் கொள்ளலாம் என்பது பற்றி எவரும் உறுதியாகச் சொல்லமுடியாது.

பன்னிரண்டாம் அத்தியாயம்

# கல்நாரும் நிலக்கரியும்

தான் கண்ட புதுமைகளைப் பற்றி எழுதுவதில் போலோவுக்குப் பெரும் இடையூறாக இருந்தவை பொது மக்களின் அறியாமையும், அதனால் ஏற்படும் எதையும் நம்ப மறுக்கும் பிடிவாதத்தன்மையும் ஆகும். ஒரு விஷயத்தைப் பற்றிய உண்மையை அறிவதில் அவருக்கு அபாரத்திறமை உண்டு. மற்ற இடைக்காலப் பிரயாணிகள், உண்மைகளைக்காட்டிலும் கட்டுக்கதைகளையே விரும்பினார்கள். நம்பத்தகாத கதைகளை யாரேனும் சொன்னால் அப்பட்டமான உண்மையைக்காட்டிலும் அவை மிகுந்த உத்சாகத்தை யூட்டுவதாகக் கண்டனர். கட்டுக்கதையைக்காட்டிலும் வெற்றுண்மையானது போலோவிடத்தில் ஒரு மனவெழுச்சியை எப்போதுமே தோற்றுவித்து வந்தது. அவர் ஒரு பெரிய அறிஞர் அல்லர் என்றாலும், அறிஞர் ஆவதற்குரிய தகுதிகள் அவரிடம் இருந்தன என்பதை இது குறிக்கின்றது. எனினும், அவர் அறிந்த சில உண்மைகள் கட்டுக்கதைகளைக் காட்டிலும் மிகுதியான அளவில் நிகழக்கூடாதனவாகத் தோன்றின. அவருடைய வாசகர்கள் சாதாரண கட்டுக்கதைகளை நம்பத் தயாராக இருந்தனர். ஆனால் உண்மையே பேதைமை நிறைந்த பொய்த் தோற்றம்போல் காட்சியளிக்கும்போது, அவர்கள் அதை நம்பும் அளவுக்குப் புத்தி சாலித்தனத்தை இழந்து விட்டவர்களாகத் தங்களைக் கருதவில்லை. போலோவுக்குள்ள மற்றோர் இடர்ப்பாடு என்னவென்றால் எழுதுகின்ற ஆற்றல் அவரிடம் அவ்வளவாக இல்லை. அவர் பேசக் கற்றுக்கொண்ட வார்த்தைகளும் மிகக்குறைவு. அவரது தோழர்

ரஸ்டிசெல்லோவும் ஓர் எழுத்துக்காரனுக்கு உள்ள திறமையைத்தான் பெற்றிருந்தார். இந்த நிலேயில் வியக்கத்தக்க ஒரு பெரும் உண்மையைப் பிறர் நம்பும் வகையில் எப்படி எழுத்தில் வடிப்பது என்பது பெரும் புதிராகவே இருந்தது.

கல்நாரைப் பற்றியும் நிலக்கரியைப் பற்றியும் தனது வாசகர்களுக்கு அறிவுறுத்த ஆசிரியர் எந்த முறையைக் கையாளுகிறுர் என்பதை நாம் இப்போது ஆராய்வோம். ஐரோப்பியர்கள் முன்னமேயே கல்நாரைப் பற்றிய சில கருத்துக்களே அறிந்திருந்தனர். அதுவே ஆசிரியருடைய காரியத்தை மேலும் கடினமாக்கியது. ஐரோப்பாவில் அது மிக அருமையான பொருளானதால் அதை வெளிநாட்டினின்றும் இறக்குமதி செய்துகொண்டிருந்தனர். வெகு சில மக்களே அதைப் பார்த்தும், நெருப்பிஞல் பாதிக்கப்படாத அதன் தன்மையை அறிந்தும் இருந்தனர். நாரின் அமைப்பு கொண்ட, தீ பற்றிக் கொள்ளாத ஓர் உலோகப்பொருள் அது. என்னும் உண்மையை எவரும் அறிந்திலர். அது நெருப்பில் வாழும் மிருதுவான உரோமமுள்ள பிராணியின் தோல் என்னும் கட்டுக்கதையை நம்புவதில் அவர்கள் திருப்தியடைந்தனர். காண்டாமிருகத்தை எப்படி எவரும் கண்டதில்லேயோ அப்படித் தீயில் வாழும் பிராணியையும் எவரும் கண்டதில்லே. எனினும், இவ்விரு பிராணிகளும் நெடுங்காலமாகச் சித்திரங்களில் வரையப்பட்டும் சிற்பங்களாக வடிக்கப்பட்டும், முழு நம்பிக்கையுடன் எழுதப்பட்டும் வந்திருக்கின்றன. ஆகவே நாள் தோறும் கண்டுவரும் பிராணிகளேப் போலவே இவையும் பழக்கப்பட்டவையாக இருந்தன. சீஞவின் வடமேற்குப் பகுதியில் பட்டுச்சாலே சேருமிடத்தில் மார்க்கோ போலோ இருந்துவந்தபோது, சுல்பிகர் பிரபு என்னும் துருக்கி நாட்டு முகம்மதிய வியாபாரியைச் சந்தித்தார். அவர் ஒரு காலத்தில் கல்நார் கிடைக்கும் சுரங்கங்களின்

மேற்பார்வையாளர் பதவியை வகித்துவந்தார். போலோ, 'என்னுடைய தோழரான இப்பிரபு சில செய்திகளைச் சொன்னார்' என்று கூறுகிறார். திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாத மலைப்பாங்கான ஏதோ ஓரிடத்தில் இரும்புச் சுரங்கம் இருப்பதாகவும் அங்கே கல்நார் கூட எடுக்கப்படுவதாகவும் அச் செய்திகள் அறிவிக்கின்றன. மார்க்கோவின் வார்த்தைகள் இவைதான். 'சலமாண்டர்' என்று நாம் குறிப்பிடும் துணி அங்கே செய்யப்படுகிறது. நெருப்பில் எறிந்தாலும் அதை எரிக்கமுடியாது.' மேலும் அவர் கூறுகிறார்: 'உண்மையிலேயே நான் எந்தச் சலமாண்டரைப் பற்றிப் பேசுகிறேனோ அது விலங்குமல்ல பாம்புமல்ல. நமது நாட்டில் உள்ளவர் கூறுவது போல் இந்த ஆடைகள் தீயில் வாழும் ஒருவகைப் பிராணியின் உரோமத்தால் செய்யப்பட்டவை என்பது உண்மையல்ல. ஆனால் அது பூமியின் படலமே ஆகும்.' மேலும், அவர் சலமாண்டரைப் பற்றிய கதை பைத்தியக்காரத்தனமானது என்றும் குறிப்பிடுகிறார். ஏனெனில் எந்த விலங்காயினும் பிராணியாயினும் நெருப்பில் வாழ முடியாது. கல்நார் எப்படிச் செய்யப்படுகிறது என்பதை அவர் திட்டவட்டமாக விவரிக்கிறார். களிம்பு கலந்த உலோகத்தின் படலத்தை வெட்டி, அதிலுள்ள வேற்றுப் பொருளை நீக்கி, அதன் நார்களை முறுக்கிக் கம்பளம் போன்ற நூல்களாகத் திரிக்கிறார்கள். நன்றாக நூற்கப்பட்ட இந்த நூல்களைக்கொண்டு ஆடைகள், துண்டுகள் போர்வைகள் ஆகியவை நெய்யப்பட்டன. இவற்றை நாம் தீவாழ்ப் பிராணிகளைக் கொண்டு செய்யப்பட்டவையாகக் கூறுகிறோம். துணிகள் நெய்யப்பட்டபோது அவை தூய வெண்மையாக இருப்பதேயில்லை. ஆனால் அவற்றை வெண்மையாக்க விரும்புவோர் அவற்றை நெருப்பில் புடம் போடுகிறார்கள். தீவாழ் பிராணியைக் கொண்டு செய்யப்படுவது என்பதில் இதுதான் உண்மை என்று

போலோ சொல்கிறார். 'அவை தீயில் வைக்கப்படுவதையும், தீயினின்று மிக வெண்மையாகத் திரும்பவும் வெளி வருவதையும் என் கண்களாலேயே கண்டேன். ஆனால் தீயில் வாழ்வதாகச் சொல்லப்படும் சலமாண்டர் பாம்பைப்பற்றிக் கீழை நாடுகள் முழுவதிலுமே நான் கேள்வியுற்றதில்லை. அது ஒரு பிராணி என்பதும், மற்றும் அது பற்றிக் கூறப்படும் அனைத்துமே பொய்யும் கட்டுக் கதைகளுமே ஆகும்.' அவர் தந்துள்ள இந்த விவரம் கீழ்க்கண்ட கூற்றோடு முடிகின்றது. அவருடைய தந்தையும் சிற்றப்பனும் சீன நாட்டிற்கு முதன்முறை சென்று திரும்பியபோது, காகான் போப்பாண்டவருக்கு வெகுமதியாக ஒரு கல்நார் துண்டை அவர்கள் மூலம் அனுப்பினாராம். ஏசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள வியர்வையைத் துடைப்பதற்குப் புனிதர் வெரொனிகா பயன்படுத்திய கைக்குட்டையைச் சுற்றி வைப்பதற்காக இத்துண்டு போப்பாண்டவரின் ஆட்சிப்பீடத்தில் பயன் படுத்தப்பட்டதாகப் போலோ கூறுகிறார். அதன்மீது அவருடைய நாதரின் உருவம் அற்புதமாய்ப் பதிந்துள்ளதாம். இடையே காணப்படும் இந்த விநோதமான புனிதரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிய குறிப்பொன்றில் போலோவின் நூலைப் பதிப்பித் தவர்களுள் ஒருவரான ஹென்றி கார்டியர் என்பவர், 'இதுபற்றிப் போப்பாண்டவரின் ஆட்சிப்பீடத்தில் தாம் விசாரித்ததாகவும், அத்தகைய கல்நார் துண்டோ அல் லது, அதன் ஒரு பகுதியோ அங்குப் பாதுகாக்கப்பட்டு வந்த போதிலும், அது குப்ளாகானால் வெகுமதியாகத் தரப்பட்டதாகப் பட்டியலில் இடம் பெறவில்லை என்றும், ஆனால் ஆப்பியன் சாலையில் ஓர் உரோமானியக் கல்லறையில் அது கண்டெடுக்கப்பட்டதெனத் தம்மிடம் கூறப்பட்டதாகவும் சொல்லுகிறார். கல்நார் எத்தனை அருமையான ஒரு பொருள் என்பதையும், கிறித்தவத் திருச்சபையைச் சார்ந்த மிக்க அதிசயமும் கவர்ச்சியுங்

கொண்ட எஞ்சிய பழம் பொருள்களுள் ஒன்றைப் பாதுகாப்பதற்குத் தக்கதாக அது எங்ஙனம் கருதப்பட்டது என்பதையும் காட்டுவதற்கு இக்கதை ஒன்றே போதும்.

நிலக்கரியைப் பற்றிப் போலோ வெறும் விவரங்களைக் கூறுவதோடு நிறுத்திக்கொள்கிறார். சீனாவில் எரியக் கூடிய கற்கள் இருந்தன என்பதை மக்கள் நம்பும்படி செய்வதற்கு அவர் முயலவேண்டியிருந்தது. ஐரோப்பாவின் தென்பகுதியில் நிலக்கரியின் உபயோகம் அறியப்படாதிருந்த அக்காலத்தில் இக்கருத்தை ஒப்புக் கொள்வது மிகக் கடினம்தான். சீனாவெங்கிலும் 'மலைகளிலிருந்து படலங்களாகத் தோண்டி எடுக்கப்பட்ட ஒருவகைப் பெரும் கறுப்புக் கற்கள் காணப்பட்டன என்றும், அவை விறகுக் கட்டைகள்போல் எரிகின்றன' என்றும் 'மாலை வரையில் அவற்றை நெருப்பிலிட்டு நன்றாகப் பற்றவைத்துவிட்டால் மறு நாட் காலையிலும் கொஞ்சம் நெருப்பைக் காணும் வகையில் இரவு முழுவதும் அவை நன்றாகக் கனன்று கொண்டிருக்கும் என்று உறுதியாகக் கூறுகிறேன்' என்றும் அவர் குறிப்பிடுகிறார். சீனர்கள் நிலக்கரியை உபயோகிப்பதற்குரிய காரணத்தையும் அவர் விளக்குகிறார். அவர்கள் மரக்கட்டைகளையே உபயோகிப்பதாக இருந்தால் அவை போதா. அந்த அளவுக்குச் சீன மக்களின் எண்ணிக்கை மிகுதியாக இருந்ததாம். அவர்கள் வாரத்திற்கு மூன்று முறையேனும் வெந்நீரில் குளித்தாக வேண்டும். மழைக்காலத்திலோ தினந் தோறும் அப்படிச் செய்தாக வேண்டும். ஒவ்வொரு பணக்காரனுக்கும் வீட்டில் ஒரு சூட்டடுப்பு உண்டு. ஆதலால் நிரம்ப எரிபொருள் வேண்டியிருந்தது. கீழ்க் கண்ட கூற்றுடன் அவருடைய விவரம் முடிகின்றது. 'இந்தக் கற்கள் வீடுகட்டுவோரால் பயன்படுத்தப்படுவதில்லை. எரிப்பதைத் தவிர வேறு எதற்கும் அவை

பயன்படுவதில்லை.' ஆசிரியர் தன் கருத்தைத் தெளிவு படுத்த மிகவும் சிரமப்படவேண்டியிருந்தது என்பதையும், பிறரை நம்பவைக்க முடிந்ததா என்பதில் ஆசிரியருக்கே உறுதிப்பாடு இல்லை என்பதையும் இதிலிருந்து எவரும் உணரக்கூடும்.

பதின்மூன்றும் அத்தியாயம்

# குப்ளாயின் வேட்டை

காகானுடைய வேட்டையை விவரிப்பதில் போலோவுக்கு மிகுந்த மகிழ்ச்சி. ஒவ்வோராண்டிலும் செப்டம்பர் முதல் பிப்ரவரி வரை குப்ளாகான் பீகிங்கிலேயே இருந்தார் என்றும், மார்ச்சு மாதத்தில் தென் கிழக்குத் திசையை நோக்கிப் பெரும் படையுடன் சென்று பீகிங்கிற்கும் கடலுக்குமிடையே பெருமதில் தொடங்கும் பகுதியில் வேட்டையாடினுர் என்றும் ஆசிரியர் குறிப்பிடுகிறுர். (அவருடைய நூலில் பெருமதிலைப் பற்றிய குறிப்பு அடங்கியிருக்கவில்லை என்பதை இங்கே இடையீடாகக் கூற விரும்புகிறேன். இது விடுபட்டது விநோதமாக இருக்கிறது. ஏனெனில், இப்பொருள் வாசகர்களுக்கு ருசிகரமாக இருந்திருக்கக் கூடும் என்பது எவரும் கருதக்கூடியது. அவர் செய்த பிரயாணங்களிலிருந்து அவர் அவ்வழியே சென்றிருக்கவேண்டும் என்று தெரிவதால் நிச்சயமாக அதைப் பல முறை பார்த்திருக்க வேண்டும். இந்த விஷயத்தைப் பொறுத்த வரையில் இது தவறுதலாக விடுபட்டிருக்கக்கூடும். ரஸ்டி-செல்லோ எழுதப் போலோ தனது நூலின் வாசகத்தைச் சொல்லிக்கொண்டிருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே சில சுவையான பகுதிகளை அவர் கவனிக்காமல் விட்டிருக்கக் கூடும். அல்லது ஒரு வேளை, ‘ஒரு மதில், கலேயிலிருந்து கான்ஸ்டாண்டிநோபிள் வரை நீண்டிருந்தால் எப்படியிருக்குமோ அப்படியிருந்தது இம்மதில்’ என்று சொன்னுல் அது நம்பத்தகாததென்பதால் தாம் கேலிக்குள்ளாக வேண்டியிருக்குமே என்று அஞ்சியும் போலோ இதை விடுத்திருக்கலாம்).

வேட்டைக்கான முயற்சி மிகப்பெருமளவில் நடை பெற்றது. குப்ளாயிடம் கரடிகளையும் மான்களையும் வேட்டையாடும் நாய்க்கூட்டம் இருந்தது. காட்டில் வாழும் கழுதைகளையும் பிற பெரும் பிராணிகளையும் அழிப்பதற்காக அவர் சிறுத்தைகளையும் காட்டுப் பூனை களையும் வைத்திருந்தார். மிகுந்த அபாயகரமான வேட்டையில் புலிகளையே அவர் பயன்படுத்தினர். நம்பமுடியாத அளவுக்கு இது மிகவும் வியப்புக்குரிய தாகத் தோன்றலாம். ஏனெனில் புலிகளைப் பழக்க முடியாதென்று நாம் எண்ணுகிறோம். ஆனால் அவர் அவற்றைப் பயன்படுத்தினர் என்பதில் ஐயமில்லை என்று தோன்றுகிறது. வேட்டை நாய்கள், சிறுத்தை கள், காட்டுப்பூனைகள், புலிகள், இவற்றைத் தவிர கழுகு களையும் வைத்திருந்தார். ஓநாய்கள், நரிகள், காட் டாடுகள், மான்கள் இவற்றிற்கெதிராக இவை பயன் படுத்தப்பட்டன. பறவைகளை வேட்டையாடப் பல வகைப் பருந்தினத்தையும் பயன்படுத்தினர்.

இத்தகைய வேட்டைப் படையெழுச்சிகளுள் ஒன்றின் காட்சி இதோ. யானையின்மீது மரத்தினால் செய்யப்பட்ட அறையில் அமர்ந்தபடி குப்ளாகான் ஏற்றிச் செல்லப் படுகிறார். இதை நாம் முன்பே குறிப்பிட்டுள்ளோம். இதன் உட்புறம் தங்கத்தகடுளால் வேயப்பெற்றுள்ளது. வெளிப்புறம் புலித்தோல் போர்த்தப்பட்டுள்ளது. இளம் வயதில் நல்ல சவாரி செய்தவர் என்றாலும், இப்போது வாத ரோகத்தினால் மிகவும் அல்லற்படுவதனால் இந்த முறையில்தான் அவர் வேட்டையாடச் செல்வது வழக்கம். அவருடைய கால்கள் சில சமயம் வீங்கி விடுவதுண்டு. ஒருவகை மீன்தோலால் செய்யப்பட்ட பாத அணிகளை அவர் உபயோகித்தார் என்று சொல்லப் படுகிறது. இது தனது வாதரோகத்தினால் ஏற்படும் வீக்கத்தைக் குறைக்கும் என்று அவர் எண்ணினர். சில சமயங்களில் அவருக்கு வலி அதிகமாக இருந்தது

உண்டு. அப்போது மந்திரோச்சாடனங்களால் அதைப் போக்க முயன்றதும் உண்டு.

தன்னைச் சார்ந்த பிரபுக்களும், வேட்டைக்குப் பருந்து வளர்ப்போரும், வேட்டையாடுவோரும், தனது யானைகளின் பக்கத்தில் சவாரி செய்துவர, பீகிங்கை விட்டு இரண்டு மூன்று நாட்கள் பிரயாணம் செய்த பின்னர், வேட்டை மிருகங்கள் நிரம்பியுள்ள சமவெளியில் நடுப் பகுதியுள் மன்னர் புகுந்து செல்வார். ஒரு முறையாகிலும் மார்க்கோ இத்தகைய கூட்டத்தில் ஒருவராக இருந்திருக்கவேண்டுமெனத் தெரிகிறது. ஐயாயிரம் வேட்டை நாய்கள் ஏவி விடப்பட்டன என்று அவர் சொல்கிறார். 'அவை அனைத்தும் ஒரே வரிசையில் சென்றுகொண்டிருக்கும். வரிசையின் ஒரு கோடியிலிருந்து மறுகோடிக்குச் செல்ல ஒரு நாள் ஆகும். எந்த மிருகமும் அவைகளிடமிருந்து தப்ப முடியாது. இது போன்ற சந்தர்ப்பத்தில் உண்மையிலேயே வேட்டை நாய்களும் வேட்டைக்காரர்களும் செயலாற்றுவதைப் பார்ப்பதே விநோதமான காட்சியாக இருக்கும். இந்தப் பெரும் எண்ணிக்கையுள்ள நாய்களுள் ஒரு கூட்டம் கரடியைத் துரத்தியும், மற்றொன்று மானைப் பின்தொடர்ந்தும், ஒரு சமயம் இங்கும், ஒருசமயம் அங்குமாக வேட்டை மிருகங்களின் மீது பாய்ந்தோடுவதைக் காணலாம். உண்மையிலேயே இது பார்த்துக் களிக்கக் கூடிய ஒரு விளையாட்டு.'

புலிகள் ஏவிவிடப்படுவதையும் அவர் பார்த்தார். மூடப்பட்ட வண்டிகளில் அவை கொண்டுவரப்பட்டன. வண்டியில் ஒவ்வொரு புலியுடனும் ஒரு சிறு நாய் இருக்கும். நாயும் புலியும் சிறந்த நண்பர்களாகக் காட்சியளித்தன. நூற்றுக்கணக்கான வேவுகாரர்களுள் எவராகிலும் ஒருவர், தகுந்த வேட்டைப் பிராணி ஒன்றைக் கண்டவுடன், வண்டியினின்றும் புலியை அவிழ்த்து விடுவார். அது வேட்டைப் பிராணியை

நோக்கி, மெல்ல அதன் கண்ணில் படாமற் செல்லும். பெரும் கொம்புகளையே ஆயுதங்களாகத் தாங்கி நிற்கும் காட்டெருமைகளின் மீது இக்கொடிய விலங்குகள் நடத்தும் கடுந்தாக்குதலைக் காண்பது இத்தகைய வேட்டைகளில் காணப்படும் ஒரு சிறந்த கிளர்ச்சியூட்டும் நிகழ்ச்சியாகும். இவையா இத்தனை சாதுவாகப் பழக்கப்பட்டிருக்கின்றன என்பதை நம்ப இயலாத அளவுக்கு அவை அந்த நேரத்தில் அத்தனைக் கொடூரமாகக் காட்சியளிக்கின்றன. ஏனெனில் வேட்டைக்காரர்கள் கூப்பிட்டவுடன் அவை அப்படியே நின்று விடுகின்றன.

பெரும் பருந்துகளுங்கூட வியக்கத்தக்க ஒரு காட்சியாகும். 'எந்த ஓநாயும் அவற்றினின்றும் தப்பித்துக் கொள்ள முடியாது. ஒரு பெரிய மானின் மீது உட்கார்ந்து அதன் ஈரலைப் பிடுங்கி எறிந்து கீழே வீழ்த்தக் கூடிய ஆற்றல் அவைகளுக்கு உண்டு.'

பெரிய பிராணிகளை வேட்டையாடுவதற்கிடையே பல முறை பருந்து வேட்டைகளும் நிகழும். "இதற்கு நிகரான விளையாட்டு உலகிலேயே இல்லை" என்று மகிழ்ச்சி பொங்கக் கூறுகிறார் போலோ. ஆசிரியர் சொல்கிறார்: யானையின் மீதுள்ள காகான் தனது அறையில் அமர்ந்தவாறே சென்றுகொண்டேயிருப்பார். கீழே சவாரி செய்து வருகின்ற பிரபுக்களுடன் சன்னல் வழியாகப் பேசிக்கொண்டிருப்பார். அப்போது அவர்களுள் ஒருவர் "அதோ கொக்குகள்" என்று உரக்கக் கத்துவார். உடனே குப்ளாகான் கீல்களில் பொருத்தப்பட்டுள்ள தனது அறையின் மேல் விதானத்தைத் தூக்கி எறிந்து விடுவார். சாதாரணமாகத் தனது பக்கத்திலேயே பத்துப் பன்னிரண்டு பருந்துகளை அவர் வைத்துக் கொண்டிருப்பார். அவற்றுள் ஒன்றை கொக்குகளை நோக்கி எறிவார். "பெரும்பாலும் அவர் காணும் தூரத்திலேயே வேட்டைப் பிராணி வீழ்த்தப்

படும். இந்த வகையில் அவர் தனது அறையில் அமர்ந் திருந்தபடியோ, அல்லது படுக்கையில் படுத்திருந்த படியோ, தூரத்தில் மேலே ஒரு பொழுதுபோக் கான மிக உயர்ந்த வேட்டையை நடத்துவார்''. விண்ணில் நடக்கும் நிகழ்ச்சியை வசதியாகப் பார்ப் பதற்கேற்ப அவர் சாய்ந்து கொண்டிருப்பதை நமது மனக்கண் முன்பு காணவேண்டும். ''இத்தனை கேளிக் கையும் குதூகலமும், இத்தனை அரிய வாய்ப்புகளும் பெற்ற ஒருவர் எந்தக் காலத்திலும் இருந்திருக்கக்கூடு மென்றோ இனி இருக்கக்கூடுமென்றோ நான் நம்பவில்லை'' என்று ஆசிரியர் கூறுகிறார்.

பத்தாயிரம் கூடாரங்கள் அடங்கிய சக்கரவர்த்தியின் பாசறை ஒரு பெரும் நகரம் போல் தோன்றியது. அது கடலருகே அமைக்கப்பட்டிருக்கவேண்டுமெனவும் தோன்றுகிறது. ஆயிரம் பேர் அமரக்கூடிய அளவில் கொலுவீற்றிருப்பதற்கேற்ற ஒரு பெரும் கூடாரமும் இருந்தது. அது மூன்று கம்பங்களின் மீது நிறுத்தப் பட்டுப் புலித்தோல்களால் மூடப்பட்டும், உட்புறம் கறுப்பும் வெள்ளையும் கலந்த ஒரு வகை மான் தோலால் பொருத்தப்பட்டும் உள்ளது. 'சேபிள்' என்று கூறப் படும் ஒருவகை மான் தோலால் செய்யப்பட்ட நீண்ட சட்டை, சுமார் ஆயிரம் தங்க நாணயங்கள் மதிப்புள்ளது. 'எர்மைன்' என்றுசொல்லக்கூடிய வண்ணத்தோல் அதனி னும் மிகுந்தவிலையுள்ளதாகையால் கூடாரத்தின் உள்ளே பொருத்தப்பட்டுள்ள தோலின் மதிப்பை எண்ணிப்பார்க் கவும் இயலாது எனவும் போலோ தெரிவிக்கிறார். கூடாரக்கயிறுகள் பட்டினால் செய்யப்பட்டவை. கொலு மண்டபமாக விளங்கும் கூடாரத்தையும், அதையடுத்து அதே அளவில் அலங்காரமாக அமைந்துள்ள காகானின் சொந்த அறைகள் எனக்கூறப்படும் கூடாரங்களைச் சுற்றிலும், பெண்களுக்கும் முக்கிய பிரபுக்களுக்குமான கூடாரங்கள் இருந்தன. இத்தகைய வேட்டைகளின்

போது குழுமியுள்ள மக்களின் மொத்த எண்ணிக்கை, ஒரு மாநகரத்தின் மக்கள் எண்ணிக்கையை ஒத்திருந்தது. 'ஏனெனில் அவர்கள் மரபுக்கேற்ப ஒவ்வொருவரும் தத்தம் குடும்பத்தார் அனைவருடன் அங்கிருந்தனர்.'

மே மாத இறுதிவரை குப்ளாகான் இந்த வியக்கத்தக்க மோகனப் பாசறையில் இருந்து வந்தார். ஒவ்வொரு நாளும் ஏரிகள், ஆறுகள் இவற்றின் ஓரத்திலுள்ள பிரம்பு நாணல்களிடையேயாகிலும், காட்டன்னங்கள் வாழும் சமவெளிப் பிரதேசங்களிலாகிலும், பருந்து வேட்டையாட அவர் செல்வது வழக்கம். அவரது பரிவாரத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் தனக்கென ஒரு பருந்து உண்டு. வேட்டைக்குரிய பிராணிகள் கணக்கற்றவை எனத் தோன்றுகிறது. அவை மிகுந்த கவனத்துடன் காப்பாற்றப்படுவதே அதன் காரணமாகும். அப்பகுதியில் வாழும் மக்கள் எவருக்கும் திருட்டு வேட்டையாடும் துணிச்சல் இல்லை. சாலையோரத்தில் ஏதேனும் ஒரு பிராணி தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டாலும், உலகமே வந்தெய்துவதாயினும் அதைத் தொடமாட்டார்கள். மக்கள் தங்கள் மன்னரின் உத்தரவுக்கு அவ்வளவு தூரம் கீழ்ப்படிந்திருந்தனர்.

மே மாத இறுதியில் குப்ளாகான் பீகிங்கில் சிறிது காலம் தங்கியிருப்பதற்காகத் திரும்புவார். அப்போது அவர் மற்றுமொரு மகத்தான விருந்துபசரணையை நிகழ்த்துவார். பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்த ஐரோப்பியர்களுக்கு இத்தகைய மேன்மையான ஒரு பிரபுவின் வாழ்க்கை எளிதில் புரிந்துகொள்ளக்கூடியதாயிருந்தது. ஏனெனில், ஐரோப்பியப் பிரபுக்களும் இதைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவில் செலவு செய்தபோதிலும், இதே முறையில்தான் விநோதப் பொழுதுபோக்குகளில் ஈடுபட்டிருந்தனர். கல்வியறிவு பெற்ற சீனர்களின் பொழுதுபோக்குகளான காவியம்,

ஓவியம், கையெழுத்துக்கலை, ஆகியவற்றைப் பற்றி மார்க்கோ போலோ எழுதக்கூடியவரல்லர். ஒரு வேளை எழுதக்கூடியவராக இருந்து எழுதியிருந்தாலும் அவற்றைக்காட்டிலும் மிகுதியாகவே மார்க்கோபோலோவின் குப்ளாகானைப் பற்றிய வருணனையைப் பெருமளவில் பலரும் விரும்பியிருப்பர்.

பதினான்காம் அத்தியாயம்

# மார்க்கோ போலோவின் யுன்னன் கண்காணிப்பு பற்றிய யாத்திரை

ஆசிரியரின் 'நூலில்' இந்த இடத்தில்தான் போலோவைத் தூதராகப் பயன்படுத்திக்கொள்ளக் காகான் தீர்மானித்ததாகக் கூறப்பட்டுள்ளது. பிரிவி கௌன்சிலில் துணை அலுவலராக நியமிக்கப்பட்ட பின்னர், எவ்வளவு காலம் கழித்து இது நிகழ்ந்தது என்பது கூறப்படவில்லை. ஆனால் இந்த இடைக்காலம் மிக நீண்டிருந்ததாகத் தோன்றவில்லை. ஒரு வேளை இரண்டு மூன்றாண்டுகளுக்குட்பட்டதாக இருக்கலாம். மதிநுட்பம் வாய்ந்த மனிதர், பல மொழிகளை அறிந்தவர், என்றெல்லாம் அவரது புகழ் ஓங்கியிருந்தது. உண்மையை ஒளியாமல் உரைக்கக் கூடியவர் என்பதையும் அவர் மெய்ப்பித்துவிட்டார். அகமதின் தீய நடத்தையைப் பற்றிய வரலாற்றில் இதை நாம் கண்டிருக்கிறோம். காகான் தனது ஆளுகைக்குட்பட்ட வெகு தூரப்பகுதிகளைப் பற்றி நம்பத்தக்க செய்திகளைப் பெறவேண்டியது மிக அவசியமாக இருந்தது. அப்பகுதிகளில் மேற்பார்வை செய்யும் பொருட்டு, தானே பிரயாணம் செய்ய இயலவில்லை. ஆகவே தன்னிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளைத்தான் அவர் நம்பவேண்டியிருந்தது. அவ்வப்பகுதிகளைப் பற்றிய அறிக்கைகளைத் தணிக்கை செய்வதற்குத் தலைநகரத்தினின்றும் ஒருவரை அனுப்பிக் கண்காணித்து வரச் செய்தல் சீன நாட்டில் எப்போதும் மேற்கொள்ளப்படும் ஒரு முறையாகும். குப்ளாகானுக்கு முன்னும் பின்னும் வாழ்ந்த மாமன்னர்கள் எல்லோரும், இதன் பொருட்டு அரசாங்கத் தூதர்களை நீண்ட சுற்றுப் பிரயாணங்கள் செய்துவர அனுப்பிவந்தனர்.

தனது புதிய நியமனம் குறித்துத் தனக்குத் தரப்பட்ட கட்டளைகளின் திட்டவட்டமான தன்மையைப் பற்றிப் போலோ எதையும் கூறவில்லை. ஆனால் அவர் ஓர் அசல் அரசாங்கத்தூதர் என்பது தெளிவு. நிதி நிலைமை, மக்கள் நிலை, அந்தந்தப் பகுதியை ஆள்வோரின் நடத்தை, ஆகியவற்றைப்பற்றி அறிக்கை தயாரித்தளிப்ப தோடு, ஆட்சி முறையை ஒட்டியதோ அல்லாததோ, ருசிகரமான எந்த விஷயங்களைப் பற்றியும் அறி வதிலே விழிப்புடன் இருந்து தகவல் தரவேண்டிய கடமை அவரிடம் எதிர்பார்க்கப்பட்டது. சில தூதர் கள் தங்கள் பணிகளை முடித்துக்கொண்டுத் திரும்பி வந்து மிக ருசிகரமான விபரங்களை விடுத்து உப்புச்சப் பற்ற அறிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் காகானுக் குத் திருப்தி ஏற்படாத வகையில் நடந்து கொண்டனர் என்பதைத் தான் கண்டறிந்ததாகப் போலோ கூறுகிறார். இன்று ஒரு சிறந்த செய்தித்தாள் நிருபராவதற்கு வேண்டிய தனித்திறமைகள் அவரிடம் அன்றே இருந்தன. காகானுக்கெனவும் தான் தெரிந்து கொள்ளவேண்டு மென்ற நோக்கத்துடனும் தான் கண்டவற்றிலிருந்து குறிப்புக்கள் எடுப்பதென உறுதிபூண்டிருந்தார். இடைக்கால வெனிசு நகரத்தாரான இவருக்கு இது ஒரு சிறந்த பணி. ஏனெனில் ஐரோப்பியரால் என்றுமே கேள்விப்பட்டிருக்கக்கூட இயலாத சில பகுதிகளுக்கு அவர் அதிகாரத்துடனும் வசதியுடனும் பிரயாணம் செய்ய இது வகை செய்தது. பிற்காலத்தில் எழுந்த இவரது நூலின் முக்கிய நோக்கமே இத்தகைய இடங் களை வருணிப்பதே ஆகும்.

அவர் முதலில் சிறந்த முறையில் பிரயாணம் செய்த இடம் யுன்னுன் என்பதாகும். பீகிங் நகரத்தையும் குன்-மிங் என்று இன்று அழைக்கப்படுகிற யுன்னுன் மாகாணத்தின் தலைநகரத்தையும் இணைப்பது, நாம் இது வரை கூறிவந்துள்ள சிறப்புமிக்கப் பெருஞ்சாலைகளுள்

ஒன்று. நாளொன்றுக்கு இருபத்தைந்து மைல் வீதம் சவாரி செய்தால் யுன்னனை அடைவதற்கு மூன்றரை மாதங்களாகுமென நான் கணக்கிட்டிருக்கிறேன். அச் சாலையில் நான்கு மாதங்களுக்கு மேல் சென்றதாகப் போலோ கூறுகிறார். ஆனால் அவர் அடிக்கடி வழியிலே தங்கிச் செல்லவேண்டி இருந்தது. உண்மையிலேயே, நான்கு மாத காலத்தில் அந்த இடத்தை அடைந்தார் என்றால் சில பகுதிகளில் அவர் சிரமப்பட்டுச் சவாரி செய்திருக்கவேண்டும் என்பதைத்தான் அது காட்டு கிறது.

தென்மேற்காகச் செல்லும் இந்த நெடுஞ்சாலை, தொடக்கத்தில் ஜன நெருக்கம் மிகுந்த வளமான சீனத் தாயகத்தின் பழம் பகுதி வழியாகச் சென்றது. போலோ மிகுந்த ஆடம்பரத்துடன் சென்றிருக்கவேண் டும். ஏனெனில் அரசாங்கத் தூதருக்கு எப்போதும் ஒரு பெரிய பரிவாரம் உண்டு. அவர் வந்தவுடன் அவரைச் சந்தித்து வேண்டிய வசதிகளைச் செய்துகொடுப்பது மாகாண கவர்னர்களுக்கும் நகரத்திலுள்ள நீதிவழங்கு வோருக்கும் உரித்தான கடமை. சக்கரவர்த்தியிடம் நேரே அறிக்கை சமர்ப்பிக்கும் அதிகாரம் பெற்ற உயர் பதவியில் உள்ள ஒருவர் ஆகையால், அவருடைய நல் லெண்ணத்தைப் பிறர் பெற முயலும் அளவுக்கு அவர் ஒரு பெருமகனாக விளங்கினார். அவர் சென்றவிடமெல் லாம் வரவேற்கப்பட்டும், புகழப்பட்டும், சீனர் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களைப்பற்றி உணர்த்தப் பட்டும் இருந்தார் என்று நாம் உறுதியாக நம்பலாம். எனினும் அவர் பிரயாணம் செய்த வழியில் உள்ள பெரு நகரங்களைப்பற்றியும், அவற்றின் கலாசார முக்கியத்து வம் பற்றியும், புகழ்மிக்க வரலாற்றைப்பற்றியும், அவர் ஒரு சிறிதும் செய்தி தராமலிருப்பது வியப்பாக இருக்கி றது. இருந்தபோதிலும் இப்போது கிடைத்துள்ள அவரது உரைக்கோவை, அவர் எங்கெல்லாம் சென்றார்

என்பதை நாம் திட்டமாக அறியும் வண்ணம் மிகத் தெளிவாக இருக்கிறது.

இனி வரும் பகுதிகளில், அவர் குறிப்பிடுகின்றவற்றுள் சுவைமிக்க செய்திகளைக் கூறி, அவற்றின் கருத்து என்ன என்பதை விரிவாக எடுத்துக் கூறும் வகையில் விமரிசனம் செய்ய முற்படுகிறேன். பீகிங்கை விட்டுப் புறப்பட்ட பின்னர், பத்து மைல்கள் சவாரி செய்து போலோ ஒரு பாலத்தை அடைந்தார். சீனுவிலேயே மிக அழகானது என்று வருணிக்கப்பட்டுள்ள அப்பாலம் இன்றும் இருந்து வருகிறது. 'கலங்கல் ஆறு' என்னும் பொருள் கொண்ட 'ஹூன்ஹோ' என்னும் பெயருடைய ஆற்றின் குறுக்கே இது உள்ளது. இப்பாலம் அதன் அளவினுலும் அழகினுலும் அவரைத் திகைக்கவைத்துவிட்டது. குதிரை மீது சவாரி செய்யும் பத்து மனிதர்கள் தோளொடு தோள் சேர்ந்து அப்பாலத்தின் வழியே செல்லலாம். அப்பாலத்தில் சுமார் பன்னிரண்டுக்கு மேற்பட்ட வளைவுகள் இருந்தன என்று தெரிகிறது. கைப்பிடிச் சுவர்களில் இடையிடையே பளிங்கினுல் செய்யப்பட்ட சிம்மங்கள் இருந்தன.

பாலத்தைக் கடந்த பிறகு திராட்சைத் தோட்டங்களும், பூங்காக்களும், நீரூற்றுக்களும் நிறைந்த வளப்பு மிக்க விவசாய நிலப்பகுதிகளினூடே செல்லுகிறது சாலை. முப்பது மைல்களுக்கப்பால் முதலில் காணப்படும் முக்கிய நகரம் சோ-சௌ ஆகும். அது பூவேலைகளுக்குப் பெயர் பெற்றது. அங்குள்ள உணவு விடுதிகள் நேர்த்தியானவை. நகரத்திலிருந்து ஒரு மைலுக்கப்பால் சாலை இரு கிளைகளாகப் பிரிந்து செல்லுகிறது. இடது கிளை, கடற்கரையை ஒட்டிச் சீன நாட்டின் கிழக்கு மாகாணங்களுக்குச் செல்லுகிறது. போலோ மேற்கு நோக்கி வலது கிளைப்பாதை வழியே சென்றுர்.

பத்து நாட் சவாரியில் பாவ்-டிங், செங்-டிங், தை-யூவான் ஆகிய அடுத்தடுத்துத் தொடர்ந்து வரும் பல்

வேறு நகரங்களையும், வாணிபமும் தொழிலும் கொழிக்கும் செழிப்பான பல ஊர்களையும் கடந்து சென்றார். ஆங்கு நிலங்கள் நெருக்கமாகப் பயிரிடப்பட்டிருந்தன. நிலப் பெருமக்களின் மாளிகைகள் அவற்றினிடையே ஆங்காங்குக் காணப்பட்டன. சக்கரவர்த்தியின் போர் வீரர்களுக்குத் தேவையான போர்க்கருவிகளும், தளவாடங்களும் உண்டுபண்ணப்படும் தொழிற் பண்ணையாகவும் அப்பகுதி விளங்கியது.

தை-யூவான் என்னுமிடத்திலிருந்து ஏழு நாட்கள் பிரயாணத்திற்குப் பின் போலோ குழுவினர், பிங்யாங் என்னும் பழைய நகரத்தை அடைந்தனர். பொற்காலத்தில் வாழ்ந்த முப்பெரும் சக்கரவர்த்திகளுள் ஒருவரான யா-ஓ சக்கரவர்த்தியின் இருப்பிடமாக அந்நகரம் இருந்ததெனப் பரம்பரையாகக் கருதப்பட்டுவந்தது. இச்சக்கரவர்த்தியின் மதிநலமும், நல்லியல்புகளும், கன்பூசியசைப் பின்பற்றியவர்களுக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்தன. இந்நகரத்திலுள்ள ஒரு பழைய அரண்மனைக்குத் தான் சென்றதாகவும், அது முற்பட்ட ஓர் அரசவம்சத்தினரைச் சார்ந்ததெனவும், அவ்வம்சத்து வேந்தர்கள் பலரின் உருவப்படங்கள் அடங்கிய கூடம் ஒன்று அங்கிருந்ததாகவும் போலோ குறிப்பிடுகிறார். அவருடைய நூலிலிருந்து நாம் அறிய முடிந்தவரை, அங்குள்ள பாதுகாவலர்களால் பழம் பொருட்சாலையைச் சுற்றிப் போலோ அழைத்துச் செல்லப்பட்டார் என்று தெரிகிறது. அவர்கள் அவ்விடத்தைப்பற்றிய சில பழங்கதைகளைச் சொல்லியிருக்கின்றனர். குறிப்பாகப் பூங்காவில் காற்று வாங்கிக்கொண்டிருக்கும் போது, சக்கரவர்த்தி ஒருவர் ஒரு சிறு வண்டியில் அமர்ந்திருக்கப் பெண்டிர் அவ்வண்டியை இழுத்துச் செல்வது வழக்கம் என்பது அவற்றுள் ஒன்று. ஆனால் ஆங்கிருந்த புகழ்மிக்க வானவெளி ஆராய்ச்சிக்கூடத்தைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை.

தான் பிங்-யாங்கிலிருந்து இருபத்தைந்து மைல்களுக் கப்பால் மஞ்சள் நதியைக் கடந்ததாகவும், அதன் குறுக்கே பாலம் அமைக்க இயலாத அளவுக்கு அது மிகுந்த அகலமும் ஆழமும் கொண்ட பெருநதியா யிருந்தது எனவும், போலோ கூறுகிறார். மேலும் பத்து நாட்கள் தென்மேற்குத் திசையிலே தொடர்ந்து சென்ற அவர், ஹான் வம்சத்தினருக்கும் அதன் பின்னர் வந்த வம்சத்தினருக்கும் தலைநகரமாயிருந்த சங்-ஆன் என்னும் சிறப்பு வாய்ந்த நகரத்தை அடைந்தார். சீனுவிலே பீகிங்கிற்கும் நான்கிங்கிற்கும் அடுத்தபடியாக மிகவும் புகழ்பெற்றது அந்நகரம். மஞ்சள் நதியின் உபநதியான 'வேய்' நதிக்கரையிலிருந்து தொடங்கிப் படிப்படியாக மேலெழுகின்ற சரிவுகளில் அது அமைந்துள்ளது. நாடக அரங்கில் இருப்பதுபோல் அதன் மதில்களும் கட்டடங் களும், ஒன்றன்மேல் ஒன்று அடுக்கடுக்காக அமைந்திருந் தன. இன்னும் அப்பால் பூங்காக்களும், அரண்மனே களும், செயற்கை ஏரிகளும், தோட்டங்களும் இருந்தன. போலோ சீன வரலாற்றைப்பற்றி அறிந்திருக்கவில்லே. ஆனுல் சங்-ஆன் நகரத்தைப் பற்றி அவரால் கூறமுடி கிறது. 'அது ஒரு மிகச் சிறந்த அழகான நகரம். பழங் காலத்தில் உயர்ந்ததும், வளம் மிக்கதும், பலம் பொருந்தி யதுமான ஒரு நாட்டின் தலைநகரமாக அது இருந்தது. அங்கிருந்துகொண்டு ஒரு காலத்தில் மிகுந்த புகழும், செல்வமும், அதிகாரமும் படைத்த பேரரசர்கள் பலர் ஆண்டுவந்திருக்கின்றனர்.' போலோவின் காலத்தில் குப்ளாகானின் புதல்வர்களுள் ஒருவரான 'மங்கலாய்' கவர்னராக இருந்து வந்தார். மங்கலாய் வெனிசு பெருமகனுன இவரை வரவேற்றபோது, இந்தப் பழைய தலத்தில் உள்ள சுவைமிக்க பல விஷயங்களே அவருக்கு எடுத்துக்காட்டியிருக்கக்கூடுமென நாம் கருத இட முண்டு. இந்நகரம் ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்கு முன்னர் ஹான் வம்சத்தின்கீழ்ப் புகழ் வாய்ந்ததாக

இருந்தது மட்டுமின்றிப் போலோ, அங்குச் செல்வதற்குச் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு 907-இல் முடிவடைந்த டி-யாங் வம்சத்தினர் ஆண்டபோது உலகிலேயே கல்விக்கும், இலக்கியத்திற்கும், கலைக்கும் தலை சிறந்த நிலைக்களனாக இருந்திருக்கிறது. அந் நகரத்தின்பால் நம்மை ஈர்ப்பதற்குரிய மற்றொரு காரணம், டி-யாங் வம்சத்தினர் ஆண்ட காலத்தில் அது கிறித்தவத் திருச்சபையின் நெஸ்தோரியப் பிரிவிற்குத் தலைமையிடமாக இருந்தது என்பதாகும். பதினேழாம் நூற்றாண்டில் சீனாவில் வசித்துவந்த ஏசு சங்கத்தார்கள், 1625–ஆம் ஆண்டு சங்-ஆன் நகரத்தில் சிலுவைக் குறியோடு கூடிய ஒரு கற்பலகையைக் கண்டெடுத்தபோது மிகவும் கிளர்ச்சியுற்றார்கள். இக்கற்பலகையில் 1780 எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அதில் கிறித்தவக் கோட்பாடுகளின் சுருக்கம், 635-ஆம் ஆண்டு 'அலோபென்' என்ற நெஸ்தோரியப் பாதிரியாரின் வருகையைப் பற்றிய குறிப்பு, கிறித்தவ மதத்தைப் பொதுவிடங்களில் போதிப்பது பற்றிய சக்கரவர்த்தியின் ஒப்பம், ஆகியவை அடங்கியிருந்தன. போலோ சங்-ஆனுக்குச் சென்றபோது அப்பலகை ஒருவேளை அங்கில்லாமல் இருந்திருக்காலம். ஏனெனில், காகானின் ஆட்சிக்குட்பட்ட பிற பகுதிகளில் கிறித்தவமதத்தின் நெஸ்தோரியப் பிரிவு தொடர்ந்து இருந்து வந்ததெனினும், சங் ஆன் பகுதியில் டி-யாங் வம்சத்தின் பிற்காலத்தவரால் அது ஒடுக்கப்பட்டுவிட்டது.

மங்கலாயை அவரது அரண்மனையில் சந்தித்ததாகப் போலோ கூறுகிறார். நகரத்திற்கு வெளிப்புறத்தில் மேற்கேயுள்ளது அவ்வரண்மனை. அது ஏரிகளும் தோட்டங்களுமடங்கிய பூங்காவினால் சூழப்பட்டிருந்தது. அவ்வரண்மனை நகரத்தின் பாங்கிலே கட்டப்பட்ட பழங்காலத்திய அரசகுடும்பத்து அரண்மனைகளுள் ஒன்றாக இருந்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது.

அங்கே பல பெரிய அலங்கார மண்டபங்கள் இருந்தன வென்றும், அவை முழுவதும் உருக்குப் பொன்னுல் பூசப் பட்டு அலங்கார வேலைப்பாடு கொண்டனவாக இருந் தனவென்றும், மார்க்கோ கூறுகிறுர். நமக்குத் தெரிந்த மட்டில் பிற்காலச் சீனச் சக்கரவர்த்திகளின் அரண்மனை கள் இந்த முறையில் உட்புறம் தங்கத்தால் அழகுபடுத் தப்படவில்லை. தங்கக் கட்டிக்குப் பதில் தங்கத் தகடு களும் தங்கமுலாமும் பின்னர் பயன்படுத்தப்பட்டன.

மங்கலாயின் அரசாங்கம், நீதியும், நேர்மையும், கொண் டிருந்ததென்றும், மக்கள் அவரிடம் அன்பு செலுத்தி னர் என்றும், போலோவின் அறிக்கைக் கூறுகிறது. அரண்மனைக்கு வெளியே பூங்காவில் அவரது பலம் பொருந்திய துருப்புக்கள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இவரைக் காட்டிலும் பெரிய மங்கோலிய் மாகாண கவர்னர்கள் எப்படி வாழ்ந்துவந்தனர் என்பதை நமக்குக் காட்ட இந்தச் சிறு வருணனையே போதுமானது. சீனரின் சிவில் ஆட்சிமுறையில் ராஜப்பிரதிநிதிகளாக அவர்கள் இருந்தனர் என்பதைக் காட்டிலும் மன்ன ருக்குக் கீழ்ப்பட்ட சிற்றரசர்கள் போல் இருந்தனர் என்றே கொள்ளலாம்.

சங்-ஆனில் சில காலம் தங்கிய பின்னர் ஷென்-சி மாகாணத்திலிருந்து தென்கிழக்காகச் செகுவானுக்குச் செல்லும் பெருவழியே போலோ புறப்பட்டுச் சென்ருர். ஏற்கனவே சுமார் ஆயிரம் மைல்களைப் போலோ கடந்து விட்டார். யுன்னுனைச் சேர்ந்து, அவர் பிரயாணத்தை முடிப்பதற்கு இன்னும் ஏறக்குறைய ஈராயிரம் மைல் கள் இருந்தன. இதுவரை அவர் கடந்துள்ள மாகா ணங்கள் வளம் மிக்கவையும், நாகரிகத்தில் முன்னேறி யவையும் ஆகும். இப்போது அவர் கடக்கத் தொடங்கி யுள்ள பகுதி அவற்றினின்றும் முற்றிலும் மாறுபட்டது. மேலும் அப்பகுதி மலைகள் நிறைந்தது. இதிலுள்ள முதற் பெருநகரம் ஹான்-சுங் என்பதாகும். பிற்கால

ஹான் வம்சத்தைத் தொடங்கிவைத்தவர், அவரது எதிராளியான சைங்-யு என்பவரால் இவ்விடத்திற்குத் தான் நாடு கடத்தப்பட்டார்.

அவ்விடத்திற்குச் செல்லும் சாலே, மலேயின் குறுகிய பள்ளத்தாக்கை ஒட்டிப் பெரும் பாறைகளே வெட்டி அமைக்கப்பட்டிருந்தது. செங்குத்தான பாறைகளே யொட்டி அச்சாலே குறுகிச் சென்றது. சாலேக்கு ஐந்நூறு அடிகள் கீழே நுரையைத் தள்ளிக் கொண்டு ஒரு நீர்த்தாரை ஓடிக்கொண்டிருந்தது. அச்சாலே இன்றும் இருக்கிறது. இதன் வழியாகத்தான் ஹான் வம்சத்தைத் தொடங்கியவர் கி.மு. சுமார் 200-ஆம் ஆண்டில் சீனுவை வெல்லப் புறப்பட்டார். இப்பகுதியில் வாழும் மக்கள் தங்கள் முன்னேர்களேப் போல் பட்டையும் உற்பத்திப் பொருள்களேகளேயும் கொண்டு வியாபாரம் செய்யவில்லே. அவர்கள் காடு திருத்தப்பட்ட பகுதிகளில் பயிர்த்தொழில் செய்தும், வேட்டையாடியும், வாழ்ந்துவரும் எளிய மக்களாவர். அப்பகுதியில் ஏழ்மை நிலவிய போதிலும், அங்குள்ள அஞ்சல் நிலேயங்கள் பெரியவையாகவும், வசதியுள் ளவையாகவும் இருந்தன.

நாற்பத்தைந்து நாட்கள் பிரயாணம் செய்த பின்னர் போலோ செங்-டு நகரத்தை அடைந்தார். யாங்ட்சே நதியின் உபநதியான மின்-ஹோ முதலான ஆறுகளுக் கிடையே அந்நகரம் அமைந்துள்ளது. இன்றைய சுங்-கிங் நகரத்திற்கு வடக்கே நூற்றைம்பது மைலுக்கு அப்பால் இத்தலம் இருக்கிறது. செங்-டு ஒரு காலத்தில் சக்கர வர்த்தி வசிக்கும் தலேநகராக இருந்தது. வாங்-சீன் என்னும் சக்கரவர்த்தியின் கல்லறை அடங்கிய மேற்கு வாயிலுக்கு வெளிப்புறம் உள்ள மேடையைப் போலோ பார்த்திருக்கவேண்டும். தான் புகழ் வாய்ந்த யாங்ட்சே நதியினருகே இருப்பதாக அவர் கருதினர். உண்மை யிலேயே மின்-ஹோ என்பதுதான் பெருநதியென அவர்

நம்பினுர். யாங்ட்சேயைப் பற்றி அவர் கூறுகிருர். 'இந்த நதியில் குழுமியுள்ள கப்பல்களின் கூட்டம், அது பற்றிப் படிப்பவரோ, கேட்பவரோ, நம்பக்கூட முடியாத அளவுக்குப் பெருமளவில் இருந்தது. அந்த நதியில் ஏறுமுகமாகவும் இறங்குமுகமாகவும் எடுத்துச் செல்லப் பட்ட வியாபாரப்பொருள்களின் அளவு நம்ப முடியாதது. உண்மையிலேயே அதை நதி என்று சொல்வதைக்காட்டிலும் கடல் என்றே சொல்லிவிடலாம். அத்தனை பெரியது அந்த நதி.'

லான்-செள என்னுமிடத்திலிருந்து வரும் சாலையும் பட்டுச் சாலையும் சந்திக்கும் இடத்தில் செங்-டு அமைந்திருந்ததால், அது ஒரு மிக முக்கியமான வாணிபக் கேந்திரமாக இருந்தது. முக்கிய பாலத்தில் கிடைக்கும் சுங்கவரி நாளொன்றுக்கு ஆயிரம் தங்க நாணயங்களாகும் என்று போலோ கூறுகிருர். செங்-டு நகரம் செசுவான் மாகாணத்தின் தலைநகரம். அங்கிருந்து யுன்னுன் மாகாணத்தின் தலைநகரான குன் மிங் நானூறு மைல் தூரத்தில் உள்ளது. இவை இரண்டிற்கும் இடைப்பட்ட நிலப்பகுதி மிகக் கடினமானது. திபேத்தின் எல்லையை ஒட்டி யாசெள வழியாக மார்க்கோ சென்றிருக்கவேண்டும். சுங்-கிங் வழியாக அங்குள்ள யாங்ட்சே நதியைக் கடந்து, அங்கிருந்து க்வே-யாங் ஊடாகச்செல்லும் பெரும் நெடுஞ்சாலை வழியே சென்று, போலோ குன்மிங்கை அடைந்திருக்கக்கூடும். ஆனுல் அலுவல் காரணமாக இன்னும் சற்று மேற்கே உள்ள யாசெள வழியாகவே அவர் பிரயாணம் செய்யவேண்டியிருந்திருக்குமென்பது கண்கூடு.

அவர் திபேத்தைப் பற்றித் தரும் தகவல் அதிகம் இல்லை. ஆனுல் வேறெந்த ஐரோப்பியரும் இதற்கு முன் இதைப்பற்றி எந்த ஒரு நூலையும் எழுதி வெளியிட்டதில்லை. போலோவுக்கு இப்பரந்த பீடபூமியைப்பற்றி எதுவும் தெரியாது; மேற்கே எண்ணூறு மைல்களுக்கப்

பால், லாசாவுக்குச் செல்லும் இப்பகுதி பனியால் மூடப் பெற்ற சதுப்பு நிலத்தைக் கொண்டது. ஏனெனில் பெரும் மலைத்தொடரின் அடிவாரக்குன்றுகளின் வழியே தான் அவர் பிரயாணம் செய்தார். பள்ளத்தாக்கு களில் மூங்கில்கள் நிறைந்திருந்தன. மூங்கிற்காட்டில் தீ எழுகின்ற அதிசய நிகழ்ச்சியைப்பற்றி அவர் குறிப்பிடு கின்றார். குறுக்கு விட்டம் முப்பது அங்குலம் வரை கொண்ட மூங்கிற்கழி, கணுக்களால் தடுக்கப்பட்ட தொடர்ந்த குடைவறைகள் கொண்டதாக இருக்கிறது. தீப்பிடித்துக்கொள்ளும்போது, இக்குடைவுகளில் உள்ள காற்று சூடாகிறது. ஓரளவு சூடேறியவுடன் அக்காற்று மூங்கிலை வெடிக்கச்செய்கிறது. அப்போது எழும் ஒலி துப்பாக்கியின் ஒலியை ஒத்திருக்கும். சில சமயம் சிறு பீரங்கியின் சத்தத்தைப்போலவும் இருக்கும். முதலில் இவ்வெடிச்சத்தங்களைக் கேட்டபோது மார்க்கோ போலோவுக்குப் பீதியினால் மூச்சே நின்றுவிடும்போல் இருந்ததாம். ஏனெனில் அவற்றைப்பற்றி அவருக்கு முன்பு எதுவுமே தெரியாது. ஆனால் பிறகு அவை பழக்கமாகிவிடவே காதில் பஞ்சைத் திணித்துக்கொள் வாராம். அவருடைய குதிரைகளும்கூடப் பீதியடைந்து ஓடிவிடுவதுண்டு. ஒவ்வொரு சவாரி முடிந்ததும், அவை முளையடித்துக் கட்டப்பட்டிருந்தாலும், அறுத்துக் கொண்டு கண்காணாமல் ஓடிவிடும் என்று மார்க்கோ கூறுகிறார். ஆனால் அவர் குதிரையின் நான்கு கால் களையும் முளைகளிலே சேர்த்துக் கட்டி, அவற்றின் காது களையும் துணியினால் மூடக் கற்றுக்கொண்டு விட்டார். அவையும் இவரைப்போலவே அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பழக்கப்பட்டுவிட்டன. கோடைக்காலத்தில் அவர் பிரயாணம் செய்திருக்கவேண்டும் எனத் தோன்று கிறது. அப்பகுதிகளில் வாழும் புலிகளாலும் அவர் மிகவும் தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டார்.

அங்கு வாழும் மக்கள் மிகவும் பிற்போக்கானவர்

களாக இருந்தனர். பர்மா, சீனு, திபேத்து ஆகிய நாடுகளின் எல்லைகள் சேருமிடத்தில் அமைந்துள்ள இவ்விந்தைப் பகுதியில், அவர் நுழையத் தொடங்கினுர். அம்மக்கள் மங்கோலிய இனத்தவர். ஒவ்வொரு பிரிவினரும் வெவ்வேறு மொழியைப் பேசுகின்றனர். ஒவ்வொரு கூட்டத்தினருக்கும் சிறப்பான கலையும் ஆடையும் உண்டு. அவற்றை இன்றும் அவர்கள் அப்படியே பேணிவருகின்றனர். இப்பிரிவினர் வரலாற்றுக் காலங்களில் எந்தவித மாறுபாட்டையும் அடையவில்லை. மார்க்கோ போலோ அங்குச் செல்வதற்கு 1300 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர்களைப் பற்றிய செய்திகள் நமக்குக் கிடைத்துள்ளன. தற்காலத்திய யாத்திரிகர்கள் பலர் அவர்களைப்பற்றி எழுதியிருக்கின்றனர். அவர்கள் பிற்போக்கானவர் எனினும், கொடிய அநாகரிக மக்கள் அல்லர். ஏனெனில் அவர்கள் நாகரிகம் சிறந்ததல்ல என்ருலும், அவற்றை ஓரளவு பராமரித்துச் சூழ்நிலை இடந்தரும் அளவிற்கு அவற்றைப் பின்பற்றி வந்திருக்கின்றனர்.

திபேத்தின் எல்லையை ஒட்டிப் போலோ சென்றபோது, அந்நாட்டின் மையப்பகுதிகள் எப்படி இருந்தன என்பது பற்றிய கதைகளைக் கேட்டிருந்தார். அவற்றைப்பற்றி அவர் உண்மையிலேயே முற்றிலும் சரியான வகையில் சொல்லியிருக்கிருர். ‘உலகின் அப்பகுதியிலுள்ள அனைவருக்கிடையிலும் மயக்கு வித்தை செய்வதிலும் சோதிடம் கூறுவதிலும் தலைசிறந்தவர்களை அம்மக்களிடையே காணலாம். மந்திர தந்திர வித்தைகளால் அரும்பெரும் வியக்கத்தக்க மாயாஜாலங்களை அவர்கள் செய்தனர். அவற்றைப் பார்த்தவுடனே, ஏன், கேள்வியுற்றவுடனேகூட, எவரும் வியப்பில் ஆழ்ந்து விடுவர். ஆகவே இந்த நூலில் அவற்றைப் பற்றி நான் எதையும் கூறப்போவதில்லை. அவற்றைக் கேட்டால் மக்கள் ஆச்சரியப்படுவார்கள். ஆனுல் பயன் ஒன்றுமில்லை.’

திபேத்திலிருந்து குப்ளாகான் வரவழைத்த மாயாவிகளைப் பற்றி முன்பே குறிப்பிட்டிருக்கிறேன். அவர்கள் கோப்பைகளைப் பறக்க விடுவார்கள். ஆனால் அது ஒரு பொய்த் தோற்றம். அந்நாட்டிற்குச் சென்ற ஒவ்வொரு யாத்திரிகனுமே அங்கு தான் கண்ட அருஞ் சாதனைகளைப் பற்றிய கதைகளை அறிந்துகொண்டு திரும்புவான். நிதானக் கொள்கையுடைய பிரான்சு தேசத்து யாத்திரிகரான மதிப்பிற்குரிய டேவிட் நீல் அம்மையாரே குதிரையின் வேகத்தையும் மிஞ்சக்கூடிய வேகத்தில் நூற்றுக்கணக்கான மைல்கள் பிரயாணம் செய்யக்கூடிய மனிதர்களைத் தான் பார்த்ததாகக் கூறுகிறார். பூஜ்யத்திற்கும் குறைவான சீதோஷ்ண நிலையுள்ள மலைக்கணவாய்களில் ஆடை ஏதுமின்றி வாழும் சக்தி படைத்த சில துறவிகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இதற்குக் காரணம் மனத்தை ஒருமுகப்படுத்தி உடலுக்குள்ளே அவர்கள் வெப்பத்தை உண்டுபண்ண முடிவதேயாகும் எனக் கூறுகிறார். திபேத்தைப் பற்றிய இத்தகைய கதைகள் எப்போதுமே பரப்பப்பட்டு வந்திருக்கின்றன. ஆதலின் போலோ இவை பற்றிக் குறிப்பிட்டிருப்பது எவருக்கும் வியப்பூட்டுவதாகாது. பரந்த பொட்டை வெளியில் ஓடும் விந்தை மாந்தரைப் பற்றியும், பனிக்கட்டி உறைந்த பூமியில் கோடை நாளில் இருப்பது போன்ற தோற்றத்தை உண்டுபண்ணக்கூடிய மாயவெப்பத்தைப் பற்றியும், போலோ கேள்வியுற்றது உண்மைதான். ஆனால் தனது வெனிசு நண்பர்களிடத்தில் இத்தகைய கதைகளை அவர் சொல்லத் துணியவில்லை. ஆசியத் தலைவரான காகானைப் பற்றியும், பெருநகரங்களைப் பற்றியும் போலோ கூறும் மிக எளிய சொற்கோவை கூட, நம்பத்தகாத பொய்களைக் கூறுபவர் போலோ என்ற குற்றச்சாட்டுக்கு அவரை இலக்காக்கும் நிலையில் இருந்தது.

திபேத்தின் எல்லையை ஒட்டித் தெற்கு நோக்கிப் பத்து நாட்கள் பிரயாணம் செய்த பின்னர், பெருமை பொருந்திய யாங்ட்சே நதியின் பிறப்பிடத்திற்கு அவர் வந்து சேர்ந்தார். வேறு பெயர் கொண்டு அவர் அந்த நதியை அழைத்தபோதிலும், அது யாங்ட்சே நதி என்பதை அவர் உணர்ந்திருந்தார். நீண்ட நதிகள் கடலை நோக்கிச் செல்லும்போது அவை வழியில் பல பெயர்களை மேற்கொள்வது இயல்புதானே. யாங்ட்சே நதியானது யுன்னுன் மாகாணத்தின் எல்லையாக அமைந்திருந்தது. `நதியை இவர் கடந்த இடம் தலை நகரான குன்மிங்கிற்கு மேலே சுமார் நூற்றைம்பது மைலில் இருந்தது. (இவரது நூலில் இத்தலைநகரம் 'யாசி' என்று குறிப்பிடப்பட்டுள்ளது) இந்தத் தூரத்தை அவர் ஐந்து நாட்களில் கடந்தார். இதுபற்றி அவர் கூறுவதாவது, 'இப்பகுதி உயர்ந்த ஜாதிக்குதிரைகள் வளர்க்கப்படும் இடம். அங்குள்ள மக்கள் விவசாயம், கால்நடை, இவற்றைக்கொண்டு வாழ்கிறுர்கள். அவர் களுக்குரிய மொழியை எளிதில் புரிந்துகொள்ள முடியாது. ஐந்து நாட்பிரயாணத்திற்குப் பின் தலை நகரை அடையலாம். அது ஒரு மிக உயர்ந்த குறிப் பிடத்தக்க நகரம். ஆங்குப் பல வணிகர்களும் தொழி லாளிகளும் இருக்கின்றனர்.'

செங்-டூவையும் சங்-ஆனையும் ஒப்புநோக்கும்போது குன்மிங் நிச்சயமாக ஒரு சிறு மாகாணத் தலைநகர்தான் எனினும், நீண்டகாலம் காடுகளையும் அடர்ந்த மலைகளை யும் கடந்து வந்த போலோவிற்குக் குன்மிங் ஒரு விந்தை நகரமாகக் காட்சியளித்தது.

## செங்-டூவைப் பற்றிய குறிப்பு

செங்-டூவின் மேற்கு வாயிலுக்கு வெளிப்புறத்தே உள்ள மேடு, 1943-ஆம் ஆண்டு தோண்டப்பட்டதென் பதை அறியும்போது, அச்செய்தி நமக்குச் சுவையூட்டுவ

தாக இருக்கிறது. மார்க்கோ போலோ அவ்விடத்திற்குச் சென்றபோது டா-ஷூவின் சக்கரவர்த்தியான வாங்-சீன் என்பவரின் கல்லறை அங்கிருப்பதாகக் கருதப்பட்டது. இருப்பினும், இவ்வுண்மையை மங்கோலியர் காலத்திற்குப் பிறகு மக்கள் மறந்து விட்டனர். பிறகு கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சூ-மா-சியாங்-ஜூ என்னும் புகழ் மிக்க கவிஞன் கவிகள் யாத்த இடமான 'ல்யூட் டெர்ரெஸ்' என்னும் இடமே அது என மக்கள் எண்ணினர். 1943-ஆம் ஆண்டு அவ்விடம் தோண்டப்பட்டபோது அக்கல்லறை கண்டுபிடிக்கப்பட்டது. அதனுள் வாங்-சீன் சக்கரவர்த்தி நாற்காலியில் உட்கார்ந்த வண்ணம் உள்ள ஒரு சிலை காணப்பட்டது. இந்தச் சக்கரவர்த்தி மார்க்கோ போலோ அங்குச் செல்வதற்கு முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்பு 918-ஆம் ஆண்டில் இறந்தவர். அவர் தீரச்செயல் புரிந்த ஓர் அதிசய மனிதர். கழுதைகளைத் திருடுவதில் தொடங்கிய அவருடைய வாழ்க்கை, கி. பி. 907 முதல் 925 வரை இருந்துவந்த டா-ஷூ சாம்ராஜ்யத்தைத் தோற்றுவிப்பதிலே முடிந்தது. இந்த சாம்ராஜ்யம் சீனுவின் மேற்குப்பகுதியில் பெருமளவைத் தன்னுள் கொண்டிருந்தது.

பதினைந்தாம் அத்தியாயம்

# யானைப் போர்

திபேத்திய எல்லையிலுள்ள குறுகிய பள்ளத்தாக்கு களையும், செங்குத்தான பாறைகளையும் விடுத்து, குன்-மிங்கிற்கு அருகிலுள்ள சமவெளிக்குப் போலோ வந்த போது, நாகரிக உலகத்திற்குத் திரும்பிவந்ததுபோலப் போலோவிற்குத் தோன்றியது. ஏன், நமக்குங்கூடத் தான் போலோ அவ்விடத்தை அடைந்தது, முற்றிலும் புதியதும் கண்காணாததுமான பகுதிகளிலிருந்து பழக்கப் பட்ட இடங்களுக்கு அவர் வந்திருப்பதாகத் தோன்று கிறது. இதற்குக் காரணம், குன்-மிங் புகழ்மிக்க பர்மியச்சாலையில் இருப்பதுதான். இச்சாலை இராவதி நதியில் தொடங்கி, இன்று ஷான் மாகாணங்கள் என்று வழங்கப்படுகின்ற பகுதிகளின் வடபுறமாகச் சென்று, யுன்னனின் மேற்குப்பகுதியிலுள்ள 'தாலி' என்னு மிடத்தை அடைகிறது. அங்கிருந்து அது மேலும் குன்-மிங், சுங்-கிங் ஆகிய நகரங்களுக்கும் செல்கிறது. இரண்டாம் உலகப்போரின்போதுதான் அச்சாலை மோட்டார் வண்டிகள் செல்லுவதற்கேற்ற முறையில் செப்பனிடப்பட்டது. ஆனல் மிகப் பழங்காலத்தி லிருந்தே அது கோவேறு கழுதைகள் செல்லும் பாதை யாக இருந்து வந்தது. இன்றுள்ள சாலையும் பழைய பாதையை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளது. சமீப ஆண்டுகளில் அவ்வழியே மோட்டாரில் சென்ற பல ஆங்கிலேயர்கள் எந்த இயற்கைக் காட்சிகளைக் கண்டனரோ, அவற்றையே போலோவும் குன்-மிங்கி லிருந்து பர்மாவிற்கு மேற்கு நோக்கிச் சென்றபோது கண்டிருக்கிருர். ஏனெனில் போலோ காலம் முதல் இன்று வரை அப்பகுதியில் ஒரு சிறிதும் மாறுதல் இல்லை.

எனினும் ஒரு முக்கிய அம்சத்தில் அது மாறுபாடடைந்திருக்கிறது. போலோ அங்குச் செல்வதற்குச் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு வரை, 'நான் சாவோ' என்று அழைக்கப்படும் ஷான் ராஜ்யத்தின் தலைநகராகக் குன்-மிங் இருந்து வந்தது. 1252-ஆம் ஆண்டு மங்கோலியர் அதைக் கைப்பற்றினர். அன்று முதல் ஷான் இனத்தார் பெருமளவில் தெற்கு நோக்கிக் குடிபெயரத் தொடங்கினர். இன்று வழங்கப்படும் ஷான் ராஜ்யங்களிலும் பர்மாவிலும் நுழைந்து, பின்னர் சயாமிலுள்ள 'க்மர்' ராஜ்யத்தையும் வெற்றி கொள்வதற்காகத் தெற்கு நோக்கிச் சென்றனர். குன்-மிங் என்னும் இடத்தில் ஷான் இனத்தவரைப் போலோ சந்தித்தார் என்று நாம் ஓரளவு உறுதியாக நம்பலாமெனக் கருதுகிறேன். ஆனால் அவர்களுடைய கவர்னரும், அலுவலர்களும், கோட்டைக்காவலர்களும் மங்கோலியரே. மிகக் கடினமான மொழி என்று போலோவால் குறிப்பிடப்படுவது ஷான் மொழிதான். உண்மையிலேயே அப்பகுதியில் உள்ள மங்கோலிய மொழிகளுக்குள் அம்மொழி மிகக் கடினமான ஒன்று. தங்கள் தாயகத்திலே தோல்வியுற்ற ஷான் இனத்தவரைப் பற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் பௌத்தர்கள் என ஆசிரியர் கூறுகிறார். ஆயினும் அவர்களிடையே முகம்மதியர்களும், ஒரு சில நெஸ்தோரியக் கிறித்தவர்களும் இருந்தனர். இன்று போலவே அன்றும் அவர்கள் ரொட்டி இன்றி அரிசி உணவையே உண்டனர். அரிசியிலிருந்து தயாரிக்கப்பட்ட பானத்தையும் அருந்தினர். மீண்டும் இப்போதுள்ளது போலவே அவர்களுடைய கைத்தொழில்களுள், உப்புக்கிணற்றிலிருந்து உப்பு வடிக்கட்டி எடுப்பது ஒன்றாகும். அவர்களிடம் உயர்ரக மட்டக்குதிரைகளும் இருந்தன. இம்மாகாணத்தின் தலைமை அதிகாரி, குப்ளாகானின் புதல்வர்களுள் ஒருவர்.

இவ்விளவரசரிடம் தனக்கிருந்த வேலையை முடித்துக் கொண்டு, போலோ பர்மா சாலை வழியே மேற்கு நோக்கி இருநூற்றைம்பது மைல்களுக்கப்பாலுள்ள தாலி என்னும் இடத்தை அடையும் பொருட்டுப் பத்து நாட்கள் தொடர்ந்து சென்றார். அக்காலத்தில் யுன்னுன் இரண்டு அரசாங்கப் பகுதிகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவ்விடத்தில் குப்ளாகானின் மற்றொரு மகனே பேரனே இருப்பதைக் கண்டார். செல்லும் வழியில் வாழ்க்கையிலேயே முதன் முறையாக அவர் முதலைகளைப் பார்த்திருப்பார் போலும். இந்தப் பிராணிகளைக் குறித்துப் போதிய அளவு தெளிவாகவே வருணித்திருக்கிறார். 'அவை, பருமனில் பெரும் பீப்பாயை ஒத்திருக்கின்றன. அவற்றுள் பெரியவை பத்துச் சாண் சுற்றளவுள்ளவை.' ஆனால் அவற்றிற்கு இரண்டு கால்களே உள்ளன என்றும், உடலின் பிற் பகுதி பாம்பைப்போல் நெளியும் தன்மையது என்றும் அவர் கருதினார். அவற்றை முதலைகள் என்று கூறாமல் பாம்புகள் எனவே அவர் கூறுகிறார். ஏனெனில் அக் காலத்தில் அவர்கள் மொழியில் 'முதலை' என்பதற்குரிய சொல் இல்லை. மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் கிழக்கு ஆசியாவில் பிரயாணம் செய்த போர்ச்சுகீசிய யாத்திரிகரான மெண்டஸ் பிண்டோ என்பவர், அப்போது கூட முதலைகளைப் பாம்புகள் எனவே குறிப் பிட்டுள்ளார். அவை எப்படி கூரிய கம்புகளால் குத்திப் பிடிக்கப்பட்டன என்பதை விவரிக்கிறார் போலோ. அவற்றின் முக்கிய உபயோகம் அவற்றின் ஈரலில் இருப்பதாகவும், அது மிகவும் அருமையான மருந்தெனக் கருதப்பட்டு வந்ததாகவும் அவர் கூறுகிறார். அது வெறிவிலங்குக் கடியினால் ஏற்படும் பைத்தியம், மகப் பேறு, சொறிசிரங்கு முதலான நோய்கள், ஆகியவை நேரும்போது கொடுக்கப்படுவதாகவும் கூறுகிறார். அது பெருமளவில் பொருட் செலவாகும் சிகிச்சை. சில

பிராணிகளின் ஈரலுக்கு மருந்தின் குணம் உண்டென்னும் நம்பிக்கை இப்பகுதிகளில் நிலவிவந்ததை நானே கண்டிருக்கிறேன். ஒரு பெரும் சலுகை காட்டுவதாகக் கருதி எனக்கு ஒரு சமயம் கரடியின் ஈரலைக் கொடுத்தனர்.

முதலை, புலியைச் சந்திக்க நேர்ந்தால் எத்தகைய உக்கிரமான சண்டை நிகழும் என்பதையும் போலோ விவரிக்கிறார். தாய்ப்புலி வெளியே சென்றிருக்கும் போது, குட்டிகளைப் பிடிக்கலாமென எண்ணி, முதலை புலிக்குகைக்குள் திருடச் செல்லுமாம். தாய்ப்புலி எதிர் பாராத வகையில் திரும்பி வந்து விட்டால் மரணம் நேரும்வரை இரண்டும் சண்டையிடும். போலோ கூறுவது போல் முதலைதான் எப்போதும் வெல்லும்.

குன்-மிங்கிற்கும் தாலிக்குமிடையே சென்றுகொண்டிருக்கும்போது அப்பகுதியில் வாழும் மக்களை அவ்வப்போது அவர் சந்திப்பதுண்டு. நீண்ட அங்கபடிகள் பூட்டப்பெற்ற நல்ல குதிரைகளின்மீது சவாரி செய்தோரைப் பற்றியும், பக்குவம் செய்யப் பெற்ற தோற்கவசத்தை அவர்கள் அணிந்திருப்பது பற்றியும், அவர்கள் ஏந்திச் சென்ற கேடயங்கள், ஈட்டிகள், திருகுவிற்கள் ஆகியவை பற்றியும் ஆசிரியர் கூறுகிறார். அவர்கள் அம்புகள், விடம் தீட்டப்பெற்றவை. அவர்களைப் பற்றிய மற்றுமொரு வேடிக்கையான செய்தியையும் அவர் குறிப்பிடுகிறார். முக்கிய மனிதர் எவரேனும் அவர்களுடன் தங்க நேர்ந்தால், அவர்கள் முடியுமானால் அவரைக் கொன்றுகூட விடுவார்கள். நானறிந்தவரை அதற்குரிய நோக்கம், தங்களைக் காப்பதற்கு அவரது ஆவியை நியமித்துக் கொள்ளலாம் என்பதுதானே யொழிய, அவரைக் கொள்ளையடிப்பது அல்ல. இந்த மூடக் கொள்கை இன்றுவரை இப்பகுதியில் இருந்துகொண்டே வருகிறது. பர்மாவில் இதை நான் கண்டிருக்கிறேன். நான்

அங்கிருந்தபோது ஓர் ஆங்கிலப் பெருமகனார் இதே காரணத்திற்காகக் கொல்லப்பட்டார்.

பரந்த ஏரிக்கரையிலே அமைந்துள்ள தாலி நகரமே பர்மா சாலையில் போலோ சென்றடைந்த மேற்குக் கோடியான இடம் என்று சொல்லிவிடமுடியாது. அங்கிருந்து மேலும் மேகாங் நதியை நோக்கி அவர் சென்றார். அந்த நதி மேலும் மேற்கே சுமார் அறுபது மைல்களுக்கப்பால் ஓர் ஆழ்ந்த குறுகிய பள்ளத்தாக்கில் ஓடிக்கொண்டிருந்தது. அவர் பல்லாயிரம் அடிகள் கீழே சென்று மலேரியாவுக்குப் பெயர்போன இடத்தில் அந்நதியைக் கடந்து மேலே வெகுதூரத்தில் உள்ள உயர்ந்த பீடபூமியை அடைந்தார். பிறகு மேகாங் நதிக்கும் அதேபோல் புகழ்பெற்ற சால்வீன் நதிக்கும் இடையே உள்ள இருபத்தைந்து மைல் பரப்பின் நடுவே இருக்கும் யுங்-சியாங் சமவெளியை நோக்கி வளைந்து வளைந்து செல்லும் பாதை வழியாக இறங்கிச் சென்றார். அங்குக் குடியிருப்பவர்கள் ஷான் இனத்தவர் அல்லர், ஆனால் மங்கோலியப் பிரிவினர். ஒரு வேளை அவர்களைச் சார்ந்தவர்களே இன்று பர்மாவில் போர்த்திறனுக்குப் பெயர் பெற்ற காசின் மக்களாக இருக்கக்கூடும். மற்ற மலைவாழ் இனத்தவரைப் போலவே, அவர்களிடத்திலும் சில விநோதமான பழக்கவழக்கங்கள் காணப்பட்டபோதிலும், அவர்களுக்குரிய முறையில் அவர்களும் நாகரிகம் படைத்தவர்கள்தாம். அவர்களைப்பற்றிப் போலோ கூறுகிறார். 'ஆண்மக்கள் தங்களுக்கேற்ற பாணியில் பெருமகனாராக இருக்கின்றனர். போருக்குச் செல்லுதல், வேட்டையாடப்போதல், அல்லது பருந்து வேட்டையாடுதல் இவற்றைத் தவிர அவர்கள் வேறெதையும் செய்வதில்லை. போரில் பிடிபட்ட அடிமைகளின் உதவி கொண்டு பெண்மக்களே எல்லா வேலைகளையும் செய்து வருகின்றனர்.' அழகின் சின்னமாக ஆண்மக்கள் தங்கள்

கைகளிலும் கால்களிலும் கடக உருவில் பச்சை குத்திக் கொண்டனர். அழகிய தோற்றத்திற்காகத்தான் போலும் தங்கள் பற்களின் மீது விசித்திரமான தங்கக் கவசத்தை அணிந்திருந்தனர். ஏனெனில் உண்ணும் போது அவற்றை அவர்கள் எடுத்துவிடுகின்றனர். ஷான் மக்களுக்கு இருப்பதுபோல காசின் மக்களுக்கு எழுத்து வடிவம் பெற்ற மொழி இல்லை. அண்மைக் காலம் வரை, இது உண்மையாகவே இருந்து வந்தது. அவர்களுடைய வைத்தியர்கள் மருந்தைக் காட்டிலும், மாயவித்தையையே அதிகம் நம்பியிருந்தனர். யுங்-சியாங்கில் உள்ள வைத்தியர்கள் எப்படிப் பிணி தீர்க்கும் தொழிலை நடத்தி வந்தனர் என்பது பற்றிப் போலோ பெருமளவில் முழு விவரங்களையும் தருகிறார். பரவச நிலையில் மந்திரங்களை உச்சரிப்பது அவர்களுடைய முறை. பழங்கால ஜப்பானியரைப் போன்று உயர்ந்த நாகரிகம் படைத்த மக்களுள்ளிட்ட கீழை நாடுகளில் இத்தகைய வைத்தியமுறை பெருமளவில் கையாளப் பட்டது. நோயாளியின் இல்லத்திற்கு மாந்திரிகர்கள் வருவார்கள். என்ன கோளாறு, வலி எங்கிருக்கிறது என்று அவர்கள் அவனைக் கேட்பார்கள். பிறகு அவர்கள் ஆட்டம் ஆடிக்கொண்டு, இசையுடன் பாடத் தொடங்குவார்கள். இது கொஞ்ச நேரம் ஆன பின்னர் வைத்தியர்களுள் ஒருவர் தன்வசமிழந்த நிலையை அடைந்து உயிரற்றவர் போல் கீழே விழுந்து விடுவார். அப்போது அவருக்கு ஆவேசம் வந்துவிடும் என்று போலோ கூறுகிறார். சித்து அவருடைய உடலில் புகும் போது உடலை உலுக்கும் நடுக்கம் தோன்றும். சித்தின் ஆவேசம் வைத்தியரை நன்றாகப் பிடித்தவுடன் அவருடைய உதவியாளர்கள் நோயாளியின் நோயைக் குறித்து வினவுவார்கள். சித்து, பதில் பேசுவது போல் தோன்றும். ஒரு பொல்லாத தேவதைக்கு நோயாளி குற்றமிழைத்திருப்பதால் அத்தேவதையைத் திருப்தி

செய்யும் பொருட்டு, ஆடுகளைப் பலியிட்டு, வாசனைச் சேர்க்கை பெற்ற மதுபானத்தை நிவேதனம் செய்ய வேண்டும் என்ற நியதியை வைத்தியர் விதிப்பார். அப்படியே அவை கொண்டுவரப்பட்டு, அந்தக் கோப முற்ற தேவதை இருப்பதாகக் கருதப்படும் இடத்தில் வைக்கப்படும். அப்போது அதிகமாகவே கூத்தும் பாட்டும் உடன் நிகழும். சிறிது நேரத்திற்குப் பிறகு கூத்து உச்ச நிலையை அடையும்போது, ஏனைய மாந்திரீக வைத்தியர்களுள் ஒருவர், ஆவேசம் வந்தவராக வாயில் நுரையைக் கக்கிக்கொண்டு கீழே விழுந்து புரளுவார். அந்தப் பொல்லாத தேவதை நோயாளியை மன்னித்து விட்டதா என்று மற்றவர்கள் கேட்பார்கள். 'சில சமயம் 'ஆம்' என்றும், சில சமயம் 'இல்லை' என்றும் அவர் பதில் சொல்வார்.' 'இல்லை' என்று சொன்னால் மேலும் என்ன செய்யவேண்டும் என்பதையும் அவர் கூறுவார். இறுதியாக மாந்திரீகத் தலைவர், நோயாளி சீக்கிரம் குணமாகி விடுவார் என்று கூறுவார். பின்னர் விருந்து நடைபெறும். உடனே நோயாளியும் நன்னிலைக்கு வந்துவிடுவார். அப்பகுதிகளை அடுத்த பர்மாவின் பின்தங்கிய பகுதிகளில் இத்தகைய மாந்திரீக முறை இன்றும் இருந்துவருகிறது. இச் சடங்கின் பல்வேறு அம்சங்களும் பெரும்பாலும் அப்படியே இருக்கின்றன.

மேகாங், சால்வீன் நதிப் பள்ளத்தாக்கிற்கிடையிட்ட பகுதியில் வாழ்ந்த காசின் மக்களைக் குறித்து இதுவரை பார்த்தோம். சில ஆண்டுகளுக்கு முன்னர் யுங்-சியாங் என்னுமிடத்தில் நடந்ததாகப் போலோ குறிப்பிடும் ஒரு முக்கிய நிகழ்ச்சியைக் குறித்து அவர் இப்போது விவரிக்கப் போகிறார். சால்வீனுக்கு மேற்கே பர்மிய இராஜ்யம் தொடங்கிற்று. பர்மியர், வரலாறும் இலக்கியமும் படைத்த ஓர் இனத்தவர். அவர்களுடைய நாகரிகம் அவர்கள் முறைப்படிப் பார்த்தால் ரம்மிய

மானதுதான். சீன நாகரிகத்தோடு அதை ஒப்பிட்டுச் சொல்வதற்கில்லை. ஆனால் சமவெளியில் வாழும் மங்கோலியரின் நாகரிகத்தைக் காட்டிலும் அது உயர்ந்தது. இதுவரை போலோ நமக்குக் கூறிவந்த மலைப்பகுதி நாகரிகங்களைக் காட்டிலும் இது உண்மையிலேயே மிகவும் முற்போக்கானது. இராவதி நதிக் கரையில் உள்ள தலைநகரான 'பாகன்' தனிச்சிறப்புடைய ஒரு தலம். அங்கு, ஹீனயானம் என்று சொல்லப்படுகிற பழமையான புத்தமதம் மிகுந்த பய பக்தியுடன் அனுட்டிக்கப்பட்டுவந்தது. எனவே அந்த நகரம், மதச்சின்னங்கள் அடர்ந்த காடெனவிளங்கியது.

யுங்-சியாங்கிற்குப் போலோ செல்வதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்பு, கப்பங்கட்டுமாறு சக்கரவர்த்தி விடுத்த கோரிக்கையை உதறித்தள்ளிய பர்மிய வேந்தர், மங்கோலிய ஆட்சியுடன் மோதிக்கொள்ள நேர்ந்தது. தனது எல்லைக்கருகில் உள்ள எல்லா அரசர்களுக்கும் குப்ளாகான் இத்தகைய கோரிக்கை விடுவதுண்டு. ஒரு நிகழ்ச்சி மற்றொன்றின் காரணமாகி, இறுதியில் எல்லைக்கப்பாலுள்ள யுன்னுன் மாகாணத்திற்கு, மன்னர் சேனையை அனுப்பி வைத்தார். அங்கு நிகழ்ந்த போர், ஆசிரியரின் நூலில் உள்ள மிகச் சிறந்த பகுதிகளுள் ஒன்று. போலோ கூறுவது போல அப்போர் யுங்-சியாங்கிற்குப் புறத்தே நிகழவில்லை. அங்கிருந்து துருப்புக்களின் மூன்று நாட் பயண தூரத்தில் 'தைபிங்' நதிப் பள்ளத்தாக்கில் உள்ள சமவெளியில் நடைபெற்றது. வரலாற்றாசிரியர்கள் போர் நிகழ்ந்த காலம் 1277 என்று கூறுவர். போலோ எப்போது யுன்னுனில் இருந்தார் என்பது நமக்குத் திட்டவட்டமாகத் தெரியாது. அவர் பீகிங்கை 1275-இல் அடைந்ததால் இக்காலம் 1279-க்கு முன்னர் இருந்திருக்க முடியாது. ஒருவேளை சற்றுப் பின்னர் இருந்திருக்கலாம். எப்படி இருந்தாலும் போர் நடந்த

இடத்தில் அவர் இல்லை. அவருக்கு இச்செய்தியை அறிவித்தவர் எவர் என்பதை நாம் அறியோம். ஆனால் பர்மிய அரசரே சேனையைத் தலைமை தாங்கி நடத்திச் சென்றதாக அவர் சொல்லியிருக்கிறார். இது உண்மையல்ல. பாலி மொழியில் அரசருக்கு 'நரதிஹபதே' என்ற விருது உண்டு. இவ்விருதைத் தாங்கிய அரசர் தனது முதல் தளபதியின் தலைமையில் சேனையை அனுப்பி வைத்தார். பர்மிய வீரர்கள் 'பாமோ' என்னுமிடத்தில் ஒன்று திரட்டப்பட்டனர். அவ்விடம் தலைநகரிலிருந்து முன்னூற்றைம்பது மைல் வடக்கே உள்ளது. தைபிங் பள்ளத்தாக்கு வழியே மேல் நோக்கி எழுபது மைல்கள் கடந்து வீரர்கள் யுன்னானுக்குள் நுழைந்தனர்.

யுன்னான் மாகாணத்தின் எல்லையிலே, யுங்-சியாங்கி லிருந்து குறைந்தது எண்பது மைல்கள் இப்பாலேயே, போர் நிகழ்ந்தது. யுங்-சியாங்கில் போர் நிகழ்ந்திருக்க வேண்டுமானால் பர்மியர்கள் சால்வீன் நதியைக் கடக்க வேண்டியிருந்திருக்கும். அவர்களிடம் இரண்டாயிரம் போர் யானைகள் இருந்தன. அத்தனைப் பிராணிகளும் அந்த நதியைக் கடந்து செல்வது மிகக்கடினம். ஏனெனில் அந்த நதி உலகிலுள்ள மிகப் பெரியவையும் மிக விரைவில் செல்லக்கூடியவையுமான நதிகளுள் ஒன்று. போலோவுக்குத் தவறான செய்தி தரப்பட்டுள்ளது. ஆனால் யுங்-சியாங் சமவெளியும் உண்மையிலேயே போர் நிகழ்ந்துள்ள தைபிங் பள்ளத்தாக்குச் சமவெளியும் ஒன்றையொன்று மிகவும் ஒத்ததாக இருந்திருக்கலாம். ஆகவே போரைப் பற்றிய அவருடைய வருணனை பொய்யாகவில்லை.

அப்போர், மரபுக்கு முற்றிலும் முரண்பட்டது. ஏனெனில் யானைகளுக்கும் குதிரைமீதமர்ந்த விற்படையினருக்கும் இடையே அது நிகழ்ந்தது. இந்தியாவிலும் பர்மாவிலும் யானைகள் எப்போதுமே படையின் ஒரு

முக்கிய பகுதியாக அமைந்திருந்தன. நமது போர்களில் டாங்கிகள் எப்படியோ, அப்படியே இத்தகைய போர் வித்தையில் யானைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. யானை தன் முதுகில் ஓர் 'அரணைத்' தாங்கிச் செல்வதாகக் கூறுவர். உண்மையில் வில்லையும் ஈட்டியையும் ஏந்திய வீரர்கள் அமரும் கொடுமுடி அது. நமது காலத்தில் டாங்கிகளால் தாக்கப்பட்ட காலாட்படையினர் எப்படியோ, அப்படியே அன்று யானைகளால் தாக்கப்பட்ட காலாட்படையினரும் எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றிலர். பர்மியப் போர்யானைகளுக்கு ஒரு வகை மெல்லிய கவசம் பூட்டப்பட்டிருந்தது. தங்கள் நாட்டிலுள்ள ஈட்டிப்படையினரிடமிருந்தும், திறமையற்ற விற்படையினரிடமிருந்தும், தங்களைக் காத்துக்கொள்வதற்கு அது போதுமானதாக இருந்தது. அத்தகைய காலாட் படையினரால் அவற்றைத் தடுத்து நிறுத்த முடியாது. யானைகள் அவர்களுக்கிடையே புகுந்துவிட்டால், ஐயோ பாவம்! அவற்றின் கொம்புகள், துதிக்கைகள், நசுக்கும் கால்கள், முதுகின் மீதுள்ள விற்படையினர், இவர்களோடு அப்படையினர் ஈடு கொடுக்க முடியாது, தைரியமிழந்து கலங்கியிருக்கும் நேரத்தில் குதிரை வீரர்கள் அவர்களைத் தாக்கி அழித்து விடுவார்கள்.

பர்மியர்கள் இரண்டாயிரம் யானைகள், அறுபதாயிரம் குதிரைகள், மற்றும் காலாட்படைகள் ஆகியவற்றுடன் வருவதாக யுங்-சியாங்கிலுள்ள மங்கோலிய கவர்னரான நசருதீன் கேள்வியுற்றார். அவருடைய துருப்புகள், குதிரை வீரர்களைக்கொண்டிருந்தபோதிலும், அவரை எதிர்நோக்கியிருந்த பிரச்னை கடினமாகத்தான் இருந்தது. காலாட்படையினரிடம் டாங்கிகளின் கவசத்தை ஊடுருவிச் செல்லக்கூடிய ஆயுதம் இருந்தால்தான் அவற்றை எதிர்த்துச் சமாளிக்க முடியும்; நசருதீனின் சேனையில் உள்ள குதிரைமீதமர்ந்து

விற்போர் புரியும் பன்னீராயிரவரிடமும் விற்கள் இருந்தன. அவற்றிலிருந்து செல்லும் அம்புகள் யானைகளின் கவசங்களைத் துளைத்துச் செல்லக்கூடியவை. ஆனால் காரியம் அவ்வளவு எளிதில் நிறைவேறக்கூடியதாக இல்லை. அவர் முன்னெச்சரிக்கை எடுத்துக் கொள்ளவேண்டியிருந்தது. பர்மியரைச் சந்திப்பதற்கு அவர் தைபிங் பள்ளத்தாக்கு வழியே கீழே இறங்கிச் சென்றார். பள்ளத்தாக்கிலிருந்து சமவெளிக்கு இட்டுச் செல்லும் ஓரிடத்தைப் போர்க்களமாகத் தேர்ந்தெடுத்தார். இன்று 'நான்டின்' சமவெளி என்று சொல்லப்படுவது அந்த இடமாக இருக்கலாம்.

பர்மியர்கள் சமவெளியின் மறுபுறத்தை அடைந்தவுடனே, சேனைத்தலைவர் அவர்களைப் போர்முறை வரிசையில் நிறுத்தி வைத்தார்; நடுவில் தமது இரண்டாயிரம் யானைகளையும் நிறுத்தினார்; இரு பக்கங்களிலும் சற்றுப் பின்னால் அறுபதாயிரம் காலாட்படையினரும் குதிரைவீரர்களும் நிறுத்தி வைக்கப்பட்டனர். நசருதீன் அடர்ந்த நெடுமரங்களைப் பின்னணியாக வைத்து, அவற்றின் முன்பு குதிரைமீதமர்ந்து விற்போர் புரியும் பன்னீராயிரம் வீரர்களைப் பரவலாக நிறுத்தி வைத்தார். அவர்களுக்குக் கீழ்க்கண்டவாறு உத்தரவிட்டார். 'வீரர்கள் எதிர்க்க இயலாத அளவுக்கு யானைகள் கடுங்கோபத்துடன் தாக்குமானால் அவர்கள் மரங்களுக்குப் பின்புறமாகச் சென்று பாதுகாப்பான இடத்திலிருந்து அவற்றின் மீது அம்புகளை விடுதல் வேண்டும்.' மேலும் பர்மியர்கள் போரையே தொழிலாகக் கொள்ளாதவர்கள். ஆனால் தம் வீரர்களோ போரையே தொழிலாகக் கொண்ட மிகுந்த அநுபவசாலிகள். அதுவே வெற்றியைத் தங்களுக்குச் சாதகமாகத் திருப்பிவிடும் என்று நசருதீன் எடுத்துக் காட்டினார்.

இந்த ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கும்போது

இரு சேனைகளுக்குமிடையே ஒரு மைல் தூரம் இருந்தது. பர்மியரின் யானைகள்தான் முதலில் சமவெளியை நோக்கி நகரத் தொடங்கின. சிலர் எண்ணுவதுபோல் போர்க்களங்களில் சுடுகின்ற ஆயுதங்கள் உபயோகத்தில் வருவதற்கு முன்னரும், போர் சந்தடியின்றி நடைபெற்றதில்லை. பெரும் பறைகளின் ஒலி, கனத்த சேமக் கலங்களின் முழக்கம், ஆரவாரம், இவற்றின் மூலம் பெரும் ஒலி எழுப்புதல் ஒரு முறையாக இருந்து வந்தது. ஏனெனில் அத்தகைய ஒலி, தாக்குவோரை ஊக்குவிக்கவும், எதிரிகளைப் பயமுறுத்தவும் செய்தது. ஆகவே, யானைகள் மிகுந்த சந்தடிக் குழப்பத்திடையே முன்னேறியதை நாம் கற்பனை செய்துகொள்ளவேண்டும்.

அவை அம்புக்கு இலக்காகும் தூரத்திற்கு நெருங்கும் வரை விட்டுப் பிறகு தங்களுக்கு வழக்கமான போர் முறைகளை மங்கோலியர்கள் கையாளத் தொடங்கினார்கள். இப்போர்முறைகள் எப்போதுமே விரைவாகவும், குழப்பத்தை விளைவிக்கும் விதத்திலும் சேனையை மாற்றியமைப்பதைப் பொறுத்தவை. குதிரைகள் பாய்ச்சலில் போகும்போதே அம்புகளை விடுதல், பக்க வாட்டில் திரும்புதல், நிலைத்து நின்று எய்தல், எதிரி முனையின் குறுக்கே பாய்தல், பின்வாங்குதல், பின்புறமாக எய்தல், விலாப்புறம் திடீரெனப் பாய்தல், சுற்றி வளைத்துத் தாக்குதல், இவையனைத்தும் வெகு விரைவில் நிகழ்வன. ஆதலால் எதிரிகளின் தாக்குதலுக்கு இவர்கள் எளிதில் இலக்காவதில்லை. ஆனால் இந்தத் தடவை இம்முறைகள் பயனளிக்கவில்லை. ஏனெனில் மங்கோலியர்கள் இலக்கிற்கு வேண்டிய தூரம்—சுமார் நூற்றைம்பது கஜங்கள் இருக்கலாம் — குதிரையின்மீது பாய்ந்து சென்றபோது, ஓங்கி உயர்ந்த யானைகளின் முதுகுப்புறத்தில் உள்ள கொடுமுடியினால் அவை பின்னும் உயரமாகக் குதிரைகளுக்குக் காட்சியளிக்கவே, அவை மிகவும் மீதியடைந்துவிட்டன. ஆகவே குதிரை

வீரர்கள் தங்கள் பலத்தினாலோ, சாமர்த்தியத்தினாலோ, அவற்றை நிலைப்படுத்தி ஒத்த முறையில் முன்னும் பின்னும் ஓடும்படிச் செய்ய முடியவில்லை. இவ்வாறு போலோ கூறுகிறார். அவற்றை அடக்குவதிலேயே அவர்கள் ஈடுபடவேண்டியிருந்ததனால், எப்போதும் செய்வதுபோல் கடிவாளங்களை விட்டுவிட்டு அம்புகளைத் தொடுக்கமுடியவில்லை. பல குதிரைகள் அப்படியே நின்றுகொண்டு மேலே போக மறுத்ததுடன் பின்புறம் திரும்பி ஓடவும் தலைப்பட்டன. யானைகள் துரிதமாக முன்னேறின. கொடுமுடியில் வீற்றிருந்த விற்படையினர் அம்புகளை எய்தனர். ஆனால் அவர்கள் குறி பார்த்து எய்வதில் திறமை குறைந்தவர்களாதலால் பயனும் குறைவாகத்தான் இருந்தது.

யானைகள் குழப்பத்தை விளைவிக்கக்கூடிய சாத்தியக் கூறுகளைச் சமாளிக்கவேண்டி முன்யோசனையுடன் நடந்துகொண்டார் நசருதீன். இப்போது தனக்குப் பின்புறமிருந்த மரங்களைப் பயன்படுத்திக்கொள்ளத் தீர்மானித்துவிட்டார். தனது ஆட்களைக் குதிரைகளிலிருந்து இறங்கச் சொல்லி குதிரைகளை மரங்களில் கட்டச் சொன்னார். அவர்களும் கட்டுப்பாட்டுக் கடங்கியவர்களாதலால் பதறாமல் காரியத்தைச் செய்து முடித்தார்கள். உலகிலுள்ள மக்கள் அனைவரினும் அவர்கள் விற்களை எப்படி உபயோகிக்கவேண்டும் என்பதை நன்கு அறிந்திருந்தனர் ஆதலால், மீண்டும் அவற்றை எடுத்துக்கொண்டு, முன்னேறி வரும் யானைக் கூட்டத்தின்மீது தொடர்ந்து சரமாரி பொழிந்தனர். இலக்கை அவர்கள் தவறவிடக் கூடியவர்கள் அல்லர். போருக்காகப் புதிதாகத் திரட்டப்பட்டவர்களாக இருந்தால் தவறவிட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் அப்படித் திரட்டப்பட்டவர்களல்லர் என்பதை உறுதியாகக் கூறலாம். எனினும் யானைகளின் எண்ணிக்கையோ இரண்டாயிரம். கற்பனை செய்துபார்க்க

முடியாத பெருந்திரளான கோரப்பிராணிகள் அவை. மங்கோலிய விற்படையினர் கூட அத்தனை பெரும் யானைப்படையினிடையே தங்கள் வலிமையை விரைவில் உணர்த்தியிருக்க முடியாது. பர்மியர்கள் மிகவும் சீர்கேடான நிலையில்தான் இருந்தனர். மரங்களில் பதுங்கியிருக்கும் மங்கோலியரை அவர்கள் அணுக முடியவில்லை. ஏனெனில் கொடுமுடியோடு கூடிய யானைகள் மரக்கிளைகளுக்குக் கீழே செல்ல முடியாது. ஆனால் மரங்களுக்கருகில் இருந்துகொண்டு, பதிலுக்கு அம்புகளை விடுத்துக்கொண்டிருப்பார்களேயானால் பகைவர்களைக் காட்டிலும் இவர்களுக்கே பெருமளவில் சேதம் விளைந்திருக்கும். பர்மியத்தளபதி உடனே பின்வாங்குவதற்கு உத்தர விட்டுவிட்டுத் தாக்குதலுக்கான வேறொருபாயத்தை முயன்று பார்த்திருக்கவேண்டும். ஆனால் குழப்பமும் கூச்சலும்தான் அதிகமாக இருந்தன. கட்டுப்பாடு துளிக்கூட இல்லை; ஒருவிதப்பயனுமின்றி யானைகளை ஆபத்திற்கு இலக்காக்கும் நிலையில் தளபதி வைத்திருந்தார். அப்பிராணிகள் தீரம் வாய்ந்தவை என்பதோடன்றி உண்மையிலேயே மூர்க்கத் தனமாகவும் கொடூரமாகவும் இருந்தன. ஆனால் போலோ கூறுவது போல் 'மற்றப் பிராணிகளைக் காட்டிலும் யானைக்கு நிலைமையை உணரும் சக்தி அதிகமாகவே இருக்கிறது.' அவற்றின் தலைவன் உணராவிட்டாலும் அந்த நேரம் திரும்பி ஓடுவதற்குரிய தருணம் என்பதை யானைகள் கண்டுகொண்டன. அப்போது அவற்றின் உடலில் அம்புகள் பதிந்திருந்தமையால் அவை முள்ளம்பன்றிகள் போல் காட்சியளித்தன. அந்த நிலையிலும் அவை ஒரு சுழற்சி சுழன்று, பர்மியச் சேனையின் முக்கிய பகுதியைத் தாக்கித் தங்கள் கட்சியை மிகப்பெரும் குழப்பத்தில் சிக்கவைத்துவிட்டன. உடலில் ஏற்பட்ட புண்களால் கொடூரமான கஷ்டத்திற்குள்ளாகிய அவை தைரிய

மிழந்து பிளிறிக்கொண்டு, கட்டுக்கடங்காமல் அங்கு மிங்கும் ஓடத்தொடங்கின. மங்கோலியர்கள் அரணாகக் கொண்ட மரங்களுக்கு சற்றுத்தொலைவில் சேனையின் விலாப்புறத்தில் மற்றொரு தோப்பு இருந்தது. அதை நோக்கி அவை வெகுவேகமாக ஓடின. மரங்களுக் கிடையே அவை பாய்ந்து சென்றதால் அவற்றின் மீதிருந்த கொடுமுடிகள் மரக்கிளைகளில் மோதின. அவற்றின் உள்ளே இருந்த பலரும் அதனால் கொல்லப் பட்டார்கள்.

யானைகள் வழியை விட்டு ஓடிவிடவே, மீண்டும் தனது குதிரைகளுக்குத் தீங்கு உண்டாவது சாத்தியமல்ல என்று கண்ட நசருதீன், தனது விற்போர் வீரர்களை மீண்டும் குதிரைகள் மீதேறி, பர்மியக் குதிரைப்படை, காலாட்படை இவற்றிற்கு எதிராக அணிவகுப்பை மாற்றியமைத்துப் போர்புரியுமாறு பணித்தார். 'அவர் களும் அம்புகளைத் தொடுத்து கொடூரம் நிறைந்த மிகப் பொல்லாத போரைத் தொடங்கினார்கள். எல்லா அம்புகளையும் வாங்கி விடுத்த பிறகு அவர்கள் கத்திகளை உருவினார்கள்' என்று போலோ கூறுகிறார். மங்கோலிய வீரர்களைக் காட்டிலும் பர்மியர்கள் ஐந்து மடங்கு எண்ணிக்கை உள்ளவர்கள். ஆனால் மங்கோலியரோ ஒரு பெரும் போர் யந்திரத்தின் உறுப்பினராதலால் போர்முறையைக் கடைப்பிடிக்கின்ற கொடிய வீரமாந்த ராக விளங்கினர். அறுபதாண்டுக் காலத்தில் உலகின் பல பகுதிகளிலும் திக்விஜயம் செய்த மங்கோலியப் போர் வீரர்கள் எகிப்து நாட்டு மம்லூக்குகளையும் ஜப்பா னியரையும் தவிர எதிரிகள் அனைவரையும் முறியடித்து விட்டனர். இருந்தபோதிலும் இப்போர் ஒரு கடும் போர்தான். மற்றவரை நோக்கும்போது பர்மியர்கள் போரில் முழுநேரப் பயிற்சி பெற்றவர் அல்லர் எனினும், தைரியமாகவே சண்டை செய்தனர். மங்கோலிய ரிடையே பலர் சேதமடைந்தனர். 'இருதரப்பிலும்

பலர் மடிந்து கீழே விழுந்தனர். பலர் பிழைக்காத வகையில் காயமுற்றனர். இரு தரப்பினரிடையும் பிறகு நெருங்கிய யுத்தம் நடந்தபோது அவர்கள் மீண்டும் எழவே இல்லை.' இங்ஙனம் யுத்தகளத்தில், தான் நேரில் இருந்ததுபோல, போலோ உயிரோட்டத்துடன் எழுதுகிறார். 'கடவுளே இடிஇடித்திருந்தால்கூட அதை அங்குள்ளவர்கள் கேட்டிருக்கமாட்டார்கள். அத்தனைப் பெருமளவில் கூக்குரலும் பேரொலியும் ஒலித்தன. சண்டையும் போரும் மிக உச்ச நிலையில் நடந்தன. யாங்கணும் கொடிய தீமை. அன்று மாலை வரை போர் நீடித்தது. வேந்தனும் மக்களும் சீரழிக்கப் பட்டனர். அவர்களிடையே பலர் கொல்லப்பட்டனர். மேலும் மங்கோலியப்படையினரை எதிர்த்துச் சமாளிக்க அவர்களால் இயலவில்லை.'

பர்மியத்தளபதி, தனது வீரர்கள் செயலிழந்து ஓடத் தலைப்படுவதைக் கண்டதும் மிக ஆபத்தான இடங்களில் அசட்டுத்தைரியத்துடன் தம்மையே ஆபத்துக்கிலக் காக்கிக்கொள்ளும் வகையில் அவர்களிடையே பாய்ந்து சென்றார். அவர்களிடையே உத்சாகத்தை எழுப்பக் கடினமாக முயன்றும், உறுதியாக நின்று சண்டை செய்யுங்கள் என்று புத்தி சொல்லியும், அவர்களிடத்தே தன்னம்பிக்கையை ஊட்டத் தளபதியால் முடியவில்லை. 'தமது சேனையில் பெரும் பகுதியினர் காயமுற்றும் இறந்தும் கிடப்பதையும், போர்க்களமெங்கும் இரத்தம் சிதறிக் கிடப்பதையும், மடிந்த குதிரைகளும் வீரர்களும் களத்தையே மறைத்திருப்பதையும் கண்ட அவர் எஞ்சிய வீரர்களோடு ஓடத்தொடங்கினர்.

மங்கோலியர்கள் எதிரிகளைத் துரத்துவதில் இரக்கமற்றவர்கள் என்று பெயர் பெற்றவர்கள். 'அடித்தும், துரத்தியும், கொன்றும் அவர்கள் இழைத்த கொடுமை காண்பதற்குப் பரிதாபமாக இருந்தது.' இரவு தொடங்கும் வரை துரத்திக்கொண்டே இருந்தனர்.

படை முழுதும் முறியடிக்கப்பட்டுவிட்டது. மங்கோலியர்கள் யானைகளை எதிர்த்துச் செய்த முதற் போரில் வெற்றி கண்டனர்.

மரங்களிடையே தஞ்சம் புகுந்த யானைகளைப் பிறகு அவர்கள் கைப்பற்றினர். இது அவ்வளவு எளிய செயல் அல்ல. மங்கோலியர்கள் முதலில் யானைகளைச் சுற்றிலும் வட்டமாக மரங்களை வெட்டி வீழ்த்தி, அவற்றிற் கிடையே அவற்றை அடைத்துவிட முயன்றார்கள். ஆனால் அது பயனளிக்கவில்லை. சிறைப்பிடித்து வைக்கப் பட்டிருந்த பர்மிய யானைப்பாகர்களைக்கொண்டு அவற்றின் பெயரைச் சொல்லி அழைக்கச் செய்த பிறகு தான் அவர்களால் யானைகளைப் பிடிக்க முடிந்தது. அது முதற் கொண்டு குப்ளாகான் தனது சேனைகளில் யானைகளையும் பயன்படுத்தத் தொடங்கினார் என்று சொல்லப்படுகிறது.

போரைப்பற்றிய இந்த அழகிய கட்டுரையின் முடிவிலே, யானைகளை வைத்திருப்பதன் மூலம் புதியதும் உயர்தரமானதுமான போர்ச்சாதனம் பெற்றவர்களாக இருந்தும், எண்ணிக்கையில் மிகுந்தவர்களாக இருந்தும், பர்மியர்கள் ஏன் தோற்கடிக்கப்பட்டார்கள் என்பதற் குரிய காரணங்களைத் திரட்டித் தருகிறார் போலோ. அவர் தரும் முதற்காரணம், மங்கோலியரைப்போல் அவர்கள் சிறந்த வகையில் போர்க்கருவிகளைப் பெற்றி ருக்கவில்லை என்பதாகும். ஏனெனில் அவர்களுடைய விற்கள், மங்கோலியர்களுடைய விற்களைப்போல் தொலை தூர இலக்கைக் குறித்துப் பயன் அளிக்காததுடன், ஊடுருவிச் செல்லும் சக்தியையும் அவ்வளவாகப் பெற்றிருக்கவில்லை. இரண்டாவதாக, யானைகளுக்குப் போதுமான அளவு கவசம் பூட்டப்பெறவில்லை. அப்படிப் பூட்டப்பட்டிருந்தால் அவற்றிடமிருந்து எதிர்பார்க்கும் அளவுக்கு அவை செயலாற்றியிருக்கக்கூடும். மங் கோலியரின் அம்புகள் இவற்றைத் தடுத்து நிறுத்தி

யிருக்கமுடியாது. அவை மங்கோலியரின்மீது பாய்ந்து சென்றிருக்கலாம். மரங்களைப் பின்னணியாக வைத்துத் தனது சேனையையும் பரவலாக அமைத்ததன்மூலம் போர்க்களத்தை நசருதீன் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்தியது பர்மியர் தோல்விக்கு மூன்றுவது காரணம். மங்கோலியர் அந்த நிலையில் இருந்தபோது பர்மியர்கள் அவர்களைத் தாக்கியிருக்கவே கூடாது என்று மார்க்கோ கூறுகிறுர். திறந்த வெளியில் மங் கோலியர் போர் புரியுமாறு ஒரு கட்டாய நிலையை ஏற்படுத்தி, எதிரிகளின் அம்புகளுக்கெதிராகப் போது மான பாதுகாப்புடன் கூடிய யானைகளைக்கொண்டு அந்த இடத்தில் தாக்கியிருந்தார்களேயானுல், யானை களின் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்கு முடிந் திருக்காது என்றும் போலோ மேலும் சொல்கிறுர். அப்போது மங்கோலியர்கள் முறியடிக்கப்பட்டுக் குழப்பத்தில் சிக்கிக்கொண்டிருப்பார்கள். பிறகு தன் சேனையின் இரு பக்கங்களிலும் உள்ள குதிரைப்படையை யும் காலாட்படையையும் கொண்டுவந்து பர்மியத் தளபதி அவர்களைச் சூழ்ந்து அடியோடு அழித்திருக் கலாம்.

இது ஒரு நுணுக்கமான ராணுவச் செய்தி அறிக்கை. போலோவின் பிற தகுதிகளுடன் போர்முறையை அவர் நன்கறிந்தவர் என்ற தகுதியும் ஒன்று என்பது தெளி வாகிறது. இப்போரைக் குறித்து இவ்வளவு விவரமாக எழுதியிருப்பதைக் கொண்டு இராணுவ விஞ்ஞானத் தில் அதன் முக்கிய தன்மையை அவர் எப்படி உணர்ந் திருந்தார் என்பதை இது காட்டுகிறது. மேலும் வரலாற்றில் இந்த நிகழ்ச்சியின் முக்கிய தன்மையைப் போலோ உய்த்துணர்ந்திருக்கிறுர். ஏனெனில், இந் நிகழ்ச்சி, பின்னும் சில ஆண்டுகளில் மங்கோலியர்கள் பர்மாவின்மீது படையெடுத்துப் பாகன் வம்சத்தை முடிவுறச் செய்வதற்கு அடிகோலிற்று என்பதைப்

போலோ குறிப்பிடுகிறார். பர்மிய வரலாற்றிலேயே இந்த வம்சம் மிகவும் பண்பும் சிறப்பும் வாய்ந்தது. இது இருநூறு ஆண்டுகளுக்கு மேலாக நாட்டை ஒருமைப்படுத்தி வைத்திருந்தது.

பதினாறாம் அத்தியாயம்

# பாகன் நகரம்

மேற்கண்ட போர் நிகழ்ந்த ஐந்தாண்டுகள் கழித்துப் பர்மிய அரசர் யுன்னன் மாகாணத்தின்மீது மீண்டும் படை யெடுத்தபோது தோற்கடிக்கப்பட்டார் என்றும், அப்போது முன்னைக்காட்டிலும் பெருமளவில் படுகொலை நிகழ்ந்ததென்றும், பர்மிய, சீன வரலாற்றாசிரியர்கள் வாயிலாக நாம் அறிகிறோம். உடனே எதிரிப் படை யெடுப்பு நிகழக்கூடும் என்ற பயம் இத்தோல்வியினால் ஏற்படவே, தலைநகரைக் காலிசெய்துவிட்டு தெற்கு நோக்கி ஓட்டம் பிடித்தார் மன்னர். இவருடைய ஆட்சி யால் வெறுப்படைந்த மக்கள் மன்னருக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தனர். 1287-ஆம் ஆண்டு அவர் விஷ மூட்டப்பட்டார். அதைத் தொடர்ந்த குழப்பத்தில் மங்கோலியர்கள் அந்நாட்டின்மீது படையெடுத்துப் பாகன் நகரைக் கைப்பற்றினர். அதுமுதல் பர்மா மங்கோலிய சாம்ராஜ்யத்தில் கப்பங்கட்டும் நாடாக ஆகிவிட்டது.

இப்படையெடுப்பைப் பற்றி மார்க்கோ வேடிக்கை யாகக் குறிப்பிடுகிறார். தேவைக்கதிகமாகத் தன்னிடம் இருக்கும் கோமாளிகளையும் கழைக்கூத்தாடிகளையும் கொண்ட ஒரு சேனையை அனுப்பினாலே பர்மாவைக் கைப்பற்றிவிடலாம் என்று எண்ணும் அளவுக்குக் குப்ளாகான் அதை ஓர் எளிய செயலென மதிப்பிட்ட தாக மார்க்கோ பாவனை பண்ணுகிறார். சக்கரவர்த்தியின் அவையில் பரிவாரமாக இருக்கும் இவர்கள் மகிழ்ச்சி யுடன் விழா ஊர்வலத்தில் செல்வதுபோல் பாகன் நகரத்தினுள் நுழைந்தனர்.

இந்த வரலாற்றை அடுத்து பர்மா நாட்டிற்கும் பாகன் நகரத்திற்கும் செல்லும் பாதையைப் பற்றித்

தானே யுன்னுனிலிருந்து அங்கு சென்றதுபோல் கூறுகிருர் ஆசிரியர். அவர் அப்படி பர்மாவுக்குப் போயிருக்கவெண்டுமாஞல் அது படையெடுப்பு நடந்த 1287-க்குப் பிறகு நிகழ்ந்திருக்கவேண்டும். அந்த சமயத்தில் அவர் சைஞவில் வசிக்கத் தொடங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் கழிந்திருக்கும். அப்படி இருந்தால் முன்னர் குறிப்பிடப்பட்டுள்ள 1279-ஆம் ஆண்டில் அவர் யுன்னுனுக்குப் போயிருக்க முடியாது. 1288-இல்தான் அங்கு போயிருக்கக்கூடும். பிரிவி கௌன்சிலின் முக்கிய அலுவலராக 1284-5 ஆண்டுவரை அவர் தொடர்ந்து பணியாற்றிக்கொண்டிருந்திருக் கலாம். அந்த ஆண்டில்தான் சிலோன், ஆசியா ஆகிய நாடுகளுக்குத் தூதராக அவர் அனுப்பப்பட்டார் என்பதை நாம் காணப்போகிறேம். இது உண்மையா யிருந்தால் அதில் வியப்பதற்கொன்றுமில்லை. 1279-ஆம் ஆண்டில் அவர் இருபத்துமூன்று வயதான இளம் வாலிபராக இருந்தார். அப்போது யுன்னுனில் சக்கர வர்த்தியின் தூதராக நியமிக்கப்பட்டிருப்பது சாத்திய மில்லை. உண்மையிலேயே இந்தியாவிலிருந்து திரும்பிய பிறகு அங்கு அனுப்பப்பட்டிருந்தால் பாகனுக்கு அவர் சென்றிருக்கக்கூடும். ஏனெனில் பர்மா அப்போது மங்கோலியர் வசம் இருந்தது. ஆனல் அவர் இன்னதைத்தான் செய்தார் என்பது பற்றி நாம் உறுதியாக எதையும் கொள்ளமுடியாது ஒருவேளை மேகாங், சால்வீன் இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட இடத்திற்கப்பால் அவர் செல்லாமலேயேகூட இருந் திருக்கக்கூடும்.

யுன்னுனிலிருந்து பர்மாவுக்குச் செல்லும் பாதையை விவரிக்கத் தொடங்கும்போது, முன்பு விட்ட இடமான யுங்-சியாங்கிலிருந்து ஆசிரியர் தொடங்கவில்லை. ஆனல் பர்மா சமவெளியிலிருந்து இரண்டரை நாட் பிரயாண தூரத்திலுள்ள ஓரிடத்திலிருந்துதான் தொடங்குகிருர்.

பர்மியச் சமவெளிக்கு வரும் பாதை முழுவதும் இறக்க மானதென்று அவர் கூறுகிறார். 'இரண்டரை நாட் பிரயாண தூரம்' என்பதும், 'பாதை முழுவதும் ஒரே இறக்கம்' என்பதும் யுங்-சியாங்கிலிருந்து பர்மாவுக்குச் செல்லும் பிரயாணத்திற்குப் பொருந்தவில்லை. யுங்-சியாங்கிலிருந்து பர்மாவுக்கு வரும் தூரம் மேற்கூறிய தூரத்தைப் போல் இரு மடங்காகும். பாதையும் மலையில் முதலில் ஏறி பிறகு இறங்குகிறது. ஆனால் போலோ குறிப்பிட்ட பயணதூரமும் இறக்கப்பாதையும் உண்மையாகவே போர் நடந்த இடத்திலிருந்து இராவதி நதிச் சமவெளிவரையுள்ள பிரயாணத்தை ஒட்டியதாக இருக்கின்றன. ஆகையால் ஏதோ ஒரு காரணத்தினால் ஆசிரியர் போர் நிகழ்ந்த இடத்திற்குத் தவறான பெயரைக் கொடுத்துவிட்டபோதிலும், அது உண்மையிலேயே எங்கே உள்ளது என்பதை ஆசிரியர் நன்றாக அறிந்திருந்தார் என்று தோன்றுகிறது.

'தைபிங்' பள்ளத்தாக்கு வழியே செல்லும் இறக்கப் பாதையைப் பற்றிக் கூறவந்த ஆசிரியர், மக்கள் பள்ளத் தாக்கை யொட்டிய மலைகளில் வாழ்ந்ததால் அவர் களுடைய வீடுகளைத் தான் பார்க்கவில்லை என்பதைத் தவிர வேறெதையும் கூறவில்லை. ஆனால் பர்மியச் சமவெளியை அணுகும்போது, கீழே சந்தையையும் அதை நோக்கி மலைவாழ் மக்கள் அனைவரும் கீழிறங்கி வந்ததையும் கண்டிருக்கிறார். இது தைபிங் பள்ளத் தாக்கைப் பற்றியதும், பாமோவைச் சுற்றியுள்ள சம வெளியைப் பற்றியதும், சமவெளியிலுள்ள கடைகளை நோக்கிக் கீழே இறங்கி வந்து பிறகு மீண்டும் தங்கள் மலையுச்சிக்குத் திரும்பிச் செல்வது என்பதான மலை சாதியினரிடையே இன்றும் இருந்துவரும் பழக்கத்தைப் பற்றியதுமான ஒரு தோராயமான வருணனை. எனினும் பகுத்தறிவுக்குப் பொருந்தக்கூடிய ஓர் உண்மையான வருணனை என்று இதைக் கூறலாம். மேலும், பர்மா மாகாணம் தெற்கே வெகுதூரம் நீண்டிருப்பதாகவும்,

புலிகளும் யானைகளும் நிரம்பிய காட்டுப் பிரதேசத்தின் வழியாகப் பாகனுக்குச் செல்வதற்குப் பதினைந்து நாட்கள் பிடிக்குமென்றும் ஆசிரியர் கூறுகிறார். அதுவும் ஏறத்தாழச் சரிதான். ஏனெனில் நாளொன்றுக்குச் சராசரி இருபத்துமூன்று மைல்கள் வீதம், இந்த தூரம் சுமார் முன்னூற்றைம்பது மைல்கள் கொண்டதாகும்.

அவர் மேலும் சொல்கிறார். 'நான் முன்பு கூறியபடி ராணுவத்தினருக்காகும் பதினைந்து நாட்பிரயாணத் தின் இறுதியில், 'மீன்' என்று கூறப்படும் அழகிய நகரத்தை நீங்கள் காண்பீர்கள். 'மீன்' ராஜ்யத்தின் தலைநகரமான அது மிக உன்னதமான பெரிய நகரம்.' இப்பெயர் கொண்டுதான் சீனர்கள் பர்மாவை அன்று அழைத்தனர். இன்றும் அவ்வாறே அழைக்கிறார்கள். அவர் அந்த நாட்டைப் பற்றி ஒன்றே ஒன்றைத்தான் சொல்லப்போகிறார். அந்த நாட்டிற்குச் செல்லும் எவரும் முதலில் காண்பது அந்த ஒன்றைத்தான். ஏனெனில் அது அந்த நாட்டின் சிறப்பியல்பும் தனித் தன்மையுமாகும். உச்சியிலே சிறு மணிகள் கட்டப்பட்ட பொற்கோவில்கள் அங்கிருப்பனவாக அவர் கூறுகிறார். காற்றடிக்கும்போது அவை ஒலி எழுப்பும். குறிப் பாகப் பாகன் நகரத்தில் உள்ள இரண்டு கோவில்களை அவர் குறிப்பிடுகின்றார். இரண்டினுள் ஒன்று அசல் தங்கத்தாலும் மற்றொன்று வெள்ளியாலும் வேயப் பெற்றவை என்றும் கூறுகிறார். இன்றும் ரங்கூனில் உள்ள ஷ்வேடகான் கோவிலின் ஒரு பகுதி அசல் தங்கத்தால் வேயப்பட்டுள்ளது. வெகுதூரத்திலிருக்கும் போதே சூரிய ஒளியில் அக்கோவில் எப்படி மின்னி ஒளி விடுகின்றது என்பதை அவர் கூறுகிறார். இது மிக உண்மையான கூற்று. ரங்கூன் நதியின் மீது நீரோட்டத்திற்கெதிராகச் சென்று கொண்டி ருக்கும்போது வானவிளிம்பில் தகதகவெனப் பிரகாசிக் கும் ஷ்வேடகானைக் கண்ட எவரும் இந்த உண்மையை

அறிவர். பாகன் சமவெளி கோவில்களால் நிரம்பி யிருந்தது. அவை நூற்றுக்கணக்கில் இருந்தன என்பது புனைந்துரை அன்று. மங்கோலியரின் வெற்றிக்குப் பின்னரும் அவை அனைத்தும் அப்படியே இருந்தன. அப்போது அது ஒரு வியப்பூட்டும் காட்சியாக இருந்திருக்கவேண்டும். ஏனெனில் போலோ தெளிவாகக் குறிப்பிட்டிருப்பது போல மங்கோலியர்கள் கோவில் களை அழிக்கவில்லை. சிறு கோவில்கள் காலத்தால் சிதைவுற்றபோதிலும் அதே சமகாலத்தில் கட்டப்பட்ட ‘கோதிக்’ குருபீடங்கள் இன்று எந்த நிலையில் காணப் படுகின்றனவோ, அப்படியே அங்குள்ள பெருங் கோவில் கள் நிலைத்து நிற்கின்றன. அன்று போலோ கூறியது போலவே பாகனை ஓர் அழகிய தலமென இன்றும் கூறலாம். அதுபற்றி அவர் வேறெதுவும் சொல்ல வில்லை. உலகத்திலேயே அக்காலத்தில் மிக முக்கிய பௌத்தத் தலைமையிடமாக அது இருந்தது என்பதை உணர்வதற்குரிய அறிவை அவர் பெற்றிருக்கவில்லை. வியாபாரத்தைப் பொருத்ததல்ல அந்நகரத்தின் முக்கியத்தன்மை. முழுதும் மத சம்பந்தமானதே அது. ஏனெனில் அங்கே பௌத்தமதத்தின் மேலான புனிதத் தன்மையைக் குறித்து மக்கள் தீவிர அக்கறை கொண்டிருந்தனர். நாடு தோறும் சுற்றி வரும் அரசதூதர் என்னும் முறையில், உலகிலேயே கலைக்கும் இலக்கியத்திற்கும் மிக உயர்ந்த கேந்திரமாகவும், சுங் வம்சத்தின் தலைநகராகவும் இருந்த மற்றோர் எழில் மிக்க நகரமான ஹாங்-சௌ என்னுமிடத்திற்கு அவர் செல்வதைப் பார்க்கப்போகிறோம். அண்மைக் காலத்தில் அந்நகரமும் மங்கோலியர் வசமாகிவிட்டது. ஹாங்-சௌ நகரத்திற்கும் பாகன் நகரத்திற்கும் உள்ள வேற்றுமை, மெடிசியின் பிளாரன்சுக்கும் புனிதர் பிரான்ஸிஸ் வாழ்ந்த அசிசிக்கும் உள்ள வேற்றுமையை ஒத்தது. இதையே பண்பாட்டுக்கும் நம்பிக்கைக்கும்

உள்ள வேற்றுமை என்றும் சொல்லலாம். இவ்விரு இடங்களைப் பற்றிய உண்மைக்குறிப்பைப் போலோ அறிய இயலவில்லை எனினும், ஓரளவுக்கு அவற்றின் உண்மையைப் புரிந்துகொண்டிருந்தார். இவ்விரு நகரங்களும் முன்பே வீழ்ச்சியுற்ற போதிலும் உயிரோட்டம் இருப்பவைபோல் அப்போதும் மூச்சு விட்டுக்கொண்டிருந்தன. அத்தகைய நகரங்களைக் காண்பதில்தான் போலோவுக்கு என்ன அதிருஷ்டம்! ஆனல் உண்மையிலேயே அவர் பாகனுக்குச் சென்ருரா? முன்பே நான் கூறியதுபோல் சென்ருர் என்பதற்கோ செல்லவில்லை என்பதற்கோ அசைக்கமுடியாத சான்று இல்லை.

போலோ பர்மாவிற்குச் சென்றிருந்தாலும் அதைக் கடந்து அவர் செல்லவில்லை என்பது உறுதி. கீழை நாடுகள் அனைத்தைப் பற்றியதுமான ஒரு தூலக் காட்சியை மேற்கத்தி நாடுகளிலுள்ள வாசகர்களுக்கு அளிக்கவேண்டும் என்ற முயற்சியில், காகானுக்கு அடிமைப்பட்ட பர்மாவின் அண்டை நாடுகளையும் குறிப்பிடுகிருர். முதலில் வங்காளத்தைப் பற்றிக் கூறுகிருர். அவருடைய கருத்துப்படி பர்மாவின் கீழ்ப் பகுதி, அர்கான், கிழக்கு வங்காளம் இவை யனைத்தும் வங்காளத்தில் அடங்கியவை. ஆனல் மங்கோலியரோவெனில் இராவதி நதிக் கழிமுகத்தைத் தாண்டிச் சென்றதே இல்லை. அக்காலத்தில் தன் பெருமையை இழந்து நின்றது தெற்கே கம்போடி யாவின் சீர்மிக்க தலைநகரமான 'ஆங்கோர்' (Angkor). அதுபற்றி அவர் கேள்விப்படவில்லை எனினும் டொங்கிங், சயாமின் வடபகுதிகள் இவற்றிலுள்ள பழங்குடிமக்களைப்பற்றிய சில செய்திகளைக் கூறுகிருர்.

அவர் திரும்பிவந்த பிராயாணத்தைக் குறித்துச் சொல்லுவதெல்லாம் இதுதான். குன்-மிங் நகரத்தி லிருந்து, திபேத்தின் எல்லையை ஒட்டிய பாதை வழியே

செங்-டூவிற்குச் செல்வதற்குப் பதில், இன்று முக்கிய பர்மா சாலை என்று அழைக்கப்படும் வழியாக சுங்-கிங்கை நோக்கித் தொடர்ந்து சென்றிருக்கிறார். இன்று அச்சாலையின் இறுதி இடம் அதுவே. அங்கிருந்து செங்-டூவிற்குச் சவாரி செய்திருக்கிறார். அவர் சென்ற போதும் திரும்பியபோதும் அதே இடத்தில் கூடும் சந்திப்பைப் படம் காட்டுகிறது. செங்-டூவிலிருந்து பீகிங்கிற்கு எழுபது இடங்களில் தங்கித் திரும்பிச் சென்றிருக்கிறார்.

பதினேழாம் அத்தியாயம்

# சுங் தலைநகரம்

சீன நாட்டின் கிழக்குக் கரையோரமான மாகாணங்களைப் பற்றிக் கூறும் நூலின் அடுத்த பகுதியில் போலோ ஒரு குறிப்பிட்ட பிரயாணத்தைப் பற்றி விவரிக்கவில்லை. தலைநகருக்கும் அப்பகுதியிலுள்ள பல்வேறு நகரங்களுக்குமிடையே மேலும் கீழுமாக அவர் பலதடவைப் பிரயாணம் செய்யவேண்டியிருந்தது. நான்கிங்கிற்கு வடகிழக்கேயுள்ள பெரும் கால்வாயின் கரையிலுள்ள யாங்-செள நகர அதிகாரியாக அவர் மூன்றுண்டுகள் பதவி வகித்தார். ஷாங்காய்க்குத் தென் மேற்கிலுள்ள ஹாங்-செளவின் சுங்கநிதியைப் பற்றி ஓர் அறிக்கை சமர்ப்பிக்கும்படி மற்ருெரு முறை அவர் அனுப்பப்பட்டார். ஆகவே சீனவிலேயே மிகுந்த வளப்பம் பொருந்திய அப்பகுதி முழுவதிலும் பல ஆண்டுகளாக இருந்ததஞல் அவருக்கு அங்கே பழக்கம் மிகுதியாயிற்று. அவர் பீகிங்கிற்கு வந்த அடுத்த ஆண்டில், அதாவது 1276இல் தான், அப்பகுதியின் தென் பாகம் மங்கோலிய சாம்ராஜ்யத்துடன் இணைக்கப் பட்டது. அதுவரை புகழ்மிக்க சுங் வம்சத்தின் கடைசி சுதந்திர ஆட்சியாளரான சீனச் சக்கரவர்த்தியின் இருப் பிடமாக அது இருந்துவந்தது. 1276 வரை குப்ளாகான் வடசீனவுக்கு மட்டுமே சக்கரவர்த்தியாக இருந்து வந்தார். சமவெளியினின்றும் முன்பொரு முறை படை யெடுத்து வந்த கூட்டத்தாரிடம் அப்பகுதியைச் சுங் வம்சத்தினர் இழந்து விட்டனர். அவர்கள் 1127 ஆம் ஆண்டு திடீரென அங்கு நுழைந்து 'கின்' வம்சத்தினர் என்ற பெயரையும் தாங்களே சூட்டிக்கொண்டனர். 1127ஆம் ஆண்டு முதல் 1276ஆம் ஆண்டு வரை நூற்று நாற்பத்தொன்பது ஆண்டுகளுக்குள்ளாக அநாகரிகர்

களான கின் வம்சத்தினர் எல்லா வகையிலும் சீனர்களாகிவிட்டனர். கொடிய மங்கோலியர்களால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டபோது சுங் வம்சத்தினர் அவர்களுடைய உதவிக்குச் செல்வதுதான் அறிவுக்குகந்ததாக இருந்திருக்கும். கின் வம்சத்தைச் சார்ந்த கடைசி சக்கரவர்த்தி, ராணுவ ஒப்பந்தம் செய்துகொள்ளுமாறு சுங் வம்சத்தினரைக் கேட்டுக்கொண்டபோது மேற்சொன்ன கருத்து சுட்டிக்காட்டப்பட்டது. அப்போது அவர் கீழ்க்கண்ட சொற்றொடரைப் பயன்படுத்தினர். 'உதடுகள் பற்களுக்கு எப்டியோ அப்படி நாங்கள் உங்கள் பொருட்டு இருக்கின்றோம். உதடுகள் இல்லையெனில் பற்கள் குளிரால் வருந்தும்.' இச்சொற்றொடர் பின்னர் பிரசித்தியடைந்துவிட்டது. சுங் வம்சத்தினரின் படாடோபம் அழிவை நெருங்கிக்கொண்டிருந்தது. அதில் மூழ்கிக்கிடந்த அவர்கள் உண்மை நிலை எதிர்ப்பட்டும் அதைக் காணக்கூடியவர்களாக இல்லை. சீனக் கல்வியின் ஒழுங்குமுறையை ஒட்டிக் கின் அரச வம்சத்தினர் அனைவருமே பண்பட்டவர்களாக ஆகிவிட்டபோதிலும், சுங் வம்சத்தினர் அவர்களை அப்போதும் சீன ஒழுக்க முறைகளைமட்டும் கண்மூடித்தனமாகப் பின்பற்றும் வெளிநாட்டவரான காட்டுமிராண்டிகளாகவே கருதினர். அவர்களை ஒத்த காட்டுமிராண்டிகளுக்கு இவர்களும்தான் இரையாகட்டுமே. ராணுவ ஒப்பந்தமாம்! என்ன கொழுப்பு! இவ்வாறு எண்ணமிட்ட தேவலோக மைந்தனை சுங் வம்ச ஆட்சியாளர் அவர்களை உறுபொருளாகவே ஒப்புக்கொள்ளவில்லை. அவர் கை-பெங் என்னும் வடசீனாவின் தலைநகரை விட்டு, யாங்-ட்சே நதியைக் கடந்து, ஹாங்-சௌ நகரைத் தனதிருப்பிடமாகச் செய்துகொண்டார். ஹாங்-சௌ என்பதை 'பிரயாணத்திற்குரிய அரண்மனை' என்னும் பொருள் கொண்ட த்சிங்-த்சி என்னும் பெயரால் அழைத்தார். கை-பெங் நகரைத் தாற்காலிகமாகக் காலி செய்திருப்ப

தாக அவருக்கு எண்ணம்! கின் வம்சத்தினர் அவர்களை கை-பெங்கை விட்டுத் துரத்தவில்லையாம்! தெற்கு மாகாணங்களில் சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டு மெனத் தானே விரும்பி, ஹாங்-சௌவை தாற்காலிகப் பாசறையாகப் பயன்படுத்தி வருகிறாராம்! உண்மை நிலையைப்பற்றிய உணர்ச்சி அறவே இல்லாத படாடோபம், அதற்கேற்ற தண்டனையில் கொண்டு வந்து விட்டது. தக்க தருணத்தில் குப்ளாகான் தனது கவனத்தைத் தெற்கே திருப்பினார். கின் வம் சத்தினரான 'உதடுகள்' மறைந்துவிட்டன. சுங் வம்சத்தினரான 'பற்கள்' குளிரை உணரத் தொடங்கின. மங்கோலியப் படைத்தலைவர்களில் மிகத் திறமை வாய்ந்த பயான் என்பவர் படையெடுக்கும் சேனைக்குத் தலைமை தாங்கினார். சுங் வம்சத்தினரின் அதிருஷ்டவசமாக மங்கோலியர்கள் அப்போது நாகரிகம் அடைந்திருந்தனர். தனது பாட்டனை ஜெங்கிஸ்கானைப் போலல்லாமல் குப்ளாகானுக்கு மக்களனைவரையும் படுகொலைசெய்வதின்றி வேறு சில கருத்துக்களும் உண்டு. எப்படி இருந்தபோதிலும் பயான், நகருக்குள் நுழைந்தபோது சுங் வம்சத்தினர் பெரிதும் அஞ்சினர். அவர்கள் சண்டையை வெறுப் பதுடன் நல்ல பண்பு மிக்கவர்கள். நூறு கண் படைத்த மனிதன் ஒருவன் சுங் வம்சத்தை ஒழித்து விடுவான் என்று முன்கூட்டியே சொல்லப்பட்ட ஒரு பழஞ் சோதிடம் நிலைமையை மேலும் மோசமாக்கியது. ஏனெனில் பயான் என்ற சொல் சீன மொழியில் பே-யென் என்பதாகும். அச்சொல்லுக்கு 'நூறு கண்கள்' என்ற சிலேடைப் பொருள் உண்டு. சுங் வம்ச சக்கரவர்த்திக்கு அப்போது வயது நான்குதான். அவரது பாட்டி பதிலுக்கு அரசுபுரிந்து வந்தார். சோதி டத்தில் சொல்லப்பட்ட நூறுகண்ணன் அண்மையில் வந்துவிட்டான் என்பதைக் கேட்டதுமே அம்மையார்

நிலைகுலைந்துபோனார் என்று மார்க்கோ போலோ கூறுகிறார். பேசித் தெளிவு பெற முயன்று, அவர் பயானிடம் அரசாங்க முத்திரையை அனுப்பி, நிபந்தனை யின்றிச் சரணடைந்தார். அவர் ஓர் உயர்ந்த மேதை என்று பின்னர் சீனர்களே பயானைப் பற்றி எழுதியிருக் கிறார்கள். ஒரு தலைமுறைக்கு முந்திய மங்கோலியரைப் போல், அவர் அவ்வளவு கொடியவராக இல்லை என்பது உண்மைதான். தனது பரிவாரத்திற்குத் தலைமை தாங்கியவராய் ஹாங்-சௌ நகரத்தினுள் நுழைந்த அவர், அங்குள்ள மக்களுக்கு எவ்விதத் தீங்கு நேர்வதை யும் அனுமதிக்கவில்லை. சக்கரவர்த்தியையும் ஆட்சி யாளரையும் வரவேற்குமாறு பயானிடம் கூறப்பட்ட போது, அத்தகைய சந்திப்பிற்குகந்த பழக்கமுறை தனக்குத் தெரியாதென்று கூறி, அவ்விதம் செய்ய அவர் ஒப்புக்கொள்ளவில்லை. வீழ்ச்சியுற்ற இப்பெரிய மனிதர் களுக்கு எத்தகைய மரியாதை அளிக்கப்படவேண்டும் என்பதைக் குப்ளாகான் குறிப்பிடாதவரை, அவர்களை வரவேற்றுப் பேசவேண்டிய சரியான முறை சந்தேகத் திற்கிடமாக இருந்தது என்பதை இது உணர்த்துவதாகத் தோன்றுகிறது. இந்த வகையில் நாம் பொருள் கொள்வ தானால், பயானுடைய கூற்று, மங்கோலியர்கள் எவ்வளவு தூரம் மாறிவிட்டார்கள் என்பதைக் காட்டு கிறது. இப்போதெல்லாம் அவர்கள் முரட்டுத்தனமான வெற்றி வீரர்களாக இல்லை. ஆனால் அதிகார முறைச் சடங்குகளின் முக்கியத்துவத்தில் அக்கறைகொண்ட அதிகார வர்க்கத்தினர் ஆகிவிட்டனர். குப்ளாகான் தனது உயிரை வாங்கவோ அல்லது அவமதிக்கவோகூட எண்ணவில்லை என்பதை அம்மையார் கேள்வியுற்ற போது அவர் வியந்து பரவசமுற்றார். சுங் வம்சத்தின் கடைசி மைந்தனை தனது சிறு பேரனைக் கட்டித் தழுவியவாறு அவர் சொன்னார்: ‘தேவலோக மைந்தன் உன் உயிரைக் காப்பாற்றிவிட்டான். பதிலுக்கு நன்றி

கூறவேண்டியது முறையாகும்.' இருவரும் மண்டியிட்டு வடக்கு நோக்கி ஒன்பது முறை நெற்றி நிலத்தில் படும் வண்ணம் வீழ்ந்து வணங்கினர். கடவுளின் துணை ஆட்சியாளர்களான சீனச் சக்கரவர்த்திகளுடைய புனித விருதாகிற 'தேவலோக மைந்தன்' என்னும் விருதையே குப்ளாகானுக்கு அவர் வழங்கினார். இதிலிருந்து அவர் சுங் வம்சத்தின் ஆட்சி முடிந்துவிட்டது என்பதை ஒப்புக்கொண்டு உண்மை நிலையை நேரில் கண்டு கொண்டார் என்பதை அறிகிறோம். அவரும் இளம் சக்கரவர்த்தியும் காவலுடன் பீகிங்கிற்கு அனுப்பப் பட்டனர். அங்கே குப்ளாகானின் பட்டத்து இராணி யால் குழைந்த அன்புடன் அவர்கள் நடத்தப்பட்டனர். பருத்த உடலோடு கூடிய இராணி ஜமுயிகாதூன் நல்லியல்பு வாய்ந்தவள். இருவருக்கும் உபகாரச் சம்பளம் வழங்கப்பட்டது. சக்ரவர்த்திச் சிறுவன் மூன்றுந்தர இளவரசனாக ஆக்கப்பட்டான். ஹாங்-செளவில் ஒரு மங்கோலிய கவர்னர் நியமிக்கப்பட்டார். நகரம் மங்கோலிய இராணுவத்தினரால் காவல்புரியப் பட்டது. ஆனால் தனி நபர்கள் கொள்ளையடிக்கப் படவும் இல்லை, அவர்கள் விஷயமாகத் தலையீடும் இல்லை. ஆகவே அங்கு வாழ்க்கை முன்போலவே சென்று கொண்டிருந்தது. மேல்வகுப்பு மக்கள் அதுவரை இருந்ததுபோலவே மிகவும் பணக்காரர்களாகவும், பண்பாடு உடையவர்களாகவும் இருந்துவந்தனர். சீனவுக்கு வெளியே உள்ள எந்த நகரத்தைக் காட்டி லும், மிகவும் அதிகப்படியான பெரும்போக அனுபவமும் நாகரிகமும் கொண்டு அவர்கள் விளங் கினர்.

சீன நாட்டிற்கு அவர் வந்த சிறிது காலத்திற்குள் ஏற்பட்ட இம்மாபெரும் நிகழ்ச்சிகளால் போலோவின் உள்ளத்தில் பெருங் கிளர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும். பின்னர்தான் அவர் ஹாங்-செளவுக்குச் சென்றார்.

அவருடைய நூலில் நன்முக நினைவு கூறப்படும் அத்தியாயங்களில் ஒன்று, அந்த நகரத்தின் எழில், சுகாநுபவம், இன்பம் ஆகியவற்றின் வருணனையைப் பற்றிய பகுதி. அப்பகுதியில் சுங் வம்சத்தின் கீழ்ச் சீன நாட்டில் தினசரி வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைக் கூறுகிருர். சீன நாடு ஆற்றல் மிக்கவர்களான புகழொளி பரப்பும் பலரை ஈன்றெடுத்துள்ளது. அவர் களுள் கவிஞர்கள், இயற்கைக் காட்சிகளைத் தீட்டும் ஓவியர்கள், தத்துவ ஞானிகள், இலக்கிய வல்லுநர்கள் குயவர்கள், கட்டடக்கலைஞர்கள், வரலாற்முசிரியர்கள், சிற்பிகள் ஆகியோர் அடங்குவர். இவர்களைப் பற்றிப் போலோ எதையும் சொல்லவில்லை. ஏனெனில் அவர் களுடைய எண்ணங்களைப் பற்றியோ, கலையைப் பற்றியோ, எதையும் அவரால் புரிந்து கொள்ள முடிய வில்லை. ரோம் நகரம் வீழ்ச்சியுற்ற பின்னர், அதைக் கண்ட ஒரு நாகரிகமற்ற மனிதன் அச்சாம்ராஜ்ய நகரைப் பற்றி என்ன கூறியிருப்பாஞே அது போலத் தான் அவர் சொல்லுகிருர். போலோ கூறியிருப்பது, அவரை வியப்பில் ஆழ்த்திய சாதாரண புறத்தோற்ற மான வசதிகளைப் பற்றியதே. ஏனெனில் தனக்குப் பழக்கப்பட்டவற்றைக் காட்டிலும் அவை மிக உயர் வாக இருந்தன. இப்போது நாம் அவர் கூறுவதைக் கேட்போம். ஹாங்-செள ஒரு விண்ணகரம் என்பதை யும் அங்குள்ளோரின் வாழ்க்கையில் தொடர்ந்த இன்பமே காணப்படுகிறது என்பதையும் நம்ப மறுக்கும் வெனிசு நகரத்திலுள்ள தனது நாட்டினரை நம்ப வைக்க அவர் முயல்கிருர்.

அவர் தொடக்கத்தில் கூறுகிருர், 'இந்த நகரத்தில் நான் பல தடவைகள் இருந்திருக்கிறேன். நான் கண்டவற்றைப் பற்றியெல்லாம் விழிப்புடன் குறிப்புக் கள் எடுத்திருக்கிறேன். எதையும் விட்டுவிடாமல் இருப்பதற்கும், நிகழ்வனவற்றைப் புரிந்துகொள்ளவும்

நான் முயன்றிருக்கிறேன்.' இதிலிருந்து சிறைச்சாலையில் தனது நூலை ஒருவர் எழுதும் வகையில் அவர் சொல்லிக்கொண்டிருந்தபோது குறிப்புக்களை வைத்துக் கொண்டிருந்தார் என நம்மால் ஊகிக்கமுடிகிறது. இது ஒரு முக்கிய விஷயம். தோட்டங்கள், ஏரிகள், பூங்காக்கள், நகரின் சுற்று வட்டாரங்கள் ஆகிய அனைத்தையும் சேர்த்தால் ஹாங்-சௌவின் சுற்றளவு நூறு மைல் இருந்திருக்கக்கூடுமென அவர் கணக்கிட்டிருக்கிறார். ஏரிக்கும் ஒரு பெரிய நதிக்கும் இடையே அமைந்துள்ள இந்த நகரத்தில் பல கால்வாய்கள் ஊடுருவிச் செல்வதால், இந்த வகையில் வெனிசு நகரத்தை அது ஒத்திருந்தது. அங்குள்ள பாலங்கள் எண்ணிலடங்கா. அவற்றின் கீழே பெருங் கப்பல்கள் பாய்மரத்தைத் தாழ்த்திச் செல்லுமளவிற்கு அப்பாலங்கள் உயர்ந்திருந்தன. இருப்பினும் வண்டிகளும் குதிரைகளும் சிரமப்படாமல் மேலேறிச்செல்லும் அளவிற்கு அவை நன்றாகச் சரிவாக அமைந்திருந்தன. அங்கே பத்து முக்கிய சந்தைச் சதுக்கங்கள் இருந்தன. அவை ஒவ்வொன்றிலும் ஐம்பதாயிரம் மக்கள் இருக்கலாம். மானிறைச்சி, முயல்கள், வேட்டைப் பிராணிகள், கோழி, வாத்து முதலிய பறவைகள், பெண்தாரா, பழவகைகள், ஏராளமான மீன்கள், இப்படி எல்லா வகையான உணவுப் பண்டங்களும் பெருமளவில் விற்பனைக்கு இருந்தன. ஆகவே இவையனைத்தையும் விற்க முடியுமா எனவே தோன்றிற்று. சந்தைகளை ஒட்டிய வீடுகளின் கீழ்ப்பகுதிகளில் உள்ள கடைகளில் பட்டுவகைகள், இரத்தினங்கள், முத்துக்கள் வாசனைப்பொருள்கள், மதுவகைகள், அணிகள் இன்னும் இவை போன்ற வியாபாரப் பொருள்கள் இருந்தன. இவை முன்னர் கூறப்பட்டவைகளைப் போல் அவ்வளவு விரைவில் அழியக்கூடியவை அல்ல.

நகரத்தின் குறுக்கே செல்லும் முக்கிய சாலை நாற்பது

கஜ அகலம் இருந்தது. இச்சாலையின் மருங்கிலே தோட்டங்களின் மத்தியில் பெரும் மாளிகைகளும் கடைகளும் இருந்தன. பன்னிரண்டு முக்கிய தொழில் களின் அடிப்படையில் தொழிலாளர்கள் பிரிக்கப் பட்டிருந்தனர். ஓவியம் வரைதல், செதுக்குதல் உள்ளிட்ட அரிதான அதிசயத் தொழில்களில் அவர்கள் வல்லவர்களாக இருந்தனர். இத் தொழிலாளர்கள் சுறுசுறுப்பாகவும், அமைதியாகவும், நல்லியல்புடன் கூடியவர்களாகவும் இருந்தனர். வெளிநாட்டு வர்த்தகர்களைக் காண்பதிலே அவர்களுக்கு மகிழ்ச்சி. அவர்களிடம் கண்ணியத்துடன் அவர்கள் நடந்துகொண்டனர். பிறவிடங்களில் வேந்தர்களும் பிரபுக்களும் எப்படித் தூய்மையும் இன்ப நுகர்ச்சியும் வாய்ந்த இல்லங்களில் வாழ்ந்தனரோ, அப்படிச் சமூகத்தில் உயர்நிலையில் உள்ளவர்கள் வாழ்ந்தனர். அவர்களின் மனைவிமார்கள் 'தேவகன்னியரை யொத்த மெல்லியலார்.' அவர்கள் மென்மையான முறையில் போற்றி வளர்க்கப்பட்டவர்கள். மேலும் சித்திரவேலைப் பாடமைந்த பட்டாடைகளை உடுப்பவர்களாயும், மணி களால் எழிலுறச் சமைக்கப்பெற்ற அணிகலன்களை அணிபவர்களாயும் இருந்தனர். அவர்களுடைய புதல்வி கள் அடக்கமாக ஒதுங்கியிருப்பவர்கள். பொதுவிடங் களில் காணப்படும்போது 'அவர்கள் குதிக்கவோ ஆடவோ மாட்டார்கள். சரசம் பண்ணவோ உணர்ச்சி வசப்பட்டு நடக்கவோ மாட்டார்கள். வீதியிற் செல் வோர்களைத் தவறான முறையில் முறைத்துப்பார்த்த வாறு சன்னலண்டை இருந்துகொண்டு முகத்தைக் காட் டுவதில்லை. அவர்கள் வெளியே செல்லும்போது அழகிய தொப்பி அணிந்திருப்பார்கள். அவற்றை அணிந்திருப்ப தால் அவர்களால் மேல்நோக்கிப் பார்க்க இயலாது. கண் களைக் கீழே தாழ்த்தியவாறு நடக்கவேண்டியவர்களா யிருந்தனர். அவர்கள் வீட்டுப் பெரியவர்கள் அவர்

களுடன் பேசினாலொழிய தாமாகப் பேசமாட்டார்கள். உடன்பிறந்தோர் மிக நல்ல நடத்தையுள்ள கண்ணியமான இளைஞர்கள். நடுத்தரவகுப்பினரும் அவர்களைக் காட்டிலும் குறைந்த நாகரிகம் படைத்தவர்களல்லர். 'ஒருவரை யொருவர் இன்முகத்துடன் வணங்குவார்கள். சால்புடைய மக்களைப் போல் நடந்துகொள்வார்கள். உண்பதும் உகந்த முறையில் இருக்கும்.' அவர்கள் பேசும் முறையும் அணி செய்யப்பெற்றதாக இருக்கும்.

நகரத்திற்குக் கிழக்கே உள்ள பெரிய ஏரி உலாவப் போவோர்களால் மிகுதியும் பயன்படுத்தப்பட்டது. அதைச் சுற்றிலும் உள்ளும் புறமும் வியக்கத்தக்க வகையில் அழகுசெய்யப்பட்ட அரண்மனைகளும், மாளிகைகளும், பல பௌத்தமடங்களும் இருந்தன. நடுவே இரு தீவுகள் இருந்தன. அவை வனபோஜனம் செய்வோருக்குப் பிடித்தமான இடங்கள். விருந்திற்கென வாடகைக்கு எடுத்துக்கொள்ளக்கூடிய கூடாரங்கள் அங்கே உண்டு. தேவையான சணல்நூல் துணிகள், தட்டுகள், பீங்கான் பாத்திரங்கள் ஆகியவை அவை ஒவ்வொன்றிலும் வைக்கப்பட்டிருந்தன. நகர மக்கள் பலர் இத்தகைய தீவுகளுக்குச் சென்று ஆங்குள்ள சுறுசுறுப்புடன் விளங்கும் உணவுவிடுதிகளில் விருந்துண்பதோடன்றிப் படகு வீடுகளில் அமர்ந்தவராய்த் துடுப்பு கொண்டு உந்தப்பட்டுச் சென்று கொண்டிருந்தனர். மேஜைகளும், நாற்காலிகளும் அழகுற அமைக்கப் பெற்ற மரக்கலங்கள் அவை. படகிலேயே உண்பதற்குத் தக்க வகையில் சமையலறையும் இருந்தது. இசையும் பானவகைகளும் அங்கு நிரம்ப உண்டு. குன்றுகளும் தூபிகளும் ஒருபுறம். பூத்துக் குலுங்கும் மரங்களும் பூங்காக்களும் மற்றொரு புறம். நீர்வீழ்ச்சிகளும் கோயில்களும் பிறிதொரு புறம். இத்தகைய அழகிய காட்சிகளை வியந்தவாறு படகு வீட்டுக் கூட்டத்தினர் மிக உல்லாசமாக இருந்தனர்.

படகிற் செல்வதோடன்றி, சாலையில் உல்லாசப் பயணம் செல்லும் கேளிக்கையும் உண்டு. சல்லிகளாலோ கற்களாலோ பாவப்பட்டும், வடிகால் வசதி நன்கமையப்பெற்றதுமான சாலைகளில் தனிப்பட்டோர் வண்டிகள் செல்லலாம். சாலையின் ஓரங்களில் குதிரைச்சவாரி செய்வோருக்கென மிருதுவான பாதை உண்டு. ஒற்றைக்குதிரைவண்டிகளை யொத்த பொது வாடகை வண்டிகளும் இருந்தன. 'சாலையிலே மேலும் கீழுமாக எப்போதும் நீண்ட வண்டித்தொடர்கள் போய்வருவதைக் காணலாம். அவ்வண்டிகள் படுதாக்களால் மூடப்பெற்றும், பட்டுப்பஞ்சணைகள் பொருத்தப்பெற்றும் இருந்தன. ஒரு வண்டி ஆறு பிரயாணிகளை ஏற்றிச்செல்லும்.' பூங்காக்களுக்கு உல்லாசப்பயணம் செல்வதற்கு இந்த வண்டியைப் பகற்பொழுதில் வாடகைக்கு எடுத்துக்கொள்ளலாம். அங்கு பிரயாணிகள் குளிர்நிழலில் வனபோஜனம் செய்வார்கள்.

அந்நகரத்தில் காணப்படும் மற்றொரு பகுதி அங்குள்ள பொதுமக்களுக்கான குளிக்குமிடங்கள். அவற்றுள் சில ஒரே சமயத்தில் நூறு பேர்கள் நீரில் இறங்குவதற்கேற்ற வகையில் அத்தனை பெரியவையாக இருந்தன. தினந்தோறும் குளிப்பதும் ஒவ்வொரு தடவை உண்ணும் முன்பு சுத்தி செய்துகொள்வதும் மக்கள் வழக்கம். திறமை வாய்ந்த தீயணைக்கும் படையும் அங்கே உண்டு. கோபுரங்களின்மீது நீர்க்கடிகாரங்கள் வைக்கப்பட்டிருந்தன. மணிக்கொரு முறை மணியடிக்கும் மனிதர்கள் அங்கே இருந்தனர். திருட்டைத் தடுக்கும் பெரும் போலீஸ் படையினர் இருந்ததால் நகரின் எப்பகுதிக்கும் அச்சம் சிறிதுமின்றிப் போய்வர முடிந்தது. அக்காலத்தில் ஐரோப்பாவில் இது மிகவும் அபூர்வம்.

ஹாங்-சௌ மக்கள் தோல்வியுற்ற பின்னரும்

அவர்களுடைய வாழ்க்கை மேற்கூறியவாறு மகிழ்ச்சியும் பெரும்போக நுகர்ச்சியும் வாய்ந்ததாகவே இருந்து வந்தது. அரசகுடும்பத்தினரின் அரண்மனை அப்போதும் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தது. ஆனால் அது அப்போது மங்கோலிய கவர்னரின் உபயோகத்தில் இருந்தது. போலோ ஒருமுறை அதைச் சுற்றிப்பார்த்த தாகச் சொல்லுகிறார். அவருக்கு வழிகாட்டியாக இருந்தவர் முந்திய காலத்தில் அரண்மனைக்குள் நுழையும் விசேட உரிமை பெற்ற ஒரு பெரும் பணக் கார வணிகர். அது உலகிலேயே மிகப் பெரியதும் மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்டதும், மிகுந்த எழில் வாய்ந்ததுமான அரண்மனை என்று அழுத்தந்திருத்த மாகத் திரும்பத்திரும்ப அடித்துக் கூறுகிறார் ஆசிரியர். அதில் அடங்கிய முக்கிய கட்டடங்களைச் சுற்றிலும் ஒரு பூங்கா இருந்தது. அதன் ஒவ்வொரு புறமும் இரண்டரை மைல் நீளம் கொண்டது. கலை உணர்ச்சியோடு பூங்கா அமைக்கப்பட்டிருந்தது. அது ஒரு பரந்த பூஞ்சோலை. மலர்களும், கனிகளும் நீரூற்றுக்களும், ஏரிகளும், மரங்களடர்ந்த தோப்புக் களும், இருமருங்கிலும் வண்டி செல்வதற்கான மரங்கள் நிறைந்த சாலைகளும், மான்களுக்கேற்ற கொடிப்பாதை அமைந்த சோலைகளும், ஆங்காங்கே இருந்தன. போலோ முக்கிய அரசாங்க அவைக்கூடத்தை அடைந்தார். அதன் கூரையைச் சிவப்பும் மஞ்சளுமான வண்ணப்பூச்சுடைய தூண்கள் தாங்கி நின்றன. நீல வண்ணமாக மேல்மச்சு செதுக்கு வேலை செய்யப்பட்டி ருந்தது. சீன வரலாற்றின் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைச் சித்திரிக்கும் ஓவியங்கள் சுவர்களில் காணப்பட்டன. அவை பல்வேறு கதைகள், பல வகையான விலங்குகள், பறவைகள், போர்வீரர்கள், ஆரணங்குகள் ஆகியவற்றைப் பற்றியவை. அதன் உயர்வைப் பற்றி என்னால் விவரிக்க இயலாத அளவுக்குப்

பேரெழில் வாய்ந்தது. இவ்வரண்மனையின் தன்மை வியப்பூட்டுவதாயிருக்கிறது. அதில் ஓராயிரம் அறைகள் உள்ளன.' மிகப்பெரிய ஐரோப்பிய அரண்மனைகளில் இருக்கக்கூடிய படுக்கையறைகளைப்போலவோ, மகளிரின் தனியறைகளைப் போலவோ அல்லாமல், இங்குள்ள ஒவ்வொரு அறையும் ஒரு வீடுபோலப் பெரிதாயிருந்தது. (சீனக் கட்டடமுறைப்படி ஒரு அரண்மனை என்பது மதில் சூழ்ந்த திறந்த வெளிகளில் அமையப்பெற்ற கூடாரங்களின் ஒரு தொகுதி என ஒருவாறு வருணிக்கலாம். கூடாரங்கள் ஒவ்வொன்றும் கூரை வேயப்பெற்ற பாதைகளால் இணைக்கப்பட்டவை. ஒவ்வொரு கூடாரமும், ஒரு பெரிய கூடமும் அதையொட்டிய சிறு விடுதிகளும் கொண்டது.) மேலும் உட்புறம் அமைந்த முற்றங்களைப் பற்றியும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். முற்றத்தைச் சுற்றித் தூண்கள் நிறுத்தப்பட்டுள்ள தாழ்வாரங்கள் உண்டு. தாழ்வாரத்திலிருந்து பல அறைகளுக்குச் செல்லலாம். அங்கே அந்தப்புர நங்கையர்கள் வசிப்பது வழக்கம். ஆனால் அவ்வறைகள் அப்போது சூன்யமாகவும் இடிந்த நிலையிலும் காணப்பட்டன என்று அவர் கூறுகிறார். அதற்குக் காரணம் மங்கோலிய கவர்னர் போதிய சிப்பந்திகளை வைத்துப் பராமரிக்காததுதான். மலர்களைக் கவனிப்பாரில்லை. மான்களும் மறைந்துவிட்டன.

குப்ளாகான் வசித்துவந்த அரண்மனை ஏறத்தாழ இவ்வளவு இடப்பரப்பைக் கொண்டிருக்கவில்லை. அதன் சுற்றுமதில் சுமார் ஒரு மைல் நீளமும் அரை மைல் அகலமும் கொண்டது. எனவே சுங் வம்சத்தாரின் அரண்மனை, மதிலின் அளவில் ஏறக்குறைய மூன்றிலொரு பங்குதானிருந்தது. ஆனால் குப்ளாகான் தனது அரண்மனையில் அடைபட்டுக்கிடக்கவில்லை. அவரது வாழ்க்கையில் அடுத்தடுத்து ரம்யமான விநோத வேடிக்கைகள் நடைபெறும். அவர் வேட்டையாடிக்

கொண்டும் பிரயாணம் செய்துகொண்டும் வெளியே சுற்றியவண்ணம் இருப்பார். சுங் வம்சத்தின் கடைசி மன்னர்கள் அவ்வளவு தனித்து வாழாமல் சற்று அதிக தீரத்துடன் இருந்திருப்பார்களேயானுல், தங்கள் சிம்மாசனத்தை இழந்திருக்க வேண்டியதில்லை. உண்மை நிலையையும் போர்க்கருவிகளையும் அறியாது வளர்ந்த அவர்கள் தாங்களே ஏற்படுத்திக்கொண்ட அவைக்குரிய ஒழுங்குமுறைகளால் கட்டுண்டவர்களாகி விட்டனர். அரசாங்க முக்கிய அலுவலகங்களில் பணியாற்றிவந்த திறம்படைத்த அறிவாளிகள் காரியங்களை நடத்திச்சென்றனர். அலுவலர்களைக் கொண்டு நடத்தப்படும் ஓர் அரசாங்கத்தின் தலைவராக இருந்த சீனச்சக்கரவர்த்தி எப்போது முக்கியமான முடிவுகளுக்கு வரக்கூடிய திறமையற்றவராக ஆனுரோ, அப்போதே அரசவம்சத்தின் முடிவு நெருங்கிவிட்டது. ஜெங்கிஸ்கானுக்கு எதிராக வடக்கேயுள்ள கின் வம்சத்திற்கு உதவாமற்போனது அத்தகைய திறமை யற்ற தன்மைக்கோர் எடுத்துக்காட்டு

ஹாங்-சௌவைப்பற்றிப் போலோ தரும் வருணனை சுவை பயக்கத்தக்கதாயும் விவரமானதாயும் இருந்தது. ஆயினும், சமவெளிப் பிரதேசத்தினின்றும் படை யெடுத்துவந்த ஒருவனுல் கைப்பற்றப்பட்ட லண்டன் நகரத்தைப்பற்றிய அறிக்கை, அங்குள்ள பூங்காக்கள், கடைவீதிகள், போக்குவரத்து வசதிகள், பக்கிங்ஹாம் அரண்மனை, ஆகியவற்றைப் பற்றி மட்டும் கூறியிருந் தால் எப்படியிருக்குமோ, அதைக்காட்டிலும் இது அதிகமான அளவில் இருந்தது என்று கூறுவதற்கில்லை. ஹாங்-சௌவின் உண்மையான சிறப்பு புறக்கணிக்கப் பட்டுவிட்டது. அதன் ஆழ்ந்த பொருள் அறியப்பட வில்லை. நல்ல கடைகளும், செப்பமான சாலைகளும், திறமை மிக்க போலீஸ் முறையும், வியக்கத்தக்க பொழுதுபோக்குகளும் இருப்பதனுல் வாழ்வதற்கு ரம்மியமான இடம் என்பதைக்காட்டிலும், உலகிலேயே

எல்லா இடங்களுக்குள்ளும் அறிவுக்கும் கலைத் திறனுக்கும் மிகச்சிறப்பு வாய்ந்த ஓர் இடமாக அது விளங்கியது என்பது பொருந்தும். முதன்மையான ரோமாபுரி உள்ளிட்ட எவ்விடத்தும் அதுவரை இருந்துள்ள எந்த நகரத்தைக் காட்டிலும் அது சிறந்தது. பாரிஸ், லண்டன் உள்ளிட்ட பிற்காலத்தில் தோன்றிய பிற நகரங்களைக் காட்டிலும் அது சிறப்பு வாய்ந்தது. இதற்குக் காரணம் அறிவின் விரிவு, நீண்ட காலந் தொட்டு நிறைந்த அளவில் பிறவிடங்களைக்காட்டிலும் இங்கு ஏற்பட்டுள்ளதேயாகும். ஒரு பணக்கார வியாபாரியோடு சென்றதற்குப் பதில்-அந்த வியாபாரியும் வெளிநாட்டினராக இருந்திருக்கக்கூடும்-கன்பூசிய மதத்தைப் பின்பற்றும் அறிஞர்கள் என்று கூறப்படும் சீனப்பெருமக்களோடு போலோ ஒத்த நிலையில் நட்பு பூண்டிருந்தாரானல், ஹாங்-சௌ நகரின் அறிவின் மிக மேம்பாடான நிலையை அவர் அறிந்திருக்கக்கூடும். அவர்களுடைய சொந்தப் புத்தகசாலைகளில் அவர்களுடன் போலோ தனித்து அளவளாவியதாகக் கற்பனை செய்து பார்ப்போம். முதலில் அவர்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தங்கள் நாகரிகம் தோன்றியது முதல், சீனப் பண்பாட்டில் தொடர்பு அற்றுப் போனதே கிடையாது என்பதைக் குறிப்பிட்டிருப்பார்கள். அப்பண்பாடு கொஞ்சங்கொஞ்சமாக விரிவடையவே, சிந்தனைக்குவியல் மிகவும் பெருகி விட்டது. மேலை நாடுகளில் எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பு காட்டுமிராண்டிகளால் அழிக்கப்பட்டுவிட்ட அவர்களது பழம் பண்பாடு இன்றுவரை மீட்கப்படவில்லை. அதுபோலன்றி இப்போது இறுதியாக ஹாங்-சௌவில் ஏற்பட்ட ஆபத்திற்கு முன்பு சீனர்கள் எப்போதும் காட்டுமிராண்டி மக்களால் முழுதும் ஒடுக்கப்படவில்லை. பண்பாட்டைப் பொறுத்தவரையில் இந்த ஆபத்து உடனடியாக எந்த அபாயத்தையும்

தோற்றுவித்துவிடவில்லை. ஏனெனில் இக்கொடியவர்கள் மேலும் தெற்கே செல்வதற்கு முன்பு, சீனர்களின் உயர்ந்த கருத்துக்களால் ஓரளவுக்கு நாகரிகமடைந்துவிட்டார்கள். ஆகவே கண்டவற்றைத் தீக்கிரையாக்குவதும் கத்திகொண்டு அழிப்பதும் நின்றன. ரோமாபுரி வீழ்ச்சியுறாமலிருந்தாலோ, அல்லது உடனே அந்தக் காட்டுமிராண்டி மக்களைத் தன்னுள் ஐக்கியப்படுத்திக் கொண்டு நாகரிகமக்களாக ஆக்க முடிந்திருந்தாலோ, ஐரோப்பியப் பண்பாடு எப்படி இருந்திருக்குமோ அப்படி இருந்தது சீனப் பண்பாடு. (உண்மை என்னவெனில் சீன நாட்டுப் பண்பாட்டைப்போல் ரோமானியரின் பண்பாடு பிறரை ஈர்க்கும் தன்மை வாய்ந்ததன்று.)

மேற்கண்டவாறு எந்த இடைக்கால ஐரோப்பியரிடம் சொல்லியிருந்தாலும் அவர்களால் அக்கூற்றின் பொருளை உணர்ந்திருக்கவே முடியாது. ஏனெனில் அப்பழம்பெரும் சீனப்பண்பாட்டினின்றும் அன்று விரிவடைந்திருந்த பண்பாடு தோன்றியிருக்கக்கூடும் என்பதை அவர்கள் அறியாமையால், காலப்போக்கில் வளர்ந்துள்ள அப்பண்பாட்டைப் பற்றி எண்ணிப் பார்க்கவே முடிந்திருக்காது. எனினும் வாதமுறையை ஒட்டிச் சீன அறிஞர்கள் அவ்வாறு கூறியதாக வைத்துக் கொள்வோம். அப்போது அவர்கள் எப்படி அக்கூற்றை மெய்ப்பிக்க முனைந்திருப்பார்கள் என்பதைப் பார்ப்போம்.

முதலாவதாக, கிறிஸ்து தோன்றுவதற்கு ஐந்நூறு ஆண்டுகள் முன்பு வாழ்ந்தவரும் நல்லொழுக்கத்தை உணர்த்தியவருமான தத்துவஞானியாம் கன்பூசியசின் பெயரோடு தொடர்புள்ள தங்கள் பழம்பெரும் நூல்களை ஐரோப்பியரிடம் அவ்வறிஞர்கள் காட்டியிருப்பார்கள். அத்தத்துவஞானியின் காலத்திற்கு நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே உருவாகிவந்துள்ள பழைய

மா. போ.—13

சீனரின் சிந்தனைகளின் சுருக்கமே அந்த நூல்கள் என்பதைத் தெளிவுபடுத்தியிருப்பார்கள். கன்பூசியசின் பெருஞ் சிறப்பு, சீனரின் பண்பாட்டைத் தோற்றுவித்த தென்பதல்ல, ஆனால் அதன் தொடர்பைக் காப்பாற்றியது தான். அடுத்தபடியாக கி.மு. நான்காம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட பல்வேறு தத்துவசிந்தனைகளைப்பற்றியதும் கி.மு. 207-ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட ஹான் வம்சத்தைப் பற்றியதுமான தங்கள் குறிப்புக்களடங்கிய நூல்களைக் காட்டியிருப்பார்கள். இக்காலம் ரோமசாம்ராஜ்ய காலத்தை ஒத்தது. இது மேற்கூறப்பட்ட பொற்காலத்தை அடுத்தது. பரந்த பண்பாட்டைப் பரம்பரையாகப் பெற்ற ஹான் வம்சத்தினர் நானூறு ஆண்டுகளாக அதைப் பேணி வளர்த்தனர். அடுத்தப்படியாகப் போலோவின் சீன நண்பர்கள் விளக்கியிருக்கக்கூடியது இதுதான். அதாவது ஹான் வம்சத்தினரின் முக்கிய வெற்றி அறிவுத்துறையில் ஏற்கனவே அடைந்துள்ள சாதனையை ஒருங்கு திரட்டியதாக இருப்பினும், அவர்கள் நூதனமாக அளித்தது முறைப்படி எழுதப்பட்ட வரலாறாகும். அவ்வரலாறு தஸ்தாவேஜிகளிலிருந்து தொகுக்கப்பட்டது. முக்கியமான நிகழ்ச்சிகளின் நாட்களும், பலவிடங்களில் மணிக்கணக்கும்கூட குறிப்பிடப்படும் அளவுக்கு மிகக்கவனமாகத் தேதியிட்டு வரையப்பட்டுள்ளது. வரலாற்றுத்துறையிலே ரோமானியரின் சாதனைகள் ஒரு வரையறைக்குட்பட்டன. ஆனால் அவற்றைப் பெருமளவுக்கு மிஞ்சி விட்டது சீனரின் இப்பெருஞ்சாதனை. அவர்கள் எடுத்துக்காட்டுவதைப் புரிந்து கொள்ளும் அளவுக்குப் போலோ புத்திசாலியாக இருந்ததாகவே வைத்துக்கொள்வோம். அப்போது அவர்கள் மேலும் கீழ்க்கண்டவாறு விவரித்துக் கொண்டே செல்வார்கள். அடுத்த மூன்று நூற்றாண்டுகளில் அரசியல் கொந்தளிப்புகள் இருந்தபோதிலும்

சீன நாகரிகத்தின் மேலான வளர்ச்சி தொடர்ந்து வந்தது. கலையாராய்ச்சி பற்றிய விதிகள் உருவாகி வந்தன. ஆயிரக்கணக்கான புத்தகங்களில் சித்திரக் கோடுகள் பற்றிய ஆழ்ந்த தத்துவம் விசாரணை செய்யப் பட்டது. அப்போது ஐரோப்பாவில் காகிதத்தை அறிந் தார் இல்லை. எனினும் ஹான் வம்சகாலம் தொடங்கிச் சீனர்களால் காகிதம் உபயோகிக்கப்பட்டு வந்தது. புனிதர் அகஸ்டின் எந்த ஆண்டில் பிரிட்டிஷாரிடம் தூது சென்றாரோ ஏறத்தாழ அதே காலத்தில் சீனாவில் அச்சுத்தொழில் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டது. அக் காலத்தில் ரோமானியர் பிரிட்டிஷாரை விட்டுச் சென்றதனால் பெருங்கேடு விளைந்தது. அதன் பின்னர் பிரிட்டிஷ் மக்கள் மீண்டும் சீர்கெட்ட காட்டுமிராண் டித்தனத்திற்கே திரும்பி விட்டனர். அது முதற் கொண்டு, உலகத்தின் எல்லா நாடுகளையும் சேர்த்துப் பார்த்தாலும் அவற்றைக்காட்டிலும் தங்கள் நாட்டில் மிகுதியான புத்தகங்கள் வெளியிடப்பட்டுள்ளன என்று சீன அறிஞர்கள் கூறியிருப்பார்கள். அவர்களுடைய ஆதி பண்பாட்டைப் பற்றியும், அதினின்றும் தோன்றி யுள்ள புதுப்படைப்பைப்பற்றியதுமான மதிப்பீடாக அப்புத்தகங்கள் இருந்துவந்தன. ஆனால் இந்த மதிப்பீடு அவ்வப்போது மாறிக்கொண்டே வந்தது. அவர்கள் தோற்றம் முதல் இறுதிவரை மிகமிக விரிவான முறையில் விவரங்களைக் குறித்துவைத்துள்ளது. ஆயிர மாயிரம் தொகுதிகளாக விரிந்துள்ளது. ஆகவே கடந்த ஆயிரத்தைந்நூறு ஆண்டுகளில் மாதவாரியாக என்ன நிகழ்ந்துள்ளது என்பதைத் திட்டவட்டமாக அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்களுடைய செய்யுள் நடைக் காப்பியங்களோ இன்னும் விரிவான முறையில் இருந்தன. அவை மிக மேலான கருத்துக்களையும், உலகியலோடொட்டிய எளிய கருத்துக்களையும் ஒத்த முறையில் இயல்பாகக் கூறின. சுயேச்சைக்கருத்துக்

களனைத்தைப் பற்றியுமானவை அவர்கள் எழுதிய கட்டுரைகள். எல்லாவற்றிலும் வியப்பூட்டுவது யாதெனில், கருத்துக்கள் அமையப்பெற்ற பல்வேறு இலக்கியங்களும் எழுதப்பட்ட முறையே கலைப்படைப்பாகும் என்பது. அதுமட்டுமல்ல. கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டுள்ள குறியீடுகளாகக் காகிதத்தின்மீது பொறிக்கப்பட்டுள்ள சொற்கள், தமக்குரிய கருத்துக்களைக் குறிப்பிடுவதோடு சிறு சிறு கலைப் பொருள்களாகவும் விளங்கின. ஒவ்வொரு சொல்லும், வரிகளினூடே பொதிந்துள்ள சமநிலை, லயப்பிரமாண ஓட்டம், உயிர்ப்பு ஆகிய இயல்புகளை எடுத்துக் காட்டுகின்றது. இந்த முறையைச் சரிவரப் புரிந்துகொள்வது கடினம்தான். ஓவியக்கலையின் பண்பை எடுத்துக் காட்டும் இயல்புகளோடு இவை ஒத்திருக்கின்றன.

ஹாங்-சௌ என்ற இடத்தில்தான் விரிந்த கருத்துக்களின் தொகுப்பனைத்தும் அவற்றைக் கூறும் நூல்களும் குழுமியுள்ளன. அங்குள்ள புத்தகசாலைகளில் மிகப் பண்டைக்காலந் தொட்டு வந்துள்ள சிந்தனைத் தொடர்கள் குவிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு தலை முறையிலும் அவற்றை ஆராயவும் ஆக்கவும் ஆற்றல் படைத்தவர்களால் விளக்கம் தரப்பட்டுள்ளன. சீன நகரத்திலுள்ள பேரறிஞர்களிடையே அறிவைப் பயன் படுத்துவதில் பேரானந்தமும், அறிவுக்கும் அப்பாற் பட்ட விஷயங்களில் நுண்ணுணர்வும் காணப்பட்டன.

இதுவரை கூறப்பட்டது ஒரு கற்பனைச்சம்பாஷணை. உண்மையிலேயே இது ஒரு மெத்தக்கற்பனை. ஏனெனில் ஹாங்-சௌவிலுள்ள அறிஞர்கள் போலோவைக் காட்டிலும் கல்வி, பயிற்சி, கருத்துக்களைத் தங்குதடை யின்றிக் கையாளுவதில் அனுபவம் ஆகிய எல்லா வற்றிலும் எத்தனையோ பங்கு முன்னேறியிருந்தனர். தங்களுடைய கலையைப் பற்றியோ இலக்கியத்தைப் பற்றியோ எத்தனை எளிய ஒரு கூற்றை அவர்கள்

கூறியிருந்தபோதிலும், போலோவிடம் அவற்றைப் புரிந்துகொள்ளக் கூடிய சாத்தியக்கூறுகள் இருந்திருக்க முடியாது. தைரியம், சில அம்சங்களில் நூதன முறையைக் கையாளும் திறன், நாணயம், ஆகியவற்றை உடைய ஒரு மனிதனை இகழவேண்டும் என்ற ஆசை நமக்கில்லை. எனினும் அக்காலத்து மக்கள் மனதை ஈர்த்த எந்த ஒரு பொருளைப்பற்றியும், போலோ புத்திசாலித்தனமான ஒரு கருத்தை உருவாக்கிக்கொள்ளும் திறமையுடையவரல்ல என்று எண்ண வேண்டிய நிலையில்தான் சீனர்கள் இருந்திருக்க வேண்டும். மார்க்கோ போலோவைப்பற்றி, 'அவர் எல்லாவற்றையும் பார்ப்பார். ஆனால் எதையும் கூர்ந்து நோக்கியவரல்ல' என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அவரால் எப்படிக் கூர்ந்து நோக்கியிருக்க முடியும்? ஏனெனில் அடுத்த இருநூறு ஆண்டுகள் கழித்துத்தான் ஐரோப்பாவே தனது பழம்பெரும் சிந்தனைகளை மீண்டும் காணமுடிந்தது. அதற்கும் பிறகு முந்நூறு ஆண்டுகள் கழித்துப் பதினெட்டாம் நூற்றாண்டிலேதான் ஐரோப்பியரின் அறிவு ஹாங்-சௌ அறிஞர்களின் அறிவுத்துறையில் நுழைய முடிந்திருக்கும்.

இப்பொருள்பற்றி முடித்துக்கொள்ளும் முன்னர், அதை முழுதும் நாம் சூழ்ந்துநோக்கிப் புரிந்து கொள்ள வேண்டுமானால் இன்னும் ஒன்றைக் குறிப்பிடவேண்டும். சுங் வம்சத்தை மங்கோலியர் வெற்றி கொண்டது மனித உள்ளத்திற்கு உடனடியாகப் பேராபத்தை விளைவித்துவிடவில்லை என்று நான் சொல்லியிருக்கிறேன். எனினும் காலப்போக்கில் சீனப்பண்பாடு அந்த அதிர்ச்சியினின்றும் மீளவில்லை. நாடு மங்கோலியர் வசத்தில் ஒரு நூற்றாண்டு இருந்தது. மங்கோலியர் மேலெழுந்தவாரியாக நாகரிகமடைந்தவர் போல் காணப்பட்டபோதிலும், போலோவை வக்

காட்டிலும் சிறந்த வகையில் சீனப் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவில்லை. அவரைப் போலவே அவர்களும் அதில் அக்கறை கொள்ளவில்லை. நாடு மங்கோலியர் வசம் வந்த காலந்தொட்டு, பெரும் அறிவாளிகள் ஆட்சியில் தொடர்புகொள்ளும் வகையில் நியமிக்கப் படவில்லை. மிகமிகப் பண்பட்ட உள்ளமும் சுயேச்சை மனப்பான்மையும் கொண்டவர்களின் கருத்துரைகள் அது முதல் அரசியல் விவகாரங்களில் துணைபுரியவில்லை. பண்பாட்டின் பாதுகாவலர்கள், எவ்விதத்திலும் துன் புறுத்தப்படவில்லை யெனினும், தங்கள் இன்றியமை யாத்தன்மையை இழந்து விட்டனர். இத்தகைய புறக்கணிப்பின் விளைவாக உள்ளத்தில் தோன்றிய அதிர்ச்சி, பண்பாட்டில் பொதிந்துள்ள ஆக்கசக்தி யெனும் சுடரை அணைத்துவிடப் போதியதாயிருந்தது. சீனர்கள் பழைமையைக் காத்தனர். ஆனால் புதிதாக ஒன்றைச் சொல்லிக் கொள்வதற்கு அவர்களுக்கு ஏதும் இல்லை. அவர்கள் பழைமையைப் பின்பற்றினர். ஆனால் நிகழ்காலச் சாதனைக்கு உணர்வூட்டும் வகையில் அதைப் பயன்படுத்திக் கொள்ளவில்லை; அவர்கள் வியத்தகு வினைஞராகவும், சலியாத நூற்றொகுப்பாளராகவும், தத்துவக் கருத்துக்களைத் தத்தமக்கேற்ற வகையில் தேர்ந்தெடுப்பதில் திறமையாளராகவும், ரசனையைத் தேர்வதில் வல்லவராகவும் இருந்துவந்தனர். அவர்தம் முன்னோர், வாழ்க்கையைப்பற்றிக் கண்டு கூறிய அதே அளவுக்குத் தமது காலத்திய விஷயங்களைக் குறித்து இவர்கள் கருத்துரை வழங்கினாரில்லை. ஆகவே அவர்க ளுடைய கருத்தில் மாற்றமில்லை. சொன்னதையே திரும்பக்கூறி அலுப்படையச் செய்தனர். மிங் என்று கூறப்படும் சீன அரசவம்சம் மறுமுறையும் நிலைநிறுத்தப் பட்டும் கூட, அவர்களுக்கு மீண்டும் புத்துணர்வூட்டு வதற்கு அது போதுமானதாக இல்லை. மிங் வம்ச ஆட்சி இருநூற்றெண்பது ஆண்டுகள்தான் நடை

பெற்றது. அதை அடுத்து இரண்டாவது முறையாகச் சமவெளியினின்றும் வந்த அரைகுறை நாகரிகம் படைத்த மஞ்சு வம்சத்தினரான காட்டு மிராண்டிகளால் சீனு முழுதும் வெல்லப்பட்டது. நாடு வெளி நாட்டாரின் ஆதிக்கத்திற்கு மீண்டும் உட்பட்டது. 1270-ஆம் ஆண்டு ஹாங்-சௌ வீழ்ச்சியுற்ற பின்னர், பண்டைக்காலத்தில் நிகழ்ந்ததுபோன்ற அறிவியல் முக்கியத்துவம் வாய்ந்த எதுவும் மறுபடியும் நிகழவில்லை. பண்பாடு பேணப்பட்டு வந்தபோதிலும் அதன் வளர்ச்சி குன்றியது. சுயமாக எண்ணுவோர் ஒருசிலரே இருந்தனர். ஐரோப்பாவைக் காட்டிலும் முன்னேறுவதற்குப பதில் சீனு பின்தங்கியது. ஹாங்-சௌவைப் போன்ற, உலகிலேயே சிந்தனைத்துறையில் தலைசிறந்த ஒரு நகரத்தை யாரும் மீண்டும் கண்டதில்லை. போலோவுக்கிருந்த வாய்ப்பினை எதிர்காலத்தில் வேறெந்த ஐரோப்பியரும் பெறப்போவதில்லை. மாபெரும் ஒரு பண்பாட்டின் இறுதி மலர் அவர் கண்முன் விரிந்திருந்தது. மதகுருமார்களின் ஆளுகைக்குட்பட்ட நைல் நதி நாகரிகத்தைத் தவிர, வேறு வரலாற்றிலே வரையப்பட்டுள்ள எந்த நாகரிகத்தைக் காட்டிலும் இது மிக நீண்ட காலம் வளர்ந்து உருப்பெற்றது. இவ்வறிவுப்பிழிவின் காட்சிக்கெதிரே போலோ நோட்டுப் புத்தகமும் கையுமாக விழிப்பதைப் பார்க்கிறோம். பொதுக்குளியல் தொட்டிகளையும் உல்லாசப்பிரயாணிகளின் குழுக்களையும் காட்டிலும் பெருமளவில் மிகவும் சுவையூட்டுபவை ஏதேதோ அவரை எதிர்நோக்கி இருந்தன. எந்த ஒரு ஐரோப்பியனும் அவற்றைப் பார்த்ததுமில்லை பார்க்கப் போவதுமில்லை. இருப்பினும் அவை என்ன என்பதைக் கூறப் போலோ முற்றிலும் தவறிவிட்டார். ஹாங்-சௌ ஓர் எழில் வாய்ந்த இடம்; அதைப்போன்ற எழில்மிக்கதும் வியப்பூட்டக் கூடியதுமான நகரம் என்றும் இருந்ததே இல்லை என மீண்டும் கூறுகிருர். என்னதான் முயன்ருலும் அவர் செய்யக்கூடியதெல்லாம் 'ஆச்சரியம், ஆச்சரியம்' என்று திரும்பத் திரும்பச்சொல்வது ஒன்றுதான்.

பதினெட்டாம் அத்தியாயம்

# மங்கோலியரின் ஜப்பான் படையெடுப்பு

ஆசியாவைப் பற்றி வருணிக்கவேண்டும் என்ற பேராசையிலே மார்க்கோ போலோ இதுவரை நம்மை நீண்டதூரம் இட்டுச்சென்றிருக்கிறார். மத்தியத்தரைக் கடலுக்கும் பீகிங்கிற்கும் இடையே உள்ள எல்லா நாடுகளைப்பற்றியும், சமவெளியில் தமக்குச் சொந்தமான உறைவிடங்களிலே வாழும் மங்கோலியரைப் பற்றியும், சீன நாட்டில் மங்கோலியச் சக்கரவர்த்தியின் புகழ்மிக்க அரசவையைப் பற்றியும், பீகிங்கிற்கும் பர்மாவுக்குமிடையே சாலையோரத்தில் உள்ள இடங்களைப் பற்றியும், வியப்பூட்டும் ஹாங்-சௌ நகரத்திலுள்ள சீனர்களைப் பற்றியுமே நமக்குக் குறிப்புகள் கிடைத்துள்ளன. அவர் காலத்திய மாந்தரின் உள்ள நிலை இடந்தருமளவிற்கும் மேலாக, இடைக்கால ஐரோப்பியர் என்ற முறையில் போலோ தான் குறிப்பிட்டுள்ளவற்றின் கருத்தை ஆழ்ந்து நோக்க இயலாதவராயினும், அவர் காலத்தவருக்கு அவர் தந்துள்ள செய்திகளை ஓர் ஆசியக் கலைக்களஞ்சியத்திற்கு ஒப்பாகக் கூறலாம். மேலும், அவரிடத்தில் சரியான பூகோளப் படங்கள் இல்லாதது ஒரு பெரும் இடையூறு. தானுகப் படங்கள் வரையவும் இயலாதவர். அவரால் இயன்ற வரை, தான் கூறியுள்ள இடங்களின் இருப்பிடத்தை, அவற்றிற்கிடையே ஒருநாளில் துருப்புக்கள் செல்லக் கூடிய தூர அளவின் எண்ணிக்கை கொண்டும், ஒன்றுக்கும் மற்றொன்றிற்கும் உள்ள திசைநிலையைக் கொண்டும் நிறுவ முயன்றுள்ளார். இவ்விளக்கங்களும், அவர் வரைந்ததாகக் கூறப்படும்—ஆனுல் இன்று காணப் படாததுமான—ஒரு தூலமான நாட்டுப்படமும், அவரது வாசகர்களுக்கு ஆசியாவின் பெரும் பரப்பைப் பற்றிய

ஒரு கருத்தைத் தந்துள்ளது. ஐரோப்பியர்கள் பூகோளத்தைப் பற்றிய அறியாமை இருளில் உழன்றனர். அவ்விருளில் ஒளி வீச மற்றுமொரு முயற்சி எடுத்துக் கொண்ட போலோவை இப்போது நாம் பார்க்கப் போகிறோம். சீனக்கடலில் உள்ள தீவுகளைப் பற்றி அவர் சொல்லப்போகிறார். கடல் வழியே நம்மை இந்தியாவுக்கும் அழைத்துச் செல்லப்போகிறார். தரை வழியே சென்றால் அந்நாட்டின் எல்லை பர்மாவுக்கப்பால் காணக்கிடக்கின்றது என்பதை முன்னமேயே சொல்லி யிருக்கிறார்.

அவர் குறிப்பிடும் முதற் பெரும் தீவு சீர்மிக்க ஐப்பான். சீனாவைப் பற்றியவரையில் அது ஏதோ இனம் புரியாத ஒரு பெயர் என்று அறிந்திருந்த அளவு கூட ஐப்பானைப் பற்றி ஐரோப்பியர் அறிந்திருக்கவில்லை. அந்நாட்டைப் பற்றி எதையும் அறிந்திருக்கவில்லை என்பது மட்டுமல்ல, அப்படி ஒரு நாடு இருக்கிறது என்றுகூட எவரும் அதற்கு முன்னர் அறிந்ததே இல்லை. மார்க்கோ போலோ சீனாவில் இருந்த ஆண்டுகளில் அந்த நாடு மக்கள் கருத்தில் பெரிதும் இடம் பெற்றிருந்தது. ஏனெனில் கீர்த்திவாய்ந்தவரும் பெரிதும் பாராட்டப்பட்டவருமான இவரது ஒப்பற்ற எசமானர் குப்ளாகான் அந்நாட்டை விழுங்க விரும்பினார். ஆனால் பெரும் உயிர் நஷ்டத்துடன் முறியடிக்கப் பட்டார். உண்மையிலேயே, நாம் அறிவது என்னவெனில், அக்காலத்தில் தலைசிறந்து விளங்கிய ஒருவரால் படையெடுக்கப்பட்ட ஐப்பான் அவரைத் துரத்தியடித்து வெற்றி கண்டது. அடுத்த எழுநூறு ஆண்டுகளில் மீண்டும் அந்நாடு படையெடுக்கப்படாத அளவுக்கு அவ்வெற்றி அந்நாட்டிற்கு உதவியது. இத்தனை ஆண்டுகளுக்குப் பின்னர்தான் (அணுகுண்டு) வெடியினால் அந்நாடு வெற்றிகொள்ளப்பட்டது. அதன் எதிரொலி அந்நாட்டின் எல்லைகளுக்கு வெகுதூரத்

திற்கப்பால் பரவி உலகனைத்தையும் இன்று அச்சுறுத்தி வருகிறது.

போலோ குடும்பத்தினர் வந்து சேர்ந்த 1275-ஆம் ஆண்டில் ஒருமுறையும், 1281-ஆம் ஆண்டில் ஒருமுறையுமாக குப்ளாகான் இரு தடவை ஜப்பானை எதிர்த்துத் தாக்குதல் நடத்தினார். தனது நாட்டின் எல்லைகளில் உள்ள எல்லா சுதந்திர நாடுகளையும் தன்னையே அதிபதியாக ஒப்புக்கொள்ளுமாறு அவர் கேட்பது வழக்கம். பர்மிய அரசரை எங்ஙனம் அவர் இவ்வாறு அதிகாரத்துடன் கேட்டார் என்பதையும், அவர் மறுத்தபோது அவரிடம் எத்தனையோ யானைகள் இருந்தும் கூட எதிர்த்து அடிபணிய வைத்துவிட்டார் என்பதையும் நாம் முன்பு பார்த்திருக்கிறோம். ஜப்பானியரும் அது போலவே மறுத்தனர். 1275-இல் நானூற்றைம்பது கப்பல்களில் 30,000 வீரர்கள் கொண்ட ஒரு சிறு படையைக் கொரியாவிலிருந்து குப்ளாய் அனுப்பிவைத்தார். அவர்களுள் பாதிப்பேர் மங்கோலியப் போர்வீரர்கள். ஜப்பானியத் தீவுக்கூட்டத்தின் தென்கோடியில் உள்ள கியு-ஷியுவின் வடபகுதியில் ஹாகோசகி (Hakozaki) என்னுமிடத்திற்கருகிலுள்ள கடற்கரையில் கொடூரமான போர் நடந்தது. மங்கோலியத் துருப்புக்கள் வாராவதிமுனையில் அரணை நிலை நிறுத்துவதில் தோல்வியுற்று மீண்டும் கப்பலேறின. ஆனால் தொடங்கிய பருவநிலை பாதகமாக இருக்கவே துருப்புக்கள் கடற்கரையினின்றும் சிறிது தூரத்திற்கப்பால் இருந்துவிட்டுப் படையெடுப்பைக் கைவிட்டன.

குப்ளாய் மிகவும் கோபமுற்றார். ஆனால் தகுந்த நேரம் வரட்டும் எனக் காத்திருந்தார். ஜப்பானிய அரசாட்சியின் விநோத அமைப்புமுறை பற்றி அவர் மிகவும் குழம்பியிருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலே சக்கரவர்த்தி இருந்தார். ஆனால் அவரது அதிகாரம் பெயரளவில் தானிருந்தது; உண்மையிலே

அல்ல. நூற்றுண்டுகளுக்கு முன்பு, ஷோகூன் என்பவரான பிரபுக்களாட்சித் தலைவர் அதிகாரத்தைக் கைப் பற்றினர். ஆனாலும் சக்கரவர்த்தியைப் பொம்மைத் தலைவராக வைத்திருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு ஷோகுன் சந்ததியார் தனது ஆலோசகர்கள் இருவரிடம் அதிகாரத்தைப் பறிகொடுத்துவிட்டார். இவ்விருவருக்கும் ஷோஜோ அதிபதிகள் எனப் பெயர். அவர்களும் ஷோகுனை பொம்மைத் தலைவராக வைத்திருந்தனர். இந்த வகையில் சக்கரவர்க்தி, ஷோகுன், ஷோஜோ அதிபதிகள் அனைவரும் ஆட்சிமுறையில் ஒருங்கு காணப் பட்டனர். சக்கரவர்த்தி, பிரதான குருவின் கடமையை ஆற்றிவந்தார். ஷோகுன் என்பவர் அதிபர்கள் பெற்றுள்ள அதிகாரத்திற்குச் சட்டரீதியான மூல புருஷராக இருந்தாரேயன்றி வேறெவ்வித கடமைகளையும் ஆற்றவில்லை. இதில் மற்றுமொரு சிக்கல் என்னவென்றால் முடி இழந்த சக்கரவர்த்தி ஒருவரும் இருந்தார். அவர் பிரதான குரு என்ற முறையில் ஆட்சிபுரிந்துவரும் சக்கரவர்த்தியின் கடமைகளில் பங்குபெற்று வந்தார். இது மிக விநோதமான ஒரு நாடகம். ஆனால் அது செயற்பட்டு வந்ததாகத் தோன்றியது. குப்ளாய் ஒரு புது கப்பற்படையைக் கட்டிவருவதாகவும், படையெடுப்பிற்காக முன்னைக்காட்டிலும் ஒரு மிகப்பெரும் சேனையைத் திரட்டிவருவதாகவும் அறிந்த போது, பல்வேறு ஆட்சியாளரும் நாட்டைப் பாதுகாத்தற் பொருட்டுத் தத்தம் பங்கைச் செலுத்தினர். படையெடுப்பு எங்கே நிகழும் என்று எதிர்பார்த்தார்களோ அக்கடற்கரைப்பகுதியில் அதிபதிகள் அரண் அமைத்தனர். ஆளும் சக்கரவர்த்தியும் முடியிழந்த சக்கரவர்த்தியும் தொழுகைக்கு ஏற்பாடுசெய்தனர். பெருந்திரளான அளவில் முறையோடு வழிபாடுகள் செலுத்தப்பட்டன. அல்லும் பகலும் ஜப்பானியரின் கோயில்களிலும் புத்த விஹாரங்களிலும் சிறப்பு வழி

பாடுகள் நிகழ்த்தப்பட்டன. சக்கரவர்த்தி தன் கைப்பட எழுதிய கடிதத்தின் மூலம் அரசவம்சத்து முன்னோர்களை வேண்டிக்கொண்டார். முடியிழந்த சக்கரவர்த்தி அளித்த உதவி மேலும் விரிவான முறையில் இருந்தது. 'பிரக்ஞாபாரமித ஹ்ருதய சூத்திரம்' என்ற நூலின் 3,00,000 பிரதிகளைத்தன்னைச் சூழ்ந்திருப்பவர்களிடையே வழங்கினார். அவர்கள் அவற்றைத் தமது உறவினர்களுடனும் நண்பர்களுடனும் பகிர்ந்துகொண்டனர். அந்த முறையில் அந்நூலை 3,00,000 தடவைகள் ஓதுவிக்க முடிந்தது. அதே நேரத்தில் பொதுமக்கள் வழிபாடும் நிகழ்ந்தது. அதை விண்ணுலகத்தவர் கேட்டே இருக்கவேண்டும். ஹோஜோ அதிபதிகளுள் ஒருவர் தெய்வ உதவியை வலிந்து பெறும் இம்முறையைக் கேள்வியுற்றபோது தானும் மற்றொரு முறையைப்பற்றிச் சிந்தித்தார். போருக்கான தயாரிப்புகளில் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தபோதிலும் தனது இரத்தத்தைக்கொண்டே புனித மந்திரங்களைப் பிரதியெடுத்தெழுதினார்.

நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட படையெடுப்பு 1281–ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. குப்ளாய் இரண்டு கப்பற்படைகளைக் கட்டி முடித்திருந்தார். அவற்றுள் ஒன்று கொரியாவிலிருந்து மங்கோலியர்களும் கொரியர்களும் அடங்கிய 50,000 பேர்களை ஏற்றிக்கொண்டு கடல் வழியே சென்றது. மற்றொன்று தென்சீனாவிலுள்ள தனது செய்டோன் (Zayton) துறைமுகத்திலிருந்து கூலிக்குப் போர்புரியும் 1,00,000 சீனர்களைச் சுமந்து சென்றது. ஜப்பானியரால் அரண்செய்யப்பட்ட கடற்கரைப் பகுதியிலே வடக்கேயுள்ள குயு-ஷியு கரையில் படை இறங்கியது. ஜப்பானியப் படையின் முக்கியப் பகுதி அந்த இடத்தில் இருக்கமுடியவில்லை. ஆனால் கண்காணித்துக்கொண்டிருந்த பங்கோ பிரபுவின் காவற்படையினரும், கியு-ஷியூவில் உள்ள மற்ற பிரபுக்களின்

காவற்படையினரும் மங்கோலியர்களை எதிர்த்து நின்றனர். தங்களுடைய முக்கிய சேனை வரும்வரை படையெடுத்து வருவோரைத் தடுத்து நிறுத்தி வைக்க வேண்டும் என்பது அவர்களுக்கிடப்பட்ட உத்தரவு. எதிரிகள் தங்கள் நாட்டினுள் வெகுதூரம் ஊடுருவிச் செல்வதனின்றும் தடுப்பதில் அவர்கள் வெற்றி கண்டனர். ஆயினும் எதிரிகள் நிலைபெறுத்தியுள்ள வாராவதி அரணினின்றும் அவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. எனினும் ஐம்பது நாட்களுக்குப் பிறகு ஒரு கடும் புயல் கடற்கரையருகே அடித்தது. நாலாயிரம் கப்பல்கள் அடங்கியுள்ளதாகக் கூறப்படும் மங்கோலியக் கப்பற்படையின் பெரும்பகுதி பாறைகளின் மீது மோதுண்டது. போக்குவரத்துத் தொடர்பு அற்று விடவே மங்கோலியர்கள் மனோதிடத்தை இழந்துவிட்ட தாகத் தெரிகிறது. மேலும், இதற்குள்ளாக ஜப்பானியப்படை வந்துசேர்ந்துவிட்டது. பின்னர்த் தொடர்ந்த போரில் மங்கோலியர் படுதோல்வியடைந் தனர். கடற்படையின் எஞ்சிய பகுதியாகிற இருநூறு கப்பல்களே தப்பிச்சென்றன என்று கூறப்படுகிறது. ஜப்பானியரால் கைப்பற்றப்பட்ட கைதிகளுள் ஒரு சாரார் கொலைசெய்யப்பட்டனர், ஏனையோர் அடிமைப் படுத்தப்பட்டனர்.

குப்ளாய் ஜப்பானைக் கைப்பற்ற முயன்றபோது இத் தகைய பயங்கரப் படைமுறிவைத்தான் கண்டார். புயல் ஒருபுறம் இருக்க, பிறவிடங்களில் எப்போதும் வெற்றியைத் தந்த போர்முறைகளை மங்கோலியரால் இங்கே பயன்படுத்த இயலாது போனதைத் தோல் விக்குக் காரணமாகச் சொல்லலாம். வில்லேந்தியவர் களாய் இருந்தபோதிலும், ஒரு சில குதிரைகளைத்தான் அவர்கள் கொண்டுவர முடிந்தது. விற்படையினர் பெரும்பாலும் தரையில் நின்றே சண்டை செய்ய வேண்டியிருந்ததால் இடம் மாறிப் போர் புரியும்

முறையைப் பயன்படுத்த முடியாமற் போயிற்று. இம் முறைக்கெதிராக எவரும் சரியாகத் தம்மைப் பாது காத்துக்கொள்ள முடியாது.

போலோ இவற்றையெல்லாம் பற்றி என்ன கூறு கிறுர் என்பதைப் பார்ப்போம். அவர் மிகக் குறைந்த அளவிலேதான் கூறியிருக்கிறுர். ஆனல் அது ஏறத்தாழ சரியாகத்தான் இருக்கிறது. ஜப்பானியர் வெண்ணிறங் கொண்ட நாகரிக மாந்தர் என்றும், அவர்களுடைய மதம் பௌத்தம் என்றும், அவர்களுடைய தீவுகள் சீன நாட்டினின்றும் ஆயிரத்தைந்நூறு மைல்களுக்கப்பால் உள்ளதென்றும் அவர் கூறுகிறுர். கொரியாவிலிருந்து ஜலசந்தி வழியாக உள்ள தூரம் நூறுமைலுக்கு மேல் இல்லையென்ருலும் செய்டோன் துறைமுகத்தினின்று வடக்கேயுள்ள கியு-ஷியு பகுதிக்குள்ள சரியான தூரம் ஏறத்தாழ ஆயிரம் மைல்கள். இங்கே நாம் ஒன்றை முக்கியமாக அறிந்துகொள்ளவேண்டும். இரு நூறு ஆண்டுகளுக்குப் பின்னர் கொலம்பஸ் மார்க்கோ போலோவின் நூலைப் படித்திருக்கிறுர். ஆசியப் படம் ஒன்றும் அவருக்குக் கொடுக்கப்பட்டது. இப்படம் ப்ளாரென்ஸ் நாட்டில் படம் வரைகின்றவரான டோஸ்கநெல்லி என்பவரால் அந்நூலைப் படித்த பின்னர் வரையப்பட்டது. ஜப்பானுக்கும் போர்ச்சுக லுக்கும் இடையே சுமார் ஆறுயிரம் மைல் நீளத்திற்கு ஒரு கடற்பரப்பைத் தவிர வேறெதுவும் இல்லையென அப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனல் இந்த தூரம் இரு மடங்கு இருக்கும் என கொலம்பஸ் நம்பினுர். அமெரிக்கா இரண்டுக்கும் இடைவழியில் இருந்தது. சீனுவில் இருந்தபோது அமெரிக்கக் கண் டங்கள் இருப்பது குறித்த வதந்தி எதையும் போலோ கேள்வியுறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

ஜப்பானியர்கள் உண்மையில் இருந்ததைவிட மிகுந்த செல்வம் படைத்தவர்களெனப் போலோ நம்பினுர்.

சக்கரவர்த்தியின் அரண்மனை பொன்னால் வேய்ந்த தெனவும், அதேபோல் தரைகளும் ஜன்னல்களும்கூட பொன்னால் ஆனவை எனவும் நம்பினார். (ஆனால் பண்டைக்காலங்களில் மக்கள் தாம் செல்லாத எந்த நாட்டையும் எப்போதும் பொன் கொழிக்கும் நாடாகவே கருதி வந்தனர்.) போலோ இரண்டாவது படையெடுப்பையும் அதன் துயர முடிவையும் மட்டுமே வருணிக்கிறார். மேலும் இதில் தப்பிப் பிழைத்தவர்கள் ஒரு சிறு தீவில் தங்கி நிலைபெற்று விட்டதாக ஒரு கதையையும் சொல்லுகிறார். இது வேறெங்கும் கூறப் படவில்லை. ஜப்பானியத் துருப்புக்களில் சிலர் தாங்கள் சேதத்திற்கிலக்காகாவண்ணம் காப்பு மந்திரங்களைப் பயன்படுத்தினர் எனவும் குறிப்பிடுகிறார். இது குறித்துச் சொல்லப்போனால் கீழைநாடு ஒவ்வொன்றி லும் பண்டை வேந்தர்கள் தாம் எவ்வித இடையூறுக்கும் இலக்காகாமல் இருப்பதற்குரிய இரகசியத்தைக் கண்டு பிடிப்பதில் பேராவல் கொண்டிருந்ததைக் காணலாம். போர் வீரர்கள் தமக்கே உரிய சில முறைகளைக் கையாண்டனர். சிலர் இரகசிய எண்களைப் பச்சை குத்திக்கொண்டனர். சிலர் தங்கள் தோலுக்கடியிலே சிலவகைக் கற்களையோ கல் பதிக்கப்பெற்ற உருவங் களையோ பொதிந்து வைத்திருந்தனர். இந்த மூட நம்பிக்கை தற்காலத்திலும் விடாப்பிடியாக இருந்து வருகிறது. நானே இதைப் பர்மாவில் கண்டிருக்கிறேன். இதை முதன்முதல் பிறரின் கவனத்திற்குக் கொண்டு வந்த ஐரோப்பிய எழுத்தாளர் போலோ. இந்த வகை யில் படையெடுப்புப் பற்றிய ஆசிரியரின் சுருக்கமான விபரம் முடிவடைகிறது. அவர் எழுதிய சுருக்கமான இறுதி வாக்கியம் அவர் எழுதும் முறைக்கோர் எடுத்துக் காட்டு: 'பெருமை வாய்ந்த கானின் ஆட்களுக்கு ஏற் பட்ட சீர்குலைவின் கதை நான் இப்போது கூறியுள்ள வாறு நிகழ்ந்தது.'.....தான் மிகவும் பாராட்டிவந்துள்ள

எசமானரின் பெருமையை எடுத்துக் கூறுவதே தனது நூலின் குறிக்கோள்களுள் ஒன்ருக ஆசிரியர் கொண்டா ராயினும், அவருக்கு நேர்ந்த பெருஞ்சேதத்தை மூடி மறைக்கவோ குறைத்துக் கூறவோ இல்லை. அந்த அள வுக்கு அவர் நேர்மையானவர்தான்.

பத்தொன்பதாம் அத்தியாயம்

# சீன மரக்கலங்கள்

காகானின் கடற்போர்ச் செயல்களுக்குப் பின்னர், போலோ அவருடைய முக்கிய துறைமுகத்தையும் அங்குள்ள கப்பல்களையும் விவரிக்க முற்படுகிறார். அக்காலத்தில் சீனர்கள் கடல் கடக்கும் கப்பல்களைக் கட்டினார்கள். அவற்றை இந்தியாவிற்கும் அப்பால் பாரசீக வளைகுடா வரைக்கும் செலுத்துவது பழக்கமாயிருந்தது. பிற்பட்ட நூற்றாண்டுகளில் அவர்கள் ஜாவாவிற்கப்பால் பெரும்பாலும் சென்றதில்லை. பெயர்பெற்ற மாலுமிகள் என்ற புகழையும் இழந்துவிட்டனர். மிகப் பழங்காலந் தொட்டே, ஏன், ரோம சாம்ராஜ்யம் ஓங்கியிருந்த அப் பண்டைக்காலம் தொடங்கியே, அவர்கள் நீண்ட கடற் பிரயாணம் செய்து பழக்கப்பட்டவர்கள். பாரசீகத்திற்குச் செல்லும் கடற்பாதை சில சமயங்களில் இருந்ததைக் காட்டிலும் வேறு சில சமயங்களில் பாது காப்புடன் கூடியதாக இருந்தது. ஒரு குடையின் கீழ் நிகழும் மங்கோலியரின் ஆட்சியில் சைனுவிலிருந்து பாரசீகத்திற்குக் கடல் வழியே செல்வதென்பது, சாம்ராஜ்யத்தின் கிழக்குப் பகுதிகளுலிருந்து மேற்குப் பகுதிகளுக்குச் செல்வதாகத்தான் ஆகும். ஏனெனில், பாரசீகத்திலிருந்து மெசொபடாமியா வரையுள்ள பகுதி ஒரு மங்கோலிய மாகாணமாக இருந்தது. உண்மையிலேயே போலோக்களின் தரைவழிப் பிரயாணத்தைப் போலவே கடல்வழிப் பிரயாணமும் பாதுகாப்புள்ளதாக இருந்தது. ஆனால் முன்பு சீனுவிற்குப் புறப்பட்ட போது எப்படி முதலில் பாரசீக வளைகுடாவில் உள்ள ஆர்மஸ் துறைமுகத்திற்குச் சென்றனர் என்பதையும், அங்கிருந்து சீனுவிற்குக் கப்பலை அமர்த்திக்கொண்டு செல்ல எண்ணினர் என்பதையும், ஆனால் ஏதோ சில

காரணங்களை முன்னிட்டு அவ்வாறு செல்வதில்லை என முடிவு செய்தனர் என்பதையும் நாம் மீண்டும் நினைவு படுத்திக்கொள்ளலாம். அப்படிச் செல்லாததற்குக் காரணங்கள் எவை என்பது அவர் நூலில் கூறப்பட வில்லை. ஒருவேளை கடற்கொள்ளைக்காரர்கள் அங்கே திரிந்துகொண்டிருக்கிறார்கள் என்று அவர்கள் கேள்வி யுற்றிருக்கக்கூடும்.

இதற்கு முன் கடல்வாணிபப் பாதை உச்ச நிலையில் பாதுகாப்புடன் இருந்ததைக் காட்டிலும், தற்போது மிகுந்த பாதுகாப்பளிக்கும் வகையில் மங்கோலிய ஆட்சி பயனுடையதாயிருந்தது. இருந்தபோதிலும் மங்கோலியருக்குக் கப்பம் கட்டும் தொழிலைப்பற்றி ஒன்றுமே தெரியாது. சீனர், கொரியர் ஆகியோரின் சாமர்த்தியத்தினால்தான் ஜப்பான்மீது ஏற்பட்ட படையெடுப்புகள் சாத்தியமாயின. உண்மையிலேயே குப்ளாய், சுங் வம்சத்தினரை ஹாங்-செள நகரத்தில் வென்று மேலும் தெற்கே உள்ள துறைமுகத்திற்குச் சென்ற பிறகுதான், சீனர்களால் பல நூற்றாண்டு களாகச் சேமித்துவைக்கப்பட்டுள்ள கப்பல் கட்டும் தளங்கள், கப்பல் கட்டுவோர், மாலுமிகள், திசை காட்டும் கருவி உட்பட கடலைப்பற்றிய அறிவு அனைத் தையும் அவரால் தெரிந்துகொள்ளமுடிந்தது. அத் துறைமுகம் போலோவினால் செய்டோன் (Zayton) என்று வழங்கப்படுகிறது.

போலோ பல முறை பிரயாணம் செய்து வந்ததால் ஹாங்-செளவிலிருந்து செய்டோனுக்குச் செல்லும் சாலையை வருணிக்கிறார். செய்டோன் என்பது சுவான்-செளவா அல்லது சாங்-செளவா என்பது உறுதிப்பட வில்லை. இவை இரண்டும் புகீனின் (Fukien) இரு பழைய துறைமுகங்கள். இவ்விரண்டிற்கும் உள்ள இடைவெளி அறுபது மைல்கள்தான். இவை இரண்டைப் பற்றியும் அவர் எண்ணியிருத்தல் கூடும். ஏனெனில் இவை

ஓராட்சியின் கீழ் இருந்ததுடன் ஒன்றுக்கொன்று அண்மையில் உள்ளவை. இந்தியாவிலிருந்தும் ஜாவாவி லிருந்தும் வந்த வாசனைப்பொருள்களும், முத்துக்களும், விலையுயர்ந்த இரத்தினங்களும் இறக்குமதி செய்யப் பட்ட இடம் செய்டோன் துறைமுகம். (போலோ வழங்குகின்ற உருவிலேயே இப்பெயர் இங்கு வழங்கப் பட்டுள்ளது.) அது ஒரு பெரும் வியாபாரத்தலம். ஐரோப்பியச் சந்தைகளுக்கென அலெக்சாண்டிரியா துறைமுகத்திற்கு ஒரு மிளகு சுமக்கும் கப்பல் சென்ற தென்றால், அதுபோல் நூறு மடங்கு இங்கே இறங்கின என்று போலோ கூறுகிறார். 'உலகிலேயே உள்ள மிகப்பெரும் இரு துறைமுகங்களுள் இது ஒன்று.' அடுத்த நூற்றாண்டில் வாழ்ந்த பிரயாணிகள் அதை உலகிலேயே மிகப் பெரிய துறைமுகம் எனக் கூறி யுள்ளனர். அங்கே பாரசீகம், இந்தியா, ஜாவா, இந்தோ-சைனா ஆகிய நாடுகளினின்றும் வந்த வியாபாரிகளைக் காணலாம். இந்தியக்கடலை நோக்கிச் செல்லும் சீனக் கப்பல்கள் அங்கிருந்து புறப்பட்டன. ஜப்பானுக்கெதி ராகப் போர்வீரர்களைச் சுமந்து சென்ற நாலாயிரம் கப்பல்களில் பெரும் பகுதி குப்ளாகானின் பொருட்டு அந்தக் கப்பல் கட்டும் தளங்களில் கட்டப்பட்டவையே.

அடுத்தபடியாக, பன்னிரண்டாம் நூற்றாண்டில் கடலிற் சென்ற கப்பல்கள் எப்படி இருந்தன என்பது பற்றிய வருணனையைப் போலோ நமக்கு அளிக்கிறார். முதலாவதாக, அவை எந்த ஐரோப்பியக் கப்பலைக் காட்டிலும் மிகப்பெரியவையாகவும் மிகவும் வசதி பொருந்தியவையாகவும் இருந்தன. அவை தேவதாரு மரத்தால் செய்யப்பட்டவை. கப்பலின் மேல் தளத்தில் ஐம்பது அல்லது அறுபது அறைகள் இருந்தன. ஒவ்வொரு வியாபாரிக்கும் தனித்தனியே ஒரு அறை இருந்ததால் கப்பற் பயணம் மிக வசதியாக அமைந் திருந்தது. கீழ் அறைகள் நீர் புகாவண்ணம் பொருத்

தப்பட்டிருந்தன. அதனுல் ஒருவேளை கப்பலில் அதிக மாக நீர் கசிய நேர்ந்தாலும் கப்பலுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படுவதில்லை. இதைச் சொன்னுல் வியப் பாக இருக்கும். பசிவெறி கொண்ட திமிங்கிலத்தின் தாக்குதல் நீர் கசிவதற்குரிய காரணங்களுள் ஒன்ருக இருக்கலாம் என மார்க்கோ கூறுகிருர். 'இதுபோல் பல தடவை நிகழ்வதுண்டு. நீரில் சிற்றலைகளை எழுப்பிக் கொண்டு இரவில் கப்பல் மிதந்துசெல்லும். அப்படிச் செல்லுங்கால், நீர் அலைக்கழிக்கப்படும்போது அவ் வலைகள் ஒளிர்வதைப் பார்க்கநேரும் திமிங்கிலம், தனக்கு அங்கே உணவுப்பொருள் இருப்பதாக எண்ணி, விரை வில் கப்பலருகே சென்று அதனோடு மோதி அதன் ஒரு பகுதியைத் தகர்க்கும். இத்தகைய மோதல் பெரும் பாலும் நிகழ்வதுண்டு.'

மிகப்பெரும் கப்பல்களில் முந்நூறு வேலைக்காரர்கள் இருப்பார்கள். மனைவியர், மக்கள் பணியாட்கள் ஆகிய வர்களுடன் தனி அறைகளில் வசிக்கும் அறுபதின்மரைத் தவிர பல பிரயாணிகளை ஏற்றிச்செல்லத்தக்கன அக் கப்பல்கள். ஒவ்வொன்றிலும் ஒரு சுக்கானும் நான்கு பாய்மரங்களும் உண்டு. காற்றின் நிலையைப் பொறுத் துத் தேவைப்படும்போது தூக்கிக்கட்டுவதற்கென அதிகப்படியாக இரண்டு பாய்மரங்களும் உண்டு. கப்பலின் புறப்பகுதி வெகு உறுதியானது. இருப்பாணி களால் இணைக்கப்பட்ட இரண்டு கனத்த மரங்களால் ஆனது அது. மரங்களுக்கிடையே உள்ள சந்துகள் அடைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பொருத்து வதற்குக் குங்கிலியம் பயன்படுத்தப்பெறவில்லை. ஆனுல் சுண்ணும்பு, சணல், ஒருவகை கனத்த மெழுகெண்ணெய் ஆகியவற்றின் கலவையே பயன்படுத்தப்பட்டது. 'நமது கப்பல்களைக் காட்டிலும் அவை அதிக பளுவைச் சுமந்து செல்கின்றன' என்கிருர் போலோ. அவற்றில் பாய் மரங்களைத் தவிர துடுப்புக்களும் இருந்தன. காற்று

நின்றபோது அவை பயன்படுத்தப்பட்டன. ஆபத்தில் உயிரைக் காக்கும் ஓடங்களும் கப்பலின் பக்கங்களில் பொருத்தப்பட்டிருந்தன, இவற்றைத் தவிர அவை இரண்டு பெரிய படகுகளைக் கட்டியிழுத்துச் செல்வதுண்டு. அவற்றின் வேலை, பெரிய கப்பல்களுக்குத் தேவையான காரியங்களைச் செய்தல், மீன் பிடித்தல், செய்தி எடுத்துச் செல்லுதல், காற்று நின்றபோதும் துறைமுகத்தை அடைந்தபோதும் கப்பலைக் கட்டியிழுத்துச் செல்லுதல் ஆகியவையாகும். கப்பல் ஓராண்டு முழுதும் கடலில் இருந்து அழுக்கேறி விட்டால் கப்பலின் வெளிப்பகுதியைச் சுரண்டிவிட்டு ஏற்கனவே உள்ள இரட்டைக்கனம் பொருந்திய மரத்தின்மீது மூன்றாவதொரு கனத்த மரத்தை ஆணி கொண்டு அறைவார்கள். இம்மாதிரி, கப்பலின் புறப்பகுதியைப் பராமரிப்பதில் மொத்தத்தில் ஆறு கன மரங்கள் வரை இணைப்பதுண்டு. கடற்பயணத்தைத் துவக்குமுன் எப்படிச் சகுனம் பார்க்கப்பட்டது என்பது பற்றிய கீழ்க்கண்ட விநோதமான விவரத்தைப் போலோ தருகிறார். தோற்றத்தில் பெரிய பட்டம் போன்ற ஒன்றைப் பறக்கவிடுவார்கள். அத்துடன் ஒரு குடிகார மனிதனை இணைத்திருப்பார்கள். என்ன விநோதம்! பட்டம் நன்றாக உயரே கிளம்பினால் அது நல்ல சகுனம்! அப்படி எழவில்லையானால் எவரும் கப்பற் பிரயாணத்தைத் தொடங்கமாட்டார்கள்.

பதினான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த பிரயாணிகள் இந்த விவரங்கள் பலவற்றையும் உறுதிப்படுத்துகின்றனர். ஜார்டானஸ் என்ற துறவி நூறு அறைகள், பத்து பாய்மரங்கள், குறுக்கிலும் நெடுகிலும் அமைக்கப்பெற்ற மூன்று கனத்த மரங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறார். நிகோலோ கோண்டி என்பவர் மூன்று கனத்த பலகைகளைப் பற்றியும், நீர் நுழையாத அறைகளைப் பற்றியும் குறிப்பிடுகிறார். இபன் பதூதா

என்பவர், அதிகமாகப் போனுல் பன்னிரண்டு பாய் மரங்கள் இருந்தனவென்றும், கப்பல் ஊழியர்கள் ஆயிரம் பேர் இருந்தனர் என்றும் சொல்லுகிருர். மேலும் பதினைந்து மனிதர்களால் கயிறுகளைக்கொண்டு இழுக்கப்படும் தண்டுகள், அறைகளுக்குச் செல்லும் படிக்கட்டுகள், அலங்கார மண்டபங்கள், தனியறைகள், அவற்றிற்குரிய சாவிகள், நீர் கழிக்கும் உள்ளறைகள் ஆகியவை பற்றியும் அறிவிக்கிருர். கப்பல் தளத்தில் தொட்டிகளில் காய்கறிச்செடிகள் வளர்க்கப்படுவதையும் கூறுகிருர். (சொறிகரப்பனுக்கு எதிரான தடுப்பு இது என்பது ஐரோப்பாவில் காப்டன் குக் என்பவர் காலத்திற்கு முன்பு கண்டுபிடிக்கப்படவில்லை.)

இத்தகைய ஒரு கப்பலில்தான் மார்க்கோவே இந்தியாவை நோக்கி இருமுறை கடற்பிரயாணம் செய்திருக்கிருர். முதற்பிரயாணம் குப்ளாயினுல் தூதராக அனுப்பப்பட்டபோது நிகழ்ந்தது. இப்பணியின் தன்மை பின்னர் தெளிவாகும். இரண்டாவது பிரயாணம் குப்ளாயின் உடன்பிறந்தவரின் சந்ததியில் வந்த ஒரு பாரசீக வேந்தனுக்காக மணப்பெண்ணை அழைத்துச் செல்லுமாறு அனுப்பப்பட்டபோது நிகழ்ந்தது.

இருபதாம் அத்தியாயம்

# மார்க்கோ போலோவின் சுமாத்ரா கடற் பிரயாணம்

இந்தியாவை நோக்கிப் போலோ செய்த முதல் கடற் பிரயாணம் ஏறத்தாழ 1284-5-இல் நடந்திருக்கவேண்டு மெனத் தோன்றுகிறது. 1287-இல் மங்கோலியர் பர்மாவில் பெற்ற வெற்றிக்குப் பின்னர் போலோ பர்மாவுக்குச் சென்றிருப்பாராஞல், இந்தியப் பிரயாணம் இதற்கு முன்பு நிகழ்ந்திருக்கவேண்டும். ஆசியா நாடுகள் அனைத்தைக் குறித்தும் குறிப்புக்கள் திரட்டியளிக்கவேண்டும் என்ற நோக்கத்தைப் பின்பற்று பவரான போலோ, வழியில் தான் சென்ற பல்வேறு ராஜ்யங்களைப் பற்றிச் சில செய்திகளைக் கூறுகிருர். அவருடைய சொற்கள் கீழே தரப்படுகின்றன. ‘மதிப் பிற்குரிய கானிடம் பணி செய்து வந்தபோது, தான் இருந்துள்ள இந்தியாவின் விரிந்த பகுதி, சுருங்கிய பகுதி, இடைப்பகுதி ஆகியவற்றுள் அடங்கிய நாடுகள், நகரங்கள், மாகாணங்கள் ஆகியவற்றைப் பற்றி நீங்கள் கேள்வியுறப்போகிறீர்கள் . . . . . அப்பகுதிகளில் தாம் கண்ட அதிசயிக்கத்தக்க விஷயங்களைப் பற்றி அவர் பேசுவார். நம்பிக்கைக்குரியவரும் கண்யம் வாய்ந்த வருமான ஒரு சிலரால் சொல்லக்கேட்ட பிறவற்றையும் விடாமற் கூறுவார். இந்தியப்பகுதிகளில் உள்ள மாலுமிகளால் படங்களைக் கொண்டு அவருக்குக் காட்டப்பட்டவையும் அவர் கூறுவனவற்றுள் அடங்கும்.’

அவர் கூறியுள்ள ‘இந்தியாவின் விரிந்த பகுதி, சுருங்கிய பகுதி, இடைப் பகுதி’ என்ற சொற்ருெடர் கொச்சிச்சைஞ முதல் ஆப்பிரிக்கா வரையுள்ள நாடு களனைத்தையும் உட்படுத்துவது. அவ்விரிந்த பரப்பின்

கிழக்குப் பகுதி இன்றிருப்பதைக் காட்டிலும் அன்று அதிகமான அளவில் இந்திய முறையைப் பின்பற்றி வந்தது. இன்றும் சில சமயம் கீழ் பர்மாவிற்கும் கொச்சிச்சைனுவிற்கும் இடைப்பட்ட பகுதி 'அப்பாற் பட்ட இந்தியா' என்று கூறப்படுகிறது. அப்பகுதியில் இதற்கு முன்னர் ஆயிரம் ஆண்டுகளாக இந்துக்கள் அமைதியான முறையில் தங்கள் உயரிய நாகரிகத்தைப் புகுத்திவந்தனர். வெளிநாடு சென்ற மக்கள் கடலுக் கப்பாலுள்ள நாடுகளுக்கு இந்து மதம், மக்கட்சமுதாய முறை, சம்ஸ்கிருத மொழி ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். அவர்கள் குடியேறிய நாடுகளில் வாழ்ந்து வந்த பழங்குடி மக்களும் இந்துக்களின் கருத்துக்களே ஏற்றுக்கொண்டார்கள். ஒருகால் அவர்களும் இந்தியப் பழங்குடிமக்களைப் போலவே ஒத்த பண்பாட்டினேக் கொண்டவர்களாய் இருந்திருக்கலாம். பல நூற்ருண்டுக் காலத்தில் பல்வேறு இந்து ராஜ்யங்கள் அங்கே தோற்று விக்கப்பட்டன. ஆங்கு நிலவிய பண்பாடு தாய்நாட்டின் பண்பாட்டைப் போலவே சிறப்படைந்திருந்தது. பதின்மூன்ரும் நூற்ருண்டில் இருந்த முக்கிய ராஜ்யங் கள், இன்று கொச்சிச்சைனு இருக்குமிடத்திலுள்ள 'சம்பா', தென் ஸயாமை உள்ளிட்ட 'கம்போடியா', 'ஸ்ரீவிஜயா', 'ஜாவா' ஆகியவை. இவற்றுள் ஸ்ரீவிஜயா உன்னத நிலேயில் இருந்தபோது சுமாத்ராவையும் மலேயாவையும் தன்னுட் கொண்டிருந்தது. கம்போடி யாவின் 'அங்கோர்' நகரத்திலுள்ள சிற்ப வேலேப் பாடமைந்த கோவில்களின் புகைப்படங்களேப் பலரும் பார்த்திருக்கிருர்கள். சம்பாவிலும் ஜாவாவிலுமுள்ள கலேப்பொருள்கள் புகழில் இவற்றிற்குக் குறைந்தவை அல்ல. உண்மையாகவே பார்க்கப்போனுல், ஐரோப் பாவைப் போன்ற இப்பெரும் நிலப்பரப்பில் இந்தியச் சிற்ப வேலேகளில் மிக உயர்ந்தவற்றுள் சில இங்கே உருவாக்கப்பட்டன. இந்துமயமாக்கப்பட்ட இத்தனிச்

சிறப்பு வாய்ந்த ராஜ்யங்களின் தொகுதியை முழுமையாகப் பார்த்த முதல் ஐரோப்பியரும் கடைசி ஐரோப்பியரும் போலோதான். ஏனெனில் இதன் பின்னர் விரைவில் அவை வீழ்ச்சியுறத் தொடங்கி ஆபத்துக்குள்ளாயின. காடுகளுக்கிடையே இருந்த கோவில்களும் அரண்மனைகளும் மக்கி மடியும் அளவுக்கு ராஜ்யங்கள் அடியோடு அழிந்துவிட்டன. இறுதியில் அவற்றைப்பற்றிய நினைவே மறைந்துவிட்டது. வெகு அண்மைக் காலத்தில்தான் ஆராய்ச்சியாளர்கள் அவற்றின் எஞ்சிய பொருள்களைத் தற்செயலாகக் காண நேர்ந்தது. அவர்கள் தழைகளுக்கிடையே பெரும் பாறையினாலான சிற்பங்களின் முகங்களையும், சுவர்களில் பதிக்கப்பெற்ற உருவங்களையும் பார்த்தனர். அச்சுவர்களோ ஆலம் வேர்களால் பிளவுண்டு பழுதுற்ற நிலையில் காணப்பட்டன. இன்று பழம்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அவற்றின் வரலாற்றைத் தொடர்புபடுத்தி வருகின்றனர்.

போலோ வழக்கம்போல் அதிகமாகச் சொல்லவில்லை. சீனாவுக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் இந்தியாவே பண்பாட்டை அளித்திருக்கவேண்டும், சைனா அல்ல, என்ற பேருண்மையைப் புரிந்துகொண்டதாகத் தெரியவில்லை. ஆனால் எப்போதும்போல் அவர் சொல்லியவரையில் சரிதான். அவர் கூறியுள்ளது ஏறத்தாழ முக்கியச் செய்திகளின் சுருக்கம் எனக் கொள்ளலாம்.

“இந்தியாவிற்குக் கடல் வழி செல்வதற்குச் செய்டோனில் கப்பலேறி மேற்குத்தென்மேற்காகக் கடலில் சென்று ‘டொங்கிங்’ குடாக்கடலை அடையவேண்டும்” எனத் தொடங்குகிறார் ஆசிரியர். ‘இக்குடாக்கடல் மட்டுமே ஒரு தனி உலகமோ என்று தோன்றும் அளவுக்கு அத்தனை பெரிதாகவும் எண்ணிறந்த மக்கள் வசிக்கும் இடமாகவும் இருக்கிறது.’ இரண்டு மாத

காலம் ஆயிரத்தைந்நூறு மைல்கள் தூரம் கடலைக் கடந்த பின்னர் சம்பாவை ஒருவர் அடையலாம். 'சம்பா அதன் யானைகளுக்கும், உயர்ந்த நறும்புகை அளிக்கும் (Eagle wood) என்ற ஒருவகை மரத்திற்கும், சிறப்பாக, சதுரங்கப் பிரதிமைகளும் மைக்கூடுகளும் செய்வதற்குப் பயன்படுத்தப்படும் கருங்காலி மரங் களுக்கும் புகழ் பெற்றது' என்று அவர் சொல்லுகிறார். அவர் சென்றபோது போர் நடந்துகொண்டிருந்தது. தன்னைப் பேரரசனாக ஒத்துக்கொள்ளுமாறு சம்பா நாட்டரசனை வற்புறுத்தும் பொருட்டுக் குப்ளாய் ஒரு சேனையை அனுப்பியிருந்தார். மங்கோலியர்களால் அந்நாட்டை அழித்துவிட முடியவில்லை. ஆனால் இறுதி யாக அவ்வரசர் தனது அடிமைத்தனத்தை ஒப்புக் கொண்டு ஆண்டுதோறும் இருபது யானைகளையும் குறிப் பிட்ட அளவு (Eagle wood) என்னும் மரத்தையும் கப்பம் கட்டுவதே நலமெனத் தேர்ந்தார். அந்த அளவுக்கு அவர்கள் நாட்டில் மங்கோலியர்கள் நாசம் விளைவித்து விட்டார்கள். இவ்வாறு சுயேச்சை இந்து ராஜ்யம் என்ற வகையில் நீண்டகால வரலாற்றையுடைய சம்பா நாடு, சீனநாட்டிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிலையில் அந்நாட்டிற்குத் திறைகொடுக்கும் நாடாகிவிட்டது.

சம்பாவிலிருந்து போலோ முதலில் தெற்கிலும் பிறகு தென்மேற்கிலுமாகத் தனது கடற்பிரயாணத்தைத் தொடர்ந்து மேகாங் நதியின் கழிமுகத்திற்குச் சிறிது அப்பாலுள்ள 'புலோ காண்டர்' என்னும் தீவை அடைந்தார். இத்தீவு சைனாவுக்குப் போகும் வழியி லுள்ள புகழ் பெற்ற கப்பல் தங்குமிடம். பிற்காலத் தில் கிழக்கிந்தியக்கம்பெனி அங்கே ஒரு வியாபாரத் தலத்தை நிறுவியது. நதிக்கு அப்பால் சென்றால் கம்போடியாவும் அதன் வியப்பூட்டும் தலைநகரமான 'அங்கோரும்' இருக்கின்றன. எனினும் இந்துமய

மாக்கப்பட்ட இப்பெரும் ராஜ்யத்தைப் பற்றிப் போலோ எதுவுமே கூறவில்லை.

பிறகு இன்று சயாம் குடாக்கடல் என்று சொல்லப் படுகிற இடத்தைக் கடந்து நேர் மேற்காக அவருடைய கப்பல் சென்றது. பிறகு மலேயா தீபகற்பத்தில் அவரால் 'லோகாக்' என்று அழைக்கப்படும் ஓர் இடத்தை அடைந்தார். இவ்விடம் 'லிகோர்' என்னு மிடத்திற்கு அருகில் இருந்திருக்கலாம் என்று கருதப் படுகிறது. லிகோர் என்பது இந்துக்களோடு தொடர் புடைய பண்டை வரலாற்றைக் கொண்ட ஒரு மிகப் பழமையான நகரம். இங்கே தனக்கென ஒரு மொழி யைக் கொண்ட சுயேச்சை நாட்டை அவர் கண்டார். அங்குள்ள மக்கள் யாவர் என்பது அவருக்குத் தெரி யாது. ஆனால் அவர்கள் ஷான் பிரிவினராக இருக்க லாம் என்பது எமது நம்பிக்கை. 1253-ஆம் ஆண்டு மங்கோலியர்கள் யுன்னனில் உள்ள ஷான் ராஜ்யத் தைத் தோற்கடித்த போது, ஷான் வம்சத்தினர் தெற்கு நோக்கி நகரத் தொடங்கினர் என்பதை முன்பே ஓர் அத்தியாயத்தில் குறிப்பிட்டுள்ளோம். ஒரு வேளை இன்று வடசயாம் என்று சொல்லப்படுகிற பகுதியில் அவர்கள் இனத்தவருள் சிலர் முன்பே கொஞ்சம் கொஞ்சமாகப் புகுந்திருக்கக்கூடுமல்லவா? அவர்களைப் பின்பற்றி இவர்கள் சென்றிருக்கக்கூடும். அதுமுதல் இந்த இடப்பெயர்ச்சியானது 'மேனும்' பள்ளத்தாக்கு வழியே கீழ் நோக்கிக் கொஞ்சம் கொஞ்சமாக ஏற் பட்டுக்கொண்டுவந்திருக்கிறது. போலோ அங்கு சென்ற சமயம் ஷான் மக்கள் மலாய் தீபகற்பத்தின் வடபகுதி வரை சென்றுவிட்டதாகத் தோன்றுகிறது. மேனும் பள்ளத்தாக்கையும் மலேயாவின் வடபகுதி யையும் அவர்கள் வசப்படுத்திக்கொண்டபோதே ஸ்ரீவிஜயாவின் வடபகுதி, கம்போடிய இராஜ்யத்தின் மேற்கு மாகாணங்கள், இவற்றின் எல்லைகளை மீறி

விட்டனர். கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய நெருக்கம் அதிகமாகவே கம்போடியாவை ஒடுக்கி சயாம் ராஜ்யத்தைத் தோற்றுவித்தனர். ஆகவே பழைய இந்து முறைமையின் மறைவையும், இன்று நாம் அறிந்துள்ள இந்தோ-சைனுவின் தோற்றத்தையும் போலோ கண்டிருக்கிருர். இதை அவர் நன்கு உணர வில்லே, உணர்ந்திருக்கவும் முடியாது. ஆனுல் அவர் எழுதி வைத்துள்ள சிறு குறிப்புக்கள் இன்றைய வரலாற்ருசிரியர்கள் அக்காலத்திய மாறுதலேப் பற்றித் தெளிவான விவரங்களேச் சேகரிப்பதற்கு உதவியுள்ளன.

லிகோர் பகுதியை விட்டு, சிங்கப்பூருக்கு எதிரே உள்ள கால்வாயிலிருக்கும் 'பின்டாங்' தீவைக்குறித்து, மலேயா தீபகற்புத்தின் கிழக்குக் கரையோரமாக கீழ் நோக்கிப் போலோ கடற்பிரயாணம் செய்தார். பின்டாங் மிகவும் காடடர்ந்த ஓர் இடமாக இருந்த தென்றும் வாசனேக்கட்டைகளேத் தரும் மரங்களேத் தவிர வேறெதுவும் அங்கில்லே என்றும் அவர் கூறுகிருர். இங்கும் முக்கியமானதொரு நிகழ்ச்சியோடு போலோ மிகவும் நெருங்கியிருந்திருக்கிருர். ஆயினும் அதுபற்றி அவர் குறிப்பிடவில்லே. இந்துமயமாக்கப்பட்ட ஸ்ரீவிஜய ராஜ்யத்தைச் சார்ந்த பழைய நகரமான சிங்கப்பூரைச் சில ஆண்டுகளுக்கு முன்பு ஜாவாத்தீவினர் பிடித்துக் கொண்டனர். ஸ்ரீவிஜய ராஜ்யத்தில் சுமாத்ராவும் மலேயாவும் அடங்கியிருந்தன. ஆகவே சிங்கப்பூர் கால்வாயும், அவ்வழியே செல்லும் பழங்கால வாணிபப் பாதையும் அதன் வசத்தில் இருந்தன. ஸ்ரீவிஜய ராஜ்யம் சிதறுண்டு போகும் நேரத்தில் போலோ வந்து சேர்ந்தார். இரு பக்கங்களிலும் அது தாக்கப்பட்டது. முன்பு நான் கூறியது போல ஷான் மக்கள் மலேயா தீபகற்பத்தில் முன்னேறி ஒரு பகுதியை வெற்றி கொண்டனர். கிழக்குப் பகுதியில் ஜாவா தீவினர் ஆக்கிரமித்துச் சிங்கப்பூரையும் சுமாத்ராவின் கிழக்கு

முனையையும் பிடித்துக்கொண்டனர். அதன் மூலம் அவர்கள் பெரும் வர்த்தகப் பாதையை வசப்படுத்திக் கொண்டனர். போலோ ஜாவாவிற்குச் செல்லவில்லை. ஆனால் அதுபற்றிக் குறிப்பிடுகையில் அதன் இருப்பிடத்தைத் தெரிவிக்கிறார். சிறிது காலத்திற்கெல்லாம், 1293-ஆம் ஆண்டில் சம்பா, பர்மா, ஜப்பான் ஆகிய நாடுகளிடம் கேட்டதுபோல, அந்த நாட்டு மன்னனையும் அடிமை என்ற முறையில் திறை செலுத்துமாறு குப்ளாய் வற்புறுத்த முயன்றார். ஆனால் இதில் அவர் தோல்வியுற்றார். ஜாவா எப்போதுமே சீனாவுக்கு அடிமையானதில்லை. டச்சுக்காரர்கள் அந்நாட்டைப் பிடித்ததற்கு முன்பு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக சுயேச்சை ராஜ்யமாகவே இருந்திருக்கிறது. இந்த உண்மையானது, நமது காலத்தில் அந்த நாடு ஏன் மீண்டும் சுதந்திரத்தைக் கோரியுள்ளது என்பதை அறிந்துகொள்ள உதவுகிறது.

பின்டாங் தீவை விட்டு அத்தீவையும் சிங்கப்பூரையும் பிரிக்கின்ற கால்வாய் வழியாகப் போலோ சென்றார். அது பன்னிரண்டடிக்கு அதிகமான ஆழம் கொண்டதாக இல்லை எனவும் அவர் கூறுகிறார். அவருடைய கப்பல் ஏறத்தாழ அதே ஆழத்தில் சென்றுகொண்டிருந்ததால் கடலின் அடிப்பாகத்தைத் தொடாத வண்ணம் அதன் சுக்கானை உயர்த்தவேண்டி இருந்தது. அடுத்து, சுமாத்ரா தீவு இடது புறத்தில் இருக்க, வடமேற்காகக் கப்பலைச் செலுத்திக்கொண்டு பெரிய கால்வாய் வழியாக நீண்ட தூரம் பிரயாணத்தைப் போலோ தொடங்கினார். ஸ்ரீவிஜய சாம்ராஜ்யம் சிதறுண்டு போனதால் அது பல சிறு ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டது. சுமாத்ராவின் வடகோடிக்கருகிலுள்ள ஒரு ராஜ்யத்தைக் குறித்து ஆசிரியர் முக்கியமான ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறார். இப்பகுதி பிற்காலத்தில் 'அசின்' ராஜ்யத்தின் பகுதியாக

இருந்தது. 'தங்கள் கப்பல்களில் முகம்மது நபியின் கட்டளைகளைப் பின்பற்றும் பல முகம்மதிய வியாபாரிகள் அங்கு வந்ததால் அவர்கள் அங்குள்ளவர்களையெல்லாம் மதமாற்றம் செய்து முகம்மதுவின் கட்டளைகளைப் பின் பற்றச் செய்துவிட்டனர். அவ்வாறு மதமாற்றம் செய் யப்பட்டவர்கள் நகரத்திலுள்ளவர்களே. மலைவாழ் மக்களுக்கு எம்மதமும் இல்லாததால் விலங்குகளைப் போல் வாழ்ந்தனர்.' 1285-ஆம் ஆண்டிலேயே முகம் மதிய மதம் சுமாத்ராவின் வடபகுதியில் குடிகொண்டு விட்டது என்பதுதான் இதன் பொருள். பிறகு விரைவில் அது பரவலாயிற்று. உலகத்தின் அப்பகுதியில் 'அசின்' பிற்காலத்தில் எல்லா முகம்மதிய நாடுகளுக் குள்ளும் மிக்க ஆற்றல் வாய்ந்த கடல் பலம் பொருந்திய நாடாக விளங்கிற்று. சுமாத்ரா, ஜாவா, மலேயா ஆகியவை முழுவதும் பின்னர் இஸ்லாமிய மதத்திற்கு மாற்றப்படவிருந்தன. ஜாவாவின் கிழக்குக் கோடிக்கப்பால் உள்ள சிறு பாலித் தீவைத் தவிர மற் றெவ்விடத்தும் இந்தியப் பண்பாடு பின்னர் மறைந்து விட்டது.

இடைக்கால ஐரோப்பியன் என்ற முறையில் அவருக் கிருந்த சாதகமற்றச் சூழ்நிலையிலும் இந்தியாவிற்கப் பாற்பட்ட நாடுகளில் காணப்பட்ட அடிப்படை அம்சங் களைப் போலோவால் எப்படிக் காட்ட முடிந்தது என்பதை நாம் பார்க்கிறோம். அப்பகுதியின் நாகரிகம் இந்திய நாகரிகம் என்றும், காகான் அதைச் சீன ஆட்சி மண்டலத்திற்குள் உட்படுத்த விரும்பினர் என்றும், வடக்கிலிருந்து முன்னேறி வந்த ஷான் இனத்தவர் அரசியல் துறையிலே நாட்டில் பிளவை உண்டுபண்ணத் தொடங்கிவிட்டனர் என்றும், அரேபியாவிலிருந்தும் இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலிருந்தும் கடல் கடந்து வந்த முகம்மதியர்கள் அப்பகுதியின் மத, சமூக அமைப்பிற்கு ஆபத்தை விளைவித்தனர் என்றும் அவர்

கூறியுள்ளார். போலோ அங்கிருந்தபோதே இவை நிகழத் தொடங்கிவிட்டன. எனினும், முற்றுப் பெற வில்லை. இந்துக்களின் வழிமுறைகள் அவற்றின் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தன. இன்றைய இந்தோ-சீன நாகரிகம் அவற்றினிடத்தை மெள்ளப் பிடித்துக்கொண் டிருந்தது.

நடப்பு நிலையைப் பற்றிய பொதுவான கூற்றுக்களைத் தவிர, போலோ பல விநோதங்களை நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறார். போலோ இதற்கு முன்பு பூமத்திய ரேகையிலிருந்து ஒரு டிகிரிக்குட்பட்ட சிங்கப்பூர் கால் வாய் வரை, தெற்கே அவ்வளவு தூரம் சென்றதில்லை. ஆகையால், இரவில் காணப்பட்ட ஆகாயத்தின் தோற்றம் அவருக்கு வியப்பை அளித்திருக்கவேண்டும். அவர் எழுதுகிறார். "மலைகளுக்கப்பாற்பட்ட விண்மீன்" என்று கொச்சை மொழியில் பாமரமக்களால் கூறப் படும் வடதுருவம் காணப்படவே இல்லை. மேலும் நான் கூற விரும்புவது, பாமர மக்களால் 'ஏர்க்கால்' என்று சொல்லப்படுகின்ற (Greater Bear) என்ற விண்மீன் கூட்டம் சிறியவையாகவோ பெரியவையாகவோ எவ் விதத்திலும் காணப்படவில்லை." துருவ நட்சத்திரத் தைக் காண முடியாவிட்டால் பண்டைக்காலப் பிரயாணிகள் மிகவும் அஞ்சுவார்கள். வழி தவறிவிட்ட தாக ஒரு உணர்வை அது அவர்களுக்கு ஊட்டும். சுவர்க்கம் இருக்கும்படியான உலகத்தின் எல்லைக்குச் செல்வது பற்றி இடைக்காலக் கதைகள் சில உலவி வந்தன. உலகிலுள்ள ஒரு பெரிய மலைத்தொடர் சுவர்க்கத்தில் போய் முடிகிறதாம். மாபெரும் அலெக் சாண்டர் உலகின் எல்லைக்கோட்டில் ஒரு தூணை நிலை நிறுத்தியதாகக் கருதப்பட்டு வந்தது. சுவர்க்கமே திறை செலுத்தவேண்டுமென அவர் அதிகாரத்துடன் கேட்டதாகக் கூடச் சொல்லப்பட்டது. எத்தனை மகத் தான வரம்பு கடந்த பேச்சு! இதுபோன்ற கதைகளை

யெல்லாம் எண்ணிப் பார்த்த பிரயாணிகள் துருவ நட்சத்திரம் காணப்படவில்லை என்று எண்ணியபோது அதை வேடிக்கையாகக் கருதவில்லை. ஏனெனில் அவ்விடம் உலகின் எல்லையில் இறுதியான நீர்ச்சுழிகளுக் கருகில் இருந்திருக்கலாமன்றோ?

நலிந்துவரும் ஸ்ரீவிஜய ஆதிக்கத்தைத் தூக்கி எறிந்து விட்டு சுயேச்சை மன்னனாக ஆகிவிட்ட ஓர் இளவரசனின் தலைநகரில் போலோ இறங்கினார். அத்தலைநகரம் சுமாத்ராவின் வடகோடிக்கருகில் இருந்தது. 'சுமத்ர' என்ற இந்தியப் பெயரை அது தாங்கி நின்றது. சிங்கப்பூர் கால்வாய் கடலில் விழும் இடத்தருகே—வங்காள விரிகுடா என்று நாம் அழைக்கின்ற அப்பகுதியில்—அது இருந்தது. அங்கு ஐந்து மாதங்கள் அவர் தங்கியிருந்தார். ஏனெனில் தென்மேற்குப் பருவக்காற்று அப்போது வங்காளக் குடாக்கடலில் வீசிக்கொண்டிருந்தது. அதை எதிர்த்து இலங்கையை நோக்கி ஆயிரம் மைல்கள் கடந்து செல்வதென்பது இயலாததாக இருந்திருக்கவேண்டும். இங்குதான் போலோ தன்னிடம் பல மனிதர்களும் கப்பல்களும் இருந்த இரகசியத்தை முதன் முதலில் வெளியிடுகிறார். அவர் எழுதுகிறார்: 'எங்கள் குழுவில் இருந்த சுமார் இரண்டாயிரம் மனிதர்களுடன் கப்பல்களிலிருந்து நிலத்தில் இறங்கினோம். இறங்கியதும் மரத்துண்டுகளைக் கொண்டு உத்திரங்கள் அமைத்து ஐந்து உயர்ந்த மாளிகைகளை நிறுவினோம். அங்கே மரங்கள் நிறைய உண்டு. ஐந்து மாதங்களில் பெரும்பகுதி எங்கள் மனிதர்களோடு அம்மாளிகைகளில் நாங்கள் தங்கியிருந்தோம். நாங்கள் இருந்த இடத்தைச் சுற்றிலும் தீவை நோக்கியுள்ள பகுதியில் ஆழமான அகழிகளைத் தோண்டச் செய்தேன். அவற்றின் இரு முனைகளும் கடற்கரை ஓரத்தில் முடிந்தன. இதற்குக் காரணம் அங்குள்ள விலங்குகளைக் குறித்தும் விலங்கையொத்த

கொடிய மக்களைக் குறித்தும் எழுந்த அச்சமே ஆகும். அவர்கள் உத்சாகத்துடன் மக்களைப் பிடித்துக்கொன்று தின்றுவிடுவார்கள்!

மாந்தரின் ஊனைத் தின்னும் மக்கள் தீவின் உட்பகுதியில் வாழ்ந்து வந்தனர். ஒருவேளை அவர்கள் படாஸ் (Batas) சமவெளியிலும் அதற்கு வடமேற்கேயுள்ள மலைகளிலும், வாழ்ந்து வந்திருக்கக்கூடும். கீழ்த் திசை நாட்டில் வாழும் எல்லா மலைவாசி மக்களைப் போலவே இவர்களும் தங்கள் உற்பத்திப் பொருள்களுக்குப் பதில் உணவுப்பொருளை வாங்குவதற்கு மலையினின்றும் கீழிறங்கி அங்காடிக்கு வருவார்கள். அவர்கள் ஒரு நியதியை ஒட்டி மக்களின் ஊனைத் தின்பவர்கள். நெருங்கிய உறவினர்கள் அல்லது வெளிநாட்டினர் என்ற இருவகை மாந்தரைத்தான் அவர்கள் தின்பார்கள். போலோவும் அவரைச் சேர்ந்த மனிதர்களும் வெளிநாட்டினராதலால் அவர்கள் முன்னெச்சரிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியிருந்தது. துறைமுகங்களையும் இந்துமயமாக்கப்பட்ட சிறு தலைநகரங்களையும் தவிர, எஞ்சிய வடசுமாத்ரா ஒரு கொடிய பிரதேசம் என்று சித்தரிக்கப்பட்டுள்ளது உண்மையே. பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் அது அப்படியே இருந்து வந்திருக்கிறது. இப்போதுகூட அப்பெரிய தீவின் நடுப் பகுதி மிகவும் நாகரிகமற்ற நிலையில் இருந்துவருகிறது. ஏனெனில் டச்சுக்காரர்கள் இன்றுவரை அவர்களை முழு அளவில் நாகரிகம் படைத்தவர்களாக ஆக்க முடியவில்லை.

இங்குதான் போலோ முதன் முதலில் ஆசியாவில் சாதாரணமாகக் காணப்படும் கள்ளிறக்கும் தென்னை மரத்தைக் கண்டார். அம்மரத்தை அவர்கள் பயன் படுத்திய முறை வியக்கத்தக்கதாயிருந்தது. மேனாட்டு வாசகர்கள் அதுபற்றி அவர் தரும் விவரங்களை நம்பக் கூட மாட்டார்களோ என அவர் அஞ்சினார். ‘அவர்

களிடத்திலே ஒருவகையான மரம் இருக்கிறது. எப்போது அவர்களுக்கு மது தேவைப்படுகிறதோ அப்போது அவர்கள் அந்த மரத்தின் கிளைகளை வெட்டிவிடுகிறார்கள். கிளைகளிலிருந்து நீர் வடிகிறது. வடியும் அந்த நீரே மதுவாகும். இதை நீங்கள் முழு உண்மையென்றே அறியலாம்,' என்று ஆசிரியர் எடுத்துக் கூறுகிறார். மேலும் இந்தக் கள் எப்படிப் பானைகளில் இறக்கப்படுகிறது என்பது பற்றிய விவரங்களை விளக்குகிறார். 'உண்மையிலேயே அது மதுவைப்போலவே தோற்றமளிக்கிறது. நமது இல்லத்தில் தயாரிக்கப்படும் வெண்மையான மதுவைப்போல நல்ல ருசியையும் பெற்றிருக்கிறது.' அக்காலத்திய வெனிசு நகர மக்களுக்கு மரத்திலிருந்து ஒருவர் வேண்டிய அளவு மதுவை இறக்கிக்கொள்ளலாம் என்ற கருத்தே ஓர் இன்பமூட்டும் கட்டுக்கதைபோன்றிருந்தது. எனினும் மார்க்கோ அதிவெப்ப நாடுகளில் காணப்படும் மிகச்சாதாரணமான இந்த ஒரு காட்சியை மிகைப்படுத்தாமல் கருத்துடன் விவரிக்கிறார். தேங்காய்களைப் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். ஐரோப்பியர்கள் தேங்காய்களை என்றும் கண்டதேயில்லை. இன்றுகூட ஒரு சில ஐரோப்பியர்களே நாருடன் கூடியதும் கனத்த பச்சை மட்டைகளால் மூடப்பெற்றதும் தெளிந்த நீரால் நிரம்பப்பெற்றதுமான இளநீரைப் பார்த்திருக்கிறார்கள். அதிலுள்ள நீர் மேலை நாட்டில் இறக்குமதி செய்யப்படும்போது பால்நிறமாகி விடுகிறது. ஆனால் இளநீரில் உள்ள நீர் அப்படி இருப்பதில்லை.

சுமாத்ராவின் இந்தப்பகுதியில் போலோ ஒற்றைக்-கொம்புள்ள பிராணியைக் கண்டார். 'நாங்கள் கற்பனை பண்ணியிருந்த விலங்கைக் காட்டிலும் இது முற்றிலும் வேறானது' என்று அவர் கூறுகிறார். அது எருமையினுடையது போன்ற மயிருள்ளதாயும், யானைக்கிருப்பவை போன்ற கால்களை உடையதாயும், காட்டுப்பன்றி

யினத்தையொத்த தலையை உடையதாயும், நெற்றியின் மையத்தில் கொம்புடையதாயும் உள்ள ஒரு பிராணி என்று அவர் வருணிக்கிறார். இது காண்டாமிருகத்தைப் பற்றிய ஒரு சரியான வருணனை. இந்த மிருகத்தைத் தான் அவர் கருத்தில் கொண்டிருக்கிறார். சுமாத்ராவில் உள்ள காண்டாமிருகம் உருவில் சிறியது. எருமைக்கிருப்பது போல அதன் உடலில் மயிர் கொஞ்சமாகத் தான் இருக்கும். ஆனால் அதற்கு இரண்டு கொம்புகள் உண்டு. ஒன்று நெற்றியிலும் மற்றொன்று மூக்கிலும் இருக்கும். ஆகவே போலோ இங்கே ஒரு சிறு பிழையைத் தான் செய்திருக்கிறார். ஒற்றைக்கொம்பு விலங்கைப் பற்றிய கட்டுக்கதையை இப்பகுதி தகர்த்தெறிந்து விட்டது. ஆனால் அவர் எழுதியது பயனளிக்கவில்லை. கற்பனையில் எழுந்த ஒற்றைக்கொம்பு மிருகமானது முறுக்கிய கொம்புடைய குதிரைமான்தான் என்ற நம்பிக்கையைப் பொதுமக்கள் கைவிடவில்லை. பிரயாணிகள் ஒற்றைக்கொம்பு விலங்கின் கொம்புகளைச் சொந்தநாட்டிற்குத் திரும்பும்போது கொண்டுவந்த வண்ணம் இருந்தனர். அவை உண்மையில் திமிங்கில இனத்தைச் சார்ந்த கடற்பிராணியின் கொம்பேயாகும். உண்மையிலேயே ஸ்டூவர்ட்ஸ் மன்னர் காலம்வரை இந்த நம்பிக்கை விடாப்பிடியாக இருந்து வந்தது. ஏறக்குறைய அந்தக் காலத்தில் நன்கொடையாக அளிக்கப்பட்டு, இன்றும் ஆக்ஸ்போர்டு புதுக்கல்லூரியில் பாதுகாக்கப்பட்டுவருகிற ஒற்றைக்கொம்பு விலங்கின் கொம்பானது மேற்கூறிய ஒருவகைத் திமிங்கிலத்தின் கொம்பேயாகும். இவ்விலங்கிற்கு வாசனை என்றால் கொள்ளை ஆசை என்று கருதப்பட்டு வந்தது. நல்ல வாசனை ஏற்றிக்கொண்ட ஒரு மாது அதைத் தன் மடியில் பிடித்துப் போட்டுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருந்தது. உண்மையிலேயே 'சீமாட்டியும் ஒற்றைக்கொம்பு விலங்கும்' என்ற ஆடை இடைக்காலச்

சித்திரத்தொங்கலாடைகளுக்குள் மிகவும் புகழ் பெற்றது. இதில் காணப்படும் ஒற்றைக்கொம்பு விலங்கு சீராட்டப்படும் மான்குட்டி போல் சாதுவாகத் தோன்றுகிறது. இதுபற்றிப் போலோ கூறுகிறுர்: சீமாட்டியின் மடியிலே பிடித்துப் போட்டுக்கொள்ளக் கூடிய காண்டாமிருகத்தை நீங்கள் எண்ணிப்பார்க்க முடியும் போலும்!

ஆசிரியர் இப்போது மற்ருெரு விநோதப் பொருளைப் பற்றி நமக்குக் கூறுகிறுர். அக்காலத்தில் கீழ்த்திசைப் பகுதிகளிலிருந்து திரும்பி வரும் பிரயாணிகள் நன்கு பாதுகாக்கப்பட்ட குட்டை மனிதர்களின் உடல்களைக் கொண்டுவருவது வழக்கம். நூதனப்பொருள் என்ற வகையில் அவை மிகுதியாக விற்கப்பட்டன. இவை பகட்டாக உருவாக்கப்பெற்றவை என்று போலோ கூறுகிறுர். சுமாத்ராவில் சிறு மனிதர்களைப் போன்ற குரங்குகள் இருக்கின்றன. அத்தகைய குரங்குகள் இல்லாவிட்டாலும் கொஞ்சம் உழைத்தால் சற்று வேறு பட்ட குரங்குகளையும் குட்டை மனிதரைப்போல் தோன்றும்படிச் செய்துவிடலாம் என்று அவர் சொல்லு கிறுர். (அவர் இங்கே மனிதக்குரங்கைத்தான் குறிப் பிடுகிறுர்.) இத்தகைய ஒரு குரங்கைக் கொன்று, அதன் உடலிலுள்ள உரோமங்களை மருந்துச் சரக்குகளைக் கொண்டு நீக்கிவிட்டு, சில உரோமங்களைக் கவனமாகப் பதிப்பதன்மூலம் தாடியை உண்டுபண்ணிவிடலாம். அதன் வெறுந்தோலில் மனித உடலின் வண்ணத்தைப் பூசிவிடுவார்கள். 'மனித உறுப்புக்களை அப்படியே ஒத் திராத கால்களையும் கைகளையும் மற்ற உறுப்புக்களையும் நீட்டியும் குறைத்தும் மனித உருவத்திற்கு ஒத்தவாறு அமைத்துவிடுவார்கள்.' உலர்த்தப்பட்டபிறகு, குங்கு மம் கற்பூரம் ஆகியவற்றுடன் எண்ணெய்க் காப்பிடப் பட்ட அவ்வுடல்கள் நல்ல நிலையில் பாதுகாக்கப்பட்டு வந்தன. 'இறந்துபோன குட்டை மனிதர்களைக்

கொண்டுவருவதென்பது ஒரு பெரும் பொய் மட்டுமல்ல மோசடியுமாகும்......ஏனெனில் இந்தியாவைச் சார்ந்த எப்பகுதியிலாகட்டும், அல்லது இன்னும் அதிக காட்டு மிராண்டித்தனமாக மக்கள் வாழும் இடங்களிலாகட்டும், நான் சென்ற இடங்களிலெல்லாம், கற்பனையில் தோன்றுகின்ற அளவு சிறிய மனிதர்களை எங்கும் கண்டதே இல்லை. எங்காகிலும் அத்தனைச் சிறிய மனிதர்கள் இருக்கிறார்கள் என்று எப்போதாகிலும் பிறர் சொல்லிக் கேட்டதுமில்லை. இதுவே என் கருத்து எனப் போலோ கூறுகிறார். அந்த நாளில் ஆப்பிரிக்காவில் பூமத்தியரேகைக்கருகிலுள்ள காடுகளில் குள்ளர்கள் இருந்ததாக எவரும் கேள்வியுற்றதில்லை. ஆனால் குள்ளர்கள் கூட மனிதக்குரங்குகளைப் போல் அவ்வளவு சிறியவர்கள் அல்ல.

கடைசி விநோதப் பொருள் மாவு தரும் மரம். மரத்திலிருந்து மதுவைப் பெறுவதே பெரும் அதிசயம். ஆனால் மரம் மாவையே கொடுக்கிறது என்றால்! இவ்விருவகை மரங்களையும் எந்த நாடு பெற்றுள்ளதோ அங்கே மனிதன் ஒன்றுமே செய்யாமல் தான் விரும்பியவற்றை எல்லாம் பெறலாம். இவ்வகை மரம் ஒரு பெரிய பழைய மரமாயிருக்கும் என்று போலோ சொல்லுகிறார். அதன் அடிப்பாகத்தின் உள்ளே இருக்கும் மாவைப் பெறுவதற்கு மரத்தை வெட்டிப் பிளக்க வேண்டும். அவ்வடிமரத்தின் குடைவில் வேண்டிய அளவு மாவு இருந்தது. நீர் நிறைந்த தொட்டிகளில் அதை ஊறவைத்தால் அசுத்தப்பொருள்கள் மேலே மிதக்கும், மாவு அடியில் இறங்கிவிடும். அதனின்றும் அடைகள் செய்யப்பட்டன. 'இவற்றையெல்லாம் கண்ட நான் சொல்லுகிறேன். நாங்களே அவற்றைப் போதிய அளவு சோதித்துப் பார்த்தோம். அடிக்கடி அவற்றை உண்டோம். வெனிசுக்கு இம்மாவில் சிறிதளவு நான் கொண்டு சென்றேன். இந்த மாவில்

செய்யப்பட்ட ரொட்டி பார்லி ரொட்டியைப் போன்ற ருசியை உடையதாயிருந்தது.' போலோ எதைப் பற்றிக் கூறிக்கொண்டிருக்கிருர் என்பதை வாசகர்கள் இப் போது யூகிக்க முயலவேண்டும். மாவைத் தன்னகத்தே கொண்ட மரம் இருக்கத்தான் செய்கிறது. உங்களா லும் அதைச் சாப்பிட முடியும். இன்று அடிக்கடி நாம் அதைச் சாப்பிட்டும் வருகிறோம். ஆனல் பொதுவாக களியாக்கித்தான் சாப்பிடுகிறோம். அதுதான் ஜவ் வரிசி! ஆம், ஜவ்வரிசி இந்த முறையில்தான் உண்டா கிறது. ஆனல் போலோ தனது நாட்டிற்குத் திரும்பிய உடனே ஐரோப்பியர்கள் ஜவ்வரிசிக் களியை உண்ணத் தொடங்கிவிட்டார்கள் என்று நாம் எண்ணிவிடக் கூடாது. இதன் பின்னர் முந்நூறு அல்லது நானூறு ஆண்டுகள் கழித்துத்தான் இம்மரத்தினின்றும் எடுக்கப் பட்ட மாவு கீழை நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பட்டது.

இருபத்தொன்றும் அத்தியாயம்

# அந்தமான் தீவுகள்

மாரிக்காலம் முடிந்துவிட்டதனுல் போலோ சுமாத்ரா வில் பாடியமைத்துக் கொண்டிருந்த தனது இரண்டா யிரம் மக்களுக்கும் மூட்டை கட்டிக்கொண்டு கப்பலேறும்படி உத்தரவு கொடுத்தார் என்பதை நாம் இப்போது ஊகிக்கலாம். அவ்வளவு பெரிய குழுவின ருக்கு அவரிடம் எட்டு அல்லது பத்து கப்பல்களேனும் இருந்திருக்கவேண்டும். ஒரு கடற்படையை வைத்திருக்க வேண்டிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்த அந்த நியமனத்தின் திட்டமான தன்மைதான் என்ன? அடுத்து நாம் ஓர் ஊகத்தைத் துணிந்து கூற இயலும்.

'அசின்' (Achin) என்னுமிடத்தைக் கடந்து கால்வாயை விட்டுக் கப்பல்கள் தாண்டியதுமே கப்பற்படை வங்காள விரிகுடாவை அடைந்தது. உடனே அது மேற்கு நோக்கி இலங்கைக்குச் செல்லவில்லை. ஆனுல் நூற்றைம்பது மைல்கள் வடக்கே உள்ள நிகோபார் தீவுகளுக்குச் சென்றது. இத்தீவுகளிலும் இவற்றின் தொடர்ச்சியான அந்தமான் தீவுகளிலும் அன்றும் இன்றும் ஆசியப் பழங்குடிமக்களே குடியிருந்து வருகின் றனர். அங்கு குடியேறியிருந்த இந்துக்களால் கொண்டு வரப்பட்ட நாகரிகத்தை ஏற்றுக்கொண்டு அதைப் போற்றி வளர்த்த இந்தோ-சீனப் பழங்குடிமக்களைக் காட்டிலும் அங்குள்ள ஆசியப் பழங்குடிமக்கள் மிகுதி யும் பழமையையே பின்பற்றி வந்தனர். இத்தீவுகள் இந்தியாவிலிருந்து இந்தோசீனுவுக்குச் செல்லும் பாதை யில் இருந்ததால் ஓராயிரம் ஆண்டுகளாக மதம், தத்துவம், இலக்கியம், கலை ஆகியவை இத்தீவுகளில் வசிப்போருக்கு வெகு அருகிலேயே கொண்டு செல்லப் பட்டன. நூலாடைகள், தங்கம், இரத்தினங்கள்

இவற்றைக் கொண்டு பெருமளவில் செய்யப்பட்ட வியாபாரத்தைப் பற்றியோ சொல்லவே வேண்டிய தில்லை. ஆயினும் நாகரிகமோ அணிகலன்களோ அவர் களை ஓரளவும் ஈர்க்கவில்லை. அவர்கள் தங்களுக்கே உரித்தான சில கருத்துக்களையும் ஒழுக்கத்தையும் பற்றிய ஒரு முறையை உருவாக்கிக்கொண்ட ஒரு வகை யான மனித இனத்தைச் சார்ந்தவர். அவர்கள் பின் பற்றிய முறை பழமையானதுதான். ஆனால் அது முழுத்தன்மையை அடைந்துவிட்டதால் மேலும் வளர இயலாததாயிருந்தது. இந்து நாகரிகத்தினின்றும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஆத்மீகப் பொருளியல் நலன்களை எல்லாம் அவர்கள் உதறித் தள்ளிவிட்டார்கள். இந்தியாவிலும் சைனாவிலும் இருந்த பழங்குடி மக்களைப் போலல்லாது இவர்கள் அவற்றை முன்னேற்றமெனக் கருதவில்லை. போலோ பார்க்கும்போது அவர்கள் கற்காலத்தில் எப்படி இருந் தனரோ அப்படியேதான் இருந்தனர். இன்று அவர்கள் அத்தனைக் கொடூரமானவர்களாக இல்லை என்பதோடு முன்னிலும் தாழ்ந்த நிலையில் இருக்கின்றனர். எனினும், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களைப் போலவே இவர் களும் தங்களுக்கே உரிய வாழ்க்கை முறை, சிந்தனைகள் ஆகியவற்றோடு விடாப்பிடியாக ஒன்றியிருக்கின்றனர். இவ்விருவருக்கும் உறவு உண்டு. இன்றைய மனித இன ஆராய்ச்சியாளர் இவ்விஷயத்தை எப்படி அணுகு கின்றனரோ அப்படிப் போலோ எண்ணிப் பார்க்கும் இயல்பினர் அல்லர். தான் அதுவரை பார்த்தவர்களைக் காட்டிலும் அவர்கள் மிகமிக மோசமான கொடிய காட்டுமிராண்டிகளாக அவருக்குத் தோன்றினார்கள். ஏனெனில் அவர் யுன்னான் மாகாணத்துப் பழங்குடி மக்களிடையிலோ அல்லது சுமாத்ராவிலுள்ள மனித இறைச்சியை உண்ணும் பழைய மலாய் மக்களிடை யிலோ பிரயாணம் செய்தபோது கூட இத்தகைய பழங்

கால வகையைச் சேர்ந்த மனிதர்களைக் கண்டதில்லை. அவர்களைப் பற்றி அவர் எழுதுகிறார். 'அவர்களுக்கு அரசனும் இல்லை, பிரபுவும் இல்லை; கொடிய விலங்கு களைப்போல் இருக்கின்றனர். ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி எந்த ஒரு பொருளைக்கொண்டும் தங்கள் உடலை மூடிக்கொள்வதில்லை........அவர்களுக்கு வீடில்லை........சட்டமில்லை, ஒழுங்குமுறை இல்லை. அவர்கள் மிகக்கொடிய மக்கள். யார் யாரையெல்லாம் பிடிக்கக்கூடுமோ அவர்களைப் பிடித்து வெகு ஆவலுடன் பச்சையாகவே உண்கிறார்கள். ஆனால் அவர்கள் தங்களைச் சார்ந்தவர்களாக இருக்கக்கூடாது என்பது நியதி.' மூன்று கஜ நீளமுள்ள சாயத்துணிகளை இந்திய வியாபாரிகளிடமிருந்து அவர்கள் வாங்குவார்கள். அந்த அளவுக்குத்தான் அவர்கள் வாணிபம் செய்தனர். இந்த அதிசயமான செய்தியைக் குறிப்பிட்டுப் போலோ மேலும் சொல்லுகிறார். அத்துணிகள் அணிந்துகொள் வதற்காக அல்ல. ஒருவனுடைய செல்வம் அல்லது சமூகத்தில் வகிக்கும் நிலை, இவற்றின் அறிகுறியாகக் கம்பங்களின்மீது கொடிகளாகப் பறக்கவிடுவதற்கே இவை பயன்பட்டன. போலோவுக்கு அவர்களுடைய தோற்றம் அருவருக்கத்தக்கதாகத் தோன்றிற்று. அடர்ந்த சடைமயிரும், பெரிய பற்களும், சப்பை மூக்கும் கொண்ட அவர்களுடைய முகங்கள் பெருநாய்களின் தலைகளைப் போலிருந்தன என்று அவர் சொல்லுகிறார். நாய்களைப் போல் தோன்றினாலும் அவர்கள் நெல்லை யும் தினையையும் பயிர் செய்தனர் என்றும், பசும் பாலையோ எருமைப்பாலையோ பருகினர் என்றும், பல வகை இறைச்சியை உண்டனர் என்றும் தனக்குரித்தான உப்புச்சப்பற்ற புறத்தோற்ற வருணனை முறையில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். உண்மையாகவே, அவர் களுக்குப் பயிர்த்தொழிலைப் பற்றிய அறிவு இருந்தது. வீட்டிற் பழக்கப்பட்ட மிருகங்களையும் அவர்கள்

வைத்திருந்தனர். தங்களுக்கு வேண்டிய உணவைச் சமைத்துக் கொண்டனர். கிராம்பு, இலவங்கம் போன்ற வாசனைப் பொருள்களைப் பயிர் செய்தனர். அவர்கள் நாட்டுக் காடுகளில் நல்ல சிவப்புச் சாயத்தைத் தரும் 'சப்பனை'ப் (Suppan) போன்ற விலை உயர்ந்த இலையுதிர் மரங்கள் நிறைய இருந்தன என்பதையும் ஆசிரியர் குறிப்பிடுகிறார். அந்த மரத்தை 'பிரேசில்' மரம் என்று வழங்கினார்கள். பல நூற்றாண்டுகள் கழித்துத் தென்னமெரிக்காவில் அம்மரங்கள் காணப் பட்டதால் அப்பகுதிக்கு பிரேசில்' (Brazil) என்ற பெயர் சூட்டப்பட்டது. ஸ்பெயின் தேசத்தவரால் (terra de brazil) அல்லது 'பிரேசில் மரம் நிறைந்த பூமி' என்ற பெயர் அந்நாட்டிற்கு வழங்கப்பட்டது.

போலோவிடமிருந்து நாம் பெறும் சாரமான பகுதி இதுதான். அந்தமான் நிகோபார் தீவுகளிலுள்ளவர்கள் கொடிய தோற்றம் உள்ளவர், ஆடை அணியாதவர், அருவருக்கத்தக்க பழக்கங்களை உடையவர்; தத்தம் கொடிகளை உடையவர்களாய் மகிழ்ச்சியாக வாழ்வதற் கேதுவாக ஒரு வகை வாழ்க்கைமுறையை வளர்த்துக் கொண்டவர்; கோடையிலும் குளுமையோடு வாழ்பவர்; வாசனைப்பொருள் கலந்த கறிகளை உண்டு இன்பம் நுகர்பவர் ; தமது கடவுளர்களைக்கொண்ட மத வாழ்க்கை நடத்துபவர். (அவர்களுக்கு விக்கிரகங்கள் உண்டென்பது போலோவின் கூற்று.) அவர்களது வெளிநாட்டுக் கொள்கை அயலார் குடியேற்றத்தை நிலைகுலையச் செய்துவிட்டது. அதற்குக் காரணம் குடி யேறினவர்களைச் சாப்பிட்டுவிடுவோம்' என்று அவர் கள் காட்டிய பயமுறுத்தல்தான். இது ஒரு சரியான கொள்கைதான். ஏனெனில் தாங்கள் வளர்த்துள்ள முறை தங்களுக்கு மிகுந்த நலம் பயப்பதென்பதை உள்ளுணர்வால் அவர்கள் அறிந்திருந்தனர். மேலும் தங்களிடையே புகும் வெளிநாட்டவர், மதம், சமூகம்,

பொருளாதாரம் ஆகிய எந்தத் துறையிலும் தங்களுக்குரிய முறையில் தலையிட நேர்ந்தால், அந்த மாறுதலுக்கேற்றவாறு முழு அளவிலும் தங்களை மாற்றிக்கொள்ள முடியாது என்பதையும் அறிந்திருந்தனர். அதன் விளைவாக நோய்வாய்ப்பட்டு, துன்புற்று, மக்கி மடிய வேண்டியவர்களாவார்கள். இக்கருத்தை வலியுறுத்தும் ஆயிரக்கணக்கான அனுபவங்கள் அவர்களுக்கு ஏற்பட்டன. அக்கருத்து சரியென நிரூபிக்கப்பட்டுவிட்டது. இந்து நாகரிகத்திலும், போலோவிற்குப் பின்னர்ப் பல நூற்றுண்டுகள் இஸ்லாமிய நாகரிகத்திலும் விளைந்த ஆபத்துக்களைத் தடுத்து நிறுத்திய அவர்கள், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தோடு இணைக்கப்பட்டார்கள். வெளிநாட்டினரைச் சாப்பிடுவதனின்றும் அவர்கள் தடுக்கப்பட்டனர். சிறிதேனும் ஆடைகளை உடுத்துமாறு ஊக்குவிக்கப்பட்டனர். அயலாரின் அதிகாரத்திற்கு உட்படுத்தப்பட்டனர். இவையனைத்தும் அவர்களுக்கு அதிர்ச்சியைத் தந்தன. அவர்கள் மிகப் புனிதமாகக் கருதிய கோட்பாடுகள் ஒன்றுக்கும் உதவாதவை என்று போதிக்கப்பட்டனர். இதன் முடிவு இன்று அவர்கள் அழியும் நிலையில் இருக்கின்றனர். ஒருமுறை நான் அந்தமான் தீவுகளின் துணை ஆட்சியாளராக நியமிக்கப்பட்டேன். அந்த நியமனத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி ஏற்றுக்கொண்டிருந்தால் நான் எப்படி நடந்துகொண்டிருப்பேன் என்று அடிக்கடி வியந்திருக்கிறேன்.

30 JUN 1975

இருபத்திரண்டாம் அத்தியாயம்

# பல் தேட்டம்

அந்தமான் நிகோபார் தீவுகளை விட்டுப் போலோ இலங்கைக்குக் கடற்பிரயாணம் செய்துகொண்டிருந்தார். விரிகுடாவில் ஆயிரம் மைல் தூரம்வரை அடிக்கின்ற வடகிழக்குப் பருவக்காற்று அவர் கடலில் செல்லத் துணைபுரிந்தது. இப்போது குப்ளாகான் ஏன் இவரை கடற்பிரயாணம் செய்யும்படி அனுப்பினார் என்னும் வினாவிற்கு விடை தரவேண்டியது அவசியமாகிறது. பொதுவாக ஒரு விடை அளிக்கலாம். தனது எல்லைகளுக்கப்பாலுள்ள உலகம், ஆங்குக் காணக்கூடிய கொள்கைகள், அரசாட்சி முறை, செல்வ நிலை, படைக்கலம் ஆகியவற்றை அறிய மன்னர் ஆவல் கொண்டிருந்தார் என்பதை நாம் அறிவோம். ஒருவேளை இது, விஷயங்களை அறிந்துகொள்ளவேண்டும் என்ற அளவிலே நிற்கக்கூடிய ஆவலாகவும் இருக்கலாம். அல்லது உலகனைத்தையும் வெல்லவேண்டும் என்ற தனது பாட்டனாரின் பேரவாவை அவர் அன்றும் மனத்திலே எண்ணிக்கொண்டிருந்ததாகவுமிருக்கலாம். ‘சூரியன் மறையும் நாடுகளுக்குச்’ சென்று அங்கே உளவறியும் பொருட்டுப் போலோ அனுப்பப்பட்டிருப்பாரோ ? ஆனால் பொதுவாக இரண்டாயிரம் மனிதர்களை ஏற்றிச் செல்லும் கடற்படையுடன் ஒற்றன் அனுப்பப்படுவதில்லையே. ஒருவேளை அவர் கிழக்கு மேற்கு வர்த்தகப் பாதையில் உள்ள அரசர்களோடு அரசியல் தொடர்பையும் வாணிபத் தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ளும் பொருட்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள அதிகாரம் தரப்பட்ட தூதராக இருக்கலாமோ? ஆனால் கான்களுக்கெல்லாம் தலைமைக் கானாக விளங்கிய சக்கரவர்த்தி இந்த முறையில் தூதுவர் காரியங்களை நடத்திய

தில்லையே. அவருடைய பழக்கம் என்னவென்பதை நாம் பலமுறை பார்த்திருக்கிறோம். திறை செலுத்த வேண்டும், அடிமை நிலையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்று திடுமென செய்தி விடுப்பார். அவற்றை மறுத்தால் தவறாமல் தாக்குவார். இருந்தபோதிலும், இந்தியாவைப்போல் தனது எல்லைக்கு அப்பாற்பட்ட நாடுகளைப் பொறுத்தவரையில் வாணிபத்தைப் பெருக்கும் நோக்கத்துடன் அவர் தூதனுப்பியிருக்கக்கூடும் என்று விவாதிக்கலாம். ஆனால் வாணிபமல்லாது வேறு நோக்கங்களுக்காகவும் ஒரு தூதுக்குழு ஈடுபடலாம். எடுத்துக்காட்டாக, மதகுருமார்களையும், நினைவுப்பொருளாகப் புனிதக் கல்லறையினின்றும் விளக்கெரிக்கும் எண்ணெயையும், அனுப்பியருளுமாறு போப்பாண்டவருக்கு ஒரு வேண்டுகோளை எடுத்துச் செல்லும்படிப் போலோ சகோதரர்களைத் தூதுவராகச் சக்கரவர்த்தி அனுப்பியுள்ளார் என்பதை நாம் முன்பே குறிப்பில் கண்டுள்ளோம். நினைவுப் பொருளை அவர் பெற்றாரே யொழிய குருமார்களைப் பெறவில்லை. தனது மங்கோலிய மக்களுக்குப் போதிப்பதற்குக் கிறித்தவப் பாதிரிமார்களைப் பெறத்தவறிவிட்ட காரணத்தாலோ, அல்லது பௌத்த குருமார்கள் அவர்களைக் காட்டிலும் சிறந்தவர்களாக இருப்பார்கள் என்று பின்னர் எண்ணிய காரணத்தாலோ, திபேத்திற்குச் சொல்லியனுப்பி, ஆங்குள்ள பௌத்த பிக்ஷுக்களின் துணை கொண்டு தனது ராஜ்யத்தில் புத்தமதத்திற்குப் பலமான ஆதரவைக் கொடுத்தார் என்பதை நாம் முன்னமே கூறியிருக்கிறோம். இப்புத்தமதம் பிற்காலத்தியது. மந்திர தந்திரங்களை அடிப்படையாகக் கொண்டது. இதை மகாயானம் என்று கூறுவர். புத்தருக்குப் பிறகு ஐந்து நூற்றாண்டுகள் அல்லது அதற்கும் பின்னர் இது இந்தியாவில் தோன்றியது. இது ஆதி புத்தமதத்தைப்போல் அவ்வளவு மெய்ச்சமயம் ஆகாது. மற்றொரு வகை

யான புத்தமதமும் இருந்தது. அதை ஹீனயானம் என்று கூறுவர். இது பௌத்த குருமார்களால் தூய நெறியில் நடத்தப்படுவது. பிற்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட கற்பனைக் கருத்துகள் நிறைந்த வகையை இது சேர்ந்ததல்ல. ஆனால் புத்தராலேயே உருவாக்கப் பட்டும் அவருக்குப் பின் வந்தவர்களால் அதே தூய வடிவில் பாதுகாக்கப்பட்டும் வந்த கொள்கைகள் இந்த வகையில் அடங்கியுள்ளன.

ஹீனயான புத்தமதத்தின் இருப்பிடம் இலங்கை. இந்துமதத்தினின்றும் தப்பிப்பிழைப்பதற்கு இது அங்கே சரண் புகுந்தது. இலங்கை வேந்தர்கள் அதைப் போற்றி வந்தனர். பல நூற்றாண்டுகளாக அதைப் பாதுகாக்கும் பணியை அவர்கள் ஆற்றி வந்தனர். பல காரணங்களை முன்னிட்டு அத்தீவு பன்னிரண்டாம் நூற்றாண்டில் சமயத்துறையில் ஒரு சுறுசுறுப்பான மையத்தானமாக ஆயிற்று. பர்மியத் தலைநகரானப் 'பாகன்' அங்கிருந்து தான் ஞான ஒளியை ஏற்றுக்கொண்டது. புத்த விஹாரங்களைக் கட்டுவதில் உள்ள ஊக்கத்திற்கு அந்நகரம் பெயர் பெற்றது. பதின்மூன்றாம் நூற்றாண்டில் மேனமிலிருந்து தெற்கே கீழிறங்கிச் சில ராஜ்யங்களைத் தோற்றுவித்த ஷான் வம்சத்தினர் இலங்கையோடு தொடர்பு பூண்டதன் விளைவாக பௌத்தச் சிற்பவேலைகளில் இலங்கைப்பாணியை வளர்த்தனர். சுருங்கச் சொன்னால், இந்தோ சீனாவின் வடபகுதியில் நாகரிகத்தைப் புகுத்தும் விஷயத்தில், இந்துமதத்தின் இடத்தை இலங்கைப் பௌத்த மதம் பிடித்துக்கொண்டது. இலங்கைப் புத்தமடங்களில் உள்ள புத்தகசாலைகள் புகழ் வாய்ந்தவை. ஆங்குள்ள புனிதத்தலங்கள் பெருங் கீர்த்தி பெற்றவை. இவற்றுள் மிக முக்கியமானது தீவின் மையச் சமவெளியிலுள்ள கண்டி நகரமாகும். இங்குதான் 'பற்கோவில்' இருக்கிறது. இக்கோவிலில் புத்தருடைய அடையாளப் பொருள்களுள் மிகப் புகழ்

பெற்ற புத்தபகவானுடைய பல் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆயினும் இதையொத்த வேறு பல அடையாளப் பொருள்களும் அங்கிருந்தன. வெகு தொலைவிலுள்ள பர்மாவிலிருந்துங்கூட அப்பல்லை வழிபடுவதற்குச் சாரிசாரியாக யாத்திரிகர்கள் வந்தனர். பல தலைமுறைகளாக பர்மிய அரசர்கள் வெகுமதிப் பொருள்களையும் காணிக்கைப் பணத்தையும் அனுப்பிவந்தனர். 'பல்லைப்' பெறுவதற்கும் பல முயற்சிகள் செய்யப்பட்டன. உண்மையிலேயே பாகன் நகரத்து அரசர் ஒவ்வொருவருக்குமே அதைப் பெற்று எல்லா கோவில்களையும் மிஞ்சும் அளவுக்கு அதற்கொரு கோவில் கட்ட வேண்டும் என்ற பேரவா இருந்தது. அதற்குக் காரணம் அது ஒரு புனிதப் பொருளின் இயல்புகளைப் பெற்றிருந்ததோடு மிகுந்த சக்தி வாய்ந்த மாயப்பொருளாகவும் இருந்ததே ஆகும்.

பல நாடுகளில் புகழ் பெற்றுள்ள பற்கோவிலைக் கொண்ட இந்த இலங்கைத் தீவிற்குத்தான் போலோவும் அவரது பெருந்திரளான பரிவாரமும் சென்றுகொண்டிருந்தனர். இதுவரை அங்கே தனது வேலை என்ன என்பதுபற்றி அவர் குறிப்பாகக்கூட எதையும் வெளியிடவில்லை. ஆனால் இந்த இடத்தில்தான் போலோ புத்தரின் அடையாளப்பொருள்களான பல்லும் அவருடைய பிச்சையெடுக்கும் கிண்ணமும், மற்றுமோர் அடையாளப்பொருளான கேசமும் இருப்பதாக குப்ளாயின் அரசவையில் அவரிடம் முகம்மதியர்கள் கூறியதாகச் சொல்லுகிறார். (ஆனால் அவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பற்கள் இருந்தனவாக மன்னரிடம் கூறியிருக்கிறார்கள்.) 'ஆகவே, பற்கள், கிண்ணம், கேசம் இவற்றைத் தான் பெறுவது இன்றியமையாதது என்று குப்ளாகான் தனக்குள்ளே எண்ணிக்கொள்கிறார். பிறகு 1284-ஆம் ஆண்டு இப்பொருள்களைக் கேட்டுப் பெறும் பொருட்டு இலங்கைத் தீவிற்கு ஒரு பெரிய

தூதுக்குழுவை அனுப்புகிறார். 1285-ஆம் ஆண்டில் மார்க்கோ போலோ சம்பாவில் இருந்தார் என்ற கூற்றை அடிப்படையாகக்கொண்டு அவர் இந்தியா விற்குத் தூது சென்றது 1284-5-ஆம் ஆண்டு என்பது முன்பே சொல்லப்பட்டுள்ளது. போலோவின் தலைமை யின்கீழ் ஒன்றும், 'பற்களைக்' கொண்டுவருவதற்கு மற்றொன்றுமாக, இரு பெரும் தூதுக்குழுக்கள் ஒரே காலத்தில் இலங்கைக்கு அனுப்பப்பட்டனவென்பது நிகழக்கூடாததாகத் தோன்றுகிறது. ஆதலால் இரண் டாயிரம் மனிதர்களைக் கொண்ட போலோவின் தூதுக் குழு மேலே குறிப்பிடப்பட்டுள்ள பெரும் 'தூதுக் குழு' எனவும், அப்பல்லையும் மற்றும் இதர அடையாளப் பொருள்களையும் கேட்டு வருவதற்காக அனுப்பப் பட்டார் எனவும் நாம் ஒரு முடிவுக்கு வரலாம். தன்னைப் பற்றிய இச்செய்தியைப் போலோ தராமல் விட்டது அவரது நூல் முழுவதிலும் காணப்படும் முறையை ஒட்டியதேயாகும். அவர் எப்போதுமே தன்னைப் பற்றி நேரிடையாகக் கூறிக்கொள்வதில்லை. மேலும் அவர் கத்தோலிக்க மதத்தைச் சாராத ஒரு கடவுளின் அடையாளப் பொருள்களைப் பெறுவதற்காக எப்படி ஒரு நீண்ட அபாயகரமான கடற்பிரயாணத் தைச் செய்ய நேர்ந்தது என்ற வரலாற்றை இடைக்கால இத்தாலியில் வெளியிட்டால், தான் உண்மைக் கிறித்து வர்தானு என்ற உக்கிரமான சர்ச்சைக்கு இலக்காகி விடக்கூடுமோ என்று ஒருவேளை அவர் சிந்தித்துப் பார்த்தும் இருக்கலாம். எப்படி இருந்தபோதிலும் அவர் இப்படித்தான் சிந்தித்திருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. ஆசிரியரின் நூலைக்குறித்து ஆய்வுரை எழுதிய எவரும் இத்தகைய முடிவிற்கு வரவில்லை. ஆனால் அவர் நூலிலிருந்து இந்த முடிவுக்குத் தான் வரவேண்டுமெனத் தோன்றுகிறது.

இலங்கைக்குச் சென்றது குறித்து அவரது உரை மேற் கூறிய துணிபிற்கு எந்த அளவு ஆதாரமாக உள்ளது என்பதை இப்போது நாம் பார்ப்போம். அத்தீவிலுள்ள ஒரே தெய்வம் சாக்ய முனி (Sagamoni Borcan) என்று போலோ கூறுகிறார். புத்தருக்கு இது ஒரு பொதுப் பெயர். பிறகு புத்தரின் வாழ்க்கையைப் பற்றிக் கூறப் புகுகிறார். மேனாட்டில் முதன்முதல் இதுபற்றிய விவரம் தெரியவந்தது இப்போதுதான். இந்து மதத்தைக் காட்டிலும் வேறான ஒரு சிறந்த கீழ்த்திசைச் சமயத்தைத் தோற்றுவித்தவர் புத்தர் என்ற உண்மையைச் சில நூற்றாண்டுகளுக்குப் பிறகுதான் அங்குள்ளவர்கள் சரிவரப் புரிந்துகொண்டனர். எனினும், போலோ தரும் விபரங்களிலிருந்து அவர் இவ்வுண்மையை அரைகுறையாகத்தான் உணர்ந்திருந்தார் எனத் தோன்றுகிறது. மனிதனுக்காக விக்கிரகங்கள் நிறுவப்பட்டன என்றால் அந்த முதல் மனிதன் புத்தர் என்று ஆசிரியர் கூறத்தொடங்குகிறார். இதனால் இந்துக்கள் கடவுள்களுக்காக விக்கிரகங்களை நிறுவினார்களேயன்றி மனிதர்களுக்காக அல்ல என்பது அவர் கருத்து. அவர்களுடைய கடவுள்கள் என்றும் மனிதர்களாக இருந்தவர்கள் அல்லர். அவர்கள் தெய்வீகத் தோற்றங்கள். ‘இதுவரை வாழ்ந்த மாந்தருக்குள்ளே தலையாய மனிதர் என்றும் மிகப் புனிதமானவர் என்றும்’ புத்தரை மக்கள் வழிபடுகின்றனர் என்று அவர் கூறுகிறார். இறந்த பின்னர் அவர் கடவுளாகவே ஆக்கப்பட்டுவிட்டார். மிகவும் ஆழ்ந்த ஒரு பொருளை ஆசிரியர் தன்னாலியன்ற அளவு விளக்க முயல்கிறார். புத்தர் பல கடவுள்களுக்கிடையே ‘ஒரு’ கடவுளாக ஆகவில்லை. ஆனால் ஒரே கடவுளாக ஆகிவிட்டார். இதற்குக் காரணம் நீண்ட காலம் அடுத்தடுத்து எடுத்த பல பிறப்புகளுள் அவர் கடைசியாகப் புத்தராக வாழ்ந்தார் என்பதாகும். இந்த நீண்ட காலத்தில் அவரது

உயிர் முழுத்தன்மையை அடைந்து இறுதியாக தெய்வத் தன்மையை எய்திவிட்டது. 'அவரைக் கடவுளென்று அன்றும் சொன்னார்கள் இன்றும் சொல்லுகிறார்கள்.' விக்கிரகங்கள் நிறைந்த இலங்கையில் புத்தரின் உருவங்களே காணப்பட்டன.

இக்கூற்று ஒழுங்கின்றியும் ஒளிவு மறைவின்றியும் இருக்கின்றபோதிலும், புத்தமதத்தின் அடிப்படைச் சிறப்பியல்புகளை ஆசிரியரால் இதன் மூலம் வெளியிட முடிந்திருக்கிறது. புத்தர் உண்மையிலேயே ஒரு மனிதர் தான். அவர் இறந்த பிறகே தெய்வத்தன்மையை அடைந்தார். அவரது வாழ்க்கை முழுத்தன்மையை அடைந்துவிட்டது. அந்த முழுத்தன்மையை ஒரு பிறப்பிலேயே அடைந்து விடவில்லை. கீழ்ப்பிறப்பிலிருந்து படிப்படியே மேற்பிறப்பு வகைகளில் அவரது உயிர் மாறி மாறிச்சென்றதால் ஏதோ ஒரு கடவுளாக ஆகாமல் முழு முதற்கடவுளாக ஆனார். புத்த விஹாரங்களில் உள்ள படிமங்கள் எல்லாம் அவருடையனவே. இவ்வாறாக ஆசிரியர் வலியுறுத்திக் கூறியிருக்கின்றார். பிறகு மார்க்கோ புத்தரின் வாழ்க்கை வரலாற்றைத் தருகிறார். இது பற்றிய விவரங்கள் இலங்கையில் இவருக்குச் சொல்லப்பட்டனவாகக் கூறுகிறார். ஹீனயானப் பிரிவின்படி இக்கதையின் முக்கிய குறிப்புக்களை மீண்டும் ஆசிரியர் தொட்டுக் காட்டியிருக்கிறார். அவர் கூறுகிறார்; புத்தர் ஓர் அரசகுமாரர். அரண்மனை சுகவாழ்விடையே அவர் வளர்க்கப்பட்டு வந்தார். உண்மையான வாழ்க்கை எப்படி இருக்கும் என்பது அவருக்குத் தெரியாது. ஒருநாள் நகரில் சவாரி செய்துகொண்டிருந்தார். முதல் தடவையாக சுடுகாட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் ஒரு பிணத்தையும் மிகவும் தள்ளாத ஒரு கிழவனையும் கண்டார். இக்காட்சிகள் அவரை மிகவும் பாதித்தன. அதனால் இரகசியமாக அரண்மனையை விட்டுத் தன்னை ஆக்கியவனும் இறப்பற்றவனுமான

அந்த ஒருவனைத் தேடிப் புறப்பட்டார். காட்டில் தவசிபோல் வாழ்ந்தார். 'அவரே ஒரு கிறித்தவராக இருந்தால் எப்படி இருப்பாரோ அப்படி இருந்தார். உண்மையிலேயே அவர் கிறித்தவராக ஞானஸ்நானம் செய்விக்கப்பட்டிருந்தால், அவர் வாழ்ந்த நல்ல தூய வாழ்க்கையை நோக்கும்போது, நமது ஏசுகிறித்து நாதரைப் போலவே இவரும் ஒரு பெரிய புனிதராக ஆகியிருப்பார்.'

புத்தரைப் பற்றிய கலப்படமற்ற மூலக்கதையின் ஒரு பகுதியை இது அப்படியே தெரிவிக்கிறது. மூலக்கதையின் அடிப்படையின்மீது கட்டுக்கதைகளும் கற்பனைக் கதைகளும் நிறைந்த ஒரு பரந்த இலக்கியம் உருவாக்கப் பட்டுள்ளது. ஒரு விநோதமான செய்தி என்னவென்றால் இக்கதை முன்பே ஐரோப்பாவில் தெரிந்திருந்தது. ஆனால் புத்தரோடு அதற்குள்ள மூலத்தொடர்பு துண்டிக் கப்பட்டு மற்றொருவரோடு இணைக்கப்பட்டுவிட்டது. எட்டாம் நூற்றாண்டில் டெமாஸ்கஸில் வாழ்ந்த கிறித்தவ வேத அறிஞரான ஜான் என்பவர் இக்கதையைக் கேள்வியுற்றிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. உண்மையில் இது புத்தரைப் பற்றிய கதையே ஆனாலும், ஆசியாவில் நீண்ட தூரம் கடந்து அவரை அடைவதற்கு முன் இது அதிசயிக்கத்தக்க மாறுதலை அடைந்து விட்டது. தான் கேள்வியுற்றபடி அவர் அக்கதையைக் கிரேக்க மொழியில் குறித்து வைத்தார். அதன்படி, தேவதூதரான புனிதர் தாமஸ் இந்தியர்களை மத மாற்றம் செய்தார். (அவர் அவ்வாறு செய்தார் என்பது பற்றிய ஒரு மிகப்பழம் கதை இருந்துவந்தது.) இதற்குப் பிற்காலத்தில் 'அவெனிர்' என்று சொல்லப் படும் ஓர் இந்திய அரசன் கிறித்தவ மதத்திற்கு மாறிய வர்களைத் துன்புறுத்தத் தொடங்கினான். அரசருக்கு ஓர் ஆண்மகன் பிறந்தான். அவனுக்கு 'ஜோஸபத்' என்ற பெயர் சூட்டப்பட்டது. அக்குழந்தை கிறித்தவ

மதத்தைத் தழுவுவான் என்று சோதிடர்கள் கூறினர். தனது தந்தையின் சுகபோகம் மிக்க அரண்மனையில் இளவரசராகச் சில காலம் தனித்து வாழ்ந்துவந்த பிறகு ஒரு நாள் ஜோஸபத் நகரத்தினுள்ளே சவாரி செய்துகொண்டு சென்றார். அப்போது ஒரு குருடனையும் மரணத் தறுவாயிலுள்ள ஒரு தள்ளாத கிழவனையும் கண்டார். முதன்முதலாகத் தனதறிவுக்குப் புலனான உலகியற்றுன்பங்களால் நிலை கலங்கிய அரசகுமாரர் அரசைத் துறந்து, காட்டிற்குச் சென்றுவிட்டார். அங்கே கிறித்தவக் கொள்கைகளைப் பற்றிக் கேள்வி யுற்றார். தனது குழப்பங்களுக்கு அவற்றிலே விடை கண்டு கொண்ட அவர் அதை ஏற்றுக்கொண்டார். சில காலம் தவவாழ்க்கை நடத்திய பின்னர் உயிர் துறந் தார்.

ஓர் இந்து இளவரசரின் மெய்யான வாழ்க்கையென இக்கதை ஐரோப்பாவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது பொதுமக்களை மிகவும் கவர்ந்தது; மீண்டும் மீண்டும் பிரதி யெடுக்கப்பட்டது. அடுத்த சில நூற் றுண்டுகளில் எப்போதோ ஒரு சமயம் போப்பாண்டவ ரால் ஜோஸபத் 'குரு' பட்டத்திற்குரியவராக்கப் பட்டார். இப்புனிதரின் தினம் நவம்பர் இருபத்தேழு என்று அறிவிக்கப்பட்டது. இத்தகைய தாறுமாறான மறைமுகவழியில் புத்தர் ஒரு கத்தோலிக்கப்புனித ராக்கப்பட்டார்.

இனி வருகிறது இதன் விநோத விளைவு. இடைக்கால ஐரோப்பியர்களைப் போலவே போலோவும் புனிதர் ஜோஸபத்தின் கதையை அறிந்திருந்தார். ஏனெனில் புனிதர்களின் வரலாறுகள் மாதாகோவிலில் வாசிக்கப் படுவதுண்டு. புனிதர் ஜோசபத்தைப் பற்றிய கட்டுக் கதை எழுவதற்கு அடிப்படையாயிருந்த உண்மையான மூலக்கதையை அவர் இலங்கையில் கேட்டபோது இரண்டிற்குமுள்ள ஒற்றுமை அவரைக் கவர்ந்தது.

அவர் எழுதுகிருர். 'இந்தியாவின் ஒரு பகுதியில் இருந்த 'அவெனிர்' என்னும் அரசனின் புதல்வரும் கிறித்தவ மதத்திற்கு மாற்றப்பட்டவருமான புனிதர் ஜோசபத்தின் கதையை இது ஒத்திருக்கிறது.' ஆனுல் புனிதர் ஜோசபத்தின் கதை புத்தரின் கதையினின்றும் எடுக்கப்பட்டதென்ருவது, புத்தமதத்தினர் தங்கள் கதையைக் கிறித்தவ மூலத்தினின்றும் எடுத்தனர் என்ருவது எந்த முடிவுக்கும் ஆசிரியர் வரவில்லை. அவருடைய குறிப்பு ஆராயப்படாத எளிதான ஒன்று. அதாவது, கிறித்தவப் புனிதர்களுக்குள் மிகவும் புகழ்வாய்ந்தவர்களிடையே ஒருவரை புத்தர் ஒத்திருந்தார். ஆகவே புனிதர் என்று அழைக்கப்படுவதற்குப் புத்தர் தகுதி பெற்றிருந்தார்.

Sagamoni Borcan அல்லது புத்தர் என்ற பெயரில் இலங்கையில் வழிபடப்பெற்ற இத்தகைய தெய்வத்தைப் பற்றி இவ்வாருக விவரித்த பின்னர், 1284-ஆம் ஆண்டில் சென்ற மங்கோலியத் தூதுகோஷ்டி எப்படி இலங்கை மன்னரை அடையாளப்பொருள்களைத் தருமாறு கேட்டது என்பதைப் போலோ விவரிக்கிருர். (இத்தூதுகோஷ்டியின் தலைவர் போலோதான் என்று நான் கருதுகிறேன்.) இலங்கை வேந்தர்களைப் புத்தருடைய அடையாளப்பொருள்களைத் தருமாறு பிறர் கேட்பது வழக்கம். அதே சமகாலத்தில் கான்ஸ்டாண்டிநோபிளிலுள்ள சக்கரவர்த்திகள் கிறித்தவ அடையாளப்பொருள்களை விற்பனை செய்வதை ஒரு முறைப்படுத்தப்பட்ட இலாபகரமான தொழிலாகச் செய்துகொண்டிருந்தனர். அதே போல இலங்கை மன்னர்களும் எந்த அடையாளப்பொருளையும் ஒரு தகுந்த விலைக்கு விற்கத் தயாராயிருந்தனர். இவற்றுள் புத்தருடைய பல் மிகுந்த விலைமதிப்புள்ளது. அதன் நகல் முன்பே பர்மாவில் விற்கப்பட்டிருந்தது. அசல் பல் என்று சொல்லப்பட்டது, பின்னர் பர்மாவுக்கும்

சயாமுக்கும் விற்கப்பட்டது. விலை பேசும் கட்டம் தொடங்கியது. தூதுவர் எடுத்துக்கொண்ட பெரு முயற்சிக்குப் பின்னர் அரசருக்குச் சம்மதமில்லை யெனினும், 'மிகக் கனமானதும் பெரிதுமான' இரண்டு கடைவாய்ப்பற்களையும், புத்தரின் கேசத்தின் ஒரு பகுதி யையும், அவருடைய பிச்சைப் பாத்திரத்தையும் அவர் கள் எடுத்துக்கொள்ள இறுதியாக அனுமதி தந்தார். 'அப்பாத்திரம் பச்சை கலந்த பலநிறக் கல்லாலான அழகிய பொருள்.' 'அதைப் பெறுவதற்குப் பெருநிதி யான' விலை கொடுக்கவேண்டியிருந்தது.

அப்பற்கள் யானைப்பற்களாக இருந்திருக்கவேண்டு மெனத் தோன்றுகிறது. காடுகளில் யானைகள் நிறைந் திருந்ததால் அரசரிடம் இவை அளவு கடந்து வந்து சேர்ந்திருந்தன. யானையின் கடைவாய்ப்பற்களைக் கொடுத்து மங்கோலியத் தூதுகோஷ்டியைத் தட்டிக் கழித்துவிட்டார் மன்னர் என்பது வியப்பாகத் தோன்ற லாம். அம்மாதிரியான எந்த ஆட்சேபத்திற்கும் தகுந்த விடைகள் மன்னரிடம் இருந்தன. மனிதனாக இருந்து கடவுளாகிவிட்ட புத்தருடைய பற்கள், இயல்புக்கு மாறாக இருப்பதுதானே எதிர்பார்க்கக்கூடியது என்று அவர் சொல்லியிருக்கக்கூடும். புத்தரின் அளவு கடந்த ஆற்றலுக்கேற்ப அவருடைய பற்களும் பெரியவையாக இருக்கவேண்டியவை தானே! அல்லது, எதிர்காலத்தில் புத்தரின் ஆத்மாவாகப்போகும் உயிர், மாறி மாறி வரும் பிறப்புகளில் ஒருமுறை முன்பு வெள்ளை யானை யாகப் பிறந்ததை அவர் எடுத்துக்காட்டி இருக்கலாம். இந்த விவரம் புனித 'ஜாதக' நூல்களில் விரிவாகத் தரப்பட்டுள்ளது. இப்போது அளிக்கப்பட்டுள்ள பற்கள் புத்தரின் முற்பிறப்புகளுள் ஒரு காலத்தைச் சார்ந்தவை எனினும், அதற்காக எள்ளளவும் சக்தியோ தெய்வத் தன்மையோ குறைந்தவை அல்ல என்றும் மன்னர் எடுத்துக்காட்டியிருக்கக்கூடும். உண்மையாகப் பார்க்கப்

போனால், மிக அருமையானவையும் பழைமையானவையு மான அவை மிகவும் மதிப்புள்ளவைதானே! ஆனால் உண்மையிலேயே மங்கோலியத் தூதர்கள் அம்மாதிரி யான தடை எதையும் எழுப்பவில்லை. அப்பெரிய கடைவாய்ப் பற்களைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனர் எனப் போலோ கூறுகிறார்.

இன்றைக்கும் இலங்கையில் ஒரு பல் காட்சியில் வைக்கப்பட்டுள்ளது. அது ஒன்றுதான் அசல் பல் என்று சொல்லப்படுகிறது. இதிலிருந்து பர்மியருக்கும், சயாமியருக்கும், மங்கோலியருக்கும் விற்கப்பட்ட பல பற்களும் போலி என்பது ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆனால் சிலரால் அப்படி ஒப்புக் கொள்ளப்படாமலும் இருக்கலாம். அப்புனிதப் பல் லுக்குப் பல சக்திகள் இருந்தனவாம். தீவினின்றும் பல் எடுத்துச் செல்லப்பட்டால், அதை வாங்கியவர் களிடத்தே அதுபோன்ற போலி ஒன்றையோ அல்லது தன்னிடமிருந்து வெளிப்பட்ட மற்றொன்றையோ விட்டு விட்டுக் காற்று வழியே அது பறந்து திரும்பிவிடும் என்பதைப் பலரும் அறிந்திருந்தனர். நானே அப் பல்லைப் பார்த்திருக்கிறேன் என்பதை அறிந்தால் வாசகர்களிடையே ஓர் உள்ளக் கிளர்ச்சி ஏற்படக்கூடும். 1932-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் ஒரு நாள் நான் இலங்கையை அடைந்தேன். கண்டி வரை மோட்டாரில் சென்று பற்கோவிலுக்குச் சென்றேன். அப்போது பர்மாவிலிருந்து வந்துள்ள சில பெருமக்கள் தற் செயலாக அங்கே இருந்தனர். கோவிலைக் காத்துவரும் குருமார்கள் அப்பெரிய அடையாளப்பொருளைக் காட்டிக்கொண்டிருந்தனர். அது ஒரு தங்கப்பெட்டி யில் வைக்கப்பட்டிருந்தது. அது அதைவிடப் பெரிய தோர் பெட்டியினுள் மூடப்பட்டு, அடுத்தடுத்துப் பெரியதான அளவில் உள்ள பெட்டிகளுள் ஒவ் வொன்றும் வைக்கப்பட்டிருந்தது. வெளிப் பெட்டி

களைத் திறப்பதற்குச் சிறிது நேரம் ஆயிற்று. இறுதியில் அப்புனிதப் பொருள் வெளியே எடுக்கப்பட்டது. நான் பார்த்தது யானையின் கடைவாய்ப்பல் அல்ல, ஒருவகைத் தந்தமேயாகும். புத்தருடைய பிச்சைக் கிண்ணம் இன்றும் கண்டியில் பாதுகாக்கப்பட்டுள்ளது என்று நான் அறிந்தபோதிலும் அதைப் பார்க்கவில்லை.

போலோ கண்டியைக் குறிப்பிடவில்லை. ஆனாலும், அந்நகரத்திற்குத் தெற்கே நூறு மைல் தொலைவில் உள்ள புனித மலையான ஆதாமின் உச்சியில் தூது கோஷ்டி அவ்வடையாளப் பொருள்களைப் பெற்றது என்பதைக் குறிப்பிடும் வகையில் எழுதியிருக்கிறார். அம்மலையின் உச்சியிலுள்ள ஒரு சமமான பாறையில் பெரிய அடிச்சுவட்டின் உருவிலே ஒரு பள்ளம் இருக்கிறது. பல மதத்தினரும் அதைத் தங்களது என்று உரிமைகொண்டாடியுள்ளனர். புத்தமதத்தினர் அதைப் புத்தரின் அடிச்சுவடெனவும், முஸ்லிம்கள் ஆதாமின் அடிச்சுவடே எனவும், இந்துக்கள் சிவ பெருமானின் அடிச்சுவடே எனவும், கிறித்தவர்கள் தேவதூதரான புனிதர் தாமஸின் அடிச்சுவடே யெனவும் உறுதி கூறுகின்றனர். ஆண்டுதோறும் இந்த ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த யாத்திரிகர்களும் மலையின் மீதேறி இரத்தினங்களைக் காணிக்கை செலுத்தி வருகின்றனர். அடிச்சுவட்டைச் சுற்றி வைப்பதற்கு அவை பயன்படுத்தப்படுகின்றன. போலோ இது பற்றி எதையுமே சொல்லவில்லை. ஆனால் ஒருவகையான கோவில் போன்ற நினைவுச்சின்னத்தைச் சுட்டிப் பேசுகிறார். அங்கே அடையாளப் பொருள்கள் வைக்கப் பட்டிருந்தன என்றும் கூறுகிறார். நமக்குத் தெரிந்த வரையில் இந்த அடையாளப் பொருள்கள் என்றுமே கண்டியில்தான் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. ஆனால் சிங்களவர்கள் தூதர்களிடம் எதைச் சொல்லலாம்

என்று எண்ணிச் சொன்னார்களோ அதை நம்மால் ஊகிக்க முடியவில்லை.

இந்த அடையாளப் பொருள்களை வாங்குவதோடன்றி அரசர் வசமுள்ள ஒரு பெரிய மாணிக்கக் கல்லையும் முடிந்தால் வாங்கும்படி தூதுக்குழுவிற்கு உத்தரவிடப்பட்டிருந்தது. 'அந்தக் கல் உலகெங்கிலும் காணப்படுவனவற்றுள் மிக அழகியதும் மிகப் பெரியதுமானது. ஏன், இதற்கு முன்பு என்றும் இத்தகைய கல் காணப்பட்டதில்லை. அது அவசியம் காணத்தக்க ஒரு பொருள் என்றே கூறலாம். மார்க்கோ போலோ தூதுக்குழுவினருள் ஒருவராகத் தன்னைக் கூறிக் கொள்கிறார். 'எனது கண்ணாலேயே அம்மாணிக்கத்தைக் கண்டேன். அரசப் பிரபு, மூடிய தனது கையில் அதை வைத்திருந்தபோது அது முட்டியின் மேலும் கீழும் நீட்டிக்கொண்டிருந்தது. அப்பிரபு அதைத் தன் கண்களிலும் வாயிலும் ஒத்திக் கொண்டார்,' என்று அவர் கூறுகிறார். அது ஒரு மாயக்கல் என்பதுதான் இதன் பொருள். முகத்தில் அதை ஒத்திக்கொண்டால் இளமை, ஆரோக்கியம், நல்ல தோற்றம் ஆகியவை அழியாமல் காக்கப்படுமாம். மன்னர் அக்கல்லைக் கொடுக்க மறுத்துக் குழுமியிருந்தோர் முன்னிலையில் அதை வைத்துக்கொண்டு மேற்கூறிய முறையில் விநோதமான சைகை செய்தார். அது தலைமுறை தலைமுறையாக வந்த மாணிக்கமென்றும் அதை விற்பது தனக்குப் பெரும் அவமதிப்பாகும் என்றும் அவர் சொன்னார். ஆகவே போலோ மாணிக்கத்தைப் பெறாமலே பீகிங்கிற்குத் திரும்பவேண்டியிருந்தது. மேற்கூறிய பகுதியில் மார்க்கோ இலங்கைத் தூதுகோஷ்டியில் ஒருவராக, தான் சென்றிருப்பதைத் தெளிவாகக் கூறியிருக்கிறார். நான் கருதுவதுபோல், அந்த தூதுகோஷ்டியே புத்தரின் அடையாளப்பொருள்களைப் பெற்றுவரச் சென்ற தூதுகோஷ்டியாக வைத்துக் கொண்டால், தனது யஜமானரிடம் அவர் வெறுங்

கையோடு திரும்பவில்லை என்று கொள்ளலாம். புத்தரின் பல்லும், கேசமும், பாத்திரமும் பத்திரமாய்க் கரை சேர்ந்துவிட்டன என்று கேட்டபோது குப்ளாய் மகிழ்ச்சியில் திளைத்தார். அப்புனிதப் பொருள்கள் அரண்மனையை நோக்கி ஊர்வலமாக எடுத்துவரப்படும் போது மக்கள் வீதிகளின் ஓரத்தில் வரிசையாக நிற்க வேண்டுமென உத்தரவிட்டார். அரண்மனையில் அவற்றைப் பக்திசிரத்தையுடன் வரவேற்றார். அன்றைய தினத்தை வழக்கம்போல் ஒரு பெருவிருந்தளித்துக் கொண்டாடினார். குறிப்பாக அப்பாத்திரத்தைப் பெற்றதில் அவருக்குத் திருப்தி. புத்தர்பிரான் தனது சீடர்களுக்கு முற்றிலும் ஏழ்மையை ஏற்க வேண்டும் என்று சட்டம் விதித்திருந்தார். அதற்கேற்ப, தானே தனது உணவுக்காகப் பிச்சையெடுக்கச் சுற்றி வரும்போது பயன்படுத்திய அதே பாத்திரந்தான் இது என்று மன்னர் நம்பினார். அந்த நம்பிக்கையே அத்திருப்திக்குக் காரணம். முதல்தரமான தெய்வீகப் பொருள்களுக்கும் அடையாளப் பொருள்களுக்கும் இருப்பதுபோலவே இப்பாத்திரத்திற்கும் அற்புத சக்திகள் இருந்தன. அதில் ஒரு பொருளை நிரப்பிவிட்டால், அதிலடங்கியுள்ள பொருள் ஒன்றுக்கு ஐந்து மடங்காகப் பெருகிவிடும் என்பது அதன் சிறப்பான தன்மை. போலோ, 'மாட்சிமை பொருந்திய கான், தானே அதைப் பரிசோதிக்க விரும்பியதாகவும், அவ்வாறு செய்தபோது உண்மை அப்படியே இருக்கக்கண்டதாகவும் சொன்னார். இதை நீங்கள் அறிவீர்களாக,' என்று எழுதுகிறார்.

மகாயான புத்தமதத்திற்கு அக்காலத்தில் முக்கிய மையத்தானமாக விளங்கிய திபேத்திலிருந்து புத்தத் துறவிகளைக் கொண்டுவந்து மகாயான புத்தத் திருச்சபைக்கு ஆதரவளித்த குப்ளாகான், அப்பிரிவிற்கு எதிரான ஹீனயான புத்தத் திருச்சபைக்குத் தலைமை

யிடமாக உள்ள இலங்கையிலிருந்து அடையாளப் பொருள்களைப் பெற்றுவர ஏன் ஏற்பாடு செய்தார் என்பது சில வாசகர்களுக்கு வியப்பூட்டலாம். ஹீன யானம் அன்றும் அதற்கு முன்பும் சீனாவில் நிலைபெற்ற தில்லை. காகான் இந்த விதமான நுட்ப வேறுபாடு களைக் குறித்துக் கவலைப்பட்டதில்லை. எதையும் பரந்த நோக்குடன் காணும் முறையில், அவர் வேண்டியது மாயசக்தியுள்ள அடையாளப் பொருள்களே. அவற்றை எங்கு பெறமுடியுமோ அங்கு வாங்குவதற்குத் தன் மனிதர்களை அனுப்பினார். இவற்றை நாடிப்பெற ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து செல்லுமாறு போலோ அனுப்பப்பட்டார். அவரது பிற தீரச்செயல் களைக் காட்டிலும், இவ்வாறு அனுப்பப்பட்டதே அவரை ஆசியாவின் மத்தியப்பகுதிக்கு வெகு அருகில் கொண்டு வந்துவிட்டது. அவர் இதுவரை ஈடுபட்டுள்ளவற்றுள் இதுவே மிகவும் விநோதமான செயல்.

இருபத்துமூன்றும் அத்தியாயம்

## விந்தை மிக்க இந்தியா

போலோ இலங்கையில் இருந்தபோது ஆசிய நாடனைத்திலுமே விந்தை மிக்க இடத்தின் எல்லையில் இருந்தார். விரிகுடாவிற்கப்பால் இந்து மதத்தின் வேராகிய தென்னிந்தியா இருக்கிறது. இந்தோ-சீனுவும் இலங்கைத் தீவும் நாகரிகமுள்ளவையாக ஆவதற்கான பண்பாடு இங்கிருந்துதான் சென்றது. ஆங்குள்ள கோவில்களில் சடங்குகளும், படிமங்களும், ஒழுங்குமுறைகளும், நடனங்களும், கடவுளரும், அவதாரங்களும் மத வைராக்யர்களும், மாயாஜாலங்களும் ஒருங்கு காணப்பட்டன. இலங்கையில் தங்கியிருந்தபோது போலோ இந்தியாவிற்குச் சென்று வந்திருக்கவேண்டும். மற்றுமொருமுறை பாரசீக வேந்தருக்கு இளவரசி ஒருத்தியை அழைத்துக்கொண்டு கடல் வழியே தனது ஊரை நோக்கிப் பிரயாணம் செய்தபோதும் இந்தியாவுக்குச் சென்றிருக்கிறார். இருமுறையும் தான் சென்றபோது கண்டவற்றை ஒரே வரலாருகத் தனது நூலில் இணைத்திருக்கிறார். இந்தியாவிற்குக் கடல் வழியே செல்வது எப்படி என்பதை வாஸ்கோடகாமா கண்டுபிடிப்பதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே, பன்னிரண்டாம் நூற்றுண்டில் இந்துக்கள் வாழும் இந்தியா எப்படித் தோற்றமளித்தது என்பது பற்றிய ஒரு தூல சித்திரத்தைப் போலோ நமக்குத் தருகிருர். இன்றும் ஒரு தனித்தன்மையைப் பெற்றுப் பொதுவியல்புக்கு மாறுபட்ட நிலையில் அந்நாடு இருந்துவருகிறபோதிலும், போலோவின் காலத்தில் அது மேலும் விநோதமான இடமாக இருந்தது. ஏனெனில் இஸ்லாமிய மதமோ, அல்லது உலகத்தின் மேற்குப் பகுதியோ இன்னும்

அந்த நாட்டின் மிகவும் தனிச்சிறப்பு வாய்ந்த கருத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் தாக்கவில்லை. போலோ தான் கண்ட காட்சிகளின் பயனாய் ஆச்சரியத்தில் ஆழ்ந்துவிட்டார். 'நான் உங்களுக்கு வியப்பூட்டும் செய்திகளைச் சொல்லப்போகிறேன்' என்று எழுதுகிறார்.

அக்காலத்தில் தென்னிந்தியா பல்வேறு சுதந்திர நாடுகளாகப் பிளவுபட்டிருந்தது. இந்தியா முழுமைக்கும், ஏன், ஒரு பாதிக்கும்கூட ஒரு சக்கரவர்த்தி இல்லை. சென்னைக் கடற்கரைக்கருகே ஏதோ ஒரு பகுதியை ஆண்டுவந்த ஓர் அரசனைப் பற்றி எழுதும் போது இந்தியர்களுக்குத் தையற்காரர்களே தேவைப் படவில்லை என்று போலோ கூறுகிறார். இதற்குக் காரணம் அவர்கள் இடுப்பில் உடுத்தும் ஆடையைத் தவிர வேறெதையும் அணிவதில்லை. (சுவர்களில் தீட்டப்பெற்றுள்ள சித்திரங்களிலிருந்தும், சிற்பங்களிலிருந்தும் பழங்கால இந்தியாவின் சிறப்பியல்புகளுள் இதுவும் ஒன்று என்பதை எவரும் அறிந்துகொள்ளக் கூடும். போலோ கண்ட இந்தியா, கி. பி. முதற் சில நூற்றாண்டுகளில் காணப்பட்ட நிலையிலேயே அப்போதும் இருந்தது. தென்னிந்தியா வெகு சிறிதே மாறுபட்டிருந்தது எனலாம்.) போலோ தொடர்ந்து சொல்லுகிறார். 'தனது அந்தஸ்தைக் குறிப்பதற்காக அரசர் மட்டுமாகிலும் படாடோபமான ஆடைகளை அணிவார் என்பதை நீங்கள் ஒரு வேளை ஊகிக்கலாம். ஆனால் உண்மை அதுவல்ல. இடுப்பில் உடுத்திக் கொள்ளும் அழகிய ஆடையைத் தவிர, அவர் அணிந்துள்ள அணிகளையும் கணக்கிட்டாலன்றி, வேறெதுவும் அவர் உடலின்மீது காணப்படுவதில்லை. அணிகளின் பொதியே அவருடலின்மீது இருந்தது. அவற்றுள் ஒன்று விலையுயர்ந்த ரத்தினங்களும் முத்துக்களும் பதிக்கப்பெற்ற அகன்ற தங்கக்கழுத்துப்பட்டிகை

யாகும். நூற்றுக்கும் அதிகமான பெரிய முத்துக்களும் மாணிக்கங்களும் கோக்கப்பெற்ற ஜபமாலை போன்ற கண்டிகை கழுத்திலிருந்து மார்பு வரை தொங்கிக் கொண்டிருந்தது. மணிகள் பதிக்கப்பெற்ற கனமான தங்கக்காப்புகள் அவரது கால்களில் மூவிடங்களில் காணப்பட்டன. கைவிரல், கால்விரல் ஒவ்வொன்றிலும் மோதிரம் இருந்தது. இவை யனைத்தின் மதிப்பு ஒரு பெரு நகரத்தை மீட்பதற்கு வேண்டிய ஈட்டுப் பொருளுக்கு ஒப்பானது.

ஆடை சிறிதும் அணிகள் மிகுதியும் பூண்டிருந்த இவ்வேந்தருக்குப் பணி புரிய பக்திபூண்ட ஏவலர் கூட்டம் ஒன்றிருந்தது. இகத்திலும் பரத்திலும் மிகுந்த விசுவாசத்துடன் அவருக்குப் பணிசெய்வதே தம் கடன் என்றிருப்பவர்கள் அவர்கள். அரசன்மீது பிரமாணம் எடுத்துக்கொண்டுள்ள இந்த நண்பர்களின்றி, யானையின் மீதோ வேறு வகையிலோ அரசர் வெளியே செல்வதில்லை. தங்கள் மன்னர் மாண்டபோது சிதைக்கு நெருப்பூட்டுகையில், 'பரலோகத்திலும் அவருடன் வாழும்பொருட்டு' அவர்கள் அத்தீக்குழம்பில் குதித்து விடுவார்கள். இத்தகைய மன்னர்களின் நிதிக்குவைகளோ ஏராளமானவை. ஏனெனில் ஒவ்வொரு ஆட்சியின் போதும் அவை மேலும் மேலும் சேர்த்து வைக்கப் பட்டன. தென்னிந்தியாவில் உறுதியாகக் கட்டப் பட்டுள்ள நிதிச்சாலைகளில் பொன்னும் விலையுயர்ந்த இரத்தினங்களும் நிரம்பியிருந்தன. இதற்குக் காரணம் பல நூற்றாண்டுகளாக அப்பகுதி எவராலும் படையெடுக்கப்படவில்லை என்பதுதான். இறுதியாக அது கொள்ளையடிக்கப்பட்டபோது கொள்ளையிடப் பட்ட பொருள் ஏராளமாக இருந்தது. அப்பொருளைப் பற்றிய புகழ் இந்தியா உண்மையிலேயே இருந்ததைக் காட்டிலும் அதிகப் பொருள் வளம் வாய்ந்ததாக ஐரோப்பியர்களை எண்ணச் செய்தது.

மன்னருக்கு எப்படியோ அப்படிக் கடவுளுக்கும் பக்தர்கள் இருந்தனர். மேலே நாட்டைக் காட்டிலும் இந்தியாவிலே ராஜபக்தி, அன்பு, மதசம்பந்தமான தீவிரபக்தி ஆகிய உணர்வுகள் மிகப் பெரும் அளவுக்குப் போற்றப்பட்டன. வெளிநாட்டுப் பிரயாணிகளுக்கு அவை பைத்தியக்காரத்தனமான முறையில் மிகைப் படுத்தப்பட்டவையாகத் தோன்றின. அவற்றுள் முக்கியமானது தன்னையே அழித்துக்கொள்வது. ஒரு பக்தர் எவ்வளவு தூரம், தான் கடவுளை நேசிக்கிறார் என்பதை மெய்ப்பிக்கவும், பக்திக்கீடாக முக்தியை வலிந்து பெறவும் தன்னையே மாய்த்துக்கொள்வதுண்டு. மதத்தின் அடிப்படையிலே புரியப்பட்ட இத்தகைய தற்கொலைக்கு எடுத்துக்காட்டுகள் எத்தனையோ வரலாற்றில் இடம் பெற்றுள்ளன. கடவுள் தங்கி யிருக்கும் மரத்தின் உச்சியிலிருந்து குதித்தவரும், தெய்வீகச் சுறுமீனுக்குத் தன்னையே அளித்துவிடு வோரும் உண்டு. போலோவினால் குறிப்பிடப்பட்டுள்ள மதசம்பந்தப்பட்ட ஒருவகைத் தற்கொலை மிகவும் அதிர்ச்சி யூட்டுவதாக இருக்கிறது. ஒரு பக்தர் நகரி னூடே பல்லக்கில் எடுத்துச்செல்லப்பட்டார். அவர் அப்படிச் செல்லும்போது நண்பர்கள் பின் வருமாறு உரக்கக் கூவினார்கள். ‘இன்ன தேவதையிடம் அவருக் குள்ள பக்தியின் காரணமாக இந்த வீரம் மிக்க மனிதர் தன்னையே மாய்த்துக்கொள்ளப் போகிறார்.’ தன்னையே அழித்துக்கொள்ளவேண்டிய இடத்திற்கு வந்தவுடனே பக்தர் பன்னிரண்டு கத்திகளை ஏந்திக்கொண்டு தான் செய்யப்போவது கடவுளிடம் உள்ள பக்தியின் காரண மாகத்தான் என்று உரத்த குரலில் கூறினார். பிறகு ஒவ் வொன்றாக அவற்றைத் தனது கைகளிலும் உடலிலும் பாய்ச்சிக்கொண்டார். ஒவ்வொரு தடவை குத்தும் போதும் தனது எல்லையற்ற பக்தியைக் குறித்து வெறி கொண்டவாறு கத்தினார். எங்கும் கத்திகள் சிலிப்பிக்

கொண்டிருந்தபோது இரட்டைக் கொடுவாள் போன்ற ஒரு கருவியை எடுத்தார். அது இருமுனைகளிலும் பிடிகளுடன் கூடிய அரைவட்டமான வளைந்த கத்தி. காலில் மாட்டிக்கொள்ளும் அங்கபடியோடு கூடிய சங்கிலிகள் பிடிகளுடன் பிணைக்கப்பட்டிருந்தன. கழுத்துக்குப் பின்புறம் கத்தியை வைத்துக்கொண்டு, கால்களை மடித்தவாறு அவ்வங்கபடிகளில் தன் பாதங்களை நுழைத்துக்கொண்டார். பிறகு தனது கால்களை முன்புறமாக பலங்கொண்டமட்டும் உதறித் தனது தலையைத் துண்டித்து விட்டார். தெய்வீக அருளைப் பெறுவதற்கு இந்த மூர்க்கத்தனமான முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டது என்பதைப் போலோவால் நம்ப முடியவில்லை. அந்த மனிதர் தண்டனைக்குட்படுத்தப் பட்ட ஒரு குற்றவாளியோ என்று போலோ தவறுகக் கருதும் அளவுக்கு, இந்த நிகழ்ச்சி அமைந்திருந்தது.

கணவன்மார்களின் சவச்சிதையின் மீது விதவைகள் உயிர்த்தியாகம் செய்துகொள்வதை 'சதி' என்று கூறுவார்கள். இதை ஓர் ஆதர்ச பதிபக்தியைக் குறிக்கும் செயலாகக் கருதலாம். 'ஒரு மனிதன் இறந்துவிட்டால் அவனுடைய உடலை எரிப்பது அவர்களுடைய பழக்கம். அப்போது அவருடைய மனைவி அவரிடம் கொண்டுள்ள அன்பினால் தானே உயிருடன் அத்தீயில் குதித்துத் தன் கணவனோடு தன்னையும் எரித்துக்கொள்கிறள்.' இவ்வாறு போலோ எழுதுகிறர். இங்ஙனம் செய்வதற்குப் போதுமான தைரியமற்றவர்கள் பெரிதும் பழிக்காளாவார்கள் என்றும் குறிப்பிடுகிறர். 'சதி'யைப் பற்றிய இத்தீங்கும் கொடுமையும் தான் இந்தியாவுக்குச் சென்றவர்களிடையே வெறுப்பைத் தூண்டியது. அவர்களுள் பலர், இதற்குச் சம்மதியாத பெண்டிரையும் தீயில் விழுமாறு புரோகிதர்கள் எவ்வாறு வற்புறுத்தினர் என்பதைக் குறிப்பிடுகின்றனர். பெரும்பாலும் பெண்கள் முன்னதாகவே போதைக்குட்படுத்தப்பட்ட

தனால் தாங்கள் இன்னது செய்கிறோம் என்பதை அறிந்து கொள்ளாமலே இருந்தனர். இப்பழக்கம் எவ்வளவு பைத்தியக்காரத்தனமாக இருந்தபோதிலும் எப்படி ஓர் ஆதர்ச அடிப்படையைக் கொண்டிருந்ததென்பதைப் போலோ சரியாக எடுத்துக்காட்டுகிறார். புரோகிதர்களின் தீவிர மதாபிமானத்திற்கு இரையானவர்கள் செய்துகொண்ட வலுக்கட்டாயமான தற்கொலைகள் வேறு, உண்மையாகவே பதிபக்தியினால் விளைந்த தற்கொலைகள் வேறு என ஆசிரியர் பிரித்துக்காட்டுகிறார்.

மத சம்பந்தமான மற்றொரு வகையான பக்தி, கோவில்களுக்குப் பெண்களை விற்பது என்பதாகும். இது மேலே கூறப்பட்டதைப்போல் அத்தனை தீவிரமான வகையைச் சேர்ந்ததல்ல. அவர்களது பெற்றோர்களால் கடவுளின் அடிமைகளாக அவர்கள் அளிக்கப்பட்டவர்கள். இத்தகைய பெண்கள் கோவில்களில் திரளாக வசித்தனர். ஒவ்வொரு நாளும் விக்கிரகங்களின் முன்னிலையில் உள்ள பலிபீடத்தின்மீது, மன்னரின் முன்பு மேஜையில் வைப்பதுபோல அழகான முறையில் உணவைப் பரிமாறிக் குவித்து வைப்பார்கள். அவர்கள், கடவுள் அதை உண்ணும் வரை காத்திருக்கும் நேரத்தில், பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் இசைக் கருவிகளை வாசித்துக்கொண்டும் இருப்பார்கள். 'பெரும் பிரபு ஒருவர் சாவதானமாக உண்பதற்குப் போதுமான நேரம் கழிந்த பின்னர், அந்த உணவு அங்கிருந்து அகற்றப்பட்டுவிடும். கோவிற் பெண்டிரும் அர்ச்சகர்களும் அதனை உண்பர். ஆண்தெய்வம் சில சந்தர்ப்பங்களில் பெண்தெய்வத்தோடு கோபமுற்றிருப்பதாக அர்ச்சகர்கள் கூறுவார்கள். அத்தகைய ஆபத்தான நிலை தோன்றும் போது மனித சமுதாயத்திற்கே தெய்வீக ஆசிகள் வழங்கப்படாது நின்றுவிடக்கூடும்! தெய்வீக தம்பதிகளின் பிணக்கைத் தீர்த்துவைத்து மீண்டும் அவர்கள் மகிழ்ச்சியோடு தழுவிக்கொள்ளு

மாறு செய்ய இப்பெண்டிர் கட்டளையிடப்படுவார்கள். தங்களுக்கிடையே உள்ள பூசலை மறந்து சிரிக்கும் வகையில், சிலர் அத்தெய்வங்களின் முன்னிலையில் குதித்தும் கரணம் போட்டும் கூத்தாடியின் அருஞ் செயல்களைச் செய்வார்கள்.' மற்றும் சிலர், 'ஐயனே, நீர் ஏன் தேவியோடு வருத்தமுற்றிருக்கிறீர்? தேவி யைப் பற்றித் தாங்கள் ஏன் கவலைப்படுவதில்லை? தேவி அழகாயில்லையா? இனியவளாக இல்லையா?' என்று பணிவாக நியாயத்தை எடுத்துக்காட்டிப் பேசுவார்கள். உடலை நெளித்து முறுக்கத் தெரிந்த மற்றொருத்தி 'கழுத்துக்கு மேலே தனது காலைத் தூக்கிச் சுற்றிச் சுழல்வாள்.' ஆடுவதாலும் குதிப்பதாலும் இப் பெண்டிர் தசைக்கட்டுள்ளவர்களாக இருக்கவே அவர் களைக் கிள்ள முடியாது என்று போலோ கூறுகிறார். கொஞ்சமேனும் பணம் கொடுப்பவர்கள் மட்டுமே முயன்று பார்க்க அவர்கள் சம்மதிப்பார்கள். அவர் களுடைய தேகம் மிகவும் உறுதியாக இருந்ததால் தசையை எவராலும் பிடிக்க முடிந்ததில்லை.

இந்துமதத்தின் சிறப்பியல்புகளை ஒவ்வொன்றாகச் சொல்லிவரும் போலோ அவை எல்லாவற்றுள்ளும் முதன்மையான எடுத்துக்காட்டாக உள்ள அந்தணர் களைக் குறிப்பிடத் தவறவில்லை. அவர்களுடைய பூணூல், எளிய மரக்கறி உணவு, வாணிபத்தில் மிகுந்த நேர்மை, பணத்தைப் பற்றிய வரையில் நம்பிக்கைக்கு உகந்தவராயிருத்தல், மதக்கல்வி, தெய்வீகத்தின்பால் அக்கறை இவற்றைப் பற்றியெல்லாம் அவர் சொல் கிறார். 'உலகிலுள்ள வேறு எந்த மாந்தரைக் காட் டிலும் அவர்கள் சகுன சாத்திரத்தை அதிகம் பின்பற்று கின்றனர். விலங்குகளும் பறவைகளும் இங்குமங்கும் போவதைக் கொண்டும் அவற்றின் வேறு செயல்களைக் கொண்டும் அவர்கள் சகுனம் பார்த்துவந்தனர். நிழல் களின் நீளம், புலிமுகச்சிலந்தி, தும்மல், பறவை பறக்கும்

திசை, இவற்றைக் கொண்டு, நிமித்தங்கூறுதலை அவர் எடுத்துக்காட்டுகிறார்.'

அடுத்து இந்துக்களின் பல வகையினருள் பார்ப்பதற்கு மிகுதியும் கவர்ச்சியாயிருக்கக்கூடிய யோகிகளைப் பற்றிக் கூறத் தொடங்குகிறார். ஆனால் முதலாவதாக ரசவாதத்தில் தனிப்பயிற்சி பெற்றுள்ள யோகியைப் பற்றிச் சில வார்த்தைகள் கூறுகிறார். இந்த ரசவாதிகள் தங்கத்தை உற்பத்தி செய்ய முயலவில்லை. ஆனால் நீண்ட காலம் வாழும் வழியைத் தேடினர். இந்த வீணெண்ணம் மிகப் பழங்காலந்தொட்டுக் கீழைநாட்டு மக்களிடையே நிலவி வந்தது. இன்றும் விடாப்பிடியாய் இருந்து வருகிறது. இந்த ரசவாதமுறையில் இரண்டு வகை உண்டு. ஒன்று அமரத்துவத்தை அளிப்பது. மற்றொன்று ஆயுட்காலத்தை நீடிப்பதோடு நிற்பது. ஆயுளை நீடிப்பதன் ரகசியத்தை அறிந்துள்ள யோகிகள் 'மற்றவர்களைக் காட்டிலும் அதிக நாட்கள் உயிர் வாழ்கிறார்கள்' என்பது பற்றி ஐயப்பாடு இருக்க முடியாதெனப் போலோ கூறுகிறார். 'ஏனெனில் அவர்கள் நூற்றைம்பது முதல் இருநூறு ஆண்டுகள் வரை சாதாரணமாக உயிர் வாழ்கிறார்கள். அப்படி இருந்தும் நல்ல உடல்வலிமையோடு இருக்கிறார்கள். ஆகவே அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போய்வரச் சக்தி படைத்தவர்களாக இருக்கிறார்கள். தங்கள் மடங்களுக்கும் விக்கிரகங்களுக்கும் தேவையான சேவை அனைத்தையும் இனிது நடத்துகிறார்கள்.' 'மடம்' என்ற சொல்லால் ஆசிரியர் கோவிலைத்தான் குறிப்பிடுகிறார். ஏனெனில், இந்தியப் பெருங்கோயில்கள் மடத்தாபனங்களைப் போலவே இருக்கும். அவற்றின் சுற்று வளைவுக்குள் அர்ச்சகர்கள் வாழும் இல்லங்கள் பல இருந்தன. யோகிகள் என்றுமே இல்லத்தில் வசிப்பவர்கள் அல்ல. ஆகையால் யாம் கூறிவரும் இந்த ரசவாதிகள் யோகிகள் என்பதைக் காட்டிலும் அர்ச்ச

கர்கள் என்று சொல்வதே பொருத்தமாகத் தோன்று கிறது. இருந்தபோதிலும் சில யோகிகள் ரசவாதி களாக இருந்துகொண்டு காட்டின் ஒதுக்குப்புறங்களில் தங்கள் கலையைப் பயின்று வந்தனர் என்று போலோ கூறுவதும் சரிதான். அவர்கள் உள்ளிழுத்து விழுங்கும் பொருள், பாதரசமும் கந்தகமும் சேர்ந்த ஒரு கலவை என்று அவர் கூறுகிறார். அக்காலத்தில் நீண்ட ஆயுளைக் கொடுக்கும் மூலப்பொருள்கள் இவைதான் என்பது எல்லோருக்கும் தெரிந்திருந்தது. ஆனால் கலவையில் இவற்றின் சரியான விகிதம் என்ன என்பதுதான் ரகசிய மாக இருந்தது. பல நாட்டு மன்னர்கள் அபாயத்தை விளைவிக்கும் முறையில் கலவை செய்யப்பட்ட ரசாய னத்தை உட்கொள்வதன் மூலம் இறந்துவிட்டனர். பாரசீகவேந்தரான அர்குன் என்ற மங்கோலியருக்கான மணப்பெண் போலோவின் பாதுகாப்பில் ஒப்படைக்கப் பட்டதைப் பிறகு பார்க்கப்போகிறோம். இந்த இள வரசர் எட்டு மாத காலம் மேற்சொன்ன ரசாயனத்தை உட்கொண்டார். அது அவரைக் கொன்றுவிட்டது. தமது காலத்து யோகிகள் இதுபோன்ற கலவையில் இரண்டு குன்றிமணி எடை ஒவ்வொரு நாளும் காலையில் உட்கொள்வதன் மூலம் நல்ல முறையில் உடல்நலத் தைப் பேணி வந்தனர் என்பதை பதினேழாம் நூற் றாண்டில் வாழ்ந்த பிரெஞ்சு மருத்துவரான 'பெர்னியர்' எழுதியிருக்கிறார். கீழை நாட்டிலுள்ள ஒவ்வொரு மன்னனின் ஆசையும் சரியான ரசாயனத்தைப் பெற வேண்டும் என்பதுதான். உலக அதிபரான மாபெரும் ஜெங்கிஸ்கான்கூட, ஆப்கானிஸ்தானத்திற்கு மேலே ஆக்சஸ் நதிக்கருகில் வசித்துவந்தபோது, லாவோ-ட்சே என்னும் தத்துவஞானியைப் பின்பற்றும் ஒரு வயது முதிர்ந்த ரசவாதியைத் தொலைதூரத்திலுள்ள ஷான்டுங் நகரத்திலிருந்து அழைத்துவரச் செய்து அமரத்துவ நிலையைப் பற்றிய ரகசியத்தைக் கேட்டார்.

அவர் பாலைவனமும் மலைகளும் நிரம்பிய மூவாயிரம் மைல் தூரத்திற்கப்பாலிருந்து அழைத்து வரப்பட்டவர். ஆகவே இந்த விஷயம் போலோவுக்கு மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணியிருந்தது. இந்த ரசவாத யோகிகள் ஏன் இவ்வளவு நீண்ட காலம் வாழ்ந்தார்கள் என்பதற்கு, அவர்களுடைய உணவு எளியதாயும், குறைந்ததாயும், உரமூட்டக்கூடியதாயும் இருந்தது என்பது காரணமாக இருக்கலாம் எனப் போலோ கூறுகிறார்.

சந்யாசிகளாகவும் நாடோடிப் பரதேசிகளாகவும் உள்ள சாதாரண யோகிகளைப் பற்றிப் போலோ சொல்லவிருப்பது சுவையுள்ளதாயிருப்பதுடன், உண்மையை அடிப்படையாகக் கொண்டதாயும் இருக்கிறது. பொதுவாக அவர்கள் பக்தகோடிகளைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அனைத்தையும் அடியோடு துறப்பதன் மூலம் நெருங்கிய தெய்வீக சாயுஜ்யத்தைப் பெறும் வழியைத் தேடினர். தவசிகளைப்போல், தட்டுகளுக்குப் பதில் கீழே விழும் இலைகளில் இவர்கள் தங்கள் உணவை உண்டனர். உடல் முழுதும் திருநீற்றைப் பூசிக்கொண்டனர். மனிதனோ, விலங்கோ, தாவரமோ, எல்லா உயிர்வகைகளிடத்தும் ஒத்த புனிதத்தன்மை இருப்பதாக அவர்கள் நம்பினர். புழுவாயிருந்தாலும் புல்லாயிருந்தாலும் அதைக் கொல்லமாட்டார்கள். அவர்கள் அறவே ஆடை அணியாதவர்களாய்ச் சென்றுகொண்டிருந்தனர். இரவில் போர்வையையோ பாயையோ உபயோகித்திலர். 'அவர்கள் இறப்பதே இல்லை என்பது பெரிதும் வியப்பான செய்தி' என்று போலோ முடிக்கிறார். இம்மாதிரியான வாழ்க்கை போலோவை அச்சுறுத்தியிருக்கலாமெனத் தோன்றுகிறது. அது உண்மைதானே. இன்றும் நமக்குக்கூட இப்படி நடமாடும் மனிதர்களைக் காண்பதே அச்சத்தை விளைவிக்கிறது. அவர்கள் போலோவை நடுங்கவைத்து

விட்டனர். 'அவர்கள் அத்தனை கொடியவர்களாயும், நம்பிக்கைத் துரோகிகளாயும், உருவ வழிபாட்டில் முழுதும் ஈடுபட்டவர்களாயும் இருப்பதால் அவர்களை நான் பேய்த்தன்மை படைத்தவர்கள் என்று உங்களுக்குக் கூறுவேன்,' என்கிருர் போலோ.

இதுதான் இந்து மதத்தைப்பற்றிய ஆசிரியருடைய குறிப்பு. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆரியர்களால் இந்தியாவில் தொடங்கி வைக்கப்பட்ட இப்பெரியதொரு மதம், கிறித்தவ சகாப்தத்தின் முதற் சில நூற்ருண்டுகளில் கடல் கடந்து இந்தோசீனுவில் பரவியது. இந்து மதத்தின் மேலான பகுதியாகிற இலக்கியத்தையும் தத்துவத்தையும் பற்றி அவர் எதையும் அறிந்திருக்கவில்லை. இந்துமதத்தைக் குறித்த பாமரமக்களின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட பழக்கவழக்கங்களைப் போலோ கண்டிருந்தார். எனினும், இந்துமதத்தின் வெளிப்புறக் காட்சிகளின் முக்கியப் பகுதிகளைச் சரிவரச் சுட்டிக்காட்டுவதிலும், இடைக்கால ஐரோப்பியருக்கு ஒரு வரலாற்றை அளிப்பதிலும் வெற்றியடைந்திருக்கிருர். ஆனல் ஐரோப்பாவில் அன்றிருந்த கல்வி நிலையில் இதில் பெரும்பகுதி புரிந்து கொள்ள இயலாததாக இருந்தது.

இருபத்துநான்காம் அத்தியாயம்

# முத்தும் மீனம்பரும்

இந்தியாவில் மீன்பிடிக்கும் தொழிலைப்பற்றிப் போலோ நமக்கு இரு காட்சிகளைத் தருகிறார். முத்து, மீனம்பர் என்ற இரு நிதிகளுக்கும் இந்தியக் கடல்கள் பெயர் பெற்றிருந்தன. முத்துக் குளிக்கும் தொழில் சிறப்பாக இலங்கைக்கும் கன்யாகுமரிக்கும் இடையில் உள்ள கால்வாயில் நடைபெற்றது. அதற்கேற்ற முறையில் நீரின் ஆழம் அங்கே அதிகமாக இல்லை. அங்குதான் முத்தெடுக்கும் மரக்கலங்கள் நங்கூரம் பாய்ச்சப்பட்டிருப்பது வழக்கம். மாதக் கூலிக்கமர்த்தப்பட்ட நீர்மூழ்குவோர், ஓடங்களில் இருந்துகொண்டு வேலை செய்வார்கள். ஆனால் கடலின் அடித்தளத்திற்குச் செல்லுமுன்பு சுறுமீன்களிடமிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கென முன்னெச்சரிக்கைகள் எடுத்துக்கொள்ளவேண்டியதாயிருந்தது. மரக்கலங்களைச் சார்ந்த அந்தணர்கள் இதை கவனித்துக்கொண்டனர். 'தங்கள் மந்திர வித்தையாலும் பேயாட்டக்கலையாலும் அந்த மீன்களைப் பிறர் எவருக்கும் தீங்கு விளைவிக்காத வகையில் வசப்படுத்தி மயக்கமுறும்படிச் செய்துவிடுகின்றனர்.' அவர்கள் எந்த முறைகளைப் பயன்படுத்தினார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அவர்கள் முத்துக்குளிப்போர் நீரில் மூழ்குவதற்குத் தேவையான தைரியத்தைக் கொடுத்தார்கள். சாவு நேர்ந்திருக்குமானால், மீன்களைத் தொடர்ந்து மயக்குவிக்குமாறு அவர்கள் கோரப்பட்டிருக்கமாட்டார்கள் என்று எவரும் உணரலாம். அவர்கள் அப்படியே இன்றுவரை செய்துவந்திருக்கிறார்கள் என்பது மிக விநோதமான உண்மைதான். பொழுது சாய்ந்த பிறகு அவர்கள் இம் மாயவித்தையைச் செய்வதில்லை எனப் போலோ சொல்

லுகிருர். ஆகவே, இருட்டிய பிறகு அதிக்கிரமிப்பாளர்கள் முத்துக்குளிக்க முயன்ருல் அவர்கள் சுருமீன்களால் விழுங்கப்படுவார்கள். 'ஆனுல் திருடர்கள் மீன்களைப் பற்றிய அச்சத்தினுல் இரவில் கடலுக்கடியில் செல்ல முயற்சி செய்வதில்லை. வியாபாரிகளால் கூலிக்கமர்த்தப்பட்ட பிராமணர்களைத் தவிர மீன்களை மயக்குவது எப்படி என்பதை எவரும் அறிந்திருந்ததாகக் காணப்படவில்லை.'

நீரில் மூழ்குவோர் முப்பத்தாறடி ஆழம் வரை சென்று வேலை செய்யக்கூடியவர்களாக இருந்தனர். தங்களால் முடிந்தவரை நீண்ட நேரம் நீரிற்கடியிலே இருந்து, வலை நிறைய முத்துச்சிப்பிகளை மேலே கொண்டுவருவார்கள். பிளக்கப்பட்ட சிப்பிகள் நீர்த்தொட்டிகளில் போடப்படும். சிப்பிகள் அழுகி நீர்மட்டத்தில் மிதக்கும். முத்துக்கள் கீழே அமிழ்ந்துவிடும். 'இக்கடலில் கண்டெடுத்த முத்துக்கள் உலகெங்கிலும் பரவலாகக் கிடக்கின்றன,' என்று போலோ மேலும் கூறுகிருர். இந்திய முத்துக்களைத் தம் வசம் வைத்திருக்கக்கூடிய ஆசிரியருடைய வாசகர்களுள் ஒரு சிலருக்கு இந்த உண்மை உள்ளக் கிளர்ச்சியை உண்டுபண்ணக்கூடும்.

மீனம்பரைப் பெறுவதற்கான மிக முக்கியமான மீன்பிடிப்புத்தலம் ஏடன் குடாக்கடலின் வாயிலிலுள்ள 'சொகோட்ரா' என்னும் தீவிற்கப்பால் உள்ளது. மீனம்பர் என்பது ஆண் திமிங்கிலத்தின் குடலிலுள்ள ஓர் இறுகிய பொருள். பொதுவாக திமிங்கிலத்தால் வெளிவிடப்படும் மீனம்பர் பிறகு கடலில் மிதப்பதையோ அல்லது கடற்கரையில் அடித்து ஒதுக்கப்பட்டிருப்பதையோ காணலாம். கீழை நாட்டுக் கடற்கரைகளில் அவற்றை நான் கண்டிருக்கிறேன். அவை எனக்குக் கொடுக்கப்பட்டும் இருக்கின்றன. அப்பொருள் பக்குவப்படுத்தப்படாத நிலையில், கடலோரத்தில் ஒதுக்கப்பட்ட ஒரு சிறு பொருள் போல் தோற்றமளிக்

கிறது. இறந்த திமிங்கிலத்தின் வயிற்றில்கூட அது காணப்படுகிறது. அதிலிருந்து உயர்ந்த அளவு நூறு பவுண்டு எடையுள்ள இப்பொருளைச் சேகரிக்கமுடியும். அதைப் பக்குவப்படுத்திய பிறகு ஐரோப்பாவில் வாசனைப்பொருளாகப் பயன்படுத்துகிறார்கள். அதற்கு இயல்பாகவே வாசனை இல்லை என்றாலும் வாசனையைத் தரும்படியாக அதைச் செய்ய முடியும். கீழை நாடுகளில் மருந்தாகவும், வலிவூட்டும் ஒளடதமாகவும், சமையற்சாமானாகவும் பலவகைகளில் அது உபயோகத்தில் உள்ளது.

இப்பொருளை வயிற்றில் பெற்றுள்ள திமிங்கிலத்தை சொகோட்ராவில் உள்ள மீன்பிடிப்போர் எப்படிப் பிடிக்கின்றனர் என்பதைப் போலோ விவரிக்கிறார். தங்கள் கப்பலின் பின்புறம், ஒருவகை மீனின் கொழுப்பில் தோய்த்தெடுத்த கந்தைக்கற்றையைக் கட்டி இழுத்துச்செல்வார்கள். அதாவது நீரின் மேற்பரப்பில் அக்கொழுப்புப்பொருளைத் தொங்கவிட்டிருப்பார்கள். உடனே அக்கொழுப்பின் வாசனையை நுகர்ந்த ஒரு திமிங்கிலம் மேலே வரும். அதன் பின்னர் போதைப் பொருளூட்டப்பெற்ற ஒருவகைப் பெரிய மீனின் துண்டங்களை மீனவர்கள் நீரில் எறிவார்கள். அந்த போதைப்பொருள் அபினியா வேறொன்றா என்பதைப் போலோ சொல்லவில்லை. திமிங்கிலம் அம்மீனை விழுங்கியவுடன் போதையுண்டாகப்பெற்று மயங்கிக் கிடக்கும். பிறகு மீனவர்கள் அதன் பக்கத்தில் தங்கள் கப்பலைக் கொண்டுசென்று, திமிங்கிலத்தின் மீதேறி அதன் தலைக்குள் ஒரு முள்ளீட்டியை அறைவார்கள். மிகவும் மயங்கிக் கிடக்கும் இப்பிராணிக்கு இவை எவையுமே தெரியாது. முள்ளீட்டியில் ஒரு கயிற்றை இணைத்துவிட்டு அவர்கள் கப்பலேறித் திரும்பத் தொடங்குவார்கள். அதற்குச் சுயநினைவு வந்ததும் எட்டி ஓடத்தொடங்கும். கயிறு தளர்த்தப்பட்டு

இடையிடையே ஒரு பீப்பாய் அதனுடன் இணைக்கப் படும். இப்பீப்பாய்கள் கடிவாளம்போல் தடை செய் வதில் பயனுள்ளவை. திமிங்கிலம் வெகுவேகமாக அவற்றை இழுத்துச்செல்ல முடியாது. அவற்றுடன் நீரில் மூழ்கவும் முடியாது. ஏனெனில் அவற்றின் 'கூட்டு மிதக்கும் சக்தி' மிகவும் அதிகம். ஆகவே அது மேலும் மேலும் களைத்துவிடும். இறுதியில் களைப்பும், புண்ணும் சக்திக்கு மீறிப்போகவே அது இறந்துவிடும். பிறகு மீனவர்கள் அதைக் கடற்கரைக்குக் கட்டி இழுத்துப்போவார்கள்.

இருபத்தைந்தாம் அத்தியாயம்

## உலக வருணனையின் முடிவு

இந்துக்கள் வாழும் இந்தியாவையும், அதன் மிகப் புகழ் பெற்ற இரண்டு கடற்பொருள்கள் எவ்வாறு சேகரிக்கப்பட்டன என்பதையும் விவரித்த பின்னர், அதன் சுற்றுப்புறங்களில் உள்ள ராஜ்யங்களின் பூகோள அமைப்பைப் பற்றியும், முக்கிய இயல்புகளைப் பற்றியும் தனது வாசகர்களுக்கு ஒரு சில கருத்துக்களைத் தரப் போலோ முயல்கிறார். இந்தியாவின் மேற்குத் திசையில் உள்ள ராஜ்யங்களைப் பற்றிக் கூறும்போது எப்படி இந்தியக் கடற்கரை பாரசீக வளைகுடா வரை தொடர்ந்து சென்று பிறகு அரேபியாவை யொட்டித் தெற்கு நோக்கித் திரும்பி ஆப்பிரிக்கக் கடற்கரைப் பகுதியைப் போய்ச்சேர்கிறது என்பதைக் காட்டுகிறார். உலகத்தின் வருணனையை எழுதவேண்டும் என்ற அவருடைய பெரிய திட்டத்தின் இன்றியமையாத ஒரு பகுதியாக இது அமைந்துள்ளது. அவருடைய அசல் கையெழுத்துப்பிரதியுடன் தோராயமாக வரையப் பட்ட ஒரு நிலப்படம் இணைக்கப்பட்டிருந்தது என்பது பற்றி எனக்கு ஐயமில்லை. ஆனால் அப்பிரதி இப்போது காணப்படவில்லை. அவரது காலத்திய பூகோள அறிவியல் துறையில் அவர் ஆற்றிய சாதனை உண்மையிலேயே மிகப் பெரிது.

அவருடைய சாதனைகளைப் பற்றிய இச்சுருக்கமான நூலில் இந்தியா, அரேபியா, ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளின் கடற்கரைப் பகுதிகளைக் குறித்து அவர் எழுதியுள்ள அத்தியாயங்களைச் சுருக்கிக் கூறுவது கூட சோர்வை உண்டுபண்ணக்கூடியதாக இருக்கும். இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பகுதி, பாரசீக வளைகுடா ஆகியவற்றைப் பற்றி அவர் தருகிற செய்திகள் நேர்

முகமாகக் கண்டவற்றினின்றும் பெறப்பட்டவை. எஞ்சியவற்றைப் பற்றிய செய்திகள், நம்பத்தகுந்தவை என்று அவர் உறுதியாகக் கருதிய சில கூற்றுக்களி லிருந்து பெறப்பட்டவை. எப்படி அந்தப் பெரிய கடற்பாதை சீன நாட்டில் தொடங்கி பாரசீகத்திலுள்ள ஆர்மஸ் துறைமுகத்தில் போய் முடிகிறது என்பது பற்றிய மிகத் தெளிவான ஒரு கருத்தை அவர் கொண்டி ருந்தார். இன்றைய பம்பாய்க்கு வடக்கே, திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கடற்கொள்ளையின் காரணமாக, அன்றைய நிலைமை பத்திரக்குறைவாக இருந்ததென அவர் குறிப்பிடுகிறார். முகம்மதியர்களான இக் கொள்ளைக்காரர்கள் மிகவும் இரக்கமற்றவர்கள். கைப் பற்றப்பட்ட கப்பல்களிலுள்ள வியாபாரிகள் முத்துக் களையும் இரத்தினங்களையும் ஒளித்துவைக்கும் பொருட்டு விழுங்கிவிடுவதுண்டு. அவற்றைத் திரும்பப் பெறுவதற்குச் சாத்தியமான சில முறைகளைக்கூட கொள்ளைக்காரர்கள் கையாண்டனர்.

அரேபியக் கடற்கரையிலுள்ள பல்வேறு துறைமுகங் களைப் பற்றிப் போலோ ஒவ்வொன்றாகக் குறிப்பிடுகிறார். ஏடனையும், அபிசீனியாவையும் முழுதும் வருணிக்கிறார். அபிசீனியாவைப் பற்றிய அவரது கூற்றுக்களைச் சரிவரப் புரிந்துகொண்டிருந்தால் பிற்காலத்தில் எழுந்த சில தாறுமாறான எண்ணங்களைத் தவிர்த்திருக்கக்கூடும். சோமாலிலாண்டிலுள்ள மோகடிஸ்கோவைப் பற்றியும், டாங்கனீயகாவிலுள்ள சான்சிபாரைப் பற்றியும் அவர் தருகின்ற விவரங்களின் மூலம், போர்த்துகீசியர் அங்கு போய்ச் சேர்வதற்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, ஆப்பிரிக்கக் கீழ்க்கடற்கரையைப் பற்றிய ஒரு தெளிவான சித்திரத்தை ஆசிரியர் அளிக்கிறார். ஆப்பிரிக்காவின் பெரும்பகுதியை அவர் உணரவில்லை என்பது உண்மைதான். இந்த இடங்கள் தனித்தனிப் பெரிய தீவுகளில் இருப்பதாக அவர் எண்ணியிருந்தார்.

இவை இரண்டும் ஒரே கண்டத்தில் இருக்கின்றன என்பதையும், அக்கண்டத்தின் கடற்கரை தெற்கு முனை வரை மூவாயிரம் மைல் தூரம் தொடர்ந்து செல்கிறது என்பதையும் அவர் அறிந்திருக்கவில்லை. எனினும், சான் சிபாருக்கு அப்பால் என்ன இருக்கிறது என்பது குறித்து அவர் யூகித்தார். அவருக்குத் தெரிந்த செய்தி இது தான். அங்கிருந்து மேலும் ஒருவர் தெற்கு நோக்கிக் கடல்வழியே சென்றால் பிறகு மீளமுடியாது. ஏனெனில் அங்குள்ள வேகமான நீரோட்டம் எவரையும் அடித்துச் சென்றுவிடும். எவரும் முன்னர் அறிந்திராத அப் பகுதியைக் குறித்து அவர் கூறும் ஒரே கதை, ஒரு மாபெரும் பறவையைப் பற்றியது ஒரு வேளை அது பதினேழடி நீளங்கொண்ட பிரம்மாண்டமான சிறகுகளை உடைய கின்னரப்பறவையைப் பற்றி மிகைப்படுத்திக் கூறப்பட்ட கதையாகவும் இருக்கலாம். காட்சிக்கு வெகு தொலைவில் பரந்து விரிந்து கிடக்கும் இப்பகுதி களையும், மாபெரும் நீர்ப்பரப்பில் உள்ள எண்ணற்ற தீவுகளையும் எண்ணிப்பார்த்து, அவற்றை விவரிப்பதை விடுத்து அடக்கமாகச் சொல்லுகிறார். 'இந்திய நாட்டில் உயர்ந்தவற்றைப் பற்றியும் ஆங்குள்ள மலர்களைப் பற்றி யும் நான் உங்களுக்குச் சொல்லிவிட்டேன்.' 'இந்தியா' என்ற சொல் இந்தோ-சீனாவிலுள்ள சம்பாவிலிருந்து ஆப்பிரிக்காவிலுள்ள சான்சிபார் வரை உள்ள நிலப் பரப்பைக்குறிப்பதாக ஆசிரியர் கருத்தில் கொள்கிறார். ஆனால் 'இந்திய' நாட்டிலுள்ள தீவுகளனைத்தையும் பற்றிய உண்மையைச் சொல்லக்கூடிய மனிதன் உலகத் திலேயே இல்லை. அத்தீவுகள் எண்ணிலடங்கா. ஆகவே 'ஒரு மனிதனுடைய ஆயுட்காலமோ அல்லது அதுபோல் இரண்டு மடங்கு காலமோ, அல்லது ஏன், மூன்று மடங்கானபோதிலும் எல்லாவற்றையும் தேடிக்கண்டு பிடிக்க அவை போதுமானவை அல்ல.' உண்மையிலேயே

இது ஒரு மாபெரும் வேலைதான். அடுத்த ஐந்நூறு ஆண்டுகளில்கூட அது முற்றுப்பெறவில்லை.

'இந்திய நாட்டைப்' (Indie) பற்றிப் போலோ மேலும் வருணிப்பதை விடுத்த போதிலும், தனது வேலை முற்றுப் பெற்றுவிட்டதாக அவர் கருதவில்லை. ஏனெனில், தான் இதுவரை குறிப்பிடாத மற்றும் சில பகுதிகள் வடக்கே இருந்தன. அவற்றைப் பற்றிய சில செய்திகளை அவர் அறிந்திருந்தார். சீனுவுக்கு மேலே, மங்கோலியரின் தாயகமான சமவெளிக்கு வடக்கே, இவர் கேள்வியுற்ற சில நாடுகள் இருந்தன. அவை குளிரும் இருளும் நிறைந்த கொடிய நாடுகள். இங்கேயும் நாம் ஆசிரியரைப் பின்பற்றிச் செல்லப்போவதில்லை. ஆயினும், பனியுறைந்த நிலத்தில் நாய்களால் இழுத்துச்செல்லப்படும் சறுக்கு வண்டிகள், வடதுருவத்தை யடுத்துள்ள பகுதியில் வாழும் கரடிகள், கறுப்பு நரிகள், சேபிள் (Sable) என்று கூறப்படும் கணக்கற்ற மிருகங்கள் ஆகியவற்றைப் பற்றி அத்தனை உயிரோட்டத்துடன் அவரால் விவரமாக எழுத முடிந்தது குறித்து நமது வியப்பைத் தெரிவிக்கத் தான் வேண்டியிருக்கிறது. மேலும் அவர் மாரிக்காலத்தில் சூரியன் எழாமலேயே இருக்கும் நாட்டைப் பற்றியும் சொல்லிக்கொண்டு போகிறார். சுருங்கச் சொன்னால் சைபீரியாவையும் ஆர்டிக் பகுதியையும்தான் அவர் அப்படி வருணிக்கிறார். இத்துடன் அவர் முடித்துக் கொள்ளவில்லை. இன்னும் அவர் ரஷ்யாவைப் பற்றிச் சொல்லியாக வேண்டியிருந்தது. வோல்கா நதியை மையமாகக் கொண்ட மங்கோலிய மாகாணத்திற்கு வடமேற்கில் உள்ளது அது. கடுமையான குளிரைப் போக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட பெரிய அடுப்புகளைப் பற்றியும், அதே காரியத்தைச் செய்யக் கூடிய வோட்கா என்ற பிராந்தி வகையைப் பற்றியும் எழுதியாகவேண்டியிருந்தது.

தூரவடக்குப் பகுதியில் ஆசிரியர் இறுதியாக ஊடுருவிப் பார்த்த இப்பகுதியுடன் அவரது பூகோள ரீதியான இச்சுருட்சித்திரம் முடிவடைகிறது. இனி எஞ்சியிருப்பது, அவர் எப்படித் தனது தாயகமான வெனிசுக்குப் போனர். அங்கு அவருக்கு என்ன நிகழ்ந்தது, எப்படித் தன் நூலை எழுதினர் என்பதை நாம் அறியவேண்டியதுதான்.

இருபத்தாறும் அத்தியாயம்

## வெனிசுக்குப் போலோக்கள் திரும்புதல்

சுமார் 1287-ஆம் ஆண்டு தனது 'இந்திய' தூதுப் பணியை முடித்துக்கொண்டு போலோ பீகிங்கிற்குத் திரும்பினர். நான் கருதுவதுபோல் அவர் புத்தருடைய நினைவுப்பொருள்களோடு பிறருக்கு அறிவுறுத்தும் பொருட்டுச் சுவையான செய்திகள் பலவற்றைத் திருப்பு காலையில் கொண்டுவந்திருப்பாராஞல், குப்ளாய் அவரைக் கண்டு மிகவும் மகிழ்ந்திருப்பார். மிகக் கவன மாக வரையப்பட்ட குறிப்புக்களேயும் தான் சென்ற நாடுகளிலிருந்து சேகரித்துவந்துள்ள விநோதப்பொருள் களேயும் அவர் மன்னரிடம் சமர்ப்பித்தார் என்று அவரது நூல் கூறுகிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக அவர் அங்கு வசித்திருந்த காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாக ஓங்கியிருந்த புகழ் இப்போது மேலும் உயர்ந்தது. காகானுக்கு நெருங்கிய முறையில், நம்பிக்கைக்குகந்த ஒரு பதவியை அவர் ஏற்றிருந்ததாக வும், பிறநாடுகளைக் கண்காணித்தற்பொருட்டு மேலும் சில பிரயாணங்கள் செய்ததாகவும் தோன்றுகிறது. இந்த முறை அவர் யுன்ஞனிலிருந்து பர்மாவுக்குப் பிரயாணம் செய்திருக்கக்கூடும். அவர் பெரும் சம்பளம் வாங்கிக்கொண்டிருந்தார் என நாம் எண்ண இடமிருக் கிறது. அவரும் மற்ற இரு போலோ சகோதரர்களும் வியாபாரத்தை லாபகரமாக நடத்தினர் என்பதை நாம் ஐயத்திற்கிடமின்றி அறிகிறோம். ஏனெனில் அவர்கள் அணிகளும் தங்கமுமாக பெரும் பொருள் படைத்தவர் களாக ஆகிவிட்டனர் என்பது அவர் நூலில் தெளி வாகக் கூறப்பட்டிருக்கிறது.

பொருளும் புகழும் படைத்திருந்தார்களெனினும், இப்போது அவர்கள் தாயகத்தைக் குறித்த ஏக்கத்தை

உணரத் தலைப்பட்டனர். தாய்நாட்டைக் குறித்த ஏக்கம் ஒருபுறம் இருந்ததோடு, இப்போது அவர்கள் மிகுந்த பணக்காரரர்களாக இருந்ததால், தங்கள் நாட்டு மக்களிடையே முதுமைப் பருவத்தைச் செல்வச் சீருடன் இன்பமாகக் கழிக்கும் நாளை எதிர்நோக்கி இருந்தனர் என்பதும் ஒரு காரணம். மற்றொரு காரணம், குப்ளாய் இறந்துவிட்டால் தங்கள் பொருளுடன் சீன நாட்டைவிட்டு என்றுமே போகமுடியாது நேரக்கூடுமோ என்ற அச்சம். இப்போது குப்ளா கானுக்கு வயது எழுபத்தொன்று. ஆகவே மேலும் நீண்ட காலம் அவர் வாழ முடியாது என்று கருதப் பட்டது. போலோக்கள் தனிப்பட்ட முறையில் மன்னரின் அன்புக்குப் பாத்திரமானவர்கள். ஒரு சில பிரபுக்கள் அவர்கள்மீது பொறாமை கொண்டனர். அவருக்குப்பின் பட்டத்திற்கு வருபவர் அவர்களிடத்தில் அவ்வளவு நல்லெண்ணம் கொண்டவர்களாக இல்லாமற்போகலாம். இப்போது தீய எண்ணம் கொண்டுள்ள ஒரு சிலருக்கு அப்போது அவர்களுக்குத் தீங்கு விளைவிக்க ஒரு சந்தர்ப்பம் கிடைக்கவும் கூடும். இக் காரணங்களுக்காகவும் வேறு சில காரணங்களுக்காவும், அவர்கள் நாட்டை விட்டுச் செல்ல ஆவலுள்ளவரா யிருந்தனர். எனினும் தனி மனிதனின் ஆளுகைக்குட் பட்ட நாட்டை விட்டுச்செல்வது எப்போதும் எளிதல்ல. ஆசியாவில் எவ்வளவுக்கெவ்வளவு ஒரு மனிதன் மன்னனுக்கு உபயோகமாக இருக்கிறானோ அவ்வளவுக்கவ் வளவு பயணச்சீட்டு பெறுவதில் அவனுக்கு சங்கடங்கள் உண்டு.

போலோக்கள் இதை நன்றாகப் புரிந்துகொண்டிருந்த தால் அனுமதியைப் பெறுவதில் அதிக நம்பிக்கை வைத் திருக்கவில்லை. எனினும் ஒரு நாள் மாட்சிமை பொருந்திய மன்னர் மிகுந்த உத்சாகத்துடன் இருப் பதைக் கண்ட நிக்கோலோ அச்சமயத்தைப் பயன்படுத்

திக்கொண்டார். அவர் முழந்தாள் மண்டியிட்டு மூவரின் சார்பிலும் தாயகம் திரும்புவதற்கு அனுமதி தருமாறு மன்னரை வேண்டிக்கொண்டார். இந்த வார்த்தைகளைக் கேட்ட மன்னர் மிகவும் கலக்கமுற்ற வராய் பதில் சொன்னார்: 'வழியில் சாவதற்காகவா போக விரும்புகிறீர்கள்? சொல்லுங்கள், உங்களுக்குப் பொன் தேவையானால், உங்கள் நாட்டில் இருப்பதைக் காட்டிலும் மிகப் பெருமளவில் நான் தருவேன். அது போல் நீங்கள் கேட்கும் வேறெந்தப் பொருளையும் உங்களுக்குத் தருவேன்.' நிக்கோலோ அது அவ்வாறல்ல என்பதையும், தனக்கு மேலும் அதிகமான பொருள் தேவை இல்லை என்றும், ஆனால் நீண்டகாலமாகத் தன் மனைவியையும் குழந்தைகளையும் காணாத குடும்பத் தலைவனாக இருப்பதால் தாயகம் திரும்பிச் செல்வது தனது கடமை என்று தான் உணர்வதாகவும் எடுத்துக் கூறினார். ஆனால் குப்ளாய் அவற்றை எல்லாம் கேட்கத் தயாராக இல்லை. 'எந்த விதமான நிலையிலும் எனது ராஜ்யத்திலிருந்து நீங்கள் வெளியே செல்வதற்கு என்னால் ஒப்ப முடியாது.' என்று கூறிவிட்டார்.

மறுத்தல் என்பது, குறிப்பாகக் கீழை நாடுகளில், முடிவான ஒன்றல்ல. தாங்கள் எண்ணியதை அடைய முடியாவிடினும் பலமுறை போலோக்கள் நாட்டை விட்டுச் செல்வதற்கான தங்கள் வேண்டுகோளைத் திரும்பத் திரும்பச் சொல்லிவந்தனர். காகான் இறந்த பிறகே அவர்கள் தங்கள் நாட்டிற்குத் திரும்பிச் செல்லும் சந்தர்ப்பத்தைப் பெறவேண்டியிருக்குமோ என்றுகூடத் தோன்றியது. அடுத்துப் பட்டத்திற்கு வருவது யார் என்பது குறித்துச் சர்ச்சை எழுந்தால், போட்டியிடும் வாரிசுகளின் சேனைகளால் நிலப் பாதைகள் தடைசெய்யப்படலாமென்ற ஒரு பேராபத் தான நிலை இருந்துவந்தது. ஆனால் நாட்டை விட்டு வெளியேறுவதற்கு வழி எதுவும் தோன்றாததால்,

தவிர்க்க முடியாத நிலையில், ஆவது ஆகட்டும் என்று அவர்கள் இருந்துவிட்டார்கள்.

'இந்தியர்' தூதுப்பணியை முடித்துக்கொண்டு திரும்பிய சிறிது காலத்திற்குப் பின், பாரசீக வேந்தரான அர்குன் என்பவரிடமிருந்து ஒரு தூதுக்குழு வந்தது. அவருடைய மனைவியான 'பொல்காறு' 1286-ஆம் ஆண்டில் இறந்துவிட்டாள். அவள் மரணப் படுக்கையில் இருந்தபோது, தனது மங்கோலிய இனத்தைச் சார்ந்த ஒரு பெண்ணைத் தவிர வேறு எவளையும் அரசி என்ற முறையில் தனது இடத்தை ஏற்றுக் கொள்ளும்படி விடுவதில்லை என்று சத்தியம் செய்து தருமாறு கணவனை மன்றாடிக் கேட்டுக்கொண்டாள். அத்தகைய ஒரு ராணியைப் பெறுவதற்குப் பீகிங்கிற்குச் சொல்லியனுப்பித் தனது மூத்த பாட்டனாரான காகானுடைய அனுமதியைப் பெறவேண்டியது அவசியமாயிருந்தது. அதற்காக நிலப்பாதை வழியாக அர்குன் மூன்று தூதர்களை அனுப்பினார். ஏறத்தாழ 1285-ஆம் ஆண்டில் அவர்கள் தலைநகரை அடைந்திருக்கக்கூடும். காகான் அவர்களை மரியாதையுடன் வரவேற்றார். உடனே தனது பேரனின் வேண்டுகோளுக்கு இணங்கியும் விட்டார். இதற்குக் காரணம் அவரிடத்தில் இவர் மிகுந்த அன்பு பூண்டிருந்ததோடு, தனது சாம்ராஜ்யத்தின் தூரப்பகுதிகளை ஆண்டுவந்த தனது பிற சுற்றத்தார்கள் விஷயத்தில் சச்சரவு இருந்ததுபோல இவர்களிடையே எந்த சச்சரவும் எப்போதும் இருந்ததில்லை என்பதுமாகும். மன்னர் விசாரித்துப் பார்த்ததில், காலஞ்சென்ற அரசியின் இனத்தைச் சார்ந்த பேரழகும் இணக்கமான குணமும் வாய்ந்த பதினேழு வயதான கொகாசின் சீமாட்டி என்ற பெண் ஒருத்தி இருப்பதாகவும் பாரசீக வேந்தனுக்காக அனுப்பப்படுவதற்கு அவளே மிகப் பொருத்தமானவள் என்றும் தெரிய வந்தது.

இவையெல்லாம் நிறைவேறக் காலதாமதம் ஆயிற்று. 1289-ஆம் ஆண்டில்தான் கொகாசின் சீமாட்டியுடன் தூதர்கள் திரும்பத் தொடங்கினுர்கள். அவ்வாறு திரும்புவதற்கு அவர்கள் முன்பு வந்த நிலப்பாதை யையே தேர்ந்தெடுத்தனர். ஆனுல் எட்டு மாதங்கள் பிரயாணம் செய்த பிறகு அவர்கள் நுழைந்த ஒரு பகுதியில் உள்நாட்டுச் சண்டை நிகழ்ந்துகொண் டிருந்தது. அதனுல் சாலை பந்தோபஸ்தற்ற நிலையில் இருந்தது. மதிப்பு வாய்ந்த ஒருத்தி தங்களிடம் ஒப்படைக்கப்பட்டவளாக இருக்கும்போது, எந்த துணிவான செயலையும் மேற்கொள்ளும் தைரியம் அவர் களுக்கில்லை. ஆகவே அவர்கள் பீகிங்கிற்குத் திரும்ப வேண்டியதாயிற்று. 1290-ஆம் ஆண்டில் அங்கு அவர் கள் போய்ச் சேர்ந்திருப்பார்கள். பாரசீகத்திற்கு மீண்டும் எப்படிப் போய்ச் சேர்வது என்ற குழப்பத்தில் அவர்கள் இப்போது உழன்றுகொண்டிருந்தனர்.

இந்த நிலையில்தான் மன்னரவையில் போலோக் களுடன் தூதர்கள் தொடர்பை ஏற்படுத்திக்கொண் டனர். முடிந்த அளவு விரைவில் ஊருக்குத் திரும்ப வேண்டும் என்ற ஆவல் ஒவ்வொருவருக்கும் இருந்தது. இவர்கள் சந்தித்ததன் பயனுக இணக்கமான ஓர் ஏற்பாடு தோன்றியது. மார்க்கோ போலோவுக்குக் கடற்பாதை நன்ருகத் தெரியும். தானும் தன் தந்தை யும், சிற்றப்பனும் ஊர் திரும்புவதற்குக் காகான் அனுமதி வழங்குமாறு தூதர்கள் தூண்ட முடிந்தால், போலோ அவர்களைப் பத்திரமாகப் பாரசீகத்திற்கு அழைத்துச் செல்வதாகக் கூறினுர்.

அப்படியே தூதர்களும் குப்ளாகானிடம் கீழ்க்கண்ட கருத்துக்களை விண்ணப்பித்தார்கள். 'எங்கள் நாட்டை விட்டு வந்து நீண்ட காலம் ஆகிவிட்டது. அர்குனுக்கும் இனி மனக்கலக்கம் ஏற்பட்டுவிடும். நிலப்பாதை எப்போது மீண்டும் திறக்கப்படும் என்பதை யாராலும்

எதிர்பார்க்க முடியாது. இனி கடல்வழியே செல்வது ஒன்றுதான் வழி. மார்க்கோ போலோவிற்கு அனுபவம் இருப்பதால் அவ்வழியே செல்வது மிகவும் பத்திர மாகவே இருக்கும்.' ஆனால் காகான் போலோவைப் போக விடுவாரா? அவர்கள் வலுவாக வாதிட்டார்கள். குப்ளாயினால் அதை எதிர்த்து நிற்க முடியவில்லை. கொஞ்சமும் விருப்பமில்லாத போதிலும் அவர் விட்டுக் கொடுக்கவேண்டியதாகிவிட்டது என்று சொல்லப்படு கிறது. கடைசியில் போலோக்கள் ஊர் செல்ல மன்னர் அனுமதி அளித்துவிட்டார்.

எனினும் 1292-ஆம் ஆண்டு ஜனவரி வரை அவர்கள் புறப்படுவதற்குத் தாமதமாகிவிட்டது. அவர்கள் புறப் படுமுன்னர் காகான் மூவருக்கும் பேட்டியளித்தார். அவர் நடந்துகொண்ட முறை பரிவு மிக்கதாக இருந்தது. தனக்கு அவர்களிடம் உள்ள மேலான அன்பைப் பற்றிப் பேசினார். அவர்கள் போகும்படி அனுமதியும் தந்துவிட்டபோதிலும் கொஞ்சகாலம் தாயகத்தி லிருந்துவிட்டுத் தன்னிடம் திரும்ப வருவதாக வாக் களிக்குமாறு அவர்களைக் கேட்கத்தான் செய்தார். அவர்களுடைய பயணம் சௌகரியமாக நிறைவேறும் பொருட்டு அனுமதிச் சீட்டுகள் என்று சொல்லக்கூடிய புகழ் வாய்ந்த இரு தங்கப்பட்டயங்களை அவர்களுக்குக் கொடுத்தார். போப்பாண்டவருக்கும், பிரெஞ்சு மன்ன ருக்கும், இங்கிலாந்து வேந்தருக்கும், ஸ்பெயின் அரச ருக்கும், மற்றும் ஐரோப்பாவிலுள்ள பிற மன்னர் களுக்கும் கடிதங்களையும் வெகுமதிகளையும் சேர்ப்பிக்கு மாறு அவர்களிடம் ஒப்படைத்தார். அவர்கள் வசம் பதினான்கு கப்பல்கள் ஒப்படைக்கப்பட்டன. அவற்றுள் சில பன்னிரண்டு கப்பற்பாய்களைத் தாங்கிச் சென்றன. அவை கயிறுகள் கொண்டு கட்டப்பட்டிருந்தன. கொகாசின் சீமாட்டியைத் தவிர சுங் வம்சத்தைச் சேர்ந்த இளவரசி ஒருத்தியையும் அவர்கள் அழைத்துச்

செல்லவேண்டி இருந்தது. இவளும் பாரசீக வேந்தரின் அந்தப்புரத்தைப் போய்ச்சேரவேண்டியவள். தங்கள் இராஜவிசுவாசத்தைக் குறித்தும் பக்தியைக் குறித்தும் பன்முறை வலியுறுத்திக் கூறிய பின்னரே தங்களை ஆதரித்த மன்னரிடம் அவர்கள் விடைபெற்றுக் கொண் டனர். செய்டோன் (Zayton) என்னுமிடத்தில் பெருந் திரளான அரசவையினர் அவர்களை வழியனுப்பிவைத் தனர். அவ்வரசவையினர் அவர்களை விட்டுப் பிரியும் போது இரத்தினங்களையும் விலைமிக்க வேறு சில அணி களையும் வெகுமதிப்பொருள்களாக அவர்களுக்கு அளித் தனர்.

முன்பு மார்க்கோ போலோ இலங்கைக்குப் பிரயாணம் செய்தபோது சென்ற வழிதான் இப்போது அவர்கள் சென்ற வழியும். அவருடைய 'நூல்' தொகுக்கப் பெற்றுள்ள முறையின் காரணமாக இவ்விரு பிரயா ணங்களையும் நாம் பிரித்தறிய இயலவில்லை. எடுத்துக் காட்டாக, சுமாத்ராவில் மாரிக்காலத்தினால் கால தாமதம் ஏற்பட்டபோது கடற்கரையில் அவர்கள் பாசறையமைக்கவேண்டியிருந்ததென்பதையும், அது முடிவடைவதை எதிர்நோக்கிக் காத்திருந்தனர் என்ப தையும் முன்னமே விவரித்திருக்கிறோம். இந்நிகழ்ச்சியை நாம் இவ்விரு பிரயாணங்களில் ஏதாவது ஒன்றுடன் உறுதியாக இணைத்துவிட முடியாது. இவ்விரண்டா வது பிரயாணத்தில் ஜாவாவை அடைவதற்கு மூன்று மாதங்கள் ஆயினவென்றும், பாரசீகக்குடாக்கடலைப் போய்ச் சேர்வதற்கு மேலும் பதினெட்டு மாதங்கள் கழிந்தனவென்று மட்டுமே நாம் அறிகிறோம். வழியில் ஏதோ ஓரிடத்தில் அவர்களுக்குக் காலதாமதம் ஏற்பட் டிருக்கவேண்டும். இதற்குக் காரணம் வடகிழக்குப் பருவக்காற்றைத் தவறவிட்டதாகவோ அல்லது கப்பற் சேதமாகவோ அல்லது ஏதோ ஒரு ஆபத்தாகவோ இருந்திருக்கலாம். அவர்களுக்கு விபத்துக்கள் நேர்ந்தன

என்பது குறிப்பாக உணர்த்தப்பட்டுள்ளது. ஏனெனில் செய்டோனை விட்டுப் புறப்பட்டபோது அவர்கள் குழுவில் அறுநூறு பேர்கள் இருந்தனர். (இத்தொகையில் குறைந்த பட்சம் ஆயிரத்தைந்நூறு மாலுமிகள் கணக்கில் சேர்க்கப்படவில்லை.) இந்த அறுநூறு பேர் அடங்கிய குழுவில் இறுதியாகச் சேரவேண்டிய இடத்தைப் போய்ச் சேர்ந்தவர்கள் பதினெட்டு பேர்தான் என்று சொல்லப்படுகிறது. எனினும் இரு இளவரசிகளும் அவர்களுடைய பெரும்பாலான பணிப்பெண்களும் பத்திரமாகவே இருந்தனர்.

பாரசீகத்தில் இறங்கியபோது அர்குன் இறந்துவிட்டதாக அறிந்தனர். முன்பு நாம் குறிப்பிட்டதுபோல, நீண்டகால வாழ்வை அளிக்கும் என்ற நம்பிக்கையின் பேரில் உட்கொள்ளப்பட்ட பானங்களின் விளைவே இது. ஆகவே கொகாசின் சீமாட்டியும், சுங் வம்சத்து இளவரசியும் அர்குனின் புதல்வர்களுள் ஒருவரான கஸானுக்கு (Ghazan) அளிக்கப்பட்டனர். எழில் வாய்ந்த இரு இள நங்கையர்களை விட்டுப் போலோக்கள் பிரிந்த காட்சி உள்ளத்தைத் தொடுவதாக இருந்தது. போலோக்களுக்கு அவர்களிடம் அன்பு வளர்ந்திருந்தது. அவர்களைத் தங்கள் புதல்விகளெனவே கருதினர். அவர்களுடன் பல துணிகரச் செயல்களில் சேர்ந்து அனுபவம் பெற்றிருந்த காரணத்தால் மிகுந்த அன்பு கொண்டவராய் இருந்தனர். விடைபெற்றுக்கொள்ளும் போது கொகாசின் சீமாட்டி அழுதேவிட்டாள். மார்க்கோ அவளுடைய உயிரைக் காப்பாற்றியதாக அவருடைய நூலில் காணப்படுகிறது.

அவர்கள் பாரசீகத்தில் இருக்கும்போது குப்ளாகான் இறந்துவிட்டதாகக் கேள்விப்பட்டனர். இச்செய்தியானது அவர்கள் சீனநாட்டை விட்டுத் தக்க காலத்தில் தான் வெளியேறியிருக்கின்றனர் என்பதை நிரூபித்துவிட்டது. மீண்டும் அங்கே அவர்கள் திரும்பிச்செல்ல

விரும்பியிருந்தாலும் அவ்வாறு செய்ய இயலாதவாறு செய்து விட்டது அச்செய்தி.

பாரசீகத்திலிருந்து கருங்கடலிலுள்ள ட்ரேபிசான் வரை அவர்கள் செய்த பிரயாணத்தின் கடைசிப் பகுதி அபாயகரமாக இருந்திருக்கவேண்டுமெனத் தோன்று கிறது. எனினும், கொள்ளைக்கூட்டத்தினரால் தொந் தரவுக்குள்ளாகியிருந்த அப்பகுதியின் வழியே அவர்கள் சவாரி செய்துகொண்டு சென்றபோது, தங்களிடமுள்ள தங்கப்பட்டயங்களைக் காட்டி இருநூறு குதிரைவீரர்கள் அடங்கிய பலமான வழித்துணையைப் பாதுகாவலாகப் பெற்றனர். 'கடைசியாக ஆண்டவனின் அருளால், நீண்டகாலம் கழித்து மிகுந்த பிரயாசைப்பட்டு ட்ரெபி சானுக்குப் போய் அங்கிருந்து கான்ஸ்டாண்டிநோபிளை அடைந்தோம்' எனப்போலோ கூறுகிறார். அந்நகரத்தில் கப்பலேறி 1295-ஆம் ஆண்டு மிகுதியான பொருள் களுடன் அவர்கள் வெனிசு நகரத்தை அடைந்தனர். 'எத்தனையோ பெரும் பிரயாசைகளிலிருந்தும் எண்ணற்ற இன்னல்களிலிருந்தும் எங்களை விடுவித்த ஆண்டவனுக்கு நன்றி செலுத்தினோம்.' என்று ஆசிரியர் கூறுகிறார்.

மார்க்கோ போலோ இதற்குப் பிறகு இருபத்தொன்ப தாண்டுகள் வாழ்ந்தார். அவர் ஜினோவா சிறைச்சாலை யில் தனது 'நூலை' எழுதினார் என்ற உண்மையைத் தவிர அவரைப் பற்றி வேறு சுவை தரும் செய்தி எதை யும் நாம் அறியவில்லை. அவரும், அவரது தந்தையும், சிற்றப்பனும் தமது இல்லத்தை அடைந்து கதவைத் தட்டியபோது சுற்றத்தார்களால் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை என்றும், உள்ளே நுழைய அனு மதி தரப்படவில்லை என்றும் கூறப்படுகிற கதை எல்லோரும் அறிந்ததே. ஆனால் கூறப்பட்டுள்ள முறை யிலேயே இது நம்பிக்கையூட்டக்கூடிய அத்தனை முக்கிய மான செய்தி அல்ல என்று தெரிகிறது. ஜி.பி. ரமூசியோ அச்சிட்ட 'நூலின்' முன்னுரையில் இது விரிவாகக்

காணப்படுகிறது. இந்நூல் 1553-ஆம் ஆண்டு மீண்டும் எழுதப்பட்டு மார்க்கோ போலோ இறந்த இருநூற்று முப்பத்து நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு 1559-ஆம் ஆண்டு பதிப்பிக்கப் பட்டது. இருந்தபோதிலும் இக் கதைக்கு ஓரளவு ஆதாரம் இருந்திருக்கக்கூடும். ரமூசியோ சொல்வது போல போலோக்கள் மூவரும் டார்டாரிய உடையில் வந்தனரென்றும், அதனுல் அவர்களை உடனே அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை என்றும் கருதிஞல் அதைப் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது என்று சொல்லிவிட முடியாது. இந்த நிச்சயமற்ற நிலையை நீடிக்கவைத்துப் பிறகு தங்கள் சட்டைத்தையல்களில் பொதிந்து வைக்கப்பட்டுள்ள அணிகலன்களைக் காட்டுவது அவர்களுக்கு ஒரு வேடிக்கை விநோதமாக இருந்திருக்கக்கூடும். அவர்கள் பணக்காரர்கள் என்று தெரிந்த உடனே அவர்கள் இன்ஞர் என்ற கேள்வி எழவே இல்லை; இது முற்றிலும் உண்மை என்று நாம் ஏற்றுக்கொள்ளலாம். அவர்கள் வீடு திரும்பியது எந்த முறையில் இருந்திருப்பினும் (Rio di San Giovanni Grisostimo Rio di San Marina) என்ற இவ்விருவீதிகளின் சந்திப்பு முனையில் உள்ள தங்கள் பரம்பரை இல்லத்தில் அவர்கள் மீண்டும் வசித்தனர் என்பதை நாம் அறிகிரும். அவ்வீடு இன்றும் இருந்து வருகிறது. ஆனுல் பதின்மூன்ரும் நூற்ருண்டைச் சார்ந்த அக்கட்டிடத்தின் மேல் தளத்தில் ஒரு தூபியைத் தவிர வேறு எதுவும் இன்று எஞ்சியிருக்கவில்லை.

1298-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நிகழ்ந்த கர்சோலா போருக்குப் பின்னர் ஜினேவா நகரில் மார்க்கோ போலோ சிறைப்படுத்தப்பட்டார் என்று அண்மைக் காலம் வரை அறிஞர்கள் கருதிவந்தனர். இக்கருத்து இன்று கைவிடப்பட்டுவிட்டது. அவர் தாயகம் திரும்பிய மறு ஆண்டில், அதாவது 1296-இல் ஆசியாமைனரில் உள்ள 'லயாஸ்' என்னுமிடத்திற்

கருகில் நடந்த ஒரு சண்டையில் அவர் சிறைப்படுத்தப் பட்டார் என்ற கருத்து இப்போது நம்பப்படுகிறது. அப்போது இருபத்தைந்து வெனிசு வர்த்தகர்கள் பதினைந்து ஜினோவா வர்த்தகர்களோடு கைகலந்தனர். அதன் விளைவாக மூண்ட சண்டையில் வெனிசு நகரத்தார் தோல்வியுற்றனர். அக்குழுவினர் காவலில் வைக்கப்பட்டனர். மார்க்கோவை ஜினோவாவுக்கு இழுத்துச்சென்று சிறைவைத்தனர். பின்னர் 1299-இல் தான் அவர் விடுதலையடைந்தார். சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்த இந்த மூன்றாண்டு காலத்தில்தான் அவர் தனது புகழ்வாய்ந்த 'நூலை' எழுதினார். எனினும் அவர் தன் கைப்பட எழுதினாரல்லர். தற்செயலாக அக்கைதிகளுக்கிடையே பிசாவைச் (Pisa) சேர்ந்த ரஸ்டி செல்லோ (Rustichello) என்ற ஒருவர் இருந்தார். இம் மனிதரை இலக்கியம் பயின்ற பெருமகனார் என்றே நாம் இப்போது அழைப்போம். இன்னும் சற்று விளக்கிச் சொன்னால் அவர் பல விசித்திரக் கதைகளை வெளி யிட்டவர். ஓரளவு பண்பாடுடையவர். தன்னுடன் இணைந்து பணியாற்றவேண்டும் என்று மார்க்கோ போலோ தன் கருத்தை அவரிடம் வெளியிட்டபோது அக்கணம் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சிகரமாக இருந்தி ருக்கவேண்டும். வேறெந்த பணியும் இவருடைய சிறை வாழ்க்கையை இதைவிட மேலானதோர் முறையில் கழித்திருக்குமாறு வகை செய்திருக்க முடியாது என்பதை நாம் எளிதில் கருதலாம். இப்பணி அவருள் ளத்திற்குகந்ததாயிருந்திருக்கவேண்டும். 1298-ஆம் ஆண்டில் இந்நூல் முற்றுப் பெற்றதாகச் சொல்லப் படுகிறது. அடுத்த ஆண்டில் மார்க்கோ போலோ விடுதலையானவுடன் அதை வெனிசுக்குத் தன்னுடன் எடுத்துச் சென்றார்.

போலோவைப் பற்றியும் அவருடைய நூலைப்பற்றி யும் அவர் காலத்தவரான இயாகோபோ டி அக்வி

(Iacopo d' Acqui) என்பவர் எழுதுகிறார். 'அவர் கண்டதைக் காட்டிலும் சொல்வது குறைவு. அதற்குக் காரணம் ஆவதூறு பேசுவோரின் நாக்குகள். அவர்கள் பிறர்மீது பொய்களைச் சுமத்துபவர்கள். தாங்கள் நம்ப முடியாதவற்றையும், புரிந்துகொள்ள இயலாதவற்றையும் பொய்யென முன்பின் எண்ணிப் பாராமல் குற்றங் கூறுவார்கள். உலக விந்தைகளைப் பற்றிக் கூறும் அந்த நூலை (Book of Milio) என்றழைத்தனர். உயர்ந்த முறையிலும் பெரிய அளவிலும் பெரும்பாலும் நம்பத்தகாதது என்று சொல்லக்கூடியவை அதில் இடம் பெற்றிருப்பதால் அந்நூல் அப்பெயர் கொண்டழைக்கப்பட்டது. அவர் மரணத்தறுவாயில் இருக்கும்போது அவருடைய நண்பர்கள் அந்த நூலைத் திருத்தும்படியும் அதிகப்படியாக எழுதியிருந்தால் அதை நீக்கிவிடுமாறும் அவரைக் கேட்டுக்கொண்டனர். அதற்கு அவர் "நான் பார்த்தறிந்ததில் பாதியைக்கூட எழுதவில்லையே" என்று பதில் கூறினார்.

அந்தக் காலத்தில் இந்த நூல் ஐரோப்பியருடைய அறிவுக்கு எட்டாததாயிருந்தது. ஆகவே அறியாமையால் அவர்கள் அதை நம்பவில்லை. இருந்தபோதிலும் பொதுமக்களைப் பொறுத்தவரையிலும் இது ஒரு மாபெரும் வெற்றி. நூலின் மூல ஏட்டுப்பிரதி பல முறை படிப்பதற்குக் கையாளப்பட்டதால் அது மக்கி மறைந்துவிட்டது. அந்த அளவுக்குப் பொதுமக்களின் செல்வாக்கைப் பெற்றிருந்தது அது. பிரதிகளை விரும்பி வேண்டியவர்கள் தொடர்ந்து இருந்துவந்தனர். பெருமளவில் கையெழுத்துப்பிரதிகள் வெளிவந்து உலாவின. சில கவனமற்ற முறையில் எழுதப்பட்டன. சில வேண்டுமென்றே திருத்திப் பதிப்பிக்கப்பட்டன. மூலப் பிரதி செம்மையற்ற பிரெஞ்சு மொழியும் இத்தாலிய மொழியும் கலந்த ஒரு கலப்பட மொழியில் எழுதப்பட்டிருந்தது. அது அவர் காலத்திய உரைகாரர்களைக்

கூட சிலசமயம் தடுமாறவைத்துவிட்டது. போலோ வின் நூலை இறுதியாகப் பதிப்பித்த ஏ. ஸி. மூல் (A. C. Moule) என்பவர் கூறுகிறார். 'ஆகவே தொடக்க காலம் முதல் படியெடுத்தவர் ஒவ்வொருவரும் நூலின் பகுதிகளை விடுத்தும், சுருக்கியும், விரித்துரைத்தும் தனக்குச் சரியெனத் தோன்றியபடி தவறுகளை இழைத்தும் வந்தனர்...இதன் விளைவாக நாம் இன்று ஏறத்தாழ நூற்றிருபது ஏட்டுப்பிரதிகளோடு மன்றாட வேண்டியிருக்கிறது. இவற்றிற்கிடையே எந்த இரண்டு பிரதிகளும் ஒன்றுபோல் இருப்பதில்லை என்று கூறுவது மிகையாகாது.'

எனினும் இத்தகைய பிரச்னைகளைக் குறித்து ஆய்வதில் அறிஞர்கள் பழக்கப்பட்டிருக்கின்றனர். பல பிரதிகளை அவர்கள் கண்ணுறும்போது அவற்றை ஒப்பு நோக்கி மூலபாடத்தைப் பெருமளவு ஒத்திருக்கும் வகையில் அதைப் பழைய நிலைக்குக் கொண்டுவரக்கூடியவர்களாக இருக்கின்றனர். மார்க்கோ போலோ விஷயத்திலும் இதைத்தான் செய்தார்கள். 1938-ஆம் ஆண்டில் பதிப்பிக்கப்பெற்ற மூல் என்பாரின் சிறந்த பதிப்பில், இன்று கிடைக்கும் ஏட்டுப் பிரதிகள் பலவற்றினின்றும் தேர்ந்தெடுத்தமைக்கப்பட்ட நூல் இப்போது கிடைக்கிறது. இவருக்கு முன்னர் இருந்த பதிப்பாசிரியர்களான யூல், கார்டியர் ஆகியோரால் பயன்படுத்தப்பட்ட நூலிலிருந்து இது மிக மிக வேறுபட்டிருக்கிறது. இவ்வேறுபாட்டுக்கு முக்கிய காரணங்களுள் ஒன்று 1932-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஸ்பெயின் தேசத்து டொலேடோ நகர தேவாலயத்திலுள்ள 'சாப்டர்' புத்தகசாலையில் கண்டெடுக்கப்பட்ட போலோவின் புதிய ஏட்டுப் பிரதியாகும். இதைக் கண்டெடுத்தவர் கீழ்த்திசை நாடுகளைப் பற்றிய அறிஞரும் சுவடி சேகரிப்பவருமான சர் பெர்சிவல் டேவிட் என்பவராவார். இவ்வேட்டுப் பிரதி Cardinal Francesco

Xaverio de Zelada என்ற பதினெட்டாம் நூற்ருண்டில் வாழ்ந்த மதகுருவின் ஏட்டுப்பிரதித் தொகுப்பில் ஒரு காலத்தில் இருந்த காரணத்தால் 'செலடா' (zelada) ஏட்டுப்பிரதியென வழங்கி வந்தது. இதில் பல புதிய பகுதிகள் இருக்கின்றன. இப்பிரதி மிக முக்கியமானது. ஏனெனில் 1559-ஆம் ஆண்டு 'ரமூசியோவின் அச்சுப் பதிப்பிலுள்ள சில பகுதிகள் இதில் அடங்கியிருக் கின்றன. அப்பகுதிகள் அப்போது வழக்கிலிருந்த எந்த ஏட்டுப் பிரதியிலும் காணப்படாததால் இதற்கு முன்பு அவற்றைச் சந்தேகத்துடன் நோக்கினர். இந்த வகை யில் 'மார்க்கோ போலோவின் பிரயாணங்கள்' பற்றிய சரியான நூல் பெருமளவில் விரிவடைந்து முன்பிருந் ததைவிட சுவை பொருந்தியதாயும் படிப்பதற்கேற்ற தாயும் இருக்கிறது. 'செலடா' ஏட்டுப்பிரதி போன்ற ஒரு முக்கியமான கண்டுபிடிப்பு மிகப்பிற்காலத்தில் 1932-ஆம் ஆண்டிலும் நிகழக்கூடுமாளுல், மேலும் சில கண்டுபிடிக்கப்படலாம் என்பதை நாம் உறுதியாக நம்பலாம். இருந்தபோதிலும், சாதாரண தேவை களுக்கு இப்போது இந்த நூல் போதுமான அளவில் நிலேபேறடைந்துவிட்டது.

ஜினேவா காவலிலிருந்து விடுதலே பெற்ற மார்க்கோ போலோ, மேலும் இருபத்தைந்தாண்டுகள் வாழ இருந் தார். அறிஞர்களால் மிகுந்த ஊக்கத்துடன் செய்யப் பட்ட முயற்சிகள்கூட அவரைப் பற்றிய ஒரு சில உண்மைகளேத் தவிர வேறெதையும் புதிதாகக் கண்டு பிடிப்பதில் வெற்றிபெறவில்லே இந்த உண்மைகளுங் கூடப் பெரும்பாலும் சுவையற்றவையாக இருக்கின்றன. அவர் திருமணம் புரிந்துகொண்டு மூன்று பெண்களேப் பெற்றிருந்தார் என்பதை அறிகிரும். அவருடைய உயில் இப்போதும் இருக்கிறது. அவருடைய செல்வம் எவ்வளவென்பது அதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆளுல் பதின்மூன்ரும் நூற்ருண்டில் பணத்திற்குள்ள

மதிப்பை இன்றைய நிலையோடு ஒப்பிட்டுத் தீர்மானிப்பதில் உள்ள சங்கடத்தினால் அவர் எவ்வளவு செல்வத்திற்குரியவராக இருந்தார் என்பதைத் திட்டவட்டமாகக் கூறமுடியாது. அவர் பணக்காரராகவே இறந்தார் என்றும் தோன்றவில்லை. சீனாவிலிருந்து திரும்பிய பிறகு வியாபாரத் துறையில் அவருக்கு நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கலாம். அவை அவர் ஈட்டியுள்ள செல்வத்தைக் குறைத்திருக்கலாம். ஆனால் இப்படித்தான் ஆயிற்று என்று கூறுவதற்குப் போதிய அளவு நாம் அறிந்திருக்கவில்லை.

இறக்கும்போது அவருக்கு வயது எழுபது. ஸான் லொரென்சோ (San Lorenzo) தேவாலயத்தில் அவர் அடக்கம் செய்யப்பட்டார் என்று நம்பப்படுகிறது. ஆனால் அத்தேவாலயம் பின்னர்ப் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது. அவருடைய கல்லறை எங்கிருக்கிறது என்பதற்கு இப்போது அறிகுறி எதுவும் இல்லை.

இருபத்தேழாம் அத்தியாயம்

## முடிவுரை

மார்க்கோ போலோவின் 'நூலை' ஒருவர் எவ்வளவுக் கெவ்வளவு ஆராயப் புகுகின்றாரோ அவ்வளவுக்கவ் வளவு அவர் எழுதியுள்ள முறை மேலும் மேலும் வியப்பூட்டுவதாயிருக்கிறது. வணிகரின் புதல்வரான ஒருவர் தனது பதினேழாம் வயதில் வெனிஸை விட்டுப் புறப்பட்டு பூமண்டலத்தின் மறு பகுதியில் இருப தாண்டுகள் சுற்றித் திரிந்ததனால் விநோதமான நேர் முகச் சந்திப்புகளைப் பற்றிய வரலாற்றையும், வெற்றி யிலும் விபத்திலும் அவருக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளைப் பற்றிய குறிப்பையுமே எவரும் அவரிடமிருந்து எதிர் பார்த்திருக்கக்கூடும். அவரைப்போன்ற ஒரு பெரிய தீரர், மனிதனுக்கியல்பான இந்த முறையில்தான் தனது கருத்தை வெளியிட்டிருக்கக்கூடும். ஆனால் அதற்கு மாறாக, இடைக்காலக் கல்விக்கூடத்தைச் சார்ந்த ஒருவர், எப்படி அறியாமையை அகற்றிக் கல்வி யைப் பெருக்குவதற்காக எழுதுவதைத் தனது கடமை யாகக் கருதியிருப்பாரோ, அப்படியே இவரும் கற்றறிந் தோருக்காக எழுதினார். சிறைச்சாலையில் இவர் சொல்ல மற்றொருவர் எழுதிவந்தபோதிலும் அது மிகக் கவனத்துடன் திட்டமிடப்பட்டதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. அப்படிச் சொல்லத் தொடங்கு வதற்கு முன்பே அவர் நூலின் அமைப்பை வரைந்து கொண்டார். இந்த நூல் நாட்டுத் தலைவர்களுக்காக எழுதப்பட்ட முன்னுரையுடன் தொடங்குகிறது. அதைத் தங்களுக்குப் பிறர் படித்துக்காட்டும்படி அந் நூலில் ஆலோசனையும் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில் ஆசிரியர் தானே கண்டறிந்தவை, நம்பத்தகுந்த சாட்சி களிடமிருந்து அவர் பெற்ற அத்தாட்சி, இவற்றின்

அடிப்படையில் அமைந்துள்ள கிழக்கத்திய நாடுகளைப் பற்றிய அரிய வரலாறு அதில் அடங்கியுள்ளது. முதன் முதல் தன் தந்தையும் சிற்றப்பனும் எப்படிப் பிரயாணம் செய்தனர், பிறகு தான் எப்படிப் பிரயாணம் செய்தார், என்பது பற்றிய சுருக்கமான வரலாறு நூலின் அடுத்துவரும் பகுதியில் காணப்படு கிறது. தன்னைப்பற்றி இப்பகுதியில் கூறியதன் நோக்கம், தனது வீரச்செயல்களை நினைவூட்டுவது அல்ல; ஆனால் நூலினிடையே காணப்படும் செய்திகள் நம்பத்தக்கவை என்று பிறர் ஒப்புக்கொள்ளவேண்டும் என்பதைக் குறிப்பதே ஆகும். அவ்வாறு நம்புவதற்குரிய காரணம், தான் குறிப்பிடும் இடங்களுக்கெல்லாம் அவர் போயிருக்கிறார் என்பதே ஆகும்.

அடுத்து உலகின் கீழ்ப்பகுதியைப் பற்றிய முக்கிய வருணனை தொடர்கிறது. இது உள்ளதை உள்ளவாறு கூறும் சிறு குறிப்புக்களின் தொகுதி. இப்பகுதியே நூலின் சாரமான பாகம் என்பது ஆசிரியரின் கருத்து. இந்நூல் உயர்தரக் கல்வியறிவோடு தொடர்பில்லாத ஒரு மனிதனால் எழுதப்பட்டபோதிலும், ஆசிய நாட்டைப் பற்றிய இந்நூற்களஞ்சியம் அக் காலத்தில் மிகப்பெரிய கல்வித்துறைச் சாதனைக்கொப்பாயிருந்தது. ஏனெனில் மிக மேலான முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான புதுச்செய்திகள் அதில் அடங்கியிருந்தன. அவையனைத்தும் கவனத்துடன், நிதானமான முறையில் வருந்தியுழைத்துக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எளிதில் நம்பிவிடுதல், மதசம்பந்தமான மூடபக்தி, மனம் போனவாறு ஊகம் செய்தல், பொது அறிவு இன்மை ஆகியவற்றால் இந்நூல் கேடுறவில்லை. போலோ தன்னுடைய வாசகர்களைத் திகைக்க வைக்க விரும்பவில்லை; ஆனால் அவர்களுக்கு அறிவுறுத்தத்தான் விரும்பினார் என்று மீண்டும் மீண்டும் கூறுவது மிகையாகும். தனது சுயசரிதையை எழுதுவது பயனுள்ளதென அவர் கருத

வில்லே. ஆனுல் அறிவூட்டுவதையே மதிப்பு வாய்ந்த தெனக் கருதினர். இது இலக்கியத்துறையில் அவரது வெகுளித்தனத்தைக்காட்டுகிறது. ஏனெனில் சாரமற்ற தனது உரைநடையினுல் அவர் சாதித்ததைக் காட்டிலும் சுயசரிதையின் வாயிலாக மேலும் பல விஷயங்களே அறிவுறுத்தியிருக்கலாம். ஆனுல் இது அவரைப் பொருத்தவரையில் மிகக் கடினமான இலக்கியப் பணியாக இருந்திருக்கும். இதைச் செய்யும் ஆற்றல் அவருக்கில்லே என்று நாம் கருதினுல் அது தவருகாது.

அவருடைய 'நூலேச் சரியாகப் புரிந்துகொள்ள முடியவில்லே என்பதை நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். அது பொதுமக்களால் புரிந்துகொள்ளப்படாமைக்குக் காரணம் அதில் அடங்கியுள்ள விஷயங்கள் நம்பத்தகாதவையாகத் தோற்றமளித்ததேயாகும். கற்ருேராலும் அது விரும்பப்படவில்லே எனத் தோன்றுகிறது. ஏனெனில் அவர்கள் அதைப் படித்ததாகத் தெரியவில்லே. அல்லது படித்திருந்தாலும் அன்று தாங்கள் பெற்றிருந்த அறிவோடு இவர் கூறியுள்ள விஷயங்களேப் பொருத்திப் பார்க்கத் தவறிவிட்டனர். அடுத்த தலேமுறையில் வாழ்ந்த பெரும் அறிவாளியான டாண்டே' மார்க்கோ போலோவைப் பற்றிக் குறிப்பிடவே இல்லே என்பது இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிடத்தக்கது. 'நரகம்', 'பாவக்கழிவிடம்', 'சுவர்க்கம்' ஆகிய எப்பகுதியிலும் போலோவைப் பற்றி அவர் குறிப்பிடவில்லே; அவருடைய 'நூலே'ப்பற்றிய குறிப்பும் அதில் இல்லே.

கீழ்க்கண்ட முடிபுகளே இங்கே கூறலாம். வேண்டிய தகுதி இல்லாவிட்டாலும் போலோ அறிஞர்க்குகந்த நூலே எழுதத் தொடங்கினர். மிகவும் ஆழ்ந்த எண்ணங்களேயும் செய்திகளேயும் கொண்ட நூலுக்கு, எவை பொருத்தமற்றவை என்று தான் கருதினரோ அவை அனைத்தையும் அவர் ஒதுக்கிவிட்டார். நூலில், இடையிடையே ஹாங்-சௌவில் உள்ள சுங் வம்ச

நாகரிகம், சைனுவிலும் இலங்கையிலும் உள்ள பௌத்த மதம், இவை போன்ற விஷயங்களைப் பற்றி அவர் ஆராய வேண்டியது அவசியமாயிருந்தது. உண்மையிலேயே அவர், தம் காலத்தில் ஒரு கல்விமானுக இருந்திருந்தாலும் அவருடைய ஆற்றல் எடுத்துக் கொண்ட வேலைக்குப் போதுமானதாக இல்லாமற் போயிருக்கலாம். கல்வியறிவு குறைவாக இருந்தபோதிலும் பதின்மூன்றும் நூற்றுண்டில் ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய நூலை அவர் எழுதிச் சமாளித்துவிட்டார். ஏனெனில் தான் கண்டதையும் கேட்டதையும் முறைப்படி குறித்து வந்தார். அவருக்கிருந்த ஆய்வுத்திறன் அறிவுக்குப் பொருந்தாதவற்றை அவர் எழுதுவதனின்றும் தவிர்த்தது. அவர் காலத்தில் இருந்த வேறெந்த எழுத்தாளருக்கும் கிடைத்த விஷயங்களைக் காட்டிலும் அவருடைய அனுபவங்கள் அவருக்கு மிகவும் வியக்கத்தக்க விஷயங்களைத் தந்தன. தெளிவாகக் குறிப்பு வரைதல், பொது அறிவு, பெருமளவில் உள்ளத்தைக் கவரும் விஷயம்,இம்மூன்றும் அவரிடத்தில் போதுமானவையாக இருந்தன.

அவருக்கு இன்னும் அதிகமாகவே மூளையும், உணர்வும், கற்பனுசக்தியும் இருந்திருக்குமானுல் அவர் சீனர்களிடமிருந்து இன்னும் எத்தனையோ கற்றிருக்கலாம். சீனர்கள் சில மங்கோலியர்களுக்கு அறிவு புகட்டி அவர்களைக் காட்டுமிராண்டித்தன்மையிலிருந்து நாகரிக நிலைக்கு உயர்த்த முடிந்தது போல, கோதிக் வணிகராக இருந்த போலோவையும் பண்பட்ட மனிதனுக மாற்றியிருக்கக்கூடும். ஆனுல் அவ்வாறு நிகழ்வதற்குப் போதிய அறிவுக்கூர்மையையோ உணர்ச்சியையோ அவர் பெற்றிருக்கவில்லை. அவர் செய்த பிரயாணங்கள் அவருக்குக் கல்வி புகட்டும் சக்தியைப் பெற்றிருந்தபோதிலும், தன்னைக்காட்டிலும் மனுேநிலையில் வெகுவாக முன்னேறியிருந்த மனிதர்களோடு அவருக்குத்

தொடர்பு ஏற்பட்டிருந்தபோதிலும், அவருடைய இயல்பான சக்திகள் அவரை முற்போக்கடைய விட வில்லை. சீனர்கள் தங்கள் நிலைக்கு உயரும் அளவுக்கு அவருக்குக் கல்வி புகட்டுவதில் வெற்றி பெற்றிருந்தார் களேயானுல், ஐரோப்பியச் சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட அவருடைய மனத்தளைகள் பெருமளவிற்குத் தகர்த் தெறியப்பட்டிருக்கக்கூடும். அந்த அளவிற்கு அவரு டைய மனத்தளைகள் தகர்க்கப்படாவிடினும், மேலை நாட்டில் வாழ்ந்த தமது சமகாலத்தவர்களால் முழுதும் உணர இயலாத ஒன்றை எழுதக்கூடிய அளவிற்காகிலும் அவரது பிரயாணங்களும் அனுபவங்களும் அவரது உள்ளத்தை வளரச்செய்திருந்தன.

# எமது இதர தமிழ் வெளியீடுகள்

**1. இந்தியா இன்றும் நாளையும்.**
ஜவஹர்லால் நேரு (ஆஜாத் நினைவுச் சொற்பொழிவுகள்—1959) தமிழாக்கம்— தி. ஜ. ரங்கநாதன். பக்கம் 44. ரூ. 00 75

**2. விஞ்ஞானத்தின் சில அம்சங்கள்.**
டாக்டர் சி.வி. ராமன் (அகில இந்திய வானொலியில் ஒலிபரப்பப்பட்டவை) தமிழாக்கம்— ஆர். கே. விஸ்வநாதன். பக்கம் 156. ரூ. 1 75

**3. கல்கி, அல்லது நாகரீகத்தின் எதிர்காலம்.**
டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் தமிழாக்கம்— ர. இராமானுஜாச்சாரி பக்கம் 100. ரூ. 1 25

**4. இந்தியாவின் கல்வித்துறைச் சீரமைப்பு.**
டாக்டர் ஜாகீர் ஹுஸேன் (படேல் நினைவுச் சொற்பொழிவுகள் 1959) தமிழாக்கம்— பெ. நா. அப்புஸ்வாமி. பக்கம் 170. ரூ. 1 75

**5. ஜ்வாலாமுகி.**
(1942 புரட்சி பற்றிய நாவல்) அநந்த கோபால் சேப்டே. தமிழாக்கம்—கா.ஸ்ரீ.ஸ்ரீ. பக்கம் 3,2. ரூ. 3 00

**6. கடல் கடந்த நட்பு.**
(ஜூடியும்-லக்ஷ்மியும் நாவல்) நயோமி மிச்சிஸன் தமிழாக்கம்—ம. பெரியசாமித்தூரன். பக்கம் 200 ரூ. 1 65

**7. மாறிய தலைகள்.**
(இந்திய புராணக் கதையைத் தழுவல்) தாமஸ் மன். தமிழாக்கம்—ரா. ஸ்ரீ. தேசிகன். பக்கம் 170. ரூ. 1 50

**8. மாபெரும் புரட்சி வீரன்.**
(சிவாஜியைப் பற்றியது) டென்னிஸ் கின்கெய்டு. தமிழாக்கம்—சிவ. ராமச்சந்திரன். பக்கம் 427. ரூ. 5 25

**9. அக்பர்.**
லாரன்ஸ் பின்யன்
தமிழாக்கம்—கு. அழகிரிசாமி. பக்கம் 180. ரூ. 2 25

**10. அறிவு வளர்க்கும் அறிவியல்.**
(விஞ்ஞான வளர்ச்சி)ரிச்சி கால்டர் தமிழாக்கம்— கே. எஸ். மகாதேவன். பக்கம் 374. ரூ. 4 25

**11. பாமர மக்களின் பரம்பரைப் பாடல்கள்.**
அழ. வள்ளியப்பா. பக்கம் 115. ரூ. 1 25

**12. விழாவும் பூசையும்.**
ச. கு. கணபதி ஐயர். பக்கம் 124. ரூ. 1 25

**13. அசோக சாசனங்கள்.**
என். ஏ. நிசாம், ரிச்சர்ட் மக்கியோன். தமிழாக்கம்—டி. எஸ். குப்பண்ணு சாஸ்திரி. பக்கம் 120. ரூ. 3 00

**14. தியாகராஜர்.**
பி. ஸாம்பமூர்த்தி தமிழாக்கம்—லா. சு. ரங்கராஜன். பக்கம் 120. ரூ. 1 75

ஆசியா கண்டத்தின் நெடும் பரப்பை குறுக்கே கீழ்மேலாக ஊடுருவிச் செல்லும் பாதையை முதன்முதல் வகுத்து, தான் ஆங்காங்கு கண்ட இராஜ்யங்களை வருணித்த முதல் மனிதர் வெனிசு நகரத்தின் புகழ் மிக்க பிரயாணியான மார்க்கோ போலோ (1254 -1324) என்பவர் ஆவார் ; பீகிங் நகரத்தில் அமைந்துள்ள அரசவையை முதன் முதலாக வருணித்தவரும், சீன நாட்டின் செல்வத்தையும் விரிந்த பரப்பையும் முதன் முதல் வெளிப்படுத்தியவரும் அவரே. திபேத் நாட்டின் பெயரை மட்டுமே கேள்வியுற்றிருந்தவர்களுக்கு அதைப்பற்றி மேலும் சில விபரங்களைக் கூறியவரும் அவரே. பர்மா, லாவோஸ், கொச்சி-சீனு, ஜப்பான், ஜாவா, சுமாத்ரா, நிகோபார் தீவுகள், அந்தமான் தீவுகள், இலங்கை ஆகிய வற்றையும் அவர் வருணித்திருக்கிறுர் இந்தியாவைப் பற்றி அவர் கூறியிருப்பது தான் கண்ட இந்தியாவின் சில பகுதி களைப் பற்றி நேரில் அறிந்தவற்றைப் பற்றியதேயாகும்.

இந்நூல் மார்க்கோ போலோவின் வாழ்க்கைச் சரிதம் என்று எண்ணத் தக்க நிலையில் இல்லை : பல்வேறு மொழிபெயர்ப்பு களின் துணை கொண்டு அவரது வாழ்க்கை, தீரச் செயல்கள், ஆகியவற்றைப் பற்றிய மூலமான ஒரு வடிவத்தையே நமக்கு எடுத்துக் காட்டுகிறது இந்நூலாசிரியரான மாரிஸ் காலிஸ் கீழை நாடுகளை நன்கறிந்தவர். புகழ் மிக்க பிரயாணியான மார்க்கோ போலோ சென்றுள்ள பல இடங்களுக்கும் இவரும் சென்றிருக்கிறுர். குறிப்பிடத் தக்க நிகழ்ச்சிகளை வருணிக்கும் போது போலோவின் சொற்றொடர்களையே சுருக்கித் தந்திருக் கிறுர். தேவைப்பட்ட இடங்களில் எல்லாம் கருத்துரைகளை யும் விளக்கங்களையும் வழங்கி யிருக்கிறுர். அவ்வுரைகளுள் நம்மை எல்லாம் ஈர்க்கும் சொற்றொடர்கள் காணப்படு கின்றன பல இடங்களில் கற்பனுசக்தியின் செறிவைப் பார்க் கிறோம். வரலாற்றைத் திருத்தியமைப்பதில் உதவியுள்ள ஒரு சில மிகச் சிறந்த நூல்களுள் நமது ஆசிரியரின் நூல் ஒன்றுகும்.

30 JUN 1975